1.	பி.சேகர் இளநிலை பொறியாளர் (இயந்திரம்) இயந்திரப் பொறியியல் துறை	01.12.2010 (மைய நாளான 01.06.2019 அன்று 8 வருடம் 6 மாதங்கள் பணி நிறைவு செய்துள்ளார்)	1 வருடம் 6 மாதங்கள்	தனியர் பொறியியல் பணிவிதிகளின்படி மைய நாளில் பத்து ஆண்டு பணிக்காலத் தகுதியை தவிர இதர தகுதிகளான பொதுப்பணி துறை கணக்கு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளதாலும், ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததால், பணிவிதிகளில்தளர்வு செய்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான இத்தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப பரிசீலிக்கலாம்.
2.	எஸ். பாபு இளநிலை பொறியாளர் (சிவில்) மண்டலம்-3	06.12.2010 (மைய நாளான 01.06.2019 அன்று 8 வருடம் 5 மாதங்கள் 26 நாட்கள் பணி நிறைவு செய்துள்ளார்)	1 வருடம் 6 மாதங்கள் 4 நாட்கள்	தனியர் பொறியியல் பணிவிதிகளின்படி மைய நாளில் பத்து ஆண்டு பணிக்காலத் தகுதியை தவிர இதர தகுதிகளான பொதுப்பணி துறை கணக்கு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளதாலும், ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததால், பணிவிதிகளில்தளர்வு செய்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான இத்தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப பரிசீலிக்கலாம்.
3.	ட்டி. கிறிஸ்டல் லதா இளநிலை பொறியாளர் (சிவில்) மண்டலம்-2	06.12.2010 (மைய நாளான 01.06.2019 அன்று 8 வருடம் 5 மாதங்கள் 26 நாட்கள் பணி	1 வருடம் 6 மாதங்கள் 4 நாட்கள்	தனியர் பொறியியல் பணிவிதிகளின்படி மைய நாளில் பத்து ஆண்டு பணிக்காலத் தகுதியை தவிர இதர தகுதிகளான பொதுப்பணி துறை கணக்கு தேர்வுகளில் தேர்ச்சி

		நிறைவு செய்துள்ளார்)		பெற்றுள்ளதாலும், ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததால், பணிவிதிகளில்தளர்வு செய்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான இத்தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப பரிசீலிக்கலாம்.
4.	எ. முத்துகுமாரி இளநிலை பொறியாளர் (சிவில்) வடக்கு வட்டார அலுவலகம்	06.12.2010 (மைய நாளான 01.06.2019 அன்று 8 வருடம் 5 மாதங்கள் 26 நாட்கள் பணி நிறைவு செய்துள்ளார்)	1 வருடம் 6 மாதங்கள் 4 நாட்கள்	தனியர் பொறியியல் பணிவிதிகளின்படி மைய நாளில் பத்து ஆண்டு பணிக்காலத் தகுதியை தவிர இதர தகுதிகளான பொதுப்பணி துறை கணக்கு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளதாலும், ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததால், பணிவிதிகளில்தளர்வு செய்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான இத்தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப பரிசீலிக்கலாம்.
5.	எ. ராஜசேகர் இளநிலை பொறியாளர் (சிவில்) சிறப்பு திட்டங்கள் துறை	06.12.2010 (மைய நாளான 01.06.2019 அன்று 8 வருடம் 5 மாதங்கள் 26 நாட்கள் பணி நிறைவு செய்துள்ளார்)	1 வருடம் 6 மாதங்கள் 4 நாட்கள்	தனியர் பொறியியல் பணிவிதிகளின்படி மைய நாளில் பத்து ஆண்டு பணிக்காலத் தகுதியை தவிர இதர தகுதிகளான பொதுப்பணி துறை கணக்கு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளதாலும், ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததால், பணிவிதிகளில்தளர்வு செய்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான இத்தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப பரிசீலிக்கலாம்.

6.	ஈ.எ. சீனிவாசன் இளநிலை பொறியாளர் (சிவில்) மண்டலம்-3	06.12.2010 (மைய நாளான 01.06.2019 அன்று 8 வருடம் 5 மாதங்கள் 26 நாட்கள் பணி நிறைவு செய்துள்ளார்)	1 வருடம் 6 மாதங்கள் 4 நாட்கள்	தனியர் பொறியியல் பணிவிதிகளின்படி மைய நாளில் பத்து ஆண்டு பணிக்காலத் தகுதியை தவிர இதர தகுதிகளான பொதுப்பணி துறை கணக்கு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளதாலும், ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததால், பணிவிதிகளில்தளர்வு செய்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான இத்தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப பரிசீலிக்கலாம்.
7.	ஆர். வெங்கடேசசிவநாதன் இளநிலை பொறியாளர் (சிவில்) பணிகள்துறை	06.12.2010 (மைய நாளான 01.06.2019 அன்று 8 வருடம் 6 மாதங்கள் பணி நிறைவு செய்துள்ளார்)	1 வருடம் 6 மாதங்கள் 4 நாட்கள்	தனியர் பொறியியல் பணிவிதிகளின்படி மைய நாளில் பத்து ஆண்டு பணிக்காலத் தகுதியை தவிர இதர தகுதிகளான பொதுப்பணி துறை கணக்கு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளதாலும், ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததால், பணிவிதிகளில் தளர்வு செய்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான இத்தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப பரிசீலிக்கலாம்.
8.	எஸ். பாலு இளநிலை பொறியாளர் (சிவில்) மண்டலம்-15	06.12.2010 (மைய நாளான 01.06.2019 அன்று 8 வருடம் 5 மாதங்கள் 26 நாட்கள் பணி நிறைவு செய்துள்ளார்)	1 வருடம் 6 மாதங்கள் 4 நாட்கள்	தனியர் பொறியியல் பணிவிதிகளின்படி மைய நாளில் பத்து ஆண்டு பணிக்காலத் தகுதியை தவிர இதர தகுதிகளான பொதுப்பணி துறை கணக்கு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளதாலும், ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததால், பணிவிதிகளில்தளர்வு செய்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான

				இத்தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப பரிசீலிக்கலாம்.
9.	கே. பாலாஜி இளநிலை பொறியாளர் (சிவில்) மண்டலம்-5	06.12.2010 (மைய நாளான 01.06.2019 அன்று 8 வருடம் 5 மாதங்கள் 26 நாட்கள் பணி நிறைவு செய்துள்ளார்)	1 வருடம் 6 மாதங்கள் 4 நாட்கள்	தனியர் பொறியியல் பணிவிதிகளின்படி மைய நாளில் பத்து ஆண்டு பணிக்காலத் தகுதியை தவிர இதர தகுதிகளான பொதுப்பணி துறை கணக்கு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளதாலும், ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததால், பணிவிதிகளில்தளர்வு செய்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான இத்தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப பரிசீலிக்கலாம்.

உதவி செயற்பொறியாளர் பதவி உயர்விற்கு 3:1 என்ற விகிதாச்சார முறையின்படி, கடந்த ஆண்டு தெரிவுப்பட்டியலில் **பட்டம் பெற்ற 1 உதவி பொறியாளருடன்** தெரிவுப் பட்டியல் முடிவடைந்துள்ளதால், இந்த பட்டியல் ஆண்டில் 01.06.2019 மைய நாளில் தெரிவுப் பட்டியலில் முதலில் பட்டம் பெற்ற ஒரு உதவி பொறியாளர் என்ற நிலையில் தெரிவுப்பட்டியல் துவக்கப்பட்டு, பணிமூப்பு மற்றும் விகிதாச்சார அடிப்படையில் பின்வருமாறு அமைகிறது.

பட்டியல்-8

வ எண்	இளநிலை / உதவி பொறியாளரின் பெயர் (திருவாளர்கள்)	பதவி	துறை / மண்டலம்	பட்டயம் /பட்டம்
1	எ. ரேவதி	உதவி பொறியாளர்	மண்டலம் 7	பட்டம்
2	ஜெ.எச்.இளையராஜா	உதவி பொறியாளர்	மண்டலம் 11	பட்டம்
3	**பி.சேகர்**	**இளநிலை பொறியாளர்**	**இயந்திரபொறியியல் துறை**	**பட்டயம்**
4	எஸ். வி.மணிமாறன்	உதவி பொறியாளர்	மண்டலம் 6	பட்டம்
5	பி. ஞானவேலு	உதவி பொறியாளர்	மண்டலம் 10	பட்டம்
6	வி. மோகன்	உதவி பொறியாளர்	மண்டலம் 13	பட்டம்
7	**எஸ்.பாபு**	**இளநிலை பொறியாளர்**	**மண்டலம் 3**	**பட்டயம்**
8	எ. ஜானகிவித்யா	உதவி பொறியாளர்	கட்டடத்துறை	பட்டம்
9	ஜி. சுரேஷ்குமார்	உதவி பொறியாளர்	மண்டலம் 15	பட்டம்
10	எஸ். உமா	உதவி பொறியாளர்	திட்டங்கள்துறை	பட்டம்
11	**ட்டி.கிறிஸ்டல் லதா**	**இளநிலை பொறியாளர்**	**மண்டலம் 2**	**பட்டயம்**
12	கே. கோமதி	உதவி பொறியாளர்	மழைநீர் வடிகால் துறை	பட்டம்
13	எஸ். மஞ்சுளா	உதவி பொறியாளர்	பணித்துறை	பட்டம்
14	எம். கமலக்கண்ணன்	உதவி பொறியாளர்	மண்டலம் 8	பட்டம்

பொ.து.ந.க.எண்.ஈ1/15211/2019

15	**எ.முத்துக்குமாரி**	**இளநிலை பொறியாளர்**	**வடக்கு வட்டார அலுவலகம்**	**பட்டயம்**
16	கே.ஆர். ஜெகதீஷ்	உதவி பொறியாளர்	தரக்கட்டுப்பாடு துறை	பட்டம்
17	ஜி. முத்தமிழ்செல்வன்	உதவி பொறியாளர்	மழைநீர் வடிகால் துறை	பட்டம்
18	வி. குகன்	உதவி பொறியாளர்	மண்டலம் 9	பட்டம்
19	**எ.ராஜசேகர்**	**இளநிலை பொறியாளர்**	**சிறப்பு திட்டங்கள் துறை**	**பட்டயம்**
20	வி. ராதா	உதவி பொறியாளர்	தலைமை பொறியாளர் (கட்டடம்) அலுவலகம்	பட்டம்
21	கே. பிரபுதாஸ்	உதவி பொறியாளர்	மண்டலம் 4	பட்டம்
22	எஸ். கோமதி	உதவி பொறியாளர்	மண்டலம் 7	பட்டம்
23	**ஈ.எ.சீனிவாசன்**	**இளநிலை பொறியாளர்**	**மண்டலம் 3**	**பட்டயம்**
24	எ. முத்துகுமாரசாமி	உதவி பொறியாளர்	மண்டலம் 7	பட்டம்
25	கே.எம். அர்ச்சனா	உதவி பொறியாளர்	மண்டலம் 11	பட்டம்
26	ஆர். அசோக்குமார்	உதவி பொறியாளர்	மண்டலம் 8	பட்டம்
27	**ஆர்.வெங்கடேசசிவநாதன்**	**இளநிலை பொறியாளர்**	**பணிகள்துறை**	**பட்டயம்**
28	பி. அறிவழகன்	உதவி பொறியாளர்	பணித்துறை	பட்டம்
29	எம். ஜெகன்	உதவி பொறியாளர்	மண்டலம் 4	பட்டம்
30	எல்.வி. அகிலாண்டேஸ்வரி	உதவி பொறியாளர்	மழைநீர் வடிகால் துறை	பட்டம்
31	**எஸ்.பாலு**	**இளநிலை பொறியாளர்**	**மண்டலம் 15**	**பட்டயம்**
32	எஸ். கே. மூர்த்தி	உதவி பொறியாளர்	மண்டலம் 13	பட்டம்
33	கே. திருமாறன்	உதவி பொறியாளர்	மண்டலம் 10	பட்டம்
34	டி.எஸ். சரவணன்	உதவி பொறியாளர்	மண்டலம் 6	பட்டம்
35	**கே.பாலாஜி**	**இளநிலை பொறியாளர்**	**மண்டலம் 5**	**பட்டயம்**

எனவே,

1. 2018-2019 ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் தெரிவுப்பட்டியல் தயாரிப்பதற்கு மைய நாளான 01.06.2018ல் காலிப்பணியிடம் ஏதும் இல்லாததால் இன்மை அறிக்கை வெளியிடவும்,
2. மேற்கண்ட பட்டியல் 8ல் உள்ள உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான பணிவிதிகளின்படி, 3:1 என்ற விகிதாச்சாரப்படி, இளநிலை பொறியாளர் பதவிக்கான பணியிடங்களை தவிர்த்து, உதவி பொறியாளர் பதவிக்கான பணியிடங்களை நிரப்பும்பொருட்டு 2019-2020 ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலை தயாரிப்பதற்கும்,
3. மேற்கண்ட பட்டியல் 8ல் உள்ள வரிசை எண்.1, 2, 4, 5, 6, 8,9 10 , 12, 13, 14 , 16, 17, 18, 20, 21, 22, 24, 25, 26, 28, 29, 30, 32, 33, மற்றும் 34 வரையுள்ள 26 உதவி பொறியாளர்கள், பணிவிதிகளின்படி 5 ஆண்டு பணிக் காலத் தகுதி மற்றும் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான முழுத் தகுதி பெற்றுள்ளதின் அடிப்படையில், 26 உதவி பொறியாளர்களின் பெயரை கொண்டு தயாரிக்கப்பட்ட உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,
4. தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றுள்ள மேற்படி நபர்களுக்கு, 7வது ஊதியக்குழு பரிந்துரையின்படி, ரூ. 56100-177500/- என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்கி, தற்போது காலியாக உள்ள பணியிடங்களில் உதவி செயற்பொறியாளராக பணியமர்வு செய்து ஆணை வழங்கவும்,

5. அரசாணை எண்.24, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.31.01.2017ல் ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகள் 1969 ன்படி, உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட 10 ஆண்டு பணிக்காலத்தகுதி தவிர, இதர தகுதிகளை பெற்றிருக்கும் மேற்கண்ட பட்டியல் 8ல் உள்ள வரிசை எண்.3, 7, 11, 15, 19, 23, 27, 31, 35 இளநிலைபொறியாளர்களுக்கு பணிக்காலத் தகுதியினை மட்டும் விதித் தளர்வு செய்து, உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு பரிசீலனை செய்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும்,

6. பத்தி 10 ல் கூறப்பட்டுள்ள திரு.ஆர்.ருத்திரகோட்டிஸ்வரன், திருமதி.டி.ரேவதி, திரு.ஜி.எத்திராஜ், மற்றும் திரு.சுந்தரராஜன் ஆகிய உதவி பொறியாளர்களின் பெயர்கள் பணிவிதிகளின்படி தகுதி பெற்றிருப்பினும், மூப்புநிலைப்படியே பதவி உயர்வு அளிக்க இயலும் என்பதனை தனியர்களுக்கு தெரிவிப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில் ஆணையர் அவர்களின் 07.09.2020 நாளிட்ட மேற்குறிப்பில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“Approved.Put up in notice board”

ஆணையரது 07.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

“உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு, 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.

****

பொ.து.ந.க.எண்.ஈ2/ 34759/ 2019

தீர்மான எண்.599/2020 **நாள்:08-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - வட்டார அலுவலகத்தில் (தெற்கு) - மாநகர கூடுதல் சுகாதார அலுவலராக பணிபுரியும் டாக்டர்.எஸ்.மகாலட்சுமி, அவர்களுக்கு பணிவரன்முறைபடுத்த அனுமதி.

வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் 28.11.2019 நாளிட்ட கடிதத்தில், தெற்கு வட்டார அலுவலகத்தில் பணிபுரியும் டாக்டர்.எஸ்.மகாலட்சுமி, மாநகர கூடுதல் சுகாதார அலுவலர், அவர்களுக்கு மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் 07.09.2017 அன்று பிற்பகல் முதல் ஓராண்டு காலம் பணிமுடித்ததால் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்கக் கோரி கோப்பு பெறப்பட்டுள்ளது.

டாக்டர்.எஸ்.மகாலட்சுமி, மாநகர கூடுதல் சுகாதார அலுவலர், அவர்களின் பணிக்கால விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்.	பெயர்/பதவி	தற்போது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள்.	பணிவரன் முறைப்படுத்த வேண்டிய நாள்.
1.	டாக்டர்.எஸ்.மகாலட்சுமி, மாநகர கூடுதல் சுகாதார அலுவலர்	07.09.2016 மு.ப	07.09.2016 மு.ப

மேலும், தனியர் மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 07.09.2016 முதல் நாளது தேதி வரை ஊதியமில்லா விடுப்பு அல்லது அனுமதியில்லா விடுப்பு போன்ற எந்தவிதமான விடுப்பும் துய்க்காமல் கூடுதல் மாநகர சுகாதார அலுவலர் பதவியில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார் என்றும், தனியரின் மீது துறை ரீதியான குற்றச்சாட்டுகளோ, விசாரணைகளோ நிலுவையில் இல்லை என்றும், மேலும், 07.09.2016 முற்பகல் முதல் 31.05.2019 வரையிலான காலத்திற்கு பணிப்பதிவேட்டில் பணிசரிபார்ப்பு சான்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (ப) எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்: 24.10.2016ன்படி., பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு-1(பி)-ன் கீழ் வரும் பதவிகளுக்கு பணிவரன்முறைப்படுத்த உரிய அதிகார பங்களிப்பு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி பெறவேண்டும்.

ஆகவே, டாக்டர்.எஸ்.மகாலட்சுமி, மாநகர கூடுதல் சுகாதார அலுவலர், தெற்கு வட்டார அலுவலகம் அவர்களுக்கு கீழ்கண்டவாறு பணிவரன்முறைபடுத்த சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 13.03.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

வ. எண்.	பெயர்/பதவி திருவாளர்கள்	தற்போது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள்.	பணிவரன்முறைப்படுத்த வேண்டிய நாள்.
1.	டாக்டர்.எஸ்.மகாலட்சுமி, மாநகர கூடுதல் சுகாதார அலுவலர்.	07.09.2016 மு.ப	07.09.2016 மு.ப

"பணிவரன்முறைபடுத்த சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

இ.பொ.து.ந.க.எண்எம்9/ 0947/ 2020

தீர்மான எண்.600/2020 **நாள்:08-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை - பொதுசுகாதாரம் பூச்சி தடுப்பு துறை - 1 முதல் 15 வரையுள்ள மண்டலங்களுக்குக்குட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிக்கும் வகையில் புகைபரப்பும் பணிக்காக - புகைப்பரப்பும் இயந்திரங்களை எடுத்துச் செல்ல ஒப்ப முறையில் தனியார் TATA ACE அல்லது அதற்கு இணையான வாகனங்களை ஒரு ஆண்டு வாடகைக்கு அமர்த்துவதற்கு நிர்வாக அனுமதி.

ஆணையர் அவர்களின் 15.07.2020 நாளிட்ட ஆணையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் கொசுத் தொல்லையை கட்டுப்படுத்த 15 மண்டலங்களுகுட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள குறுகிய தெருக்களிலும், குடிசைப் பகுதிகளிலும் புகைபரப்பும் பணியை மேற்கொள்ள வேண்டி புகைபரப்பும் இயந்திரங்களை எடுத்துச் செல்ல 82 எண்ணிக்கையிலான TATA ACE அல்லது அதற்கு இணையான வாகனங்களை ஓராண்டு காலத்திற்கு பணியமர்த்திட இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் ஒப்பங்கள் வரவேற்று நடவடிக்கை மேற்கொள்ள ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது.

மேலும், தற்போது பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறையில் பயன்பாட்டில் உள்ள Vehicle Mountable Puls Fogging இயந்திரங்களின் விவரம்

வ.எண்.	மண்டலம்	வாகனங்களின் எண்ணிக்கை
1	I	3
2	II	1
3	III	2
4	IV	4
5	V	3
6	VI	3
7	VII	1
8	VIII	5
9	IX	4
10	X	5
11	XI	2
12	XII	2
13	XIII	4
14	XIV	3
15	XV	1
Newly PUrchaded Vehicle Mountable Plus Fogging Machines (Dual purpose - Cold Fog & Thermal Fog) spraying for disinfection		39
Total		82

மேலும், கொசு உற்பத்தியை தடுத்திட, கொசு ஒழிப்பு புகை பரப்பும் பணியினை மேற்கொள்வதற்கு இயந்திரங்களை எடுத்துச் செல்வதற்கு அமர்த்தப்படும் வாகனங்கள் நாள்தோறும் 5 மணி நேரம் மற்றும் 25 கி.மீ முதல் 30 கி.மீ தூரத்திற்கு இயக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

கொசு ஒழிப்பு புகை பரப்பும் இயந்திரத்தை எடுத்துச் செல்வதற்காக இயந்திரப் பொறியியல் துறை மூலம், பூச்சி தடுப்பு துறைக்கு 41 எண்ணிக்கையிலான TATA ACE அல்லது அதற்கு இணையான வாகனங்கள் தலைமையிடத்திலிருந்து ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு பணியமர்த்தி தரப்பட்டுள்ளது. இந்நிலையில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக பெருநகர சென்னை மாநரகாட்சி பகுதிகளில் கிருமி நாசினி தெளிப்பதற்காக 39 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யப்பட்ட Vehicle Mountable Plus Fog Machine இயந்திரத்தை தற்போது டெங்கு ஒழிப்பு பணிக்காக ஈடுபடுத்த

உள்ளதாலும் மற்றும் பூச்சி தடுப்பு துறையின் பயன்பாட்டிற்கு தயராக உள்ள 2 எண்ணிக்கையிலான இயந்திரங்களை கொசு ஒழிப்பு பரப்பும் பணிக்காக ஈடுப்படுத்த உள்ளதாலும் மற்றும் கூடுதலாக 41 எண்ணிக்கையிலான TATA ACE அல்லது அதற்கு இணையான வாகனங்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனத்தின் மூலம் வாடகைக்கு பணியமர்த்தப்பட வேண்டியுள்ளது.

ஏற்கனவே, ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள 41 எண்ணிக்கையிலான TATA ACE அல்லது அதற்கு இணையான வாகனங்களின் ஒப்பந்த காலம் செப்டம்பர் 2020ல் முடிவடைகிறது. எனவே, பூச்சி தடுப்பு துறையில் உள்ள 82 எண்ணிக்கையிலான Vehicle Mountable Plus Fog Machine இயந்திரத்தை கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் பணிக்கு ஈடுபடுத்திட 82 எண்ணிக்கையிலான TATA ACE அல்லது அதற்கு இணையான வாகனங்களை ஓராண்டு காலத்திற்கு பணியமர்த்திட ஒப்பம் கோரி தனியார் நிறுவனத்தின் மூலம் வாடகைக்கு பணியமத்திடலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், ஒரு எண்ணிக்கையிலான TATA ACE அல்லது அதற்கு இணையான வாகனத்தை நாளொன்றுக்கு 5 மணி நேரம் மற்றும் 25 கி.மீ முதல் 30 கி.மீ தூரம் வரை இயக்குவதற்கான வாடகைத் தொகையானது ரூ. 945/- (GST சேர்த்து) என கணக்கிடப்படுகிறது. இதன்படி 82 எண்ணிக்கையிலான TATA ACE அல்லது அதற்கு இணையான வாகனத்தை ஓராண்டு காலத்திற்கு தனியார் நிறுவனத்தின் மூலம் வாடகைக்கு அமர்த்துவதற்கு ஏற்படுகின்ற செலவீனம் (82 x 900 x 25 (வார விடுமுறை நாட்களை தவிர்த்து) x 12) = ரூ. 2,21,40,000/- (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தோரு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) (GST தவிர்த்து) என கணக்கிடப்படுகிறது.

எனவே,

1) கொசுத் தொல்லையை கட்டுப்படுத்த 1 முதல் 15 வரையிலான மண்டலங்களுகுட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள குறுகிய தெருக்களிலும், குடிசைப் பகுதிகளிலும் புகைபரப்பும் பணியை மேற்கொள்ள வேண்டி புகைபரப்பும் இயந்திரங்களை (Vehicle Mountable Puls Fog Machine) எடுத்துச் செல்ல மொத்தம் 82 எண்ணிக்கையிலான வாகனங்களை (TATA ACE அல்லது அதற்கு இணையான வாகனங்கள்) ஒரு வருட காலத்திற்கு தோராயமாக ரூ. 2,21,40,000/- (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தோரு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) (GST தவிர்த்து) செலவீனத்தில் ஒப்பம் கோரி பணியமர்த்திட நிர்வாக அனுமதி வேண்டியும்,

2) இப்பணிக்கென பயன்படுத்தப்படும் TATA ACE அல்லது அதற்கு இணையான வாகனங்களுக்கான வாடகை செலவீனத்தை கணக்கு தலைப்பு எண். 30-32-02/ கணக்கு குறியீட்டு எண், 230 – 800-400 ன் கீழ் தலைமையிடம் பூச்சி தடுப்பு துறை மூலம் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.9.வ.து.ந.க.எண்.ஆர்1/ 4406/ 2020

தீர்மான எண்.601/2020 **நாள்:08-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9 - கோட்டம்-109 முதல் 126 வரை கொரனா நோய் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கை கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் கொரனா நோய் தொற்று பாதிக்கப்பட்டுள்ளவர்களக்கு தேவையான அத்தியாவசிய பணிகளை மேற்கொள்வதற்கு 200 எண்ணிக்கையிலான தன்னார்வள பணியாளர்கள் அவசர அவசியம் கருதி 18.06.2020 முதல் மூன்று மாதங்களுக்கு பணியமர்த்தியது - மேலும் ஒரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9 எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது கொரனா நோய் தொற்று பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளில் *Home Quarantine Extended Contacts, Home Isolation* ஆகிய வகைபாடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் அனைவரும் விதிகளை மீறி வெளியில் சென்று வருவதை தடை செய்திடவும் அவர்கள் மூலமாக ஆரோக்கியமாக உள்ளவர்களுக்கு நோய் தொற்று பரவாமல் தடுத்திடும் வகையிலும், மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் நலம் பெறுவதற்கு வேண்டி தினமும் அவர்களுக்கு அன்றாட தேவைகளான மருந்து பொருட்கள், மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வாங்கி தருவதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் *Revenue and disaster Management Department disaster Management Wing D.M.II Section G.O.(MS) No.312 Dated: 20.06.2020*ன்படியும் ஆணையர் அவர்களின் ஆலோசனையின்படியும் அப்பணிகளை மேற்கொள்ள மொத்தம் *18* கோட்டங்களுக்கு தேவையான *200* தன்னார்வளர்களை *(Focus Volunteers)* பணியாளர்களை அவசர அவசியம் கருதி பணியமர்வு செய்து மேற்கண்ட பணிகளை அவர்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்பொருட்டு மூன்று மாத காலத்திற்கு நடைமுறைபடுத்திட சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் தீர்மானம் (சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.*427/2020*, நாள்: *30.06.2020)* பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட நிகழ்வில் மூன்று மாத காலம் என்பது கடந்த *18.06.2020* முதல் *17.09.2020* வரையாகும்.

*Revenue and disaster Management Department disaster Management Wing D.M.II Section G.O.(MS) No.312 Dated: 20.06.2020*ல் நான்கு மாத காலத்திற்கு அதாவது *120* நாட்களுக்கு பணியமர்வு செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாலும், மேலும் இப்பணி தற்போது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் மண்டலம்-9ல் பணியமர்வு செய்யப்பட்ட *200* தன்னார்வள பணியாளர்களை *18.09.2020* முதல் மேலும் ஒரு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்திடவும், நீட்டிப்பு காலத்திற்கான ஊதியம் வழங்கிட கூடுதல் நிதி முன்பணமாக ஒதுக்கீடு செய்திடவும் சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

(1) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9ல் கோட்டம்-*109* முதல் கோட்டம்-*126* வரையிலான பகுதிகளில் கொரனா நோய் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக நோய் தொற்று பாதிக்கப்பட்ட நபர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களின் நலன் பாதுகாக்கும் பொருட்டு, அவர்களுக்கு சிரமம் இன்றி, அவர்கள் மூலமாக மற்றவர்களுக்கு நோய் தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டு அவர்களின் அத்தியாவசிய மருந்து தேவைகள் மற்றும் பிற அத்தியாவசிய தேவைகைள வாங்கி அவர்களுக்கு வழங்கும் பணிகளை தற்போது மேற்கொண்டு வரும் தன்னார்வள பணியாளர்களின் பணியினை மேலும் ஒரு

மாத காலத்திற்கு (அதாவது 18.09.2020 முதல் 17.102020 வரை) பணியமர்த்தி கால நீட்டிப்பு செய்து கொள்ளவும்,

(2) மேற்கண்ட (Focus Volunteers) பணியாளர்களுக்கு Revenue And Disaster Management Department Disaster Management Wing D.M.II Section G.O.(MS) No.312 Dated:20.06.2020 ன்படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் ஒரு மாதத்திற்கு ஊதியம் ரூ.15,000/- வீதம் 200 எண்ணிக்கையிலான தன்னார்வள பணியாளர்களுக்கு (Focus Volunteers) மேலும் ஒரு மாதத்திற்கு ஊதியம் வழங்க ஆகும் செலவு தொகை ரூ.30,00,000/- (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) (200 X 15000 X 1 மாதம்) கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்திட நிர்வாக அனுமதியும் அதன்பொருட்டு மன்ற தீர்மானம் பெற்றிடவும்,

(3) மேற்கண்ட செலவினத்தை கொரனா நோய் தொற்று தடுப்பு பணிகளுக்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்து கூடுதல் முன்பணமாக மண்டலம்-9 கணக்கு அலுவலர் மூலமாக பெற்று பணிகளை மேற்கொண்டு அதன்பின்னர் அத்தொகையினை நேர்செய்திட அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தன்னார்வல பணியாளர்கள் பணி நீட்டிப்பு, 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.10 ந.க.எண். அ1/ 6837/ 2020

தீர்மான எண்.602/2020 **நாள்:08-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10 - அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில் திருகுளத்தின் தென்புறம் அமைந்துள்ள காரிய மண்டபத்தின் பயன்பாட்டினை மாற்றி திருக்கோயில் பயன்பாட்டிற்கு வழங்க அனுமதி.

அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில் உதவி ஆணையர் / செயல் அலுவலர் அவர்களின் 07.08.2020 நாளிட்ட கடிதத்தில் அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலின் தெற்கு ராஜகோபுரத்தின் இடதுபுறம் திருக்கோயிலுக்கு சொந்தமான திருக்குளம் அமைந்துள்ளது. அதன் அருகில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காரிய மண்டபம் உள்ளதாகவும், இந்த காரிய மண்டபம் இத்திருக்குளத்தின் புனித தன்மைக்கு ஆகம விதிகளின்படி இல்லாததால், இந்த இடத்தை திருக்கோயிலுக்கு வழங்கினால் சுபமங்கள நிகழ்வுகளான நிச்சயதார்த்தம், திருமணங்கள் மற்றும் காதுகுத்துதல் போன்றவற்றிற்கு இடம் கிடைக்கும் எனவும் கூறியுள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இந்த காரிய மண்டபம் திருக்கோயிலின் தெற்கு மாட வீதியில் அமைந்துள்ளது. இந்த கட்டிடம் 2000-01ம் ஆண்டு கட்டப்பட்டு, இறந்தவர்களுக்கு காரியம் மற்றும் சடங்குகள் செய்யும் மண்டபமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த கட்டிடம் 330 சதுரடி பரப்பளவில் உள்ளது.

ஆகவே, இந்த மண்டபத்தில் காரியம் செய்யும் செயல்பாட்டினை நிறுத்தி திருக்கோயிலின் பராமரிப்பில் ஒப்படைக்கவும் மற்றும் இதற்கான ஆட்சேபனை இன்மை கடிதத்தை அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில் நிர்வாகத்திற்கு வழங்கவும் சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"காரியம் செய்யும் செயல்பாட்டினை நிறுத்தி திருக்கோயிலின் பராமரிப்பில் ஒப்படைக்க, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.10 ந.க.எண். அ.1/ 6681 / 2020

தீர்மான எண்.603 / 2020 **நாள்:08-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10ல் அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலின் திருக்குளத்தின் வடக்கு பக்கம் உள்ள வடக்கு மாடவீதியில் 4344.23 சதுரடி இடத்தினை திருக்கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வாகனங்கள் நிறுத்தும் இடமாக பயன்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மையை நிபந்தனையுடன் வழங்க அனுமதி.

அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில் உதவி ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களின் 09.07.2020 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10ல் உள்ள அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலின் திருக்குளத்தின் வடக்கு பக்கம் உள்ள வடக்கு மாடவீதி சாலையில் பயன்பாட்டில் இல்லாத மற்றும் வாகனங்கள் செல்லாத சுமார் 4344.23 சதுரடி காலியிடத்தில் திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் வாகனங்கள் நிறுத்துமிடமாக பயன்படுத்திட ஒரு ஆட்சேபணை இன்மை கடிதம் வழங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த சாலையின் மொத்த அகலம், இந்த இடத்தில் 48 ‘ – 1½” அடியாகும். இதில் வாகனங்கள் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள தார்சாலையின் அகலம் 17’ – 7½” அடியாகும். மீதம் 30’ – 6 “ அடி சாலை இடதுபுறமும், 20’-0” அடிசாலை வலதுபுறமும் (குளத்தையொட்டியுள்ள இடம்) உள்ள இடம் மண்தரையாக உள்ளது. இதில் தற்பொழுது நிறைய பயன்படாத வாகனங்களும், வேறு இடங்களிலிருந்து கொண்டு வந்து நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களும் உள்ளது.

ஆகவே, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 231’ -9” நீளம் மற்றும் 18’ – 9” அகலம் உள்ள இந்த சாலை அமைக்கப்படாத மண்சாலை பகுதியினை (4344.23 சதுரடி) இடத்தை கோவிலுக்கு வழங்கும் பட்சத்தில் அவர்கள் அதனை பேவிங் பிளாக் (Paving Block) கற்கள் கொண்டு, தரை அமைத்து, வாகனங்களுக்கு நிழற்குடை அமைத்து, திருக்கோயிலுக்கு வரும் இரு சக்கர வாகனங்களை நிறுத்தி கொள்வதாக பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களை நேரிலும், கடிதம் மூலமும் வலியுறுத்திள்ளனர். இதனால், தற்பொழுது மற்ற சாலைகளில் நிறுத்தப்படும், இக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் வாகனங்களினால் போக்குவரத்து நெரிசலும் குறையும் என்று கூறியுள்ளனர்.

ஆகவே, தற்கலிகமாக அமைக்கப்படும் இந்த வாகன நிறுத்தும் இடத்தை, கோவில் நிர்வாகத்திற்கு, வாகனம் நிறுத்துவதற்கு உரிமை மாற்றம் எதுவும் இன்றி, எவ்வித கட்டணமின்றி வழங்கவும், மேலும், பின்வரும் காலத்தில் இச்சாலை விரிவாக்கம் செய்ய வேண்டியிருப்பின், இந்த இடத்தை பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-10 நிர்வாகத்திடம் உடனடியாக ஒப்படைக்கவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இதற்கு தடையின்மை சான்றிதழ் வழங்க சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

“வடபழநி கோயில் வடக்கு மாட வீதியில் உள்ள 4344.23 சதுரடி இடத்தினை வாகனங்கள் நிறுத்தும் இடமாக பயன்படுத்த குறிப்பில் உள்ள நிபந்தனையுடன் தடையின்மை சான்றிதழ் வழங்க சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.

****

ம.அ.5. ந.க.எண். *3208/ 2020*

தீர்மான எண்.604/2020 **நாள்:08-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - *5*, வார்டு -*58*, ராஜா முத்தையா சாலை - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழைய சட்ட மன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

மண்டலம்- 5, பகுதி-*14*, வார்டு-*58*க்கு உட்பட்ட ராஜா முத்தையா சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத பழைய சட்ட மன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடம் மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. மேலும், இந்த இடத்தில் இரவு காப்பகம் கட்டுவதற்கு இக்கட்டிடத்தை இடிக்க வேண்டுதல் அவசியமாகிறது.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரை தளம்= *91.58* ச.மீ,

புத்தக மதிப்பு = ரூ. 0.00

ஆகவே, மண்டலம்-*5*, வார்டு-*58*, ராஜா முத்தையா சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத பழைய சட்ட மன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"சட்ட மன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.6. ந.க. எண். 4108/ 2020

தீர்மான எண்.605/2020 **நாள்:08-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, வார்டு-73 - டாக்டர் அம்பேத்கர் சாலையில் அமைந்துள்ள பழுதடைந்து மற்றும் சுகாதார மற்ற நிலையில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள் 33603060106 & 33603060107 கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

வ. எண்	வார்டு எண்-73	மண்டலம்-6
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	டாக்டர் அம்பேத்கர் சாலையில் அமைந்துள்ள பழுதடைந்து மற்றும் சுகாதாரமற்ற நிலையில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள் 33603060106 & 33603060107 கட்டிடம்.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	1993
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு?	75.95 சதுரமீட்டர் (தரைதளம்)
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு?	5727.88 சதுரமீட்டர்
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ. 11,076/-
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	பயன்பாட்டில் உள்ளது
7	அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிட துறையின் மூலம் இரவு காப்பகம் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பழுதடைந்து மற்றும் சுகாதாரமற்ற நிலையில் உள்ளது
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்?	ஆணையர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி
10	மன்ற தீர்மான எண் (ம) நாள்.	இல்லை

எனவே, மண்டலம்-6, வார்டு-73, டாக்டர் அம்பேத்கர் சாலையில் அமைந்துள்ள மேற்கண்ட பழுதடைந்து மற்றும் சுகாதாரமற்ற நிலையில் உள்ள கட்டிடங்களை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய கட்டிடங்களை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.6. ந.க. எண்.4185/ 2020

தீர்மான எண்.606 / 2020 **நாள்:08-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, வார்டு-73 - குட்டிதாம்பிரான் தெருவில் அமைந்துள்ள பழைய சிதிலமடைந்த வார்டு அலுவலகம் கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

வ. எண்	வார்டு எண்-73	மண்டலம்-6
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	குட்டிதாம்பிரான் தெருவில் அமைந்துள்ள பழைய சிதிலமடைந்த வார்டு அலுவலக கட்டிடம்.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	1992
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு?	1. கட்டிடம்1 - 66+66 =132 சதுரமீட்டர் (தரைதளம் மற்றும் முதல்தளம்) 2. கட்டிடம் 2 - 30 சதுரமீட்டர் (தரைதளம் மட்டும்) 3. கட்டிடம்3 - 15.95 சதுரமீட்டர் (தரைதளம் மட்டும்)
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு?	271.83 சதுரமீட்டர்
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ. 1,25,191.92/-
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	பயன்பாட்டில் உள்ளது
7	அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிட துறையின் மூலம் இரவு காப்பகம் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பழுதடைந்து மற்றும் சிதிலமடைந்த நிலையில் உள்ளது.
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்?	ஆணையர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி.
10	மன்ற தீர்மான எண் (ம) நாள்.	இல்லை.

எனவே, மண்டலம்-6, வார்டு-73, குட்டிதாம்பிரான் தெருவில் அமைந்துள்ள மேற்கண்ட பழுதடைந்து மற்றும் சிதிலமடைந்த நிலையில் உள்ள வார்டு அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"பழைய வார்டு அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.9.ந.க.எண். 2227/ 2020

தீர்மான எண்.607 / 2020 **நாள்:08-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9, கோட்டம்-123 - லஸ் அவென்யூவில் (நாகேஸ்வரராவ் பூங்கா அருகில்) உள்ள தமிழ்நாடு ஜவகர் சிறுவர் பூங்கா மன்ற பயன்பாட்டிலுள்ள பழுதடைந்த பள்ளி கட்டிடத்தினை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-25, கோட்டம்-123 லஸ் அவென்யூவில் (நாகேஸ்வரராவ் பூங்கா அருகில்) பள்ளிக்கட்டிடம் அமைந்துள்ளது. இப்பள்ளிக்கட்டிடம் தற்போது கலைபண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்ற பயன்பாட்டிலுள்ளது..

இக்கட்டிடம் 1972-ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகும். தரைத்தளம் மட்டும் கொண்ட இக்கட்டிடத்தின் பரப்பளவு 315.44 சதுர மீட்டர் ஆகும் மேலும் இக்கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ. 90, 496.48 ஆகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9, பகுதி-25, கோட்டம்-123 லஸ் அவென்யூவில் (நாகேஸ்வரராவ் பூங்கா அருகில்) அமைந்துள்ள இப்பள்ளிக்கட்டிடம் கலை பண்பாட்டு துறையின் கீழ் செயல்பட்டுவரும் தமிழ்நாடு சிறுவர் மன்ற பயன்பாட்டிற்காக மன்ற தீர்மான எண்.263/2010 நாள்.14.06.2010ன்படி, வாடகையின்றி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் மாமன்ற தீர்மான எண்.302/2013, நாள்.24.04.2013ன்படி, பழுதடைந்த இப்பள்ளிக்கட்டிடத்தினை இடித்துவிட்டு கலை பண்பாட்டு துறையின் கீழ் செயல்பட்டுவரும் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்ற பயன்பாட்டிறகாக புதிய கட்டிடம் கட்டுவதற்கு நிபந்தனைகளுடன் கலை பண்பாட்டு துறைக்குஅனுமதி வழங்கப்பட்டது.

மேலும், கண்காணிப்பு பொறியாளர்/ கட்டிடத்துறை அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-25, கோட்டம்-123ல் லஸ் அவென்யூவில் (நாகேஸ்வரராவ் பூங்கா அருகில்) உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கலைபண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டுவரும் தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்திற்காக புதிய கட்டிடம் கட்டுவதற்கு, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் ((பண்-1,2) துறை அரசாணை (நிலை எண்.22) நாள்.21.01.2020ன்படி அரசின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் எனவே, இவ்விடத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்ற செயல்பாட்டிலுள்ள பழுதடைந்த பழைய பள்ளிக்கட்டிடத்தினை இடித்து அகற்றி காலிமனையாக கட்டிடத்துறைக்கு ஒப்படைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-25, கோட்டம்-123 லஸ் அவென்யூவில் (நாகேஸ்வரராவ் பூங்கா அருகில்) அமைந்துள்ள இக்கட்டிடத்தினை ஆய்வு செய்ததில் இக்கட்டிடம் பழுதடைந்து அபாயகரமான நிலையில் இருப்பதால் இக்கட்டிடத்தினை இடித்து அகற்றுவது அவசியம் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-25, கோட்டம்-123, லஸ் அவென்யூவில் (நாகேஸ்வரராவ் பூங்கா அருகில்) உள்ள தமிழ்நாடு ஜவகர் சிறுவர் பூங்கா மன்ற பயன்பாட்டிலுள்ள பழுதடைந்த பள்ளி கட்டிடத்தினை இடித்து அகற்றிட சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"பழுதடைந்த பள்ளி கட்டிடத்தினை இடித்து அகற்ற, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.7.வ.து.ந.க.எண்.ஆர் 1/0553/ 2020

தீர்மான எண்.608/2020 **நாள்:08-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7 - வருவாய் துறை -வார்டு-79 முதல் 93 வரை- கொரானா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கை - கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் கொரானா நோய் தொற்று பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பணிகளை மேற் கொள்ளுவதற்கு 245 எண்ணிக்கையிலான தன்னார்வல பணியாளர்களை அவசர அவசியம் கருதி 14.06.2020 முதல் மூன்று மாதங்களுக்கு பணியமர்த்தியது - மேலும் ஒரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7 எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளில் *Home Quarantine Extended Contacts, Home isolation* ஆகிய வகைப்பாடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் அனைவரும் விதிகளை மீறி வெளியில் சென்று வருவதை தடை செய்திடவும் அவர்கள் மூலமாக ஆரோக்கியமாக உள்ளவர்களுக்கு நோய் தொற்று பரவாமல் தடுத்திடும் வகையிலும் மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் நலம் பெறுவதற்கு வேண்டி தினமும் அவர்களுக்கு அன்றாட தேவைகளான மருந்து பொருட்கள், மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வாங்கி தருவதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் *Revenue and Disaster Management Department Disaster Management Wing D.M.II Section G.O.(MS)No.312 Dated : 20/06/2020*ன்படியும், ஆணையர் அவர்களின் ஆலோசணையின்படியும் அப்பணிகளை மேற்கொள்ள மொத்தம் 15 கோட்டங்களுக்கு தேவையான 245 தன்னார்வல *(Focus Volunteers)* பணியாளர்களை அவசர அவசியம் கருதி பணியமர்வு செய்து மேற்கண்ட பணிகளை அவர்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

அதன் பொருட்டு மூன்று மாத காலத்திற்கு நடைமுறைபடுத்திட சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்கள் தீர்மான எண். 469/2020, நாள்.13.07.2020 பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட நிகழ்வில் மூன்று மாத காலம் என்பது கடந்த 15.06.2020 முதல் 15.09.2020 வரையாகும்.

*Revenue and Disaster Management Department Disaster Management Wing D.M.II Section G.O.(MS)No.312 Dated :20/06/2020*ல் நான்கு மாத காலத்திற்கு அதாவது 120 நாட்களுக்கு பணியமர்வு செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாலும், மேலும் இப்பணி தற்போது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் மண்டலம்-7ல் பணியமர்வு செய்யப்பட்ட 245 தன்னார்வள பணியாளர்களை 16.09.2020 முதல் மேலும் ஒரு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்திடவும், நீட்டிப்பு காலத்திற்கான ஊதியம் வழங்கிட கூடுதல் நிதி முன்பணமாக ஒதுக்கீடு செய்திடவும் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் தீர்மானமும் வேண்டப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7ல் கோட்டம் 79 முதல் கோட்டம் – 93 வரையிலான பகுதிகளில் கொரோனா நோய் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக நோய் தொற்று பாதிக்கப்பட்ட நபர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களின் நலன் பாதுகாக்கும் பொருட்டு, அவர்களுக்கு சிரமம் இன்றி, அவர்கள் மூலமாக மற்றவர்களுக்கு நோய் தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டு அவர்களின் அத்தியாவசிய மருந்து பொருட்கள் மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை வாங்கி அவர்களுக்கு வழங்கும் பணிகளை தற்போது மேற்கொண்டு வரும் தன்னார்வல பணியாளர்களின் பணியினை மேலும் ஒருமாத காலத்திற்கு (அதாவது 16.09.2020 முதல் 15.10.2020 வரை) பணியமர்த்தி கால நீட்டிப்பு செய்து கொள்ள அனுமதியும்,

ம.அ.7.வ.து.ந.க.எண்.ஆர் 1/0553/ 2020

2. மேற்கண்ட (Focus Volunteers) பணியாளர்களுக்கு Revenue and Disaster Management Department Disaster Management Wing D.M.II Section G.O. (MS) No.312 dated :20.06.2020ன் படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் ஒரு மாதத்திற்கு ரூ.15,000/- வீதம் 245 எண்ணிக்கையிலான தன்னார்வல பணியாளர்களுக்கு (Focus Volunteers) மேலும் ஒரு மாதத்திற்கு ஊதியம் வழங்க ஆகும் செலவு தொகை ரூ.36,75,000/- (ரூபாய் முப்பத்தாறு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) (245 x 15000 x 1 மாதம்) கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்திட நிர்வாக அனுமதியும்,

3. மேற்கண்ட செலவினத்தை கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிகளுக்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்து கூடுதல் முன்பணமாக மண்டலம்-7 கணக்கு அலுவலர் மூலமாக பெற்று பணிகளை மேற்கொண்டு அதன் பின்னர் அத்தொகையினை நேர் செய்திட அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 07.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.ஈ1/ 13882 / 2020

தீர்மான எண்.609 / 2020 **நாள்:09-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 15.05.2020 அன்றைய நிலையில் உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க கீழ்க்காண் விவரங்கள் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

1	பதவி உயர்வுக்கான பதவியின் பெயர்	உதவி கணக்கு அலுவலர்
2	மைய நாள்	15.05.2020
3	ஊதிய விகிதம்	ரூ.15600-39100 + 5400 தர ஊதியம் (7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி (level 22) ரூ.56100 – 177500/- ஊதியக் கட்டு)
4	காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of vacancies)	

1)	அனுமதிக்கப்பட்ட பணியிடம்	-	29
	(அ) தற்காலிக பணியிடம்	-	-
	(ஆ) நிரந்தர பணியிடம்	-	29
2)	தற்போது பணிபுரிபவர்கள் (அயற்பணியில் பணிபுரிபவர்கள் – 10 பெ.செ.மா.உதவிகணக்கு அலுவலர்கள் - 15)	-	25
3)	15.05.2020 மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம்	-	4
4)	பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடம்	-	0
	ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம்	-	0
5)	பட்டியல் ஆண்டில் பதவி உயர்வினால் ஏற்படும்காலிப்பணியிடம்	-	1
6)	எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம் 40% (G.O.Ms.No.103 நாள்.09.10.2014)	-	2
			7

5	வளர் நிலை பதவியின் பெயர் மற்றும் தகுதிகள்	நிர்வாக அலுவலர் (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட பட்டம். (ஆ) ஊட்டப்பதவியான நிர்வாக அலுவலர் பதவியில் ஓராண்டுக்கு குறையாமல் பணி முடித்து இருக்க வேண்டும்.
6	கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ?	கடந்த ஆண்டு உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதியான 5 நபர்களுக்கு, உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

பொ.து.ந.க.எண்.ஈ1/ 13882 / 2020

அரசாணை எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை நாள்.14.11.2017ல், பெருநகர சென்னை மாநகராட்சி பொதுப்பணி விதிகள் 1970ல் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான பணி நியமன விதிகளில், திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, இப்பணிவிதிகள் 31.08.2010 முதல் நடைமுறைப்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது.

உதவி கணக்கு அலுவலர் பதவியினை நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு:-

Name of the Post	***Method of Appointment***	***Qualification***
Category - 2 Assistant Accounts Officer ***Rs.***15600-39100 + GP 5400	*a) By promotion from the category of Administrative Officer or Head Clerk in the Greater Chennai Corporation including Council Section in Class III who have put in not less than one year of service; or";* ***(G.O. Ms. No. 116 MA &WS (MC-3)Department dated.14.11.2017)***	*(i) A graduate of a recognized University.* *(ii) A pass in the Accounts Test for subordinate Officers Parts I and II or any other Accounts Tests prescribed by Government as equivalent thereto; and* *(iii) Must have served as Administrative Officer or Head Clerk in the Greater Chennai Corporation including Council Section in Class III for a period not less than one year.";* ***(G.O. Ms. No. 116 MA &WS (MC-3)Department dated. 14.11.2017)***
	b) By Appointment on deputation from the category of District Inspectors of Local Funds, Junior Accounts Officers, Sub Treasury Officers, Grade I, Asst. Treasury Officers, and the Accountants Grade I, of the Treasury and Accounts Subordinate Service, who have put in not less than five years of service in their respective posts, or";	*(iv) must served as District Inspector Or Local Fund Accounts or Junior Accounts or Sub-Treasury Officer Grade I of the Assistant Treasury Officer or Accountant Grade I of the Treasury and Accounts Subordinate Service for a period Of not less than five years.*
	c) By direct recruitment	*(v) To pass Chartered Accountant or Cost and works Accountant (Final)*

பெருநகர சென்னை மாநகராட்சி பொது பணி விதிகள் -1970 ல் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு திருத்தியமைக்கப்பட்ட பணிவிதிகளின்படி, ஊட்டப்பதவியான நிர்வாக அலுவலர் பதவியில் ஓராண்டுக்கு குறையாமல் பணி நிறைவு செய்திருக்க வேண்டும் என்பதாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில், உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 29 பணியிடங்களில், அயற்பணி அடிப்படையில் 10 கணக்கு அலுவலர்களும், பெருநகர சென்னை மாநகராட்சியின் உதவி கணக்கு அலுவலர்களும் 15 பேரும் கணக்கு அலுவலர்களாக பணிபுரிகின்றனர். மீதமுள்ள பணியிடங்களில் 4 பணியிடங்கள் காலிப்பணியிடங்களாக உள்ளது. பதவி உயர்வின் மூலம் ஒரு காலிப்பணியிடம்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி கணக்கு அலுவலர் பதவியில் 5 காலிப்பணியிடங்களும் மற்றும் அரசாணை எண்.103 ன்படி எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம் (40%) 2 காலிப்பணியிடங்களையும் சேர்த்து மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை 7 ஆகும்.

பொ.து.ந.க.எண்.ஈ1/ 13882 / 2020

பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்து துறை/மண்டலங்களிலிருந்து பெறப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில், பணிவிதிகளின்படி மூப்பு நிலையில் உள்ள நிர்வாக அலுவலர்களின் விவரம் பின்வருமாறு:-

பட்டியல்-1

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் நிர்வாக அலுவலர்களின் பணி மூப்பு பட்டியல்

வ. எண்	பெயர்	பட்டதாரி /பட்டதாரி அல்லாதவர்	நிர்வாக அலுவலர் பதவி உயர்வு செயல்முறை ஆணை நாள் / பணியில் சேர்ந்த நாள்	குறிப்பு
1	ஜி.விக்டோரியா மேரிராணி	பட்டதாரி அல்லாதவர்	12.08.2016	பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
2	பி.விஜயலட்சுமி	பட்டதாரி அல்லாதவர்	24.07.2017	பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
3	யாஸ்மின்சுல்தானா	பட்டதாரி அல்லாதவர்	05.06.2018	பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
4	பி.ராணி	பட்டதாரி	07.06.2018	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரிகின்றார். தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதால், தனியரின் பெயர் இத் தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.
5	டி.காவேரி	பட்டதாரி	09.07.2018	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரிகின்றார். தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதால், தனியரின் பெயர் இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.
6	எல்.ஆனந்தலட்சுமி	பட்டதாரி	09.07.2018	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரிகின்றார். தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. இருப்பினும் தனியர் தனது 14.05.2020 நாளிட்ட கடிதத்தில், 2019-2020 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு தற்காலிகமாக விருப்பமில்லை எனத் தெரிவித்துள்ளார். எனவே, **தனியரின் பெயர் மூன்று வருடம் தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்க வேண்டும்.**

7	எஸ்.ஜெயகுமார்	**பட்டதாரி அல்லாதவர்**	09.07.2018	பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
8	ப்பி.தெய்வஸ்ரீ	**பட்டதாரி**	09.07.2018	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரிகின்றார். தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதால், தனியரின் பெயர் இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.
9.	எஸ்.விநாயகமூர்த்தி	**பட்டதாரி அல்லாதவர்**	19.07.2019	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை. பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
10.	எ.கிருஷ்ணமூர்த்தி	**பட்டதாரி**	19.07.2019	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை.
11.	சி.வசந்தா	**பட்டதாரி**	19.07.2019	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை.
12.	கே.புஷ்பா	**பட்டதாரி அல்லாதவர்**	24.07.2019	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை. பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
13.	எம்.இராமச்சந்திரன்	**பட்டதாரி**	19.07.2019	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை.
14.	டி.நளினி	**பட்டதாரி அல்லாதவர்**	22.07.2019	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை. பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
15.	எம்.வஜ்ரவேலு	**பட்டதாரி**	26.08.2019	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை.
16.	என்.வி.அனுராதா	**பட்டதாரி அல்லாதவர்**	27.08.2019	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை. பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.
17.	டி.ரவிச்சந்திரன்	**பட்டதாரி**	26.08.2019	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை.

18.	எஸ்.ரவணம்மா	பட்டதாரி	26.08.2019	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை.
19.	ஆர்.ஜானகி	பட்டதாரி அல்லாதவர்	22.08.2019	பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை. பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை.

உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்க பார்வை-2ல் கண்டுள்ள சுற்றறிக்கையின்படி, நிர்வாக அலுவலர் பதவியில் 1 ஆண்டுக்கு குறையாமல் பணிபுரிந்துள்ள பட்டதாரி நிர்வாக அலுவலர்களின் விவரங்கள் மட்டும் பெறப்பட்டுள்ளது.

15.05.2020 அன்று மைய நாளாகக் கொண்டு துறை/மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் பணிமூப்பின்படி நிர்வாக அலுவலர்களின் விவரம் பின்வருமாறு :-

பட்டியல்-2

வ. எண்.	பெயர் மற்றும் துறை/மண்டலம் (திருவாளர்கள்)	நிர்வாக அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்	மையநாளான 15.5.2020ல் நிர்வாக அலுவலர் பதவியில் பணி முடித்த காலம்
1	பி.ராணி தொற்றுநோய் மருத்துவமனை	07.06.2018	1 வருடம் 11 மாதம்
2	டி.காவேரி மண்டலம் 15	09.07.2018	1 வருடம் 10 மாதம்
3.	ப்பி.தெய்வஸ்ரீ மண்டலம் 14	09.07.2018	1 வருடம் 11 மாதம்

அரசாணை எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை நாள்.14.11.2017 ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி பொது பணி விதிகள் -1970ல் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு திருத்தியமைக்கப்பட்ட பணிவிதிகளின்படி, ஊட்டப்பதவியான நிர்வாக அலுவலர் பதவியில் ஓராண்டுக்கு குறையாமல் பணி நிறைவு செய்திருக்க வேண்டும் என்ற பணிக்கால தகுதியின் அடிப்படையிலும், தனியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என பொதுத்துறை மூலமாக இன்மை அறிக்கை பெறப்பட்டுள்ளதாலும், **பட்டியல்-2ல் *வரிசை எண்.1 முதல் 3 வரையுள்ள*** நபர்கள் தற்போது தயாரிக்கப்பட உள்ள உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான **தெரிவுப்பட்டியலில் இடம் பெற தகுதியுள்ளவர்களாக உள்ளனர்.**

தனியர்கள் மீது நாளது தேதி வரையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெற்கு வட்டார அலுவலகம் மற்றும் விழிப்பு குழுமத்தில் இன்மை அறிக்கை பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு-2ன் கீழ்வரும் உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு அளிக்கும் அதிகாரம் மன்றம் வசம் உள்ளது.

அரசாணை(ப) எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை நாள்.24.10.2016ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சிறப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளதால், பதவி உயர்வு அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்கள் வசம் உள்ளது.

எனவே,

அ) அரசாணை எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை நாள்.14.11.2017 ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கு, ஊட்டப்பதவியான நிர்வாக அலுவலர் பதவியில் ஓராண்டிற்கு குறையாமல் பணிபுரிந்து கொண்டிருக்கும் கீழ்கண்ட நிர்வாக அலுவலர்களை கொண்டு, 15.05.2020 யை அறுதி நாளாகக் கொண்டு 2020-21 ஆம் ஆண்டிற்கான உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கு தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டியும்,

பொ.து.ந.க.எண்.ஈ1/ 13882 / 2020

வ. எண்.	பெயர் மற்றும் பணிபுரியும் துறை / மண்டலம் திருமதி.	நிர்வாக அலுவலர் பதவியில் சேர்ந்த நாள்
1	பி.ராணி தொற்றுநோய் மருத்துவமனை	07.06.2018
2	டி.காவேரி மண்டலம் 15	09.07.2018
3	ப்பி.தெய்வஸ்ரீ மண்டலம் 14	09.07.2018

ஆ) மேற்காண் வரிசை எண் 1 முதல் 3 வரையிலான பட்டதாரி நிர்வாக அலுவலர்களுக்கு, உதவி கணக்கு அலுவலராக பதவி உயர்வு வழங்கியும், 7வது ஊதியக்குழு பரிந்துரையின்படி, (level 22) ரூ. 56100-177500/- என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் தற்போது காலியாகவுள்ள பணியிடங்களில் உதவி கணக்கு அலுவலராக பணியமர்வு செய்து ஆணை வழங்கவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 08.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு, அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

R.D.C.C.No.3721/Spl/2020

Resolution No.610 /2020 **Date:09-09-2020**

Greater Chennai Corporation – Central Region- Desilting of Storm Water Drains in IRR through zones- For Administrative Sanction.

It is a general practice that Greater Chennai Corporation, as a part of its Monsoon preparedness activities commences desilting of all its Storm Water Drains a few months ahead of the onset of Monsoon. Subsequently a meeting was conducted by the Commissioner on 26.08.2020.

As per the circular vide Circular dated 01.09.2020 videC.E.C.No.A2/0870/2020, the instructions of Commissioner reads as Rs.2.00 crore (Incl. of GST) has been allotted to each region for desilting, minor repairs and replacement of manhole doors. Also, it is instructed to accord Administrative Sanction at Regional level for the same work.

The Central Region having more areas of old core city which contains 79 divisions out of 200 wards in Greater Chennai Corporation. Except Zone 7 other four zones 6, 8, 9 & 10 are all consisting of core city areas. For the proposed desilting work in IRR which includes removal of silt, carting away, using safety gears and GST, estimates has been received from Zones on 26.08.2020 was Rs.13.73Cr. as listed in Col.no.1 of the table given below. After scrutiny, inspection at various levels the estimates have been revised to Rs.9.06 Cr.

Further, the Desilting proposal for Central Region was arrived for Rs.3.30 Cr in which the Desilting of Storm Water Drains in BRR, minor repairs, door replacement works are excluded. Utmost requirement of repairs and door replacement are all emphasized in the meeting held on 07.09.2020.

In continuation of the meeting, Desilting of Storm Water Drain in BRR (which were not included in the schedule of Super Sucker) minor repairs and door replacement etc., may be included with utmost requirement.

As discussed in the review meeting conducted on 07.09.2020, further it was revised from Rs. 3.30 Cr (In which minor repairs and BRR were not included) to Rs.5.68Cr. (Including Desilting, carting, safety gears, minor repairs & manhole doors replacement).

Further revised allocation orders of Commissioner and administrative sanction are obtained.

Zonewise fund allocation is listed as below;

Sl. No. (1)	Zone No. (2)	No. of Dn. (3)	Administrative Sanction requested (Rs. In Lakhs) (4)
1.	6	15	104.57
2.	7	15	105.00
3.	8	15	107.13
4.	9	18	125.22
5.	10	16	125.92

While executing the work, the Zones will be instructed to ensure the safety gears, day-to-day disposal of silt with gunny bags, safety measures like barricading with reflective stickers etc., scrupulously.

S.No.	April, 2020	May, 2020	June, 2020	July, 2020	August, 2020
No. of TCC Coordinators	47		30	24	14
No. Of TCC Volunteers	18		7	16	11
No. Of Virtual Volunteers under control of TCC	-	248		202	114

b) To ratify the orders of the Commissioner, Greater Chennai Corporation with regard to fixation of Honorarium for the Coordinators and Volunteers based on the work done i.e. number of contacts traced and the number of working hours as given below,

i. VIRTUAL CONTACT TRACER/VIRTUAL VOLUNTEER: Minimum Honorarium of Rs. 300/- per day (6-8 hours of work) for the Work-From-Home Virtual Contact Tracer (VCT) who are engaged in Contact Tracing & its Follow-Up. And an additional honorarium amount of Rs. 100 for 100 and above Contacts Traced/followed-up per day and Rs. 200 for 250 and above Contacts Traced/followed-up per day subject to a maximum limit of Rs. 500 per day for the VCTs

ii. CONTACT TRACING VOLUNTEER AT TCC: Minimum honorarium of Rs. 400/- per day for the Contact Tracing Volunteers (if work done at TCC for 8-10 hrs). And an additional honorarium of Rs. 100/- may be fixed if 100 and above contacts are traced or followed-up on a given day and Rs. 200/- additional honorarium may be fixed if 250 and above contacts are traced or followed-up on a given day, subject to a maximum limit of Rs. 600/- per day (At TCC, the Contact Tracing Volunteer is given additional work such as Tracing of Unlined Cases, Handling Incoming Calls etc.)

iii. CONTACT TRACING COORDINATOR: Minimum honorarium of Rs. 750/- per day (10-12 hrs of work) for the Contact Tracing Coordinators at TCC and to fix a minimum honorarium of Rs. 600/- on the days on which WFH (Work-from-Home) was done. And based on the performance of Contact Tracing Coordinators, to fix an additional honorarium of Rs. 1,500/- per month if the number of Contacts Traced by Volunteers (Virtual Contact Tracers) mapped with the Coordinators is 4,000 and above and to fix an additional honorarium of Rs. 2,500/- per month if the number of Contacts Traced by Volunteers (Virtual Contact Tracers) mapped with the Coordinators is 10,000 and above, subject to a maximum limit of Rs. 25,000/- per month.

iv. EMERGENCY TEAM COORDINATOR: Minimum honorarium of Rs.750/- per day for the Emergency Team/Incoming Calls Coordinators for the days present at TCC and the work done for 10-12 hrs per day.

v. EMERGENCY TEAM VOLUNTEER: Minimum honorarium of Rs.500/- per day for the days present at TCC for 8-10 hrs of work and to fix an additional honorarium of Rs. 2000/- per month for those volunteers who have done 12 hours of work per day in TCC.

c) To ratify the orders of the Commissioner sanctioning an amount of Rs. 45,00,000/- (Forty-five lakhs rupees only) towards payment of honorarium to the Tele-counselling Centre personneland expenditure made for the same from April, 2020 to June, 2020

d) To sanction an additional amount of Rs.45,00,000/- (Forty-five lakhs rupees only) towards payment of honorarium to the Tele-counselling Centre personnel from July, 2020 to September, 2020 in the same Head of Account 30-31-01 under Accounts Code 230-70-12-03 and to approve the toral amount of Rs.90,00,000/- towards payment of honorarium for the Tele-Counselling Centre (TCC) personnel to do Virtual Contact Tracing, Psycho-Socio Support and Handling Calls (044-25384520 & 044-46122300).

e) To release a total amount of Rs. **23,45,250** (Twenty three lakhs forty-five thousand Two Fifty rupees only) towards payment of Honorarium to the Tele-counselling Centre personnel for the months of July, 2020 and August,2020 for the work done by them as detailed in Annexures I-IV

Sl.No. a to e above, Orders of the Special Officer- Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.17.09.2020 is read.

"Sl.No. a to e are approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."

****

ம.நீ.வ.து.ந.க.எண்.பி3 / 0632/ 2020

தீர்மான எண்.646 / 2020 **நாள்:17-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - 2020-2021 ஆம் ஆண்டின் மூலதன நிதியின் கீழ் மண்டலம் - 3 ல் வார்டு-33 ல் உள்ள குளப்பன் குளத்தினை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி - ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது - குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.கே.சுந்தர்ராஜன் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.

சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் நிர்வாக அனுமதி தீர்மான எண்: 391/2020, நாள். 19.06.2020ன்படி 2020-2021 ஆம் ஆண்டின் மூலதன நிதியின் கீழ் மண்டலம் – 3 ல் வார்டு-33 ல் உள்ள குளப்பன் குளத்தினை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணிக்கு ரூ.172.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இதன்படி, இப்பணிக்கு மின்னணு ஒப்பங்கள் கோரி 24.06.2020 அன்று ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழ் தி இந்து , தினச் செய்தி ஆகிய நாளிதழ்களிலும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது. மின்னணு முறையில் (e-tender) மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 15.07.2020 அன்று மூன்று ஒப்பங்கள் பெறப்பட்டன. முன்வைப்புத் தொகை அளித்த மூன்று ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள், கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. இப்பணிக்கான விலைப்புள்ளி ஆவணங்கள் திறக்கப்பட்டதில், ஒப்பந்தபுள்ளி அளித்த, ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

அட்டவணை-1

வ. எண்.	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை (2019-20) (ரூபாய்) (GST வரி 12 % உட்பட) ரூ	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (ரூபாய்) (அனைத்து வரிகள் உள்பட) ரூ	2019-20 அலுவலக விலை விகிதத்துடன் ஒப்பிடுகையில் (GST வரி 12 % உட்பட)
01	கே.சுந்தர் ராஜன்	1,67,37,737.00	1,84,11,510.83	(+)10.00 % அதிகம்
02	D.ரங்கநாதன் அண்டு கோ	1,67,37,737.00	1,92,48,397.69	(+)15.00% அதிகம்
03	கன்ஸ்ட்ரக்டிவ் பிப்புள் இன்ஃப்ரா ப்ராஜெட்ஸ் பி லிமி.	1,67,37,737.00	1,97,50,529.80	(+)18.00% அதிகம்

குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரர் திரு.கே.சுந்தர்ராஜன் அவர்களின் ஒப்பத்தொகையானது 2019-20ம் ஆண்டின் (12% GST சேர்த்து) அலுவலக விலைபட்டியல் மதிப்பீடு தொகையை விட (+)10.00% அதிகமாக இருப்பதால், விலைக்குறைப்பு செய்ய ஒப்பந்ததாரருக்கு 27.07.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

ஒப்பந்ததாரரிடம் நடைபெற்ற விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப்பின், திரு.கே.சுந்தர்ராஜன் அவர்கள் அளித்த இறுதி ஒப்பப்புள்ளி தொகையானது, 2019-2020 ஆம் ஆண்டு அலுவலக விலையுடன் ஒப்பிட்டு கீழ்கண்டவாறு பட்டியலிடப்படுகிறது.

அட்டவணை-2

வ. எண்.	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை (ரூபாய்) (GST வரி 12 % உட்பட) ரூ	விலைக்குறைப் பிற்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த தொகை (ரூபாய்) (அனைத்து வரிகள் உட்பட) ரூ	விலைக்குறைப்பிற் கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2019-20 அலுவலக விலை விகிதத்துடன் ஒப்பிடுகையில் (GST வரி 12 % உட்பட)	விலைக்குறைப்பிற் கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2020-21 அலுவலக விலை விகிதத்துடன் ஒப்பிடுகையில் (GST வரி 12 % உட்பட)
01	திரு.கே.சுந்தர்ராஜன்	1,67,37,737.00	1,75,74,623.98	(+)5.00 % அதிகம்	(+)1.87 % அதிகம்

ம.நீ.வ.து.ந.க.எண்.பி3 / 0632/ 2020

2019-2020 ஆண்டின் அலுவலக விலை பட்டியலுடன் ஒப்பிடுகையில் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தொகை (+)5.00% சதவீதம் அதிகமாக உள்ளன.

எனவே, இந்த ஒப்பந்தப்புள்ளி சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்து ஆராயும் குழுமத்தின் பரிந்துரை வேண்டி 16.09.2020 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

1. இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும்.
2. இப்பணியானது மூலதன நிதியின் கீழ், பெருநகர சென்னை மண்டலம் – 3 ல் வார்டு-33 ல் உள்ள குளப்பன் குளத்தினை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணிக்கு, அதற்கான மூலப்பொருள்கள் விலை, தொழிலாளர்கள் ஊதிய உயர்வு மற்றும் போக்குவரத்து வாகன செலவு பெருகி உள்ளதால் அலுவலக விலையை விட ஒப்பந்தப்புள்ளி விலை (+)5.00 % அதிகமாக உள்ளதை ஏற்கலாம் எனக் கருதப்படுகிறது.
3. இப்பணியின் மூலம் அப்பகுதியில் மழைநீர் தேங்குவது குறையும். மேலும் நீலத்தடி நீர் கணிசமாக உயரும். ஆதலால் ஒப்பந்தப்புள்ளி தொகையானது 2019-2020ம் ஆண்டின் அலுவலக விலைபடி (12% GST சேர்த்து) (+)5.00% சதவீதம் அதிகம் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரர் திரு.கே.சுந்தர்ராஜன் அவர்களுக்கு, இப்பணியை வழங்க ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமம் 16.09.2020 அன்று பரிந்துரைத்துள்ளது.

எனவே, மேற்கண்ட அட்டவணை 2-ன்படி, குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.கே.சுந்தர்ராஜன் அவர்களுக்கு, இப்பணியை மேற்கொள்வதற்காக, ஒப்பங்கள் கூர்ந்தாய்வுக் குழுமத்தினால் (Tender Scrutinizing Committee) பரிந்துரைக்கப்பட்ட ஒப்ப தொகை ரூ. 1,75,74,623.98 ஆனது 2019-2020ம் ஆண்டின் அலுவலக விலைபடி (12% GST சேர்த்து) (+)5.00% சதவீதம் அதிகம் மற்றும் 2020-2021ம் ஆண்டின் அலுவலக விலைபடி (12% GST சேர்த்து) (+)1.87% சதவீதம் அதிகத்தில் பணியை வழங்க சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 17.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"ஒப்பம் வழங்க சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ப.து.ந.க.எண்.டி.1/0007/2020

தீர்மான எண்.647/2020 **நாள்:18-09-2020**

தானப்பத்திரம்

மண்டலம்-9, கோட்டம்-114ல் திரு. M. Abdul Rahman அவர்கள், பழைய கதவு எண்.143, புதிய கதவு எண்.108, பாபு ஜெகஜீவன்ராம் சாலை, (பெல்ஸ்ரோடு) சேப்பாக்கம், சென்னை - 600005, R.S.No.2893/7, Block No.53, திருவல்லிக்கேணி கிராமம் அமைந்துள்ள இடத்திற்கு கட்டிடம் கட்ட, திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-09ல் PPA/WDCN09/09437/2019 நாள். 25.12.2019 ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக பாபு ஜெகஜீவன்ராம் சாலை, (பெல்ஸ்ரோடு) அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி பாபு ஜெகஜீவன்ராம் சாலை, (பெல்ஸ்ரோடு) 18.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் 4.44 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு. M. Abdul Rahman அவர்களிடம் பழைய கதவு எண்.143, புதிய கதவு எண்.108, பாபு ஜெகஜீவன்ராம் சாலை, (பெல்ஸ்ரோடு) சேப்பாக்கம், சென்னை-600005 R.S.No.2893/7, Block No.53, திருவல்லிக்கேணி கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் 4.44 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.8,400/- (ரூபாய் எட்டாயிரத்து நாநூறு மட்டும்) மனை உரிமையாளர் திரு. M. Abdul Rahman அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரம் இனம் 1 மற்றும் 2க்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ப.து.ந.க.எண்.டி1/013/2020

தீர்மான எண்.648/2020 **நாள்:18-09-2020**

தானப்பத்திரம்

மண்டலம்-5, கோட்டம்-63ல் திரு. H சந்து ஜெயின் மற்றும் திருமதி. C. உஷா அவர்கள் பழைய கதவு எண். 165, புதிய கதவு எண்.361, பாரதி சாலை, Pycrofts Road, இராயப்பேட்டை, சென்னை - 600014 R.S.No.1248/3, பிளாக் எண்.26, திருவல்லிக்கேணி கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5 ல் PPA/WDCN05/08744/2020 நாள்.07.12.2019ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக பாரதி சாலை அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி பாரதி சாலை 18.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையில் நீளம் 5.20 மீட்டர் மற்றும் அகலம் 0.65 மீட்டர் ஆக மொத்தம் சாலை விரிவாக்கம் செய்ய தேவையான 3.38 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர்கள் திரு. H சந்து ஜெயின் மற்றும் திருமதி. C. உஷா அவர்கள் பழைய கதவு எண். 165, புதிய கதவு எண்.361, பாரதி சாலை, Pycrofts Road, இராயப்பேட்டை, சென்னை -600014 R.S.No.1248/3 பிளாக் எண்.26, திருவல்லிக்கேணி கிராமம் என்ற இடத்தில் சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் மனையில் நீளம் 5.20 மீட்டர் மற்றும் அகலம் 0.65 மீட்டர் ஆக மொத்தம் சாலை விரிவாக்கம் செய்ய தேவையான 3.38ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.6,700/- (ரூபாய் ஆறாயிரத்து ஏழுநூறு மட்டும்) மனை உரிமையாளர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரம் இனம் 1மற்றும் 2க்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ப.து.ந.க.எண்.டி1/014/2020

தீர்மான எண்.649/2020 **நாள்:18-09-2020**

தானப்பத்திரம்

மண்டலம்-10, கோட்டம்-135ல் திரு. J. Ramkumar, General Power Attorney for திரு. V.K. Visvanathan, திருமதி. Usha Varadarajan, திருமதி. Chitra Chandrasekaran, திருமதி. Lalitha Ganesh அவர்கள் கதவு எண். 65A, பழைய கதவு எண்.104 புதிய கதவு எண்.72, தற்போது உள்ள புதிய கதவு எண்.161,லேக் வியூ ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை - 600033 T.S.No.58/1, பிளாக் எண். 12, மாம்பலம் கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10ல் PPA/WDCN10/08597/2019 நாள். 04.12.2019ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக லேக் வியூ ரோடு, அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி லேக் வியூ ரோடு 18.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய தேவையான 56.44ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) திரு. J. Ramkumar General Power Attorney for திரு. V.K. Visvanathan, திருமதி. Usha Varadarajan, திருமதி. Chitra Chandrasekaran, திருமதி. Lalitha Ganesh அவர்கள் கதவு எண். 65A, பழைய கதவு எண்.104 புதிய கதவு எண்.72, தற்போது உள்ள புதிய கதவு எண்.161, லேக் வியூ ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை - 600033 T.S.No.58/1, பிளாக் எண். 12, மாம்பலம் கிராமத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் 56.44 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.1,05,800/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐந்தாயிரத்து எண்ணூறு மட்டும்) திரு. J. Ramkumar, General Power Attorney for திரு. V.K. Visvanathan, திருமதி. Usha Varadarajan, திருமதி. Chitra Chandrasekaran, திருமதி. Lalitha Ganesh அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரம் இனம் 1மற்றும் 2க்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ப.து.ந.க.எண்.டி.1/ 022 / 2020

தீர்மான எண்.650 / 2020 **நாள்:18-09-2020**

தானப்பத்திரம்

மண்டலம்-5, கோட்டம்-52ல் திரு. S. தினேஷ் அவர்கள் புதிய கதவு எண்.170, பழைய கதவு எண்.120, மன்னார்சாமி கோவில் தெரு, இராயபுரம், சென்னை - 600013 R.S.No.866, பிளாக் எண்.16, தண்டையார்பேட்டை கிராமம் அமைந்துள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-05ல் PPA/WDCN05/01721/2020 நாள்.19.02.2020ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக மன்னார்சாமி கோவில் தெரு அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி மன்னார்சாமி கோவில் தெரு 30.50மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் நீளம் 7.60 மீட்டர் மற்றும் அகலம் 4.00 மீட்டர் ஆக மொத்தம் தேவையான நிலம் 30.40ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு. S. தினேஷ் அவர்கள் புதிய கதவு எண்.170 பழைய கதவு எண்.120, மன்னார்சாமி கோவில் தெரு, இராயபுரம், சென்னை - 600013 R.S.No.866 பிளாக் எண்.16, தண்டையார்பேட்டை கிராமம் என்ற இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் நீளம் 7.60 மீட்டர் மற்றும் அகலம் 4.00 மீட்டர் ஆக மொத்தம் தேவையான நிலம் 30.40ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.60,100/- (ரூபாய் அறுபதாயிரத்து நூறு மட்டும்) மனை உரிமையாளர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரம் இனம் 1மற்றும் 2க்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ப.து.ந.க.எண்.*D1/SD/WDCN07/ 00207/ 2020*

தீர்மான எண்.651/2020 **நாள்:18-09-2020**

தானப்பத்திரம்

மண்டலம்-7ல் M/s.V. Guruswamy Naidu & CO Private Limited duly represented by the power agent M/s. VGN Projects Estates Private Limited அவர்கள் என்கிற முறையிலும் பழைய புல எண்.335 part, 544 part & 547 part, நகர புல எண்.40 part & 42 part, வார்டு-B பிளாக் எண்.72 அம்பத்தூர் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு (Public Purpose site 1 & 2) அனுமதி வேண்டி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பூங்கா மற்றும் சாலைக்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள். *21.08.1984* ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் பூங்கா மற்றும் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவேண்டும்.

விண்ணப்பதாரர் M/s.V. Guruswamy Naidu & CO Private Limited duly represented by the power agent M/s. VGN Projects Estates Private Limited விண்ணப்பித்துள்ள (Public Purpose site 1 & 2) மனைப்பிரிவில், சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க விண்ணப்பதாரரை அறிவுறுத்துமாறு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்கள் *29.05.2020* நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர் M/s.V. Guruswamy Naidu & CO Private Limited duly represented by the power agent M/s. VGN Projects Estates Private Limited மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மேற்படி நிலத்தின் மொத்த பரப்பளவு 2790.00 சதுர மீட்டர் பரப்பளவு ஆகும். அவற்றில் பொது பயன்பாட்டிற்கென 15.00 சதுர மீட்டர் பரப்பளவு மற்றும் TANGEDCOவிற்கு 14.00 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட *15.00* சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தினை தானம் அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

எனவே M/s.V. Guruswamy Naidu & CO Private Limited duly represented by the power agent M/s. VGN Projects Estates Private Limited தானப்பத்திரம் மூலம் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட *15.00* சதுர மீட்டர் நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, பழைய புல எண்.335 part, 544 part & 547 part, நகர புல எண்.40 part & 42 part, வார்டு-B பிளாக் எண்.72 அம்பத்தூர் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள

நிலத்திற்கு மனைப்பிரிவு (Public Purpose site 1&2) வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள 15.00 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் விண்ணப்பதாரர் M/s.V. Guruswamy Naidu & CO Private Limited duly represented by the power agent M/s. VGN Projects Estates Private Limited அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரத்திற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ப.து.ந.க.எண்.*D1/LA/SD/WDCN07/00292/ 2020*

தீர்மான எண்.652/2020 **நாள்:18-09-2020**

தானப்பத்திரம்

மண்டலம்-7ல் M/s. VGN Homes Private Limited represented by its Director Thiru. B.R. Nanda kumar (PoA) அவர்கள் பழைய புல எண். S.No.341, 342 part, 490 & 502, present T.S.No.42 part & 44, Ward-B, Block No.72 of அம்பத்தூர் கிராமம் இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வேண்டி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பூங்கா மற்றும் சாலைக்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள். *21.08.1984* ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் பூங்கா மற்றும் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவேண்டும்.

விண்ணப்பதாரர் M/s. VGN Homes Private Limited represented by its Director Thiru. B.R. Nanadkumar (PoA) விண்ணப்பித்துள்ள மனைப்பிரிவில், சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க விண்ணப்பதாரரை அறிவுறுத்துமாறு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்கள் *06.08.2020* நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர் M/s. VGN Homes Private Limited represented by its Director Thiru. B.R. Nanda kumar (PoA) மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மேற்படி நிலத்தின் மொத்த பரப்பளவு 13537.00 சதுர மீட்டர் பரப்பளவு ஆகும். அவற்றில் பூங்காவிற்காக 948.00 சதுர மீட்டர் பரப்பளவு மற்றும் சாலைக்கென 4280.00 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், TANGEDCO - பயன்பாட்டிற்கு 46.00 சதுர மீட்டர் பரப்பளவு நிலமும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பொது பயன்பாட்டிற்கென 50.00 சதுர மீட்டர் பரப்பளவு நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

M/s. VGN Homes Private Limited represented by its Director Thiru. B.R. Nanda kumar (PoA) அவர்கள் மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி மொத்த பரப்பளவு 13537.00 சதுர மீட்டர் நிலத்தில் பூங்கா பயன்பாட்டிற்காக 948.00 சதுர மீட்டர் மற்றும் சாலைக்கென ஒதுக்கப்பட்ட 4280.00 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பொது பயன்பாட்டிற்கென 50.00 சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தினை தானம் அளிக்க இசைவு தெரிவித்துள்ளனர் ஆதலால் இந்த நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் தானப்பத்திரம் மூலம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

M/s. TANGEDCOவின் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள 46 சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தினை எடுத்துக் கொள்ள வேண்டி, அவ்வலுவலகத்திற்கு கடிதம் அனுப்பபட்டுள்ளது.

மேலும், மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலை பகுதிகளை மேம்படுத்துவதற்கு ஆகும் செலவினத்தை விண்ணப்பதாரர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும். வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நிலத்தில் சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க ஆகும் மேம்பாட்டு தொகை ரூ.1,12,32,000/- இக்கட்டணத்தை விண்ணப்பதாரர் M/s. VGN Homes Private Limited represented by its Director Thiru.B.R.Nanda kumar (PoA) அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும்.

எனவே,

(1) பழைய புல எண் S.No.341, 342 part, 490 & 502, present T.S.No.42 part & 44, Ward-B, Block No.72 of அம்பத்தூர் கிராமம் இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மேற்படி நிலத்தின் மொத்த பரப்பளவான 13537.00 சதுர மீட்டரில் பூங்காவிற்காக 948.00 சதுர மீட்டர், சாலைக்கென 4280.00 சதுர மீட்டர், பெருநகர சென்னை

மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கென 50.00சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலத்தை விண்ணப்பதாரர் M/s. VGN Homes Private Limited represented by its Director Thiru. B.R.Nanda kumar (PoA) அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவைப்படும் தொகை **ரூ.1,12,32,000/-** (ரூபாய் ஒரு கோடியே பன்னிரெண்டு லட்சத்து முப்பத்தி இரண்டாயிரம் மட்டும்) M/s.VGN Homes Private Limited represented by its Director Thiru. B.R. Nanda kumar (PoA) அவர்களிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரம் இனம் 1 மற்றும் 2க்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ப.து.ந.க.எண்.*D1/SD/WDCN06/ 0114/2020*

தீர்மான எண்.653/2020 **நாள்:18-09-2020**

தானப்பத்திரம்

மண்டலம்-6, கோட்டம்-66ல் திரு. Rakesh Sawhney & திரு. Dinesh Sawhney அவர்கள் கதவு எண்.10 (பகுதி), பேப்பர் மில்ஸ் சாலை, S.R.B. காலனி, பெரவள்ளூர், சென்னை நகர புல எண்.13/1, பிளாக் எண்.13 பெரவள்ளூர் கிராமம் இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி D1/SD/WDCN06/0114/2020 நாள்: 20.02.2020ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள். இரண்டாம் முழுமை திட்டத்தின் படி பேப்பர் மில்ஸ் சாலை 18.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்யப்படவேண்டும்.

மேற்படி சாலை விரிவாக்கத்திற்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள். 21.08.1984 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனை உட்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மனுதாரர்கள் திரு. Rakesh Sawhney & திரு. Dinesh Sawhney அவர்கள் மனைப்பிரிவில் சாலை விரிவாக்கத்திற்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார். சாலை விரிவாக்கத்திற்காக மனையின் வடக்கு பக்கம் நீளம் 12.09 மீ அகலம் 2.90 மீட்டர் ஆகமொத்தம் 35.05 ச.மீ நிலம் ஒதுக்கீடு செய்யப்பட வே,ண்டும்.

எனவே, திரு.Rakesh Sawhney & திரு. Dinesh Sawhney அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் சாலை விரிவாக்கத்திற்கான நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) கதவு எண்.10 (பகுதி), பேப்பர் மில்ஸ் சாலை, S.R.B. காலனி, பெரவள்ளூர், சென்னை நகர புல எண்.13/1, பிளாக் எண்.13 பெரவள்ளூர் கிராமம் நிலத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 35.05சதுர மீட்டர் நிலத்தை மனை உரிமையாளர் திரு.Rakesh Sawhney & திரு. Dinesh Sawhney அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலை விரிவாக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலை அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள தேவையான தொகை ரூ.70,000/- (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) மனை உரிமையாளர்களிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரம் இனம் 1 மற்றும் 2க்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பது.ந.க.எண்.*D1/LA/SD/WDCN04/163/2020*

தீர்மான எண்.654/2020 **நாள்:18-09-2020**

தானப்பத்திரம்

மண்டலம்-*4*, கோட்டம்-*34*ல் திரு. Vijayakumar அவர்களின் பொது அதிகார முகவர் திரு. Abil Muradhukhan அவர்கள் ரவி பூங்கா முதல் குறுக்கு தெரு, கொடுங்கையூர், சென்னை - 600118, நகர புல எண்.82/2, பிளாக் எண்.7 ஜம்பூலி கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வேண்டி LA/SD/WDCN04/00163/2020 நாள்:09.03.2020ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள் 21.08.1984ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் திரு. Vijayakumar அவர்களின் பொது அதிகார முகவர் திரு. Abil Muradhukhan மனைப்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) திரு. Vijayakumar அவர்களின் பொது அதிகார முகவர் திரு. Abil Muradhukhan மனைப்பிரிவு, வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 2345.82 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 530.76 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. சாலைகள் அனைத்தும் 7.320 மீ அகலம் உள்ளது. மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக ரவி தோட்டம் முதலாம் குறுக்கு தெரு அமைந்துள்ளது அதன் அகலம் 7.320 மீ ஆகும்.

(ஆ)திரு. Vijayakumar அவர்களின் பொது அதிகார முகவர் திரு. Abil Muradhukhan அவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனையின் உரிமையாளர் மற்றும் திரு. Vijayakumar அவர்களின் பொது அதிகார முகவர் திரு. Abil Muradhukhan பதிவு செய்யப்பட்ட பொது அதிகாரப் பத்திரம் வாயிலாக, விண்ணப்பம் சமர்ப்பிக்க உரிமையுடையவராக உள்ளார். மனை உரிமையாளர் மனைக்கான பட்டாவினை, வட்டாட்சியர், பெரம்பூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக ரவி தோட்டம் முதலாம் குறுக்கு தெரு அமைந்துள்ளது. அனைத்து மனைகளும் 72 ச.மீ பரப்பளவிற்கு குறையாமல் உள்ளது.

(ஈ) மனைப்பிரிவின் பரப்பளவு 3000 ச.மீ க்கு மேல் மற்றும் 10,000 ச.மீ க்கு கீழே இருப்பின் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீடு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடானா தொகையாகவோ செலுத்தலாம் என்று விதிகள் உள்ளது. இம்மனைவிடத்திற்கு ஏற்கனவே திட்ட அனுமதி SD/WDCN04/00646/2019 நாள் 27.11.2019 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், திறந்தவெளி ஒதுக்கீடு தொகை அளிக்க வேண்டிய நிலை எழவில்லை..

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCOவிற்கு மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். திரு. Vijayakumar அவர்களின் பொது அதிகார முகவர்

ப.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN04/163/2020

திரு. Abil Muradhukhan அவர்கள் அதற்கேற்றவாறு10.73 ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். அவ்வாறே 10.68ச.மீ பரப்பளவு M/s. TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ)மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அமைப்பதற்கு தேவையான தோராய அபிவிருத்தி கட்டணமாக விண்ணப்பதாரரிடம் இருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும். மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அபிவிருத்தி செய்ய தேவையான தொகை ரூ.8,95,000/- வசூலிக்கப்பட வேண்டும்.

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் திரு. Abil Muradhukhan அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென ஒதுக்கப்பட்ட 530.76 ச.மீ பரப்பளவு நிலமும், பொது பயன்பாட்டிற்காக 10.73 ச.மீ பரப்பளவு நிலத்தையும் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) ரவி பூங்கா முதல் குறுக்கு தெரு, கொடுங்கையூர், சென்னை - 600118, நகர புல எண்.82/2, பிளாக் எண்.7 ஐம்பூலி கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 530.76 சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 10.73 ச.மீ நிலத்தினையும் திரு. Vijayakumar அவர்களின் பொது அதிகார முகவர் திரு. Abil Muradhukhan அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைக்க செலவின தொகை ரூ.8,95,000/- (ரூபாய் எட்டு லட்சத்து தொண்ணூற்றி ஐந்தாயிரம் மட்டும்) மனை உரிமையாளர்களிடமிருந்து "ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்.

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரம் இனம் 1 மற்றும் 2க்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ப.து.ந.க.எண்.டி1/PPA/WDCN09/06936/2019

தீர்மான எண்.655/2020 **நாள்:18-09-2020**

தானப்பத்திரம்

மண்டலம்-9, கோட்டம்-117ல் திரு. Bipin Shah and others அவர்கள் கதவு எண். 8, திருமலை பிள்ளை ரோடு, தியாகராயநகர், சென்னை 600017 சர்வே எண்.78/4 T.S.No.4785/3, பிளாக் எண்.109, நுங்கம்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தில் PPA/WDCN09/06936/2019 நாள்:16.10.2019ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக திருமலை பிள்ளை ரோடு அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி திருமலை பிள்ளை ரோடு 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய நீளம் 4.50 மீ அகலம் 1.25 மீ ஆக மொத்தம் 5.62ச.மீ பரப்பளவு நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) திரு. Bipin Shah and others அவர்கள் கதவு எண். 8, திருமலை பிள்ளை ரோடு, தியாகராயநகர், சென்னை 600017 சர்வே எண்.78/4 T.S.No.4785/3, பிளாக் எண்.109, நுங்கம்பாக்கம் கிராமத்தில் அமைய பெற்றுள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய நீளம் 4.50 மீ அகலம் 1.25 மீ ஆக மொத்தம் 5.62 ச.மீ பரப்பளவு நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.11,500/- (ரூபாய் பதினொராயிரத்து ஐந்நூறு மட்டும்) விண்ணப்பதாரரிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரம் இனம் 1 மற்றும் 2க்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ப.து.ந.க.எண்.டி.1/PPA/WDCN10/ 09273/ 2019

தீர்மான எண்.656 / 2020 **நாள்:18-09-2020**

தானப்பத்திரம்

மண்டலம்-10, கோட்டம்-134ல் திருமதி. R. Juliet, திரு. R. Jacob & திருமதி. R. Jessie பழைய கதவு எண். 25. புதிய கதவு எண்.26, இரயில்வே பார்டர் ரோடு, கோடம்பாக்கம், சென்னை – 600024 T.S.No.28, பிளாக் எண்.35, புலியூர் கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தில் PPA/WDCN10/09273/2019 நாள்.20.12.2019ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக இரயில்வே பார்டர் ரோடு அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி இரயில்வே பார்டர் ரோடு 12.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 24.38ச.மீ பரப்பளவு நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) திருமதி. R. Juliet, திரு. R. Jacob & திருமதி. R. Jessie அவர்கள் பழைய கதவு எண். 25, புதிய கதவு எண்.26, இரயில்வே பார்டர் ரோடு, கோடம்பாக்கம், சென்னை – 600024 T.S.No.28, பிளாக் எண்.35, புலியூர் கிராமத்தில் அமைய பெற்றுள்ள மனையில் சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் 24.38ச.மீ பரப்பளவு நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.47,000/- (ரூபாய் நாற்பத்தி ஏழாயிரம் மட்டும்) விண்ணப்பதாரரிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரம் இனம் 1 மற்றும் 2க்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பது.நக.எண்.*A7/RL/WDCN03/ 02930/ 2019*

தீர்மான எண்.657 / 2020 **நாள்:18-09-2020**

தானப்பத்திரம்

Tmt. Shameem & Thiru. Musthak Ahamed ஆகியோர் திருநீலகண்டர் நகர் பகுதி-2 விரிவாக்கம், புல எண்.398/2 part, 2A, 2B, 2C1, 2C2, 2C3, 2C4, 2D, 2E1, & 2E2 புழல் கிராமம் பகுதியில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த அனுமதி வேண்டி CMDA/L/0028286/2017நாள் 01.05.2018 ன்படி விண்ணப்பம் பதிவு செய்துள்ளார்.

மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தும் வரைபடத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க விண்ணப்பதாரர்களான Tmt. Shameem & Thiru. Musthak Ahamed ஆகியோரை அறிவுறுத்துமாறு, உறுப்பினர்-செயலர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்கள் 12.09.2019 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதார்களான Tmt. Shameem & Thiru. Musthak Ahamed அவர்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு 39640.00 சதுர அடி ஆகும். அவற்றில் சாலைக்கென 10844.00 சதுர அடி நிலமும், திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கென 2410.00 சதுர அடி நிலமும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

எனவே, விண்ணப்பதாரர்களான Tmt. Shameem & Thiru. Musthak Ahamed அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை பகுதிகளில் சாலைகளை அமைக்க ஆகும் செலவினம் விண்ணப்பதாரரிடம் இருந்து வளர்ச்சி கட்டணமாக மனையின் பரப்பளவில் சதுர மீட்டருக்கு `.500/- வீதம் வசூலிக்கப்பட வேண்டும்.

எனவே,

(1) திருநீலகண்டர் நகர் பகுதி-2 விரிவாக்கம், புல எண்.398/2 part, 2A, 2B, 2C1, 2C2, 2C3, 2C4, 2D, 2E1, & 2E2 புழல் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்தில் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் சாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள 10844.00 சதுர அடி நிலம் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான 2410.00 சதுர அடி நிலம் அகியவற்றை விண்ணப்பதாரர் Tmt. Shameem & Thiru. Musthak Ahamed ஆகியோரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) உள்கட்டமைப்பு வசதிகளான சாலை மற்றும் தெருவிளக்கு ஆகியவை அமைப்பதற்கான செலவினமாக மனைப்பரப்பளவில் சதுர மீட்டருக்கு `.500/- வீதம் (ரூபாய் ஐநூறு மட்டும்) விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிப்பதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரம் இனம் 1 மற்றும் 2க்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.14/வ.து./ந.க.எண்.ஆர்1/ 0150/ 2020

தீர்மான எண்.658/2020 **நாள்:18-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-14- வருவாய்துறை மற்றும் காவல் பணியாளர்களைக் கொண்டு கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை வீட்டில் தனிமைப்படுத்துதல்- தனிமை மேலாண்மை அமைப்பின்கீழ் (HQIMS) அலுவலர்களை நியமித்து ஆணையரது உத்தரவு வழங்கப்பட்டது - இக்குழுவுடன் இணைத்து பணிகள் மேற்கொள்ள மண்டலம்-14க்குட்பட்ட 168, 169, 183 முதல் 191 வரையிலான வார்டுகளில் 165 தற்காலிக தன்னார்வ பணியாளர்களை 18.06.2020 முதல் 15.09.2020 வரை 90 நாட்களுக்கு தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டது - மேலும் 16.09.2020 முதல் 15.10.2020 வரை 30 நாட்களுக்கு நீட்டிப்பு செய்யவும் மற்றும் ஊதியம் வழங்கவும் அனுமதி.

ஆணையர் அவர்களின் 10.06.2020 நாளிட்ட செயல்முறை ஆணையில், COVID-19 கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை வீட்டில் தனிமைப்படுத்த, தனிமை மேலாண்மை அமைப்பின் (HQIMS) அனைத்து துறைகளிலிருந்தும் அலுவலர்கள் உள்ளடக்கிய பிரிவு மட்டத்தில் ஒரு கோவிட் பொறுப்பு குழுவாக (CRT) வருவாய்துறை மற்றும் காவல் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி COVID-19 வைரஸ் பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்துவதற்கு பலதரப்பட்ட அணுகுமுறையை மேற்கொண்டு வருகிறது.

இதனடிப்படையில் (HQIMS) குழுவில் பணியமர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள், வெளிநாடுகளில் இருந்து திரும்பி வருபவர்கள், உள்நாட்டு விமானப் பயணிகள் ஹாட்ஸ்பாட் மாநிலங்கள் மற்றும் உள்மாநில சாலைப் பயணிகள் மற்றும் வேறு எந்த அறிவிக்கப்பட்ட நபர்களும் தங்கள் வீடுகளில் கட்டாயமாக 14 நாட்கள் சுய தனிமைப்படுத்தப்படுவதைக் கடைப்பிடிப்பதை உறுதி செய்யவேண்டும்.

மேற்கண்டுள்ள COVID-19 வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளின் பட்டியலை எடுத்து, வீட்டு தனிமைப்படுத்தல் / வீட்டு தனிமைப்படுத்தப்பட்ட வீடுதோறும் சென்று கண்காணிப்பு பணி மற்றும் COVID-19 வைரஸ் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் / குடும்பங்களுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் மருந்துகள் வழங்குவதை உறுதி செய்து தடுப்பு பணிக்கான விவரங்களை சேகரிக்க தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டுள்ள 165 தன்னார்வ பணியாளர்கள், அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 168,169,183 முதல் 191 வரையிலான கோட்டங்களின் பணியாளர்கள் தினந்தோறும் மேற்கொள்ளும் பணியினை அதற்குரிய பதிவேட்டில் பதிவு செய்தும் உதவி செயற்பொறியாளர்கள் / உதவி பொறியாளர்கள் / உதவி வருவாய் அலுவலர்கள் / வரி மதிப்பீட்டாளர்கள் / வரி வசூலர்கள் / காவல் அலுவலர்கள் ஆகியோருடன் இணைந்து பணிகளை செய்ய பணிக்கப்பட்டுள்ளார்கள்.

தற்காலிக தன்னார்வ பணியாளர்கள் தினந்தோறும் மேற்கொள்ளும் பணி மற்றும் செயல்பாட்டை தினசரி அடிப்படையில் உரிய அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கான இவ்வலுவலக 01.07.2020 நாளிட்ட குறிப்பு கோப்பில் வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்கள் கோட்டம் ஒன்றிற்கு 15 நபர்கள் என்ற விகிதத்தில் பணியமர்த்தி கொள்ளும்படி அறிவுறுத்தியுள்ளார். அதனடிப்படையில் 11 கோட்டங்களில் மொத்தம் 165 நபர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டுள்ள 165 தன்னார்வ பணியாளர்களுக்கான ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (முன்னதாகவே பொது மக்களுக்கு சளி, காய்ச்சல் இருக்கும் விவரங்களை சேகரிக்க தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள Survey Worker பணியாளர்களுக்கு ஊதியம் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ரூ.500/- வீதம் மாதம் ரூ.15000/- என நிர்ணயித்து சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மானம் எண்.316/2020 நாள் 04.05.2020ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஒரு பணியாளருக்கு மாதம் ரூ.15,000/- (ரூபாய் பதினைந்து ஆயிரம் மட்டும்) வீதம் 165 பணியாளர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ரூ.74,25,000/- வீதம் ஊதியமாக வழங்க சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.470/2020, நாள் 14.07.2020ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்டுள்ள காரணங்களுக்காக 90 நாட்களுக்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள 165 தன்னார்வ பணியாளர்களின் பணி மேலும் தேவைப்படுவதால் அந்நபர்களை 16.09.2020 முதல் 15.10.2020 வரை 30 நாட்களுக்கு நீட்டிப்பு செய்ய அனுமதியும், ஊதியம் வழங்குவதற்கு அனுமதியும் கீழ்கண்ட இனங்களுக்கு சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதல் பெறவேண்டியுள்ளது.

எனவே,

1. COVID-19 கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை வீட்டு தனிமைப்படுத்தல் மற்றும் தனிமை மேலாண்மை அமைப்பின்கீழ் (HQIMS) கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டு வீட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் உள்ள வீடுகளில் வீட்டுத் தனிமைப்படுத்தல் குறித்த பணிகளுக்காக அமைக்கப்பட்ட கோவிட் குழு அலுவலர்களான வருவாய் மற்றும் காவல் அலுவலர் ஆகியோருடன் இணைந்து COVID-19 வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளின் பட்டியலை எடுத்து COVID-19 வைரஸ் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் / குடும்பங்களுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் மருந்துகள் வழங்குவதில் உறுதி செய்யும் பணிக்காக 18.06.2020 முதல் 15.09.2020 வரை 90 நாட்களுக்கு மட்டும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள தன்னார்வ பணியாளர்கள் 165 நபர்களை 16.09.2020 முதல் 15.10.2020 வரை மேலும் 30 நாட்களுக்கு பணி நீட்டிப்பு செய்ய ஒப்புதல் வேண்டியும்,
2. மேற்கண்ட 165 பணியாளர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.500/- வீதம் ஒரு மாதத்திற்கு 165x500x30=24,75,000/- (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) வழங்கவும்,
3. மேற்கண்ட தொகைக்கான செலவீனத்தை மண்டலம்-14 மனிதவளம் (Man Power) கணக்கு குறியீடு எண்.20-21-07 பிரிவு எண்.230-70-12-03 ல் நிதி ஒதுக்கீடு வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 17.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.15/வ.து./ந.க.எண்.ஆர்1/ 179/ 2020

தீர்மான எண்.659 / 2020 **நாள்:18-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-15 - வருவாய் துறை மற்றும் காவல் பணியாளர்களை கொண்டு வீட்டு தனிமைப்படுத்துதல் மற்றும் தனிமை மேலாண்மை அமைப்பின் கீழ் (HQIMS) அலுவலர்களை நியமித்து ஆணையரது உத்தரவு வழங்கப்பட்டது - இக்குழுவுடன் இணைத்து பணிகள் மேற்கொள்ள மண்டலம்-15ல் உள்ள 192 முதல் 200 கோட்டம் வாரியாக 116 தற்காலிக தன்னார்வ பணியாளர்களை 18.06.2020 முதல் 17.09.2020 வரை மூன்று மாதங்களுக்கு நியமனம் செய்யப்பட்டது - ஊதியம் வழங்க சிறப்பு அலுவலர்(மன்றம்) அவர்களின் தீர்மானம் பெறப்பட்டது - கூடுதலாக ஒரு மாதத்திற்கு ஊதியம் வழங்க அனுமதி.

COVID-19 கொரோனா நோயால் பாதிக்கப்பட்டவர்களை வீட்டு தனிமைப்படுத்தல் மற்றும் தனிமை மேலாண்மை அமைப்பு (HQIMS)ன் கீழ் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டு வீட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் உள்ள வீடுகளில் வீட்டுத் தனிமைப்படுத்தல் குறித்த பணிகளுக்காக அமைக்கப்பட்ட கோவிட் குழு அலுவலர்களான வருவாய் மற்றும் காவல் அலுவலர் ஆகியோருடன் இணைத்து COVID-19 வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளின் பட்டியலை எடுத்து COVID-19 வைரஸ் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் குடும்பங்களுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் மருந்துகள் வழங்குவதில் உறுதி செய்யும் பணிக்காக 18.06.2020 முதல் 17.09.2020 வரை 3 மாதங்களுக்கு மட்டும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள தன்னார்வ பணியாளர்கள் 116 நபர்களை பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி பெறப்பட்டது.

மேலும் ஒரு மாதத்திற்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள தன்னார்வ பணியாளர் 116 நபர்களை பணியமர்த்த அனுமதியும், ஊதியம் வழங்குவதற்கு அனுமதியும் கீழ்கண்ட இனங்களுக்கு சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

எனவே,

1. 18.09.2020 முதல் 17.10.2020 வரை உள்ள 30 நாட்களுக்கு மட்டும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள தன்னார்வ பணியாளர்கள் 116 நபர்களை பணியமர்த்த அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட 116 பணியாளர்களுக்கு மாத ஊதியமாக நபர் ஒருவருக்கு ரூ.15000 வீதம் ஒரு மாதத்திற்கு 116x15000x1=17,40,000/- (ரூபாய் பதினேழு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) வழங்கவும்,
3. மேற்கண்ட தொகைக்கான செலவீனத்தை மண்டலம்-15 மனிதவளம் (Man Power) கணக்கு குறியீடு எண்.20-21-07 பிரிவு எண்.230-70-12-03 நிதி ஒதுக்கீடு வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 17.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

க.து.ந.க.எண்.பி5/561/1/2015

தீர்மான எண்.660/2020 **நாள்:18-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்று சூழல் சீரமைப்பு திட்டத்தின் கீழ் கூவம் நதிக்கரையில் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணிக்காக திருவாளர்கள் R.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு ஒப்ப கால நீட்டிப்பு 31.12.2020 வரை வழங்க அனுமதி.

ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்று சூழல் சீரமைப்பு திட்டத்தின் கீழ் கூவம் நதிக்கரையில் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணிக்கு அரசாணை எண் G.O.(Ms) No.9 நகராட்சி நிர்வாகம் மற்றம் குடிநீர் வழங்கல் (MC.I) துறை, நாள்.13.01.2015ன்படி நிர்வாக அனுமதி ரூ.45,80,00,000/-க்கு வழங்கப்பட்டது.

இப்பணிக்காக மன்ற தீர்மானம் எண்.565/2015, நாள் 29.09.2015 ஒப்புதல் பெறப்பட்டு ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்று சூழல் சீரமைப்பு திட்டத்தின் கீழ் கூவம் நதிக்கரையில் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணிக்காக 29.07.2015 அன்று ஒப்பம் கோரப்பட்டது. இதில் குறைந்த ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்ட திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களின் ரூ.40,54,55,200/- க்கான ஒப்பம் ஏற்கப்பட்டு திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு 07.10.2015 அன்று பணி ஏற்பு ஆணை வழங்கப்பட்டது. பொதுப்பணித்துறையின் பணிகள் நடைபெற்றதால் இப்ணியினை 03.03.2016ல் துவங்கப்பட்டது. இப்பணிக்கான ஒப்ப காலம் மூன்று வருடங்கள்.

ஒப்பந்ததாரர் 03.03.2016 பணியினை துவங்கி செய்து வந்த நிலையில் இப்பணியினை மேற்கொள்ள வேண்டிய அனேக இடங்களில் ஆக்கிரமிப்புகள் இருந்ததால் பணியினை தொடர்ந்து செய்ய இயலாத நிலை ஏற்பட்டது. ஒவ்வொரு இடங்களிலும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பின்னரே பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கூவம் நதிக்கரை இருபுறங்களிலும் கூவம் நதிக்கரையில் எல்லை பகுதியினை வட்டாட்சியர் அலுவலகம் மூலமாக நில அளவையாளரை கொண்டு எல்லைகளை நிர்ணயம் செய்து பின்னர் பொதுப்பணித்துறையின் மூலம் அந்த எல்லைகளை ஆராய்ந்து ஒப்புதல் அளித்த பின்னர் பணி மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பொதுப்பணித்துறையின் மூலம் கூவத்தில் இருபுறமும் பல இடங்களில் வளைவு (Bend) கரை அமைக்கப்படவில்லை. கரை ஒதுக்கிய பின்னர் தான் நிரந்தர தடுப்பு வேலிகள் பணி தொடங்கி முடியும்.

முகப்பேர், கோல்டன் ஜார்ஜ் நகரில் எட்டு வழக்குகள் நிலுவையில் உள்ள காரணத்தினால் Pile foundation பணிகள் முடிவுற்று மற்ற பணிகள் நிலுவையில் உள்ளது. மேலும், கம்பர் நகர், ஓம் சக்தி நகர் ஆகிய இடங்களில் கரை அமைக்கும் பணி நிலுவையில் உள்ளது. அப்பணி முடிந்தவுடன் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி துவங்க உள்ளது.

துணை ஆணையர் (பணிகள்) 08.10.2018 அன்று நடந்த களஆய்வின் போது கரையின் உயரத்தை குறைக்கும் படி அறிவுறுத்தலின் பேரில், DPI வளாகம் மற்றும் கீரீம்ஸ் சாலை ஆகிய இடங்களில் பொது பணி துறையின் மூலம் கரையின் உயரத்தின் அளவு குறைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்றவுடன் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி துவங்க உள்ளது.

இப்பணிக்காக பதினொன்று பகுதி பட்டிகளாக ஒப்பந்ததாரர் திருவாளர்கள் R.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு ரூ.11.69 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்று சூழல் சீரமைப்பு திட்டத்தின் கீழ் கூவம் நதிக்கரையில் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணிகளை 30.12.2020க்குள் முடிப்பதாக ஒப்பந்ததாரர் திருவாளர்கள் R.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்கள் 04.12.2019 நாளிட்ட கடிதம் மூலமாக தெரிவித்துள்ளார்கள்

மேலும், இப்பணிக்காக பல்வேறு இடங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அதன் பின்னர் பணிகள் மேற்கொள்ள வேண்டி இருந்ததால் பணிகளை தொடர்ந்து செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. கூவம் நதிக்கரை 23.92 கிலோ மீட்டரில் 11 கி.மீ பணிகள் நடைபெறுகிறது. மீதமுள்ள 12.92 கிலோ மீட்டர் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு இருபுறங்களிலும் கரை வளைவு (Bend) ஒதுக்கிய பின்னரே பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் இப்பணியினை குறிப்பிட்ட ஒப்ப காலத்திற்குள் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் கூவம் நதிக்கரை இருபுறங்களிலும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணிக்கான ஒப்ப காலத்தினை *31.12.2020* வரை ஒப்ப காலத்தை நீட்டிப்பு செய்ய சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 20.03.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"*31.12.2020* வரை ஒப்ப காலத்தை நீட்டிப்பு செய்ய சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

இ.பொ.து.ந.க.எண்.எம்1/0715/2020

தீர்மான எண்.661/2020 **நாள்:18-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை - கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை - கொரோனா தடுப்பு பணிக்கென பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களின் பயன்பாட்டிற்கென *Tavera, Xylo, Tata Sumo, Tata Indica, Tempo Traveller, LMV/RLW* ஆகியவை மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி வாடகை முறையில் பணியமர்த்த ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது- வாகனங்கள் வாடகைக்கு வழங்கும் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டது- குறைந்த விலை புள்ளி அளித்த திருவாளர்கள். *Sweety Travels, M/s. M.G.Chandran Travels, M/s Sarathy Travels., M/s Anantha Travels, M/s Siva Cabs, M/s. SSJV Travels, M/s AN Cabs, M/s. Kalaiarasan Transport* ஆகிய நிறுவனங்கள் மூலம் வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்தி பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.

உலக சுகாதார நிறுவனம், "கொரோனா வைரஸ்" *(Corona Virus)* மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் *(Pandemic)* என அறிவித்துள்ளது. எனவே, இந்நிறுவனம் அனைத்து உலக நாடுகளும் தகுந்த கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கைகான பணியினை போர்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக, இந்திய அரசும் கொரோனா வைரஸ் பாதிக்காமல் இருக்க போதிய தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது மக்களிடையே தகுந்த விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதனை தொடர்ந்து, தமிழ்நாடு அரசும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த மார்ச் மாதம் மத்தியிலிருந்து கொரோனா வைரஸ் பரவல் தடுக்கும் பொருட்டு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் மத்திய மற்றும் தமிழக அரசு நாடு முழுவதும் மார்ச் *25*ஆம் தேதியிலிருந்து முழு ஊரடங்கு அமல் படுத்தி கடைப்பிடிக்கப்பட்டு வரப்படுகிறது. இந்த ஊரடங்கு காலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு கிருமி நாசினி தெளிப்பது உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கள், கொரோனா வைரஸ் தொற்றிற்கான அறிகுறிகள், கடைபிடிக்கவேண்டிய தற்காப்பு வழிமுறைகள் குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தி வருகிறது. ஊரடங்கு காலத்தில் கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாத்திட மாநகராட்சி அனைத்து பகுதிகளிலிரும் மருத்துவ முகாம்கள் அமைத்து பரிசோதனைகள் மேற்கொள்வது, வீடுதோறும் சென்று அனைத்து மக்களின் ஆரோக்கியத்தை பதிவு செய்வது மற்றும் தேவையான சிகிச்சைகள் அளித்தும் வரப்படுகிறது. மேற்கண்ட கொரோனா வைரஸ் பரவல் தடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்திவரும் மருத்துவர்களுக்கு மற்றும் அலுவலர்களுக்கும் ஊரடங்கு காலத்தில் பணிக்கு வந்து செல்வதற்கு போக்குவரத்து வசதி செய்திடவும் மற்றும் மருத்துவ பொருட்கள் மற்றும் நாள்தோறும் தேவையான மருத்துவ பொருட்களை அனைத்து சுகாதார மையங்களுக்கு எடுத்துச்சென்று வழங்குவதற்கும் தேவையான பல்வேறு வகையான *(Tavera, Xylo, Tata Sumo, Tata Indica, Tempo Traveller, LMV/RLW)* வாகனங்கள் தனியார் நிறுவனமிடமிருந்து வாடகைக்கு பணியமர்த்தி வரப்படுகிறது. மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர் நோக்கி மேற்கண்ட பணிகளுக்கு தேவையான வாகனங்களை ரூ.*3.50* கோடி செலவீனத்தில் *60* முதல் *90* நாட்கள் வரையிலான காலத்திற்கு பணியமர்த்திட ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது.

இப்பணிக்கென *2018-19* ஆம் நிதி ஆண்டில் வாகனங்கள் வாடகைக்கு அமர்த்துவதற்காக பெருநகர காவல் ஆணையரகத்தால் நிர்ணயிக்கப்பட்ட வாடகைத் தொகையின் அடிப்படையில் *Tavera, Xylo, Tata Sumo. Tempo Traveller, LMV/ RLW* ஆகியவற்றிற்கும், *Tata Indica* வாகனத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்பொழுது நடைமுறையில் உள்ள வாடகை கட்டணத்திற்கென பெறப்பட்டுள்ள ஆணையரின் ஆணை ஆகியவற்றினை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு வாடகை தொகை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்த தீர்மானிக்கப்பட்டது.

இ.பொ.து.ந.க.எண்.எம்1/0715/2020

TEAM / OFFICER	TYPE OF VEHICLES (Air-conditioned)	PACKAGE	Police Commissionerate Hiring Rates for the Financial Year 2018-19			Appx. Hire charges per day (Rs)	Quantity	No. Of Days	Total Amount
Flying Squad and Officials posted for City Check post duty.	**TAVERA, XYLO, TATA SUMO**	24 Hours (2 - Drivers)	Rent / Day	Drivers Bata	Rate Per KM	5250	30	60	9450000
			3000	**1200**	**7**				
Rapid Response Team	**TATA INDICA**	15 Hours & 150 Km	Rent	Extra Hour	Extra KM	2 hrs & 25 kms	100	90	20070000
			1950	**130**	**6**	2230			
NULM - Night Shelter ,GCC Staff Transporting	**Tempo Traveller**	24 Hours	Rent / Day	Drivers Bata	Rate Per KM	4770	10	60	2862000
			2910	**600**	**7**				
			2380	**600**	**9**				
PPE kit, Mask, Bleaching Powder, Glouse - Distribution to Hospitals, UPH & Zonal Offices	**LMV RLW (Up to 7500 Kgs)**	24 Hours	Rent / Day	Drivers Bata	Rate Per KM	4330	10	60	2598000
			2380	**600**	**9**				
TOTAL AMOUNT									3,49,80,000
									Rs.3.5 Crore

பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி *1998*ல்-*16(a)*ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும் இப்பணி அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படுவதாலும் வாகனங்கள் வாடகைக்கு வழங்கும் தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டது. இவ்விலை புள்ளி *24.03.2020* அன்று திறக்கப்பட்டது. இதில் திருவாளர்கள், *Sweety Travels, M/s Anantha Travels, M/s M.G.Chandran Travels., M/s Sarathy Travels, M/s AN Cabs, M/s SSJV Travels, M/s Siva Cabs* மற்றும் *M/s. Kalaiarasan Transport* ஆகிய நிறுவனங்கள் கலந்து கொண்டு பல்வேறு வகையான வாகனங்கள் வாடகை முறையில் வழங்க ஒரே விலைப்புள்ளி அளித்திருந்தனர் இந்நிறுவனங்களை விலைக்குறைப்பு செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டது. விலைக்குறைப்பிற்கு பின் நிறுவனங்கள் வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளி கீழ்வருமாறு.

Vehicle Type	Name of the Company	24 Hours packages			15 Hours & 150 Kms	10 Hours & 100 Kms.	Extra Hour charges	Extra KM charges	Outstation Charges	
		Rental Charges	Hiring Charges Per KM	Driver Bata (for 2 driver)					Per Km	Driver Bata
Tavera, Xylo, Tata Sumo (A/c)	M/s. Sweety Travels	3000	7	1200	3300	2200	220	11	12	600
	M/s. Anantha Travels	3000	7	1200	3300	2200	220	11	12	600
	M/s. M.G.Chandran Travels	3000	7	1200	3300	2200	220	11	12	600
	M/s Sarathy Travels	3000	7	1200	3300	2200	220	11	12	600
	M/s AN Cabs	3000	7	1200	3300	2200	220	11	12	600
	M/s SSJV Travels	3000	7	1200	3300	2200	220	11	12	600
	M/s Siva Cabs	3000	7	1200	3300	2200	220	11	12	600
Tata Indica	M/s. Sweety Travels	2000	6	600	1950	1300	130	9	11	500
	M/s. Anantha Travels	2000	6	600	1950	1300	130	9	11	500

	M.G.Chandran Travels	2000	6	600	1950	1300	130	9	11	500
	M/s Sarathy Travels	2000	6	600	1950	1300	130	9	11	500
	M/s AN Cabs	2000	6	600	1950	1300	130	9	11	500
	M/s SSJV Travels	2000	6	600	1950	1300	130	9	11	500
	M/s Siva Cabs	2000	6	600	1950	1300	130	9	11	500
Tempo Traveller	M/s Sweety Travels	2910	8	1200	4500	3000	300	16	17	600
	M/s. Anantha Travels	2910	8	1200	4500	3000	300	16	17	600
	M/s. M.G.Chandran Travels	2910	8	1200	4500	3000	300	16	17	600
	M/s Sarathy Travels	2910	8	1200	4500	3000	300	16	17	600
	M/s AN Cabs	2910	8	1200	4500	3000	300	16	17	600
	M/s SSJV Travels	2910	8	1200	4500	3000	300	16	17	600
	M/s Siva Cabs	2910	8	1200	4500	3000	300	16	17	600
LMV / RLW (up to 7500kgs)	M/s. Kalaiarasan Transport	Rs. 4000/- per day per vehicle							-	-

மேற்கண்ட அட்டவணையின் அடிப்படையில் திருவாளர்கள், *Sweety Travels, M/s Anantha Travels, M/s M.G.Chandran Travels., M/s Sarathy Travels, M/s AN Cabs, M/s SSJV Travels, M/s Siva Cabs* மற்றும் *M/s. Kalaiarasan Transport* ஆகியோர் வழங்கியுள்ள விலை புள்ளிகளின் அடிப்படையில் இந்நிறுவனங்களிடமிருந்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்த பணி ஆணை வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்படி *25.03.2020* முதல் *30.06.2020* வரையிலான காலத்திற்கு பணியமர்த்தப்பட்டு தனியார் வாகனங்கள் விவரம் கீழ்வருமாறு:

Sl. No	Vehicle Model	Travels Name								Remarks
		Siva cabs	Anantha travels	Chandra Travels	Sweety Travels	Sarathy Travels	SSJV Travels	M/s. Kalaiarasan Transport	Over all Total	Total Amount to be paid
		Total No. of Vehicles Hired								
1	Indica	3	85	33	74	35	15	-	255	17173966
2.	Tavera	2	7	3	33	7	1	-	53	11410908
3	Tempo Traveller	-	22	10	45	13	-	-	90	10609465
4	LMV / RLW (up to 7500kgs)	-	-	-	-	-	-	7	7	2520000
Over All Total		5	114	46	152	55	16	7	405	41714339

ஆணையர் அவர்களின் *25.03.2020* நாளிட்ட ஆணையில்*150* எண்ணிக்கையிலான வாகனங்கள் *(Tata Indica -100 Nos, Tavera-30 Nos & Tempo Traveller-10 Nos, LMV / RLW 10 Nos)* வாடகை முறையில் அமர்த்த ஆணை பெறப்பட்ட நிலையில் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி கீழ் கண்டவாறு கூடுதலாக வாகனங்கள் வாடகை முறையில் கூடுதல் நாட்களுக்கு பணியமர்த்தப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும் மற்றும் கூடுதல் செலவீனத்திற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்படல் வேண்டும்.

Sl.No	Vehicle Model	Vehicles allotted to	No of Vehicles as per Commissioner Order	Additional No of vehicles hired up to 30.06.2020	Total No of Vehicles hired up to 30.06.2020	No of Days to be hired as per the order	No of Days hired	Remarks
1	Indica	1. Doctors Posted for Rapid response team 2. DHO's 3. UHO's	100	155	255	90	90	

2.	Tavera	1. Flying Squad 2. Officials posted for Check Post Duty 3. Tele Counseling staffs	30	23	53	60	90	
3.	Tempo Traveller	1. Check Post 2. GCC Staffs transporting 3. AEO's	10	80	90	60	90	
4.	LMV / RLW (up to 7500kgs)	PPE kit, Mask, Bleaching Powder, Glouse - Distribution to Hospitals, UPH & Zonal Offices	10	-	7	60	90	
Over All Total			150	358	405 (3 vehicles less in LMV RLW)			

மேற்கண்ட அட்டவணையின்படி 405 எண்ணிக்கையிலான பல்வேறு வகையிலான வாகனங்கள் 25.03.2020 முதல் 30.06.2020 வரையிலான காலத்தில் வாடகை முறையில் அமர்த்தியதற்கான வாடகைத் தொகையாக ரூ.4,17,14,339/- (ரூபாய். நான்கு கோடியே பதினேழு இலட்சத்து பதினான்காயிரத்து முன்னூற்று முப்பத்தி ஒன்பது மட்டும்) வழங்கப்படல் வேண்டும்.

ஆணையர் அவர்களின் 25.03.2020 நாளிட்ட ஆணையில் வாடகை செலவீனமாக ரூ.3,50,00,000/-ற்கு அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்க தொடங்கியதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அதிகரிக்கும் பொருட்டு அனைத்து மக்களையும் பரிசோதனை செய்திட வார்டு தோறும் மருத்துவ அலுவலர் (DHO) நியமிக்கப்பட்டதினாலும் மற்றும் கொரோனா பாதித்த மக்களை தனிமைபடுத்திடவும் மற்றும் சிகிச்சை அளிக்கவும் பல கட்டமைப்பு Screening center மற்றும் Covid Care Center அமைக்கப்பட்டதினாலும் இப்பணிக்கு நியமிக்கப்பட்ட மருத்துவ அலுவலர்களுக்காகவும் மற்றும் தொற்று பாதித்த நபர்களை சிகிச்சை மையத்திற்கு அழைத்து செல்லவும், ஊரடங்கு காலத்தில் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி கொடுத்திட தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியதால் கூடுதல் செலவீனமான ரூ.67,14,339/- (ரூபாய். அறுபத்தேழு இலட்சத்து பதினான்காயிரத்து முன்னூற்று முப்பத்தொன்பது மட்டும்)-க்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்படல் வேண்டும்.

இதற்கான செலவினத்தை COVID-19 பணிக்கென இயந்திரப் பொறியியல் துறை தலைமையகத்தின் ஒதுக்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண். 230 – 70 – 12 – 04 வாடகை செலவீனம் என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம். பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் உரிய நிதி ஒதுக்கீடு பெற்றப்பின் இத்தொகையினை நேர் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிக்கென அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்கள் மற்றும் இதர பணிகளுக்கு பல்வேறு வகையான வாகனங்கள் 25.03.2020 முதல் 30.06.2020 வரையிலான காலத்தில் வாடகை முறையில் அமர்த்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விளக்கு அளித்துள்ள நிலையில் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோரியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டியும்,
3. 150 எண்ணிக்கையிலான வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்த ஆணை பெறப்பட்ட நிலையில் கொரோனா வைரஸ் பரவல் முன்னெச்சரிக்கை பணி அதிகரித்ததால் நியமிக்கப்பட்ட மருத்துவ அலுவலர்களுக்கும் மற்றும் இதர

இ.பொ.து.ந.க.எண்.எம்1/0715/2020

பயன்பாட்டிற்காகவும் கூடுதல் எண்ணிக்கையில் வாகனங்கள் மற்றும் கூடுதல் நாட்களுக்கு கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு வாடகை முறையில் அமர்த்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

Sl. No	Vehicle Model	No of Vehicles as per Commissioner Order	Additional No of vehicles hired up to 30.06.2020	Total No of Vehicles hired up to 30.06.2020	No of Days to be hired as per the order	No of Days hired	Remarks
1	Indica	100	155	255	90	90	
2.	Tavera	30	23	53	60	90	
3.	Tempo Traveller	10	80	90	60	90	
4.	LMV / RLW (up to 7500kgs)	10	-	7	60	90	
Over All Total		150	358	405 (3 vehicles less in LMV RLW)			

4. 150 எண்ணிக்கையிலான வாகனங்கள் ரூ.3,50,00,000/- மதிப்பீட்டில் வாடகை முறையில் அமர்த்த ஆணை பெறப்பட்ட நிலையில் கூடுதல் மதிப்பிலான ரூ.67,14,339/-என மொத்தம் ரூ.4,17,14,339/- (ரூபாய். நான்கு கோடியே பதினேழு இலட்சத்து பதினான்காயிரத்து முன்னூற்று முப்பத்தி ஒன்பது மட்டும்) மதிப்பீட்டில் வாகனங்கள் வாடகை அமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

5. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணி மேற்கொள்ளப்படுவதால் வாகனங்கள் வாடகைக்கு வழங்கும் நிறுவனங்களுடன் பாதுகாப்பு தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,

6. இதற்கான செலவினத்தினை COVID-19 பணிக்கென இயந்திரப் பொறியியல் துறை தலைமையகத்தின் ஒதுக்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண். 230-70-12-04 வாடகை செலவீனம் என்னும் தலைப்பின் கீழ் மேற்கொண்டபின் இச்செலவீனத்தினை வருவாய் நிர்வாகம் ஆணையத்தின் மூலம் பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் உரிய நிதி ஒதுக்கீடு பெற்றப்பின் இத்தொகையினை நேர் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 18.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.நீ.வ.து.ந.க.எண்.பி3 / 0423/ 2020

தீர்மான எண்.662 / 2020 **நாள்:21-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - மதிப்பீடு 2019-2020 - மண்டலம் - 6 வார்டு-78 ல் உள்ள கீழ்காணும் தெருக்களில் ஆர்.சி.சி பெட்டக வடிவ பழைய மழைநீர் வடிகால்வாய் புனரமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி.

எழும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 78வது வார்டில் பழைய மழைநீர் வடிகால்வாய் புனரமைக்கும் பணிக்காக எழும்பூர் சட்டமன்ற தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் அனுப்பிய கடிதத்தின் பேரில் மதிப்பீடு ரூ.7,70,70,000/- (ரூபாய் ஏழு கோடியே எழுபது இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பணியின் விவரம்:

வ.எண்	பணியின் பெயர்	பணியின் விவரம்	நீளம் (மீ)	மதிப்பீட்டுத் தொகை (ரூ)
1.	மண்டலம்-6, வார்டு-78ல் தாணா தெரு (புரசைவாக்கம் பிரதான சாலை முதல் வெங்கடம்மாள் சமாதி தெரு வரை)	பழைய மழைநீர் வடிகால் புனரமைக்கும் பணி	650 மீ	ரூ.1,49,80,000/-
2.	மண்டலம்-6, வார்டு-78ல் வடமலை தெரு (தாணா தெரு முதல் ஏர்ரான் தெரு வரை) மற்றும் ஏர்ரான் தெரு (புதிய மாணிக்கம் தெரு முதல் வடமலை தெரு வரை)	பழைய மழைநீர் வடிகால் புனரமைக்கும் பணி	470 மீ	ரூ.1,08,40,000/-
3.	மண்டலம்-6, வார்டு-78ல் அங்காளம்மன் கோயில் தெரு (அஷ்டபுஜம் தெரு முதல் அவதானம் பாப்பியர் தெரு வரை) மற்றும் சுபா தெரு (அங்காளம்மன் கோயில் தெரு முதல் அவதானம் பாப்பியர் தெரு வரை)	பழைய மழைநீர் வடிகால் புனரமைக்கும் பணி	290 மீ	ரூ.91,40,000/-
4.	மண்டலம்-6, வார்டு-78ல் வடமலை தெரு (ஏர்ரான் தெரு முதல் பெரம்பூர் பேரக்ஸ் தெரு வரை)	பழைய மழைநீர் வடிகால் புனரமைக்கும் பணி	265 மீ	ரூ.83,50,000/-
5.	மண்டலம்-6, வார்டு-78ல் அவதானம் பாப்பியர் தெரு (பெரம்பூர் பேரக்ஸ் தெரு முதல் சூளை பிரதான சாலை வரை)	பழைய மழைநீர் வடிகால் புனரமைக்கும் பணி	725 மீ	ரூ.2,28,10,000/-
6.	மண்டலம்-6, வார்டு-78ல் அஷ்டபுஜம் தெரு (பெரம்பூர் பேரக்ஸ் தெரு முதல் அங்காளம்மன் கோயில் தெரு வரை)	பழைய மழைநீர் வடிகால் புனரமைக்கும் பணி	475 மீ	ரூ.1,09,50,000/-
		மொத்தம்	**2875 மீ**	**ரூ.7,70,70,000/-**

ம.நீ.வ.து.ந.க.எண்.பி3 / 0423/ 2020

2.	பரிந்துரை செய்தவரின் விவரம்	:	மேற்பார்வை பொறியாளர்
3.	எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம்	:	மழைநீர்வடிகால் துறை
4.	தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி	:	தலைமை பொறியாளர் / பொது.
5.	சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி	:	மழைநீர்வடிகால் துறை
6.	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது	:	2019 – 2020ஆம்ஆண்டு விலைப்பட்டியலின்படி
7.	மதிப்பீட்டின் தொகை		
அ)	பணியின் செலவீனம்	:	ரூ.66179900.53
ஆ)	சில்லறை மேற்பார்வை செலவீனம் 2.5 %	:	ரூ. 1624915.52
இ)	குடிநீர் (ம) மின்கம்பி வடங்கள் மாற்றியமைத்தல் செலவீனம் 1 %	:	ரூ. 661799.00
ஈ)	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் சேமநல நிதி 1%	:	ரூ. 661799.00
உ)	மற்ற எதிர்பாரா செலவீனம் 12%	:	ரூ. 7941588.94
	மொத்தம்	:	**ரூ.7,70,70,000/-**
8.	மழைநீர் வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியாக அல்லது சாலைப்பகுதியாக என்பது குறிப்பிடவும்	:	சாலை பகுதி – 2875 மீ
9.	ஒரு மீட்டருக்கு மதிப்பீடு	:	ரூ.23019.00
10.	வரைபடம் இணைக்கப்பட்டுள்ளதா?	:	ஆம்
11.	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி	:	---
12.	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா? ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது ஏற்கனவே செய்திருப்பின் வேலையின் முடிவுத் தொகை	:	---
13.	நிதியின் மூலத்தன்மை	:	மழைநீர் வடிகால் துறை மூலதன நிதி 2019 - 2020

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ள தனித்தனி மதிப்பீட்டிற்கு மொத்தம் ரூ.7,70,70,000/- (ரூபாய் ஏழு கோடியே எழுபது இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு சென்னை மாநகராட்சி சட்டம் 1919 விதி 78ன்படி சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 16.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

S.W.D.C.No.B4/ 1599/ 2014

Resolution No.663 /2020 **Date:21-09-2020**

Greater Chennai Corporation – Storm Water Drain Department-World Bank funded Integrated Storm Water Drain Project in Adyar and Cooum basin in the expanded areas of Greater Chennai Corporation - Work completed – Completed project cost exceeded the sanctioned amount of Rs.1101.43 crore – Requested for financial assistance for meeting the additional cost escalation in Adyar and Cooum Basin ISWD sub-project to TNUIFSL –Circulation note of TNUIFSL approved by the Sanctioning Committee – Revised Administrative sanction for the completed cost of the project to be obtained – For orders.

In G.O.(Ms) No.1, MA &WS (MA2) Department dated: 02.1.2015, Government of Tamil Nadu has accorded Administrative Sanction for an amount of Rs.1101.43 Crore for the Construction of Integrated Storm Water Drain (ISWD) in Cooum & Adyar Basins in the expanded areas in Greater Chennai Corporation under World Bank funded Tamil Nadu Sustainable Urban Development Project (TNSUDP).

The funding pattern for the project is as follows:

Name of the Project	Project Cost Rs. in crores	Loan from World Bank under TNSUDP Rs. in crores		Grant from TNSUDP Rs. in crores		ULB Contribution Rs. in crores	
		Amount Rs. in crores	%	Amount Rs. in crores	%	Amount Rs. in crores	%
Integrated Storm Water Drain in Adyar and Cooum basin in the expanded areas in Greater Chennai Corporation	1101.43	660.86	60	330.43	30	110.14	10

Commissioner in his letter dated 19.11.2019 addressed to Addl.Chief Secretary, MA&WS Department, for revised administrative sanction for the World Bank funded Integrated Storm Water Drain Project under TNSUDP in the expanded areas of Greater Chennai Corporation in Cooum and Adyar Basin for an amount of Rs.1548.93 crores.

Government of Tamil Nadu has accorded Revised Administrative Sanction vide G.O.(D).No.82, MA&WS (MC1) Department, Dt:02.03.2020 for the World Bank funded Integrated Storm Water Drain Project under TNSUDP in the expanded areas of Greater Chennai Corporation in Cooum and Adyar Basin for an amount of Rs.1548.93 crores.

This office letter dated 30.05.2020, It has been requested to TNUIFSL for providing additional funding assistance of Rs.353.11 crore for the above project under the World Bank assisted TNSUDP for meeting the additional cost escalation since the cost of completion of the project would come around Rs.1454.54 crore approximately including the GST to be paid for ISWD Drain works carried out after the implementation of GST against the original project cost of Rs.1101.43 crores.

The actual cost of completion of the project is Rs.1385.48 crore excluding the GST to be paid for ISWD Drain works as per the completion reports for all the 65 packages as submitted in the Utilization Certificate vide this office letter dated 09.01.2020.

Letter from Managing Director, TNUIFSL on 05.08.2020, TNUIFSL has stated that the above details have been reviewed and has analyzed the financial situation of GCC. TNUIFSL have agreed in principle to provide additional funding assistance for Rs.219.75 crores by way of loan and grant under World Bank assisted TNSUDP to meet the additional cost escalation for the above project and has sent a circulation note for approval by Sanctioning Committee under TNSUDP.

S.W.D.C.No.B4/ 1599/ 2014

The Sanctioning Committee under TNSUDP has approved the project proposal viz. providing additional financial assistance to GCC for meeting the cost escalation in Chennai ISWD sub-project under World Bank assisted TNSUDP and recommending to the Government for according revised Administrative Sanction with the following means of finance as suggested by TNUIFSL, duly relaxing the eligibility criteria for availing grant as per Project Sustainability Grant Fund (PSGF) guidelines.

Sl.No	Means of Finance	Chennai ISWD sub-project (Rs. in crores)	
		Amount	%
1	Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNSUDP	660.86	47.70%
2	Additional Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNSUDP	109.88	7.93%
3	Grant from Project Sustainability Grant fund (PSGF) under World Bank assisted TNSUDP	330.43	23.85%
4	Additional Grant from Project Sustainability Grant fund (PSGF) under World Bank assisted TNSUDP	109.87	7.93%
5	ULB Contribution	174.44	12.59%
	Total	1385.48	100.00%

Hence, For obtaining the Revised Administrative sanction from Government for the Construction of Integrated Storm Water Drain in Cooum and Adyar Basin in the extended areas of Greater Chennai Corporation project under World Bank assisted TNSUDP for an amount of Rs.1385.48 Crores with the following means of finance:

Sl. No.	Means of Finance	Chennai ISWD sub-project (Rs.in crores)	
		Amount	%
1	Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNSUDP	660.86	47.70%
2	Additional Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNSUDP	109.88	7.93%
3	Grant from Project Sustainability Grant fund (PSGF) under World Bank assisted TNSUDP	330.43	23.85%
4	Additional Grant from Project Sustainability Grant fund (PSGF) under World Bank assisted TNSUDP	109.87	7.93%
5	ULB Contribution	174.44	12.59%
	Total	**1385.48**	**100%**

Orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.18.09.2020 is read.

"Approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."

****

பே.சா.து.ந.க.எண்.பி3/2959/2020

தீர்மான எண்.664/2020 **நாள்:21-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை - 30 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகளும் 557 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளையும் முலதன நிதியில் மேம்படுத்துவதற்கு நிர்வாக அனுமதியும் மற்றும் சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோரவும் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 387 கி.மீ நீளமுடைய 471 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் 5237 கி.மீ நீளமுடைய 34,232 எண்ணிக்கையிலான உட்புறச் சாலைகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இயற்கை பேரழிவுகள் மற்றும் சேவைத் துறையினரால் சாலை வெட்டுகள் மேற்கொண்டு சேதமடைந்த சாலைகளை பல்வேறு திட்டங்களின்கீழ் சீரமைத்து மேம்படுத்தப்படுகின்றன. பொது மக்களின் நலனுக்காகவும் வாகன ஓட்டிகளின் பயன்பாட்டிற்காகவும் பழுதடைந்த சாலைகளை சீரமைப்பது மாநகராட்சியின் தலையாய பணியாகும். ஆகவே ஒவ்வொரு நிதியாண்டும் மாநகராட்சி பொறியாளர்களால் சேதமடைந்த சாலைகளை கள ஆய்வு மேற்கொண்டு சாலை கலந்தாளுனர்கள் மூலம் விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டு, மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறப்பு அதிகாரி (மன்றம்) தீர்மான எண்.092/2020 நாள்.04.02.2020ன்படி ரூ. 766 கோடிக்கு பழுதடைந்த உட்புற சாலைகள் மற்றும் பேருந்து சாலைகள் ஆகியவற்றை சீரமைக்கவும் செப்பனிடவும் சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதி மற்றும் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு நிதி மற்றும் மத்திய நிதிகுழு, மாநில அரசின் நிதி போன்ற பல்வேறு நிதி ஆதாரங்கள் மூலம் அவ்வப்போது சிப்பங்களாக பிரித்து ஒப்பம் கோரி பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இதன் அடிப்படையில் பல்வேறு நிதி ஆதாரங்களைக் கொண்டு சாலை மேம்படுத்தும பணிகளுக்கு ஒப்பங்கள் கோரப்பட்டு பணி நடைபெற்றுவருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2020-21 ன்கீழ் முதல் கட்டமாக (Priority – 1) 1171 எண்ணிக்கையிலான உட்புற சாலைகள் (867 தார் சாலைகள் மற்றும் 304 சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்) ரூ.98.32 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது மேலும், 161 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகள் ரூ.108.51 கோடி மற்றும் TURIP 2017-18 திட்டத்தின் சேமிப்பு நிதியின்கீழ் 5 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளை ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த ஒப்ப புள்ளிகள் திறக்கப்பட்டு, ஒப்பம் பரிசீலனையில் உள்ளது.

மேலும்., பெருநகர சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் (CMCDM) 2020-21ன் கீழ் முதல் கட்டமாக (Priority – 1) 1800 எண்ணிக்கையிலான உட்புற சாலைகள் (1522 தார் சாலைகள் மற்றும் 278 சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்) ரூ.133.41 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த ஒப்பபுள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக (Priority – 2) 801 எண்ணிக்கையிலான உட்புற சாலைகள் (750 தார் சாலைகள் மற்றும் 51 சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்) ரூ.57.25 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த ஒப்பப்புள்ளி கோரப்படவுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், 30 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 557 எண்ணிக்கையிலான உட்புற சாலைகள் பல்வேறு சேவைத்துறையினரின் சாலை வெட்டுகளால் வலுவிழந்து சாலைகள் ஆங்காங்கே பழுதடைந்த நிலையில் உள்ளதால் பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகளின் நலனை கருத்தில் கொண்டு இச்சாலைகளை செப்பனிடுவது மிகவும் அவசியம் ஆகிறது. இச்சாலைகளை மேம்படுத்துவதற்காக சாலை கலந்தாளுனர் (Road Consultant) மூலமாக விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன அதன் விவரம் பின்வருமாறு.

பேருந்து சாலைகளின் விவரம்

வ.எண்	மண்டலம்	சாலைகளின் எண்ணிக்கை	மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)
1	I	1	20.57
2	III	2	109.55

3	VI	1	31.44
4	VII	12	564.68
5	X	1	79.12
6	XII	8	238.21
7	XV	5	76.03

உட்புற சாலைகளின் விவரம்			
வ.எண்	மண்டலம்	சாலைகளின் எண்ணிக்கை	மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)
1	IV	8	63.36
2	V	43	364.35
3	VI	94	702.39
4	VIII	133	932.32
5	IX	118	985.86
6	X	9	87.50
7	XIII	152	737.26

மேற்கண்ட 30 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 557 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும், எந்தவொரு திட்டத்தின் கீழும் வராத காரணத்தினால் பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகளின் நலனை கருத்தில் கொண்டு பேருந்து சாலைகள் ரூ.11.20 கோடி மற்றும் உட்புற சாலைகள் ரூ.38.73 கோடியில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் செப்பனிடலாம் எனக்கருதப்படுகிறது.

எனவே, மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள காரணத்தினால் சாலைகளை செப்பனிடுவதற்கு,

1) மேற்கண்ட பட்டியலில் உள்ள சாலை மேம்பாட்டு (பேருந்து சாலைகள் மற்றும் உட்புற சாலைகள்) மதிப்பீடுகளுக்கு தனித் தனியே நிர்வாக அனுமதி வேண்டியும்,
2) ஒளிவு மறைவற்ற சட்ட விதிகளின்படி சிப்பங்களாக (சுமார் 2 கோடி முதல் 5 கோடி வரை) பிரித்து ஒப்பங்கள் கோரவும்,
3) மண்டலங்கள் மற்றும் பேருந்து சாலைகள் துறைக்கு மதிப்பீடுகளுக்கு ஏற்றவாறு நிதி ஒதுக்கீடு வழங்கவும்,
4) பேருந்து சாலைகள் மேம்படுத்தும் பணிக்கு திட்ட மேலாண்மை கலந்தாளுனர் நியமிக்க பணி மதிப்பீட்டில் சுமார் 2 சதவீதத் தொகையான ரூ.25.00 இலட்சத்திற்கு (18 சதவீதம் சரக்கு மற்றும் சேவை வரிகள் உள்பட) நிர்வாக அனுமதி மற்றும் ஒப்ப புள்ளி கோர அனுமதியும்,
5) உட்புற சாலைகள் மேம்படுத்தும் பணிக்கு திட்ட மேலாண்மை கலந்தாளுனர் நியமிக்க பணி மதிப்பீட்டில் சுமார் 2 சதவீதத் தொகையான ரூ.90.00 இலட்சத்திற்கு (18 சதவீதம் சரக்கு மற்றும் சேவை வரிகள் உள்பட) நிர்வாக அனுமதி மற்றும் ஒப்ப புள்ளி கோர அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 18.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.9.ந.க.எண்.இ1/ 04810/ 2020

தீர்மான எண்.665 / 2020 **நாள்:22-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9, பகுதி-24,25,26 (ம) 27, கோட்டம்-109 முதல் 126 வரை உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளின் சுற்றுப்புறம், வகுப்பு அறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் பணியாளர்களை 01.06.2020 முதல் 30.04.2021 வரை பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.

Municipal Administration and Water Supply (Ma.IV) Department, G.O.(MS) No.166, dated 23.11.2016ல், அந்தந்த உள்ளாட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் அந்தந்த பள்ளியின் தலைமையாசிரியர்கள் PTA நிதியிலிருந்து வாங்கி வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அலுவலர் அவர்களின் 06.06.2017 நாளிட்ட குறிப்பில், அந்தந்த மண்டலங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளின் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை பராமரித்து தூய்மைபடுத்தும் பணியினை துப்புரவு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ள துணை ஆணையர்(கல்வி) அவர்கள் அறிவுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு, பள்ளி இயங்கும் அனைத்து நாட்களிலும் வேலை நாட்கள் மட்டுமின்றி தேர்தல் பணி, சிறப்பு வகுப்புகள் மற்றும் வேறு முகாம்கள் நடைபெறும் நாட்களில் தூய்மை பணி மேற்கொள்ளப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சிறப்புஅதிகாரி, மன்ற தீர்மான எண். 344/2019, நாள் 27.06.2019ல், மண்டலம்-9, பகுதி-24,25,26 (ம) 27, கோட்டம்-109 முதல் 126 வரை உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளின் சுற்றுப்புறம், வகுப்பு அறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை ஒப்பந்த அடிப்படையில் சுத்தம் செய்ய நபர் ஒன்றுக்கு தினசரி ஊதியம் ரூ. 362/- வீதம் மொத்தம் 56 பள்ளிகளில் 120 பணியாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீடு குழு (NULM) திட்டத்தின் மூலம் 01.06.2019 முதல் 30.04.2020 வரை 11 மாதங்களுக்கு பணியமர்த்தி பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி இப்பணிக்கு வழங்கப்பட்ட ஆணையர் அவர்களின் 25.06.2019 நாளிட்ட ஆணை 30.04.2020 அன்றுடன் முடிவடைந்த நிலையில், மே மாதம் பள்ளிகள் கோடை விடுமுறை தவிர்த்து 01.06.2020 முதல் 30.04.2021 வரை தூய்மை பணி மேற்கொள்ள கீழ்காணும் பள்ளிகளின் சுற்றுபுறம், வகுப்பறைகளின் எண்ணிக்கை மற்றும் கழிவறைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பணியாளர்கள் நிர்ணயம் செய்ய அனுமதி வேண்டி குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

இணை ஆணையர் (கல்வி) அவர்களின் 13.07.2020 நாளிட்ட குறிப்பில் பகுதி-25ல் வரிசை எண்-13 விடுப்பட்டுள்ளதை குறிப்பிட்டு அதனை சரிசெய்து அனுப்புமாறு கேட்டுக்கொண்டுள்ளார். அதன் படி வரிசை எண் 13ல் சென்னை துவக்கப்பள்ளி, கெனால் பேங்க் சாலை என்பதனை குறிப்பிட்டு ஒப்புதல் வேண்டி கோப்பு மீள சமர்ப்பிக்கப்படுகிறது,

வ. எண்.	வார்டு எண்.	பள்ளியின் பெயர்	வகுப்பறை சுத்தம் செய்பவர்	கழிவறை சுத்தம் செய்பவர்	மொத்தம்
		பகுதி-24			
1	109	சென்னை துவக்கப்பள்ளி, நமச்சிவாயபுரம்	1	1	2
2	109	சென்னை துவக்கப்பள்ளி, சங்கராபுரம்	1	1	2
3	109	சென்னை உயர்நிலைப்பள்ளி, சங்கராபுரம்	1	1	2
4	110	சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பள்ளிசாலை	3	2	5
5	110	சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பள்ளிசாலை	3	2	5

6	110	சென்னை நடுநிலைப்பள்ளி, அப்பாசாமி தெரு	1	1	2
7	110	சென்னை துவக்கப்பள்ளி, குட்டி தெரு	1	1	2
8	111	சென்னை துவக்கப்பள்ளி, ஆண்டர்சன் சாலை	1	1	2
9	111	சென்னை நடுநிலைப்பள்ளி, மாடல் பள்ளி சாலை	1	1	2
10	111	சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மாடல் பள்ளி சாலை	1	0	1
11	111	சென்னை தசை திறன்குறையுடையோர் பள்ளி, மாடல் பள்ளி சாலை	1	0	1
12	119	சென்னை நடுநிலைப்பள்ளி, பீட்டர் சாலை	1	0	1
13	119	சென்னை நடுநிலைப்பள்ளி, பாலாஜி நகர் 3வது தெரு	1	1	2
14	119	சென்னை நடுநிலைப்பள்ளி, பேகம் தெரு	1	1	2
		மொத்தம்	**18**	**13**	**31**
பகுதி-25					
1	123	சென்னை துவக்கப்பள்ளி, அப்பாதுரை தெரு,	1	1	2
2	123	சென்னை துவக்கப்பள்ளி, திருவள்ளுவர் சாலை	1	1	2
3	123	சென்னை நடுநிலைப்பள்ளி, சென்ட்மேரீஸ் ரோடு	1	1	2
4	123	சென்னை மேல்நிலைப்பள்ளி, பீமண்ணா பேட்டை	1	1	2
5	123	சென்னை துவக்கப்பள்ளி, பீமண்ணா பேட்டை	1	0	1
6	123	சென்னை உயர்நிலைப்பள்ளி, எல்டாம் ரோடு	1	1	2
7	124	சென்னை துவக்கப்பள்ளி, சிலேட்டர்புரம்	1	1	2
8	124	சென்னை நடுநிலைப்பள்ளி, ராமகிருஷ்ணாபுரம்	1	1	2
9	125	சென்னை உயர்நிலைப்பள்ளி, கே.பி. சாலை	1	1	2
10	125	சென்னை நடுநிலைப்பள்ளி, பேராசிரியர் சஞ்சீவி தெரு	1	1	2
11	125	சென்னை துவக்கப்பள்ளி, நொச்சி குப்பம்	1	1	2
12	126	சென்னை உயர்நிலைப்பள்ளி, கெனால் பேங்க் சாலை	1	1	2
13	126	சென்னை துவக்கப்பள்ளி, கெனால் பேங்க் சாலை	1	0	1
14	126	சென்னை நடுநிலைப்பள்ளி, சாந்தோம் நெடுஞ்சாலை	1	1	2
		மொத்தம்	**14**	**12**	**26**
பகுதி-26					
1	112	சென்னை நடுநிலைப்பள்ளி, டிரஸ்ட்புரம்	2	2	4
2	112	சென்னை நடுநிலைப்பள்ளி, வரதராஜன்பேட்டை	1	1	2
3	112	சென்னை உயர்நிலைப்பள்ளி, சூளைமேடு நெடுஞ்சாலை	2	2	4
4	112	ஜெயகோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சூளைமேடு	2	3	5
5	113	சென்னை நடுநிலைப்பள்ளி, தர்மாபுரம்	1	1	2
6	113	சென்னை நடுநிலைப்பள்ளி, இராமா தெரு	1	1	2
7	117	சென்னை நடுநிலைப்பள்ளி, கிரியப்பா சாலை	1	0	1
8	117	சென்னை நடுநிலைப்பள்ளி, தெற்கு போக் சாலை	1	0	1
9	122	அரசு மேல்நிலைப்பள்ளி, நந்தனம்	1	1	2
		மொத்தம்	**12**	**11**	**23**

ம.அ.9.ந.க.எண்.இ1/ 04810/ 2020

பகுதி-27					
1	114	சென்னை நடுநிலைப்பள்ளி, பங்காரு தெரு	1	1	2
2	114	சென்னை நடுநிலைப்பள்ளி, தைபூன் அலிகான் தெரு	1	1	2
3	114	சென்னை நடுநிலைப்பள்ளி, பெல்ஸ் ரோடு	1	1	2
4	114	சென்னை உருது துவக்கப்பள்ளி, வல்லப அக்ரஹாரம் தெரு	1	1	2
5	114	சமுதாய கல்லூரி, அருணாச்சலம் தெரு	1	1	2
6	115	சென்னை துவக்கப்பள்ளி, டாக்டர் பெசன்ட் சாலை	1	1	2
7	115	சென்னை உருது ஆண்கள் துவக்கப்பள்ளி, பெசன்ட் சாலை	1	1	2
8	115	சென்னை நடுநிலைப்பள்ளி, சூரப்பா தெரு	1	0	1
9	116	சென்னை நடுநிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி	1	1	2
10	116	சென்னை நடுநிலைப்பள்ளி, வி.ஆர். பிள்ளை தெரு	1	0	1
11	116	லேடி வெலிங்டன் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,	3	2	5
12	120	சென்னை நடுநிலைப்பள்ளி, இருசப்பன் தெரு	1	1	2
13	120	சென்னை நடுநிலைப்பள்ளி, கிருஷ்ணாம்பேட்டை	1	1	2
14	120	ஐ.டி.ஐ. லாயிட்ஸ் காலனி	2	1	3
15	121	சென்னை துவக்கப்பள்ளி, லாயிட்ஸ் ரோடு	1	1	2
16	121	சென்னை உருது துவக்கப்பள்ளி, லாயிட்ஸ் ரோடு	1	1	2
17	121	சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, லாயிட்ஸ் ரோடு	1	1	2
18	121	சென்னை துவக்கப்பள்ளி, வீரபெருமாள் கோயில் தெரு	1	1	2
19	121	சென்னை உயர்நிலைப்பள்ளி, வீரபெருமாள் கோயில் தெரு	1	1	2
		மொத்தம்	**22**	**18**	**40**

மேற்படி மொத்தம் 56 பள்ளிகளில் வகுப்பறைகள் சுத்தம் செய்ய 66 பணியாளர்களையும் மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்ய 54 பணியாளர்கள் என ஆக மொத்தம் 120 பணியாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணியமர்த்தி பணி மேற்கொள்ள,

அ) சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைந்தபட்ச ஊதிய ஆணையின்படி (2019-2020) நபர் ஒன்றுக்கு தினசரி ஊதியம் ரூ.379/-வீதம், மாதம் 26 நாட்களுக்கு 120 பணியாளர்களை 11 மாதங்களுக்கு 2020-21 நிதியாண்டு (01.06.2020 முதல் 30.04.2021 வரை) தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணியமர்த்தி பணி மேற்கொள்ள பின்னேற்பு அனுமதியும்,

ஆ) தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணிமேற்கொள்ள ஒப்பந்த புள்ளி நடைமுறையில் ஈடுபடுத்த விலக்கு அளிக்கவும்,

இ) இப்பணிக்கு தேவையான நிதி (120 workers x per day Rs.379 x per month 26 days X 11 months) (120 x 379 x 26 x 11)= ரூ. 1,30,07,280/- 20-21-07/ 230- 150 - 500 என்ற கணக்கு தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும் மற்றும் வகுப்பறைகள் மற்றும்

ம.அ.9.ந.க.எண்.இ1/ 04810/ 2020

கழிவறைகள் சுத்தம் செய்ய தேவைப்படும் பொருட்கள் (துடப்பம், பிளீச்சிங் பவுடர், பிரஷ், பெனாயில்) அந்தந்த பள்ளியின் P.T.A. நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும், பின்னர் அச்செலவினங்கள் மாநகராட்சி மூலம் திரும்ப வழங்கவும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 17.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

****

வ.து.ந.க.எண்.ஜி1/ 6918/ 2010

தீர்மான எண்.666 / 2020 **நாள்:22-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய்துறை - சொத்து வரி - 4 வது மாநில நிதிக் குழு பரிந்துரைகள் - தொகுதி - V, பத்தி எண். 22 (vi) - பெருநகர சென்னை மாநகராட்சியில் குறிப்பிட்ட கால கட்டத்தில் சொத்து வரி செலுத்தப்படுதல் - சொத்துவரி குறிப்பிட்ட காலத்தில் செலுத்துபவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் மற்றும் காலம் தாழ்த்தி செலுத்துபவர்களுக்கு தண்டத் தொகை விதித்தல் - சென்னை மாநகர முனிசிபல் சட்டம்- 1919க்கு அரசால் சட்ட திருத்தம் வெளியிடப்பட்டள்ளது - சட்ட திருத்தத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-1919, பிரிவு-104ன்படி, சொத்தின் உரிமையாளர்களால், அந்தந்த அரையாண்டு துவங்கிய முதல் 15 தினங்களுக்குள் சொத்துவரியானது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 4வது மாநில நிதிக் குழு (தொகுதி - V பத்தி எண். 22 (vi))ல் தெரிவித்துள்ள பரிந்துரையினைத் தொடர்ந்தும், மன்றத் தீர்மானம் எண்.338/2010, நாள்: 29.07.2010 அடிப்படையிலும், பெருநகர சென்னை மாநகராட்சியில், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள், சொத்து வரி செலுத்துவோருக்கு அரையாண்டு சொத்து வரியில் ஊக்கத் தொகை வழங்கவும், குறிப்பிட்ட காலத்திற்குள் சொத்துவரியினை செலுத்த தவறுபவர்களுக்கு தண்டத் தொகை விதிக்கவும், விதிக்கப்படும் சொத்து வரிக்கு எதிராக வரிவிதிப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில், முறையீடு செய்யும் இனங்களுக்கு, வழங்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில், நிலுவைத் தொகை ஏதேனும் செலுத்தப்பட வேண்டியிருப்பின், அதற்கு தண்டத் தொகை, விழுக்காட்டு அடிப்படையில் விதிக்கவும், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதிகளில் (Taxation Rules-29, Part-VI Under Section 138 & Financial Rules Schedule-V, Part –II ,Under Section 141, Sub Section. 14 (i) of CCMC Act) உரிய திருத்தம் வேண்டி, அரசுக்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919க்கு, சட்ட திருத்தம் (Amendment), அரசிதழ் வெளியீடு எண்.252, பகுதி-IV, பிரிவு-2., நாள் 16.07.2018ல், Tamil Nadu Acts and Ordinances, Act No. 37 of 2018– The Chennai City Municipal Corporation (Amendment) Act, 2018 என கீழ்கண்டவாறு பொது அறிவிப்பாக வெளியிடப்பட்டது.

ACT No. 37 of 2018.

An Act further to amend the Chennai City Municipal Corporation Act, 1919.

BE it enacted by the Legislative Assembly of the State of Tamil Nadu in the Sixty-ninth Year of the Republic of India as follows:—

1. (1) This Act may be called the Chennai City Municipal Corporation (Amendment) Act, 2018 — Short title and commencement.

(2) It shall come into force on such date, as the State Government may, by notification, appoint.

2. In Schedule-IV to the Chennai City Municipal Corporation Act, 1919 (hereinafter referred to as the principal Act), in Part VI, after rule 29-C, the following rules shall be added, namely:— — Amendment of Schedule-IV.

"29-D. If any amount remains unpaid after the due date for its payment, the assessee shall pay, in addition to the amount due, interest at such rate not exceeding two per cent simple interest, as may be prescribed.

29-E. Where arrears amount are due to the corporation consequent on the orders delivered by the Taxation Appeal Tribunal in the appeal preferred by the assessee, the assessee shall pay the said amount with two per cent simple interest from the due date of payment of the said amount, within fifteen days from the date of delivery of the order.

29-F. Five per cent of the net property tax payable by an assessee, subject to a maximum of fi ve thousand rupees shall be granted as an incentive, who has paid the property tax within fifteen days from the date of commencement of the halfyear.”.

Tamil Nadu Act IV of 1919	**3**. In Schedule-V to the principal Act, in Part II, in rule 14, after clause (h) and before the proviso, the following clause shall be inserted, namely:—	Amendment of Schedule-IV.

“(i) incentive payable to the assessee under rule 29-F of Schedule IV.”.

அரசு கடிதம் எண்.16192/தேர்தல்/2018-7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 18.09.2019ல், தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு எண்.361, நாள் 13.09.2019ல், சென்னை மாநகராட்சி முனிசிபல் (திருத்தம்) சட்டம், 2018, 1 அக்டோபர் 2019 தேதியிலிருந்து நடைமுறைக்கு வருவதாக அறிவிப்பு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டது.

மேற்படி அரசு கடிதத்துடன், இணைத்து வரப்பெற்ற அரசாணை எண்.119, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்: 13.09.2019ல், இணைக்கப்பட்ட அறிவிப்பு (Appendix Notification), 13.09.2019 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழ் வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, அரசாணையில், கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

APPENDIX
NOTIFICATION

In exercise of the powers conferred by sub-section (2) of section (1) of the Chennai City Municipal Corporation (Amendment) Act, 2018 (Tamil Nadu Act 37 of 2018), the Governor of Tamil Nadu hereby appoints the 1st October 2019 as the date on which the said Act shall come into force.

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, 2 சதவீதம் தண்டத் தொகை விதிப்பது தொடர்பாக 30.09.2019 நாளிட்ட அரசு கடிதத்தில், *“Further, it is clarified that, a combined reading of the aforesaid section 104 and rule 29-D under schedule-IV of the said Tamil Nadu Act IV of 1919 show that simple interest on the unpaid amount for the half year from the due date namely the 16th of April or 16th of October, as the case may be, has to be paid by the assessee at such rate not exceeding two per cent per annum, as may be prescribed.”* எனத் தெளிவுரை வழங்கப்பட்டது.

மேற்படி சட்ட திருத்தம் நடைமுறைப்படுத்தும் காலம் தொடர்பாக அரசுக்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்ட நிலையில், 11.09.2020 நாளிட்ட அரசு கடிதத்தில், *“ to state that the power to bring into force of the said Tamil Nadu Act 37 of 2018 under sub-section (2) of section 1 of the said Act has been conferred by way of conditional legislation and is not a delegated legislation. As such, once the said power has been exercised by appointing certain date by the Government, the said condition imposed by the legislation is exhausted. Hence, it cannot be exercised by the Government again so as to appoint a different date as requested in the letter second cited.*

I am therefore, requested that further action for the implementation of the said Tamil Nadu Act 37 of 2018 may be taken accordingly. என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ.து.ந.க.எண்.ஜி1/ 6918/ 2010

மேற்கண்ட அரசு கடிதத்தின் தொடர்ச்சியாக சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-1919க்கு, சட்ட திருத்தம்(Amendment), (சென்னை மாநகராட்சி முனிசிபல் (திருத்தம்) சட்டம், 2018 (தமிழ்நாடு சட்டம் 37 / 2018))ல் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் – 1919 பிரிவு – 98-Aன்படி, மேற்படி சட்ட திருத்தம் நடைமுறைப்படுத்துவது தொடர்பான விவரம், அரசிதழ் மற்றும் உள்ளூர் தினசரிகளில் அறிவிப்புகளாக வெளியிடப்பட வேண்டும். இது குறித்து கருத்துக்கள்/ஆட்சேபணைகள் பெறுவதற்கான காலமானது, தகுதியான குறைந்த பட்சம் அறிவிப்பு வெளியிடப்பட்ட நாள் முதல் ஒரு மாத காலமாகும்.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-1919ற்கு, சட்ட திருத்தம் (தமிழ்நாடு சட்டங்கள் மற்றும் அவசர சட்டங்கள், சட்டம் எண். 37 / 2018, சென்னை மாநகராட்சி முனிசிபல் (திருத்தம்) சட்டம், 2018) மேற்கொள்ளப்பட்டு, இச்சட்ட திருத்தம் 01.10.2019 முதல் நடைமுறைப்படுத்துவதற்கு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், இச்சட்ட திருத்தம் தொடர்பாக, சிறப்பு அதிகாரி-மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே,

1) சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-1919க்கு தமிழ்நாடு சட்டங்கள் மற்றும் அவசர சட்டங்கள் கீழ், சட்டம் எண். 37 / 2018, சென்னை மாநகராட்சி முனிசிபல் (திருத்தம்) சட்டம், 2018ல், மேற்கொள்ளப்பட்ட சட்ட திருத்தம், சிறப்பு அதிகாரி – மன்றத்தின் தகவலுக்காகவும்,

2) மேற்படி சட்ட திருத்தத்தின்படி, ஒவ்வொரு அரையாண்டின் குறிப்பிட்ட காலத்தில் (அதாவது முதல் அரையாண்டு தொடக்க காலமான ஏப்ரல் 1 முதல் 15 ம் தேதிக்குள்ளும், இரண்டாம் அரையாண்டு தொடக்க காலமான அக்டோபர் 1 முதல் 15 தேதிக்குள்ளும்) சொத்து உரிமையாளரால் செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி தொகை செலுத்தப்படாமல் இருந்தால், செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி தொகையுடன் (கல்வி வரி, நூலகத் தீர்வை தவிர்த்து) கூடுதலாக இரண்டு சதவீதம் மிகாமல் தனிவட்டியுடன் தண்டத் தொகையாக விதிப்பதற்கும் (விதி29-Dன்படி)

3) மேற்படி சட்ட திருத்தத்தின்படி, சொத்து உரிமையாளரால் செய்யப்பட்ட மேல்முறையீட்டில், வரிவிதிப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் விளைவாக, மாநகராட்சிக்கு உரிய நிலுவைத் தொகை ஏதேனும் செலுத்தப்பட வேண்டியிருப்பின், ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள், நிர்ணயிக்கப்பட்ட தொகையினை செலுத்த வேண்டிய தேதியிலிருந்து (கல்விவரி, நூலகத் தீர்வை தவிர்த்து) இரண்டு சதவீதம் தனி வட்டியுடன் செலுத்துவதற்கும், (விதி29-Eன்படி),

4) மேற்படி சட்ட திருத்தத்தின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒவ்வொரு அரையாண்டு துவக்கத்தின் முதல் 15 தினங்களுக்குள் (அதாவது முதல் அரையாண்டு தொடக்க காலமான ஏப்ரல் 1 முதல் 15 ம் தேதிக்குள்ளும், இரண்டாம் அரையாண்டு தொடக்க காலமான அக்டோபர் 1 முதல் 15 தேதிக்குள்ளும்) செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி தொகையினை செலுத்தும் சொத்து உரிமையாளருக்கு, செலுத்தப்படும் நிகர சொத்து வரியில் (கல்வி வரி, நூலகத் தீர்வை தவிர்த்து) ஐந்து சதவீதம் (அதிகபட்சமாக ரூ.5000/-வரை) ஊக்கத் தொகை வழங்குவதற்கும் (விதி29-Fன்படி),

5) மேற்படி சட்ட திருத்தத்தின் அடிப்படையில், அட்டவணை- IVன், விதி 29-F ன்கீழ் சொத்து உரிமையாளருக்கு வழங்கப்பட வேண்டிய ஊக்கத் தொகை, அட்டவணை–V, விதி 14(i))ன்படி வழங்கவும்,

6) சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-1919க்கு, மேற்கொள்ளப்பட்ட சட்ட திருத்தம் (தமிழ்நாடு சட்டங்கள் மற்றும் அவசர சட்டங்கள், சட்டம் எண். 37 / 2018, சென்னை மாநகராட்சி முனிசிபல் (திருத்தம்) சட்டம், 2018) தொடர்பாக, சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் – 1919, பிரிவு – 98-Aல் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி, அரசிதழ் மற்றும் உள்ளூர் தினசரிகளில் அறிவிப்புகள் வெளியிடவும்,

7) சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-1919க்கு, மேற்கொள்ளப்பட்ட சட்ட திருத்தத்தினை (தமிழ்நாடு சட்டங்கள் மற்றும் அவசர சட்டங்கள், சட்டம் எண். 37 / 2018, சென்னை மாநகராட்சி முனிசிபல் (திருத்தம்) சட்டம்,-2018), 01.10.2019 தேதியிலிருந்து நடைமுறைக்கு கொண்டுவருவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.12/வ.து./ந.க.எண்.ஆர்1/1990/2020

தீர்மான எண்.667/2020 **நாள்:22-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய்துறை மற்றும் காவல் பணியாளர்களைக் கொண்டு கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை வீட்டில் தனிமைப்படுத்துதல்- தனிமை மேலாண்மை அமைப்பின்கீழ் (HQIMS) அலுவலர்களை நியமித்து ஆணையரது உத்தரவு வழங்கப்பட்டது - இக்குழுவுடன் இணைத்து பணிகள் மேற்கொள்ள மண்டலம்-12க்குட்பட்ட 156 முதல் 167 வரையிலான வார்டுகளில் 130 தற்காலிக தன்னார்வ பணியாளர்களை 18.06.2020 முதல் 17.09.2020 வரை மூன்று மாதங்களுக்கு தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டது - மேலும் 18.09.2020 முதல் 17.10.2020 வரை ஒரு மாதத்திற்கு நீட்டிப்பு செய்யவும் ஊதியம் வழங்கவும் அனுமதி.

ஆணையர் அவர்களின் 10.06.2020 நாளிட்ட செயல்முறை ஆணையில், COVID-19 கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை வீட்டில் தனிமைப்படுத்த, தனிமை மேலாண்மை அமைப்பின் (HQIMS) அனைத்து துறைகளிலிருந்தும் அலுவலர்கள் உள்ளடக்கிய பிரிவு மட்டத்தில் ஒரு கோவிட் பொறுப்பு குழுவாக (CRT) வருவாய்துறை மற்றும் காவல் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி COVID-19 வைரஸ் பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்துவதற்கு பலதரப்பட்ட அணுகுமுறையை மேற்கொண்டு வருகிறது.

இதனடிப்படையில் (HQIMS) குழுவில் பணியமர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள், வெளிநாடுகளில் இருந்து திரும்பி வருபவர்கள், உள்நாட்டு விமானப் பயணிகள் ஹாட்ஸ்பாட் மாநிலங்கள் மற்றும் உள்மாநில சாலைப் பயணிகள் மற்றும் வேறு எந்த அறிவிக்கப்பட்ட நபர்களும் தங்கள் வீடுகளில் கட்டாயமாக 14 நாட்கள் சுய தனிமைப்படுத்தப்படுவதைக் கடைப்பிடிப்பதை உறுதி செய்யவேண்டும்.

மேற்கண்டுள்ள COVID-19 வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளின் பட்டியலை எடுத்து, வீட்டு தனிமைப்படுத்தல் / வீட்டு தனிமைப்படுத்தப்பட்ட வீடுதோறும் சென்று கண்காணிப்பு பணி மற்றும் COVID-19 வைரஸ் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் / குடும்பங்களுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் மருந்துகள் வழங்குவதை உறுதி செய்து தடுப்பு பணிக்கான விவரங்களை சேகரிக்க தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டுள்ள 130 தன்னார்வ பணியாளர்கள், அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 156 முதல் 167 வரையிலான கோட்டங்களின் பணியாளர்கள் தினந்தோறும் மேற்கொள்ளும் பணியினை அதற்குரிய பதிவேட்டில் பதிவு செய்தும் உதவி செயற்பொறியாளர்கள் / உதவி பொறியாளர்கள் / உதவி வருவாய் அலுவலர்கள் / வரி மதிப்பீட்டாளர்கள் / வரி வசூலர்கள் / காவல் அலுவலர்கள் ஆகியோருடன் இணைந்து பணிகளை செய்ய பணிக்கப்பட்டுள்ளார்கள்.

தற்காலிக தன்னார்வ பணியாளர்கள் தினந்தோறும் மேற்கொள்ளும் பணி மற்றும் செயல்பாட்டை தினசரி அடிப்படையில் உரிய அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டுள்ள 130 தன்னார்வ பணியாளர்களுக்கான ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (முன்னதாகவே பொது மக்களுக்கு சளி, காய்ச்சல் இருக்கும் விவரங்களை சேகரிக்க தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள Survey Worker பணியாளர்களுக்கு ஊதியம் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ரூ.500/- வீதம் மாதம் ரூ.15000/- என நிர்ணயித்து சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.316/2020 நாள் 04.05.2020ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஒரு பணியாளருக்கு மாதம் ரூ.15,000/- (ரூபாய் பதினைந்து ஆயிரம் மட்டும்) வீதம் 130 பணியாளர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ரூ.58,50,000/- வீதம் ஊதியமாக வழங்க சிறப்புஅதிகாரி, மன்றதீர்மானஎண்.494/2020, நாள்.21.07.2020ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்டுள்ள காரணங்களுக்காக மூன்று மாதங்களுக்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள 130 தன்னார்வ பணியாளர்களின் பணி மேலும் தேவைப்படுவதால் அந்நபர்களை 16.09.2020 முதல் 15.10.2020 வரை ஒரு மாதத்திற்கு நீட்டிப்பு செய்ய அனுமதியும், ஊதியம் வழங்குவதற்கு அனுமதியும் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதல் பெறவேண்டியுள்ளது.

ம.அ.12/வ.து./ந.க.எண்.ஆர்1/1990/2020

எனவே,

1. COVID-19 கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை வீட்டு தனிமைப்படுத்தல் மற்றும் தனிமை மேலாண்மை அமைப்பின்கீழ் (HQIMS) கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டு வீட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் உள்ள வீடுகளில் வீட்டுத் தனிமைப்படுத்தல் குறித்த பணிகளுக்காக அமைக்கப்பட்ட கோவிட் குழு அலுவலர்களான வருவாய் மற்றும் காவல் அலுவலர் ஆகியோருடன் இணைந்து COVID-19 வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளின் பட்டியலை எடுத்து COVID-19 வைரஸ் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் / குடும்பங்களுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் மருந்துகள் வழங்குவதில் உறுதி செய்யும் பணிக்காக 18.06.2020 முதல் 15.09.2020 வரை 90 நாட்களுக்கு மட்டும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள தன்னார்வ பணியாளர்கள் 130 நபர்களை 16.09.2020 முதல் 15.10.2020 வரை மேலும் 30 நாட்களுக்கு பணி நீட்டிப்பு செய்ய ஒப்புதல் வேண்டியும்,
2. மேற்கண்ட 130 பணியாளர்களுக்கு மாத ஊதியமாக நபர் ஒருவருக்கு ரூ.15000/- வீதம் ஒரு மாதத்திற்கு 130x500x30=19,50,000/- (ரூபாய் பத்தொன்பது லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வழங்கவும்,
3. மேற்கண்ட தொகைக்கான செலவீனத்தை மண்டலம்-12 மனிதவளம் (Man Power) கணக்கு குறியீடு எண்.20-21-07 பிரிவு எண்.230-70-12-03ல் நிதி ஒதுக்கீடு வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 17.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.11.வ.து.ந.க.எண்.ஆர்1/ 488 / 2020

தீர்மான எண்.668 / 2020 **நாள்:22-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 11 - வருவாய் துறை - கோட்டம் 143 முதல் 155 வரை - கொரானா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கை -பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வாங்கி வழங்கும் பணி மேற்கொள்வதற்காக தன்னார்வலர்கள்- 12.09.2020 முதல் 11.10.2020 வரை ஒரு மாதம் இத்ததன்னார்வலர்களின் பணியினை தற்காலிகமாக நீட்டிக்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, கோட்டம் 143 முதல் 155 வரையிலான பகுதிகளில் நோய் பாதிக்கப்பட்டவர்கள் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு வெளியில் சென்றுவர அனுமதி அளிக்காத நிலையில் கொரானா தொற்று நோய் பரவல் தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக நோய் தொற்று பாதிக்கப்பட்ட நபர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களின் உடல் நலம் பாதுகாக்க அவர்களுக்கு அன்றாடம் தேவையான உணவு பொருட்கள் மருத்துவ உபகரணங்கள் மற்றும் இதர அத்தியாவசிய பொருட்கள் வழங்குவதற்காக தற்காலிகமாக 195 எண்ணிக்கையில் Focus Volunteers எனப்படும் தன்னார்வலர்கள் ஒரு நபருக்கு மாத ஊதியம் ரூ.15,000/- என்ற அடிப்படையில் 14.06.2020 முதல் 11.09.2020 வரை 90 நாட்களுக்கு பணியமர்த்தி சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.484/2020, நாள்-16.07.2020ல் நிறைவேற்றப்பட்டு, தன்னார்வலர்கள் செவ்வனே பணியாற்றி வருகின்றனர்.

மேற்குறிப்பிட்ட தன்னார்வலர்களின் இப்பணியினை மேலும் ஒரு மாத காலத்திற்கு 12.09.2020 முதல் 11.10.2020 வரை 30 நாட்களுக்கு நீட்டிப்பு செய்ய அவசியம் ஏற்படுவதால், 195 எண்ணிக்கையில் Focus Volunteers எனப்படும் தன்னார்வலர்களை தற்காலிகமாக மேலும் ஒரு மாத காலம் நீட்டிப்பு செய்ய வேண்டும்

எனவே,

1. மண்டலம் -11, கோட்டம் -143 முதல் 155 வரை உள்ள பகுதிகளில் கொரானோ தொற்று பாதித்தவர்கள், தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு தன்னார்வு பணியாளர்கள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வாங்கி தருவதற்கு 195 தன்னார்வு பணியாளர்கள் பணியாற்ற மேலும் ஒரு மாதம் 12..09.2020 முதல்11.10.2020 வரை நீட்டிப்பு செய்யவும்,
2. 195 தன்னார்வு பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ.500/.வீதம் வழங்கவும்
3. 12.09.2020 முதல் 11.10.2020 வரை இப்பணி நீட்டிப்பிற்கான ஏற்படும் தொகை 195xரூ.15,000 = ரூ.29,25,000/- - மனிதவளம் கணக்குத் தலைப்பில் கணக்கு குறியீடு எண்.20-21-07, கணக்குப் பிரிவு எண்.230-70-12-03ல் நிதி ஒதுக்கீடு செய்யவும்,
4. 12.09.2020 முதல் 11.10.2020 வரை 195 Focus தன்னார்வலர்கள் தற்காலிகமாக பணியமர்த்த நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.13.நக.எண்.வ.து.ஆர்1/ 2598/ 2020

தீர்மான எண்.669/2020 **நாள்:22-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -13 வருவாய் துறையில், காவல் பணியாளர்களை கொண்டு வீட்டு தனிமைப்படுத்தல் மற்றும் தனிமை மேலாண்மை அமைப்பின் கீழ் (HQIMS) மண்டலம் -13ல் 170 முதல் 182 கோட்டம் வாரியாக 207 தற்காலிக தன்னார்வ பணியாளர்களை நியமனம் செய்தது - 14.06.2020 முதல் 11.09.2020 முடிய 90 நாட்களுக்கான (மூன்று மாதம்) ஊதியம் வழங்க ஆணை பெறப்பட்டது - மேலும் 12.09.2020 முதல் 11.10.2020 முடிய ஒரு மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்ய அனுமதி.

ஆணையரின் 10.06.2020 நாளிட்ட செயல் முறை ஆணையில் COVID – 19 கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை வீட்டு தனிமைப்படுத்தல் மற்றும் தனிமை மேலாண்மை அமைப்பு (HQIMS)ன் அனைத்து துறைகளிலிருந்தும் அலுவலர்கள் உள்ளடக்கிய பிரிவு மட்டத்தில் ஒரு கோவிட் பொறுப்பு குழுவாக (CRT) வருவாய் துறை மற்றும் காவல் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி COVID-19 வைரஸ் பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்துவதற்கு பலதரப்பட்ட அணுகு முறையை மேற்கொண்டு வருகிறது.

இதனடிப்படையில் HQIMS ன் குழுவில் பணியமர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள், வெளி நாடுகளில் இருந்து திரும்பி வருவபவர்கள், உள்நாட்டு விமானப்பயணிகள் ஹாட்ஸ்பாட் மாநிலங்கள் மற்றும் இன்டர்ஸ்டேட் சாலைப்பயணிகள் மற்றும் வேறு எந்த அறிவிக்கப்பட்ட நபர்களும் தங்கள் வீடுகளில் கட்டாயமாக 14 நாட்கள் சுய தனிமைப்படுத்தப்படுவதைக் கண்காணித்து உறுதி செய்ய வேண்டும்.

மேற்கண்டுள்ள COVID – 19 வைரஸ் தொற்று பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளை பட்டியலிட்டு, வீட்டு தனிமைப்படுத்தல்/ தனிமைப்படுத்தப்பட்ட வீட்டுக்கு வீடு, சென்று கண்காணிப்பு பணி மற்றும் COVID – 19 வைரஸ் பாதிக்கப்பட்ட தனி நபர்கள் / குடும்பங்களுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் மருந்துகள் வழங்குவதில் உறுதி செய்து தடுப்பு பணிக்கான விவரங்களை சேகரிக்க தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டுள்ள 207 தன்னார்வ பணியாளர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 170 முதல் 182 கோட்டங்களில் தினந்தோறும் பொறியாளர்கள்/ உதவி வருவாய் அலுவலர்கள் /வரி மதிப்பீட்டாளர்கள் / வரி வசூலர்/ காவல் துறை அலுவலர்கள் ஆகியோருடன் இணைந்து பணிகளை செய்ய பணிக்கப்பட்டுள்ளார்கள்.

தற்காலிக தன்னார்வ பணியாளர்கள் தினந்தோறும் மேற்கொள்ளும் பணி மற்றும் செயல்பாட்டை தினசரி அடிப்படையில் உரிய அலுவலர்களால் கண்காணிக்கப்படுகின்றனர்.

ஆணையரின் ஆணையின்படி COVID – 19 தனிமைப்படுத்தல் மற்றும் தனிமை மேலாண்மை அமைப்பு (HQIMS) தொடர்பான செயல்பாடுகளுக்கு 170 முதல் 182 கோட்டங்களின் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டுள்ள 207 தன்னார்வ பணியாளர்களால் இப்பணி உத்தேசமாக 90 நாட்களில் முடிக்கப்பட வேண்டும்

ஆணையர் மற்றும் சிறப்பு அதிகாரி அவர்களின் 30.06.2020 நாளிட்ட ஆணை பெறப்பட்டு சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 455/2020, நாள்.07.07.2020 ன்படி மண்டலம் – 13ல் தன்னார்வ பணியாளர்கள் 14.06.2020 முதல் 11.10.2020 முடிய மூன்று மாதங்களுக்கு ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு ரூ.500/- வீதம் 207 தன்னார்வ பணியாளர்கள் பணியாற்ற அனுமதி பெறப்பட்டு தற்போது பணி செய்து வருகின்றனர்.

தற்போது, கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்டவர்களை வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கும் பணி மேலும் ஒரு மாத காலம் (30 நாட்கள்) தொடர வேண்டியுள்ளது.

எனவே,

1. COVID -19 கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களை வீட்டு தனிமைப்படுத்தல் மற்றும் தனிமை மேலாண்மை அமைப்பு (HQIMS) ன் கீழ் கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்ட தனி நபர்கள்/ குடும்பங்களுக்கு அடிப்படைத் தேவைகள் மற்றும் மருந்துகள் வழங்குவதை உறுதி செய்யும் பணிக்காக ஏற்கனவே தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள 207 தன்னார்வ

பணியாளர்களை மேலும் ஒரு மாத காலம் (12.09.2020 முதல் 11.10.2020 வரை) பணி நீட்டிப்பு செய்ய அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்ட பணியாளர்களுக்கு ஒரு மாத ஊதியமாக ரூ.15,000/- வீதம் (ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ரூ.500/- வீதம்) ஒரு மாதத்திற்கு (30 நாட்கள்) மட்டும் 207x500x30 ஊதியம் ரூ. **31,05,000/-** வழங்கவும்

3. மேற்கூறிய தொகைக்கான செலவினத்தை மண்டலம்-13 கணக்கு குறியீடு எண்.230701203 பிரிவு எண்.202107ல் நிதி ஒதுக்கீடு வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.7.ந.க.எண்.இ1/ 1900/ 2020

தீர்மான எண்.670/2020 **நாள்:22-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -7. (அம்பத்தூர்), கோட்டம் 79 முதல் 93 வரையிலான பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்காக பெறப்பட்ட பல்வேறு முன்பணங்களுக்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம் -7. (அம்பத்தூர்), கோட்டம் 79 முதல் 93 வரையிலான பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்காக பல்வேறு பணிகளுக்காக கீழ்கண்டவாறு முன்பணங்கள் பெறப்பட்டுள்ளன.

மண்டலம்/ துறை	கோப்பு எண்.	முன்பணம்/திட்ட மதிப்பீட்டின் சுருக்க விவரம்	முன்பணம்/ திட்ட மதிப்பீட்டின் தொகை (ரூ)	மண்டல அலுவலர்/ துறை தலைவர்/ மற்றும் தலைமையிட துணைஆணையர்களால் அனுமதி அளிக்கப்பட்ட நாள்
7	ம.அ.7.ந.க.எண். இ1/1900/2020	வார்டு – 79 முதல் 93 வரை பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்குவதற்காக.	90,000.00	மண்டல அலுவலர் – 7 அவர்களின் அனுமதி, நாள்.26.03.2020.
7	ம.அ.7.ந.க.எண். இ1/1974/2020	கொரோனா தடுப்பு நடவடிக்கை பாதிக்கப்பட்டவர்களை தீவிர நோய் கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது பாதிக்கப்பட்ட பகுதியை கண்காணிக்க சாமியான மற்றும் தடுப்பு பணிகள்.	3,00,000.00	வட்டார துணை ஆணையர் அவர்களின்அனுமதி.நாள். 28.04.2020.
7	ம.அ.7.உ.கோ.மி. பொ.ந.க.எண். /191/2020,	கொரோனா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கை பணிக்காக COVID – 19, சோகா இக்கடா கல்லூரி , கோட்டம் – 83, பக்தவசலம் கல்லூரி கோட்டம் – 83 மற்றும் அண்ணை வயலட் கல்லூரி கோட்டம் – 82 ஆகிய கட்டிடங்களில் தனிமைப்படுத்தப்பட்ட கொரோனா தற்காலிக சிகிச்சை மையம் – புதியதாக Air Conditioner, Water heater, Intercom மற்றும் PA System வசதி ஏற்படுத்தும் பணி மற்றும் தேவையான மின் வசதிகள் அமைக்கும் பணி.	10,86,376.00	வட்டார துணை ஆணையர் அவர்களின் அனுமதி நாள். 24.06.2020

ம.அ.7.ந.க.எண்.இ1/ 1900/ 2020

7	ம.அ.7.உ.கோ.மி. பொ.ந.க.எண்.இ 4/196/2020	கொரோனா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கை பணிக்காக COVID – 19 – நிவாரண முகாம் கோட்டம் – 86, அத்திப்பட்டு வானகரம் பிரதான சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய புதிய குடியிருப்பு கட்டிடம் (Tenament)ல் தற்காலிக சிகிச்சை முகாம் – பிளாக் 2 மற்றும் 3 ஆகிய கட்டிடங்களில் தனிமைப்படுத்தப்பட்ட கொரோனா தற்காலிக சிகிச்சை மையம் - புதியதாக Air Conditioner, Fridge, Water heater மற்றும் Intercom வசதி ஏற்படுத்தும் பணி மற்றும் தேவையான மின் வசதிகள் அமைக்கும் பணி	21,98,800.00	வட்டார துணை ஆணையர் அவர்களின் அனுமதி.நாள். 01.07.2020
7	ம.அ.7.ந.க.எண்./ 2153/2020	வார்டு – 79 முதல் 93 வரை கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகளை முன் எச்சரிக்கை நடவடிக்கையாக சாலைகளின் முகப்பில் தடுப்பு அமைக்கும் பணி	30,54,013.62	வட்டார துணை ஆணையர் அவர்களின் அனுமதி, நாள். 30.05.2020.
7	ம.அ.7.ந.க.எண்./ 2597/2020	வார்டு – 83, கொரட்டூர் பகுதிக்கு உட்பட்ட மாதனாங்குப்பம் பகுதியில் அமைந்துள்ள சோகா இக்கடா கல்லூரியை Corona Care Center ஆக மாற்றி அமைக்கும் பணி	8,53,780.00	வட்டார துணை ஆணையர் அவர்களின் அனுமதி, நாள். 09.07.2020.
7	ம.அ.7.உ.கோ.மி. பொ.ந.க.எண்.இ 4/208/2020,	கொரோனா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கை பணிக்காக COVID – 19 – நிவாரண முகாம் கோட்டம் – 86, அத்திப்பட்டு வானகரம் பிரதான சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய புதிய குடியிருப்பு கட்டிடம் (Tenament)ல் தற்காலிக சிகிச்சை முகாம் – தனிமைப்படுத்தப்பட்ட கொரோனா தற்காலிக சிகிச்சை மையம் பிளாக் 2 மற்றும் 3 ஆகிய கட்டிடங்களுக்கு தடையில்லா மின்சாரம் (Uninterrupted Power Supply) வழங்க – தற்காலிகமாக Each Block ஒரு எண்ணிக்கையிலான 125.5KVA Generator வீதம் 2 எண்ணிக்கையிலான 125.5KVA	3,02,810.00	வட்டார துணை ஆணையர் அவர்களின் அனுமதி. நாள். 03.07.2020

		Generatorஐ வாடகைக்கு நிறுவும் பணி மற்றும் தேவையான மின்சாதனங்கள் பொருத்தும் பணி		
7	ம.அ.7.ந.க.எண்./ 2764/2020	வார்டு - 85, கொரோனா பெருந்தொற்று நோய் தடுப்பு ஆலோசனை கூட்டம் மற்றும் Tele Counselling Centre அமைக்கும் பணி	51,000.00	வட்டார துணை ஆணையர் அவர்களின் அனுமதி, நாள். 23.07.2020.

எனவே,

1. மண்டலம் - 7, கோட்டம் 79 முதல் 93 வரையிலான பகுதிகளில் கொரோனா பெருந்தொற்று நோய் தடுப்பு பணிகளுக்காக மேற்கண்ட 1 முதல் 8 வரை உள்ள முன்பணம் பெறப்பட்ட கோப்புகளுக்கு பின்னேற்பு அனுமதியும்,
2. இப்பணிக்கான செலவீனத்தினை பிரிவு குறியீடு எண்.20 - 21 - 07 மற்றும் கணக்கு தலைப்பு எண் 220 - 800 - 600 மற்றும் 230 - 701 - 205 என்ற தலைப்பின் கீழ் பெறப்பட்ட முன்பணம் நேர் செய்யவும்,
3. மேலும் பெறப்பட்டுள்ள முன்பணங்கள் நேர் செய்ய போதிய நிதி ஒதுக்கீடு செய்யவும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 20.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"COVID 19 தடுப்பு பணிக்கு பெறப்பட்ட முன்பணங்களுக்கு, 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.ஈ2/19947/2020

தீர்மான எண்.671/2020 **நாள்:22-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - டாக்டர்.எஸ்.சாந்தி மீனா, மருத்துவ அலுவலர், மருத்துவ சேவைகள் துறை அவர்கள் 23.09.2020 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, திரு.வி.க நகர் மருத்துவ மண்டலத்தில் ஊதியம் பெற்று, மாற்று பணி அடிப்படையில் தேனாம்பேட்டை மருத்துவ மண்டலத்தின் கீழ் இயங்கும் புஷ்பா நகர் நகர ஆரம்ப சுகாதார மையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வரும் டாக்டர். திருமதி. எஸ். சாந்தி மீனா, (பணியாளர் எண்.194530) அவர்கள் குடும்ப சூழ்நிலை மற்றும் உடல்நிலை சரியில்லாத காரணத்தினல் தனக்கு தன் விருப்ப ஓய்வு கோரி 26.06.2020 அன்று சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு மனு அளித்துள்ளார். தனியரை தன் விருப்ப ஓய்வு விதிகளின்படி, 23.09.2020 அன்று தன் விருப்ப செல்ல அனுமதி அளிக்கப்பட வேண்டியுள்ளது.

டாக்டர்.எஸ்.சாந்தி மீனா அவர்கள் 18.07.2008 அன்று மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டு தொடர்ந்து மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரிந்து வருகிறார். தனியரது தாய்மொழி தமிழ் ஆகும்.

தனியர் பணிபுரிந்த மண்டலங்கள்/துறைகளின் விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	வகித்த பதவி	துறை/மண்டலம்	பணிபுரிந்த காலம்
1.	மருத்துவ அலுவலர்	கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம்	18.07.2008 - 13.04.2011
2.		சுகாதாரத்துறை	14.04.2011 - 22.07.2015
3.		தேனாம்பேட்டை மருத்துவ மண்டலம்	23.07.2015 - 29.02.2016
4.			01.03.2016 - 13.07.2016
5.			14.07.2016 - இந்நாள் வரை

மேலும், மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்4/0690/2008, நாள். 15.02.2011ன்படியும், நியமனக்குழுத் தீர்மான எண்.06/2011, நாள்.27.01.2011ன்படியும், தனியருக்கு 18.07.2008 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டது. மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்4/0690/2008, நாள். 15.09.2012ன்படியும், நியமனக்குழுத் தீர்மான எண்.51/2012, நாள்.15.02.2012ன்படியும், 18.07.2010 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டார்.

தனியர் பணிபுரிந்துள்ள மண்டலம்/துறைகளிலிருந்து முன்பண நிலுவை தொகை, தணிக்கை தடை, மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லையென சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

இயக்குநர், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககம் அவர்களின் 08.09.2020 நாளிட்ட கடிதத்தின்படி, தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர். பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 24.08.2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை 07.09.2020 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக, தனியரின் பணிப்பதிவேடு முன் தணிக்கை செய்து, சான்று பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு அலுவலக சங்கத்தின் 04.08.2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் உறுப்பினராக இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 11.02.2020 நாளிட்ட குறிப்பில், நிதி நிர்வாகப் பிரிவு (தணிக்கை) அவர்களின் 20.08.2020 நாளிட்ட கடித்தில், தனியர் மருத்துவ அலுவலராக துறைகளில் பணிபுரிந்த காலங்களில் 2008-2009 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரையிலான தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகளின்படி, நிலுவை ஏதுமில்லை என்றும், மேலும் 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிட்ட பின்னர், தணிக்கைத் தடைப் பத்திகள்

பொ.து.ந.க.எண்.ஈ2/19947/2020

ஏதேனும் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர மருத்துவ அலுவலர் (பொ) அவர்களின் 16.09.2020 நாளிட்ட கடிதத்தில், கணக்கு அலுவலர் (பகுதி கணக்கு குழுமம் / மருத்துவ சேவைகள் துறை) அவர்களின் 28.08.2020 நாளிட்ட கடிதத்தில், மருத்துவ அலுவலர்களுக்கு எந்த வித முன்பணமும் எந்த நிதி ஆண்டிலும் வழங்கப்படவில்லை எனச் சான்றளிக்கப்பட்டுள்ளது என்றும்,

கண்காணிப்பாளர் II/ம.சே.துறை அவர்களின் 14.09.2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்றும்,

மேலும், பெருநகர மருத்துவ அலுவலர் (பொ) அவர்களின் 13.08.2020 நாளிட்ட கடிதத்தில், (1). 2015-2016 (த.அ) பத்தி எண்.37, கோடம்பாக்கம் வரிசை எண்.22 தொகை **ரூ.804/-**, (2). 2016-2017 (த.அ) பத்தி எண்.13(a), வரிசை எண்.42 தொகை **ரூ.2704/-**, (3). 2017-2018 (த.அ) கோடம்பாக்கம் பத்தி எண்.19(a), வரிசை எண்.4 தொகை **ரூ.1352/-** மற்றும் (4). 2017-2018 (த.அ) பத்தி எண்.20(a), வரிசை எண்.4 தொகை **ரூ.338/-** எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும்,

மேற்காண் அனைத்து தொகைகளும் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு, உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் 2007-2008 ஆம் ஆண்டு பத்தி எண்.25ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி தனியருக்கு பணியில் சேர்ந்த நாள் முதல் வழங்கப்பட்ட சிறப்பூதிய தொகை, ரூ.23,393/- பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 54 வயதினை பூர்த்தி செய்துள்ளார், தனியரின் மொத்த பணிக்காலம் 12 ஆண்டுகள் 02 மாதங்கள் 07 நாட்கள் ஆகும். தனியரின் பிறந்த நாள் - 16.05.1966. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.05.2025.

தனியர் தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்புடன் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு கடிதம் அளித்துள்ளதால், தனியரை 23.09.2020 அன்று பணியிலிருந்து விடுவிக்க வேண்டியுள்ளது. மேலும், தனியர் வகுப்பு 2ஐ சார்ந்த அலுவலர் என்பதால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் வசம் உள்ளது.

ஆகவே, பெருநகர மருத்துவ அலுவலர் (பொ) அவர்களின் பரிந்துரையின்படியும் மற்றும் மேற்காண் விவரங்களின் அடிப்படையிலும், டாக்டர்.எஸ்.சாந்தி மீனா, மருத்துவ அலுவலர், திரு.வி.க நகர் மருத்துவ மண்டலம், மருத்துவ சேவைகள் துறை (மாற்று பணி அடிப்படையில் தேனாம்பேட்டை மருத்துவ மண்டலத்தின் கீழ் இயங்கும் புஷ்பா நகர் நகர ஆரம்ப சுகாதார மையத்தில் பணிபுரிந்து வருகிறார்) அவர்கள் தன் விருப்ப ஓய்வில் செல்ல 26.06.2020 அன்று சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் விண்ணப்பித்துள்ளபடி, தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியருக்கு சேர வேண்டிய பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிட்ட பின்னர், தணிக்கைத் தடைப் பத்திகள் ஏதேனும் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 23.09.2020 அன்று பிற்பகல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.இ9/ 32747/ 2019

தீர்மான எண்.672/2020 **நாள்:23-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-10 - திரு.ஆர்.ரவி, துப்புரவு பணியாளர், பணி எண்.743552, பகுதி-30, கோட்டம்-141 அவர்களை அரங்கத்துறையில் தொழிலாளர் பதவியில் ஏற்பட்ட காலிபணியிடத்தில் தொழிலாளியாக ஒருவழி பணி மாறுதலாக - பதவி மற்றும் துறை மாற்றம் செய்வதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, கோட்டம்-141, பகுதி-30ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.ஆர்.ரவி, பணி எண்.743552, அவர்கள் தான் துப்புரவு பணியில் 20 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன் எனவும், தன்னுடைய உடல் நிலை சரியில்லாத காரணத்தால் அரங்கதுறைக்கு பணிமாற்றம் மற்றும் துறை மாற்றம் செய்து தருமாறு 22.11.2019 நாளிட்ட மனு அளித்துள்ளார்.

வரைவு துணை விதிகள், சென்னை மாநகராட்சி வகுப்பு 4-க்கான பணிகளின் துணை விதிகள் 2009-ன்படி., வரிசை எண்.8-ல் பணியிட அளிப்பு மற்றும் பணியிட மாற்றம் (a) அனைத்து பணியிட அளிப்புகள் மற்றும் பணியிட மாற்றங்கள் நியமன அதிகாரியினால் மட்டுமே அல்லது அதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரியால் மட்டுமே செய்யப்பட வேண்டும். எனினும் நியமன அதிகாரி, யாருக்கு கீழ்நிலை அதிகாரியாக உள்ளாரோ, அவர் நியமன அதிகாரிக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தலாம்.

(b) ஒரு நியமன அதிகாரியின் அதிகார எல்லையிலிருந்து, வேறு நியமன அதிகாரியின் அதிகார எல்லைக்குட்பட்ட இடத்தில் பணியிட மாற்றங்கள் மற்றும் பணியிட அளிப்புகள் அந்த நியமன அதிகாரி யாருக்கு சார்நிலை அதிகாரியாக உள்ளாரோ அவரால் செய்யப்பட வேண்டும்.

தொழிலாளியின் பணிவகை ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மாற்றுதலுக்கு உட்பட்டதாகும் என துணைவிதிகள் 2009-ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி ஆணையர் (பொறுப்பு) அவர்களின் செயல்முறை ஆணை தி.க.மே.ந.க.எண்.அ9/031/1998 நாள். 29.02.2000ன்படி தற்காலிக துப்புரவு மற்றும் பதிலி மாட்டு வண்டி ஓட்டுநராக இருந்த திரு.ஆர்.ரவி என்பவருக்கு, கோட்டம் 137, பகுதி-26, மண்டலம்-9ல் 12.03.2000 அன்று நிரந்தர துப்புரவு பணியாளராக பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டு, தற்போது மண்டலம்-10ல் பணிபுரியும் தனியருக்கு அப்பதவியில் பணிவரன்முறை 12.03.2000 அன்றும், தகுதிகாண் பருவம் 12.03.2001 அன்று வழங்கப்பட்டுள்ளது. தனியரின் பிறந்த தேதி 01.07.1966 என்பதால், அரசு விதிகளின்படி வயது முதிர்வு ஓய்வு பெறும் நாள் 30.06.2026 ஆகும்.

மண்டலம் அலுவலர், மண்டலம்-10 அவர்களின் 28.01.2020 நாளிட்ட கடிதத்தில், திரு.ஆர். ரவி துப்புரவு பணியாளர் அவர்கள் 12.03.2000 அன்று பணியில் சேர்ந்துள்ளார் எனவும், தனியரின் உடல்நலம் சரியில்லாத காரணத்தால் அரங்கத்துறைக்கு பணியிட மாற்றம் வேண்டி கடிதம் அளித்தும், மற்றும் தன்னை துப்புரவு பணியாளர் பதவியிலிருந்து அரங்கத்துறைக்கு தொழிலாளர் பதவியில் பணிமாற்றம் செய்வதால், இனிவரும் காலங்களில் வேறு துறைக்கு பணிடமாற்றம் மற்றும் பதவி மாற்றம் கோரமாட்டேன் என்றும் அரங்கத்துறை தொழிலாளி பதவியில் திறம்பட பணி செய்வேன் என்று தனியர் உறுதிமொழி கடிதம் அளித்துள்ளார். திரு.ஆர். ரவி துப்புரவு பணியாளர், கோட்டம்-141 அவர்கள் தினம்தோறும் பணிக்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து அவருக்கு ஒதுக்கப்பட்ட பணியினை பொறுப்புடன் செய்வார் எனவும், தனியர் மீது இந்நாள் வரை துறை ரீதியிலான ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை என தெரிவித்து, தனியரை அரங்கத்துறைக்கு பணிமாற்றம் மற்றும் துறை மாற்றம் செய்வதற்கு, ஆட்சேபணை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

30.12.2019 மற்றும் 24.01.2020 நாளிட்ட இவ்வலுவலக கடிதங்களில் திரு.ஆர். ரவி துப்புரவு பணியாளர், கோட்டம்-141 அவர்களை பதவி மற்றும் துறை மாற்றம் செய்வதற்கு தொழிலாளி பதவியில் காலிபணியிடம் விவரம் கோரி அரங்கத்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்பார்வை பொறியாளர், பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் அவர்களின் 20.02.2020 நாளிட்ட கடிதத்தில், தனியரை அரங்கத்துறையில் உள்ள ஆண் தொழிலாளி பதவியில் பணி மற்றும் பதவி மாற்றம் செய்வதற்கு 6 காலி பணியிட விவரம் பெறப்பட்டுள்ளது.

பொ.து.ந.க.எண்.இ9/ 32747/ 2019

மேற்காணும் விவரங்களின்படியும், மண்டல அலுவலர், மண்டலம்-10 அவர்களின் 28.01.2020 நாளிட்ட பரிந்துரையின்படியும், திரு.ஆர். ரவி, துப்புரவு பணியாளர், பணி எண்.743552, கோட்டம்-141, பகுதி-30, மண்டலம்-10 அவர்களை, துப்புரவு பணியாளர் பதவியிலிருந்து அரங்கத்துறையில் திரு.எஸ். சுந்தரம், ஆண் தொழிலாளி, அவர்கள் வயது முதிர்வு ஓய்வு 30.06.2017 அன்று சென்றதால் ஏற்பட்ட காலி பணியிடத்தில், திரு.ஆர்.ரவி, ஆண் தொழிலாளியாக அரங்கத்துறையில் ஒருவழி மாறுதலாக, தனியரின் ஊதியம் மற்றும் ஊதிய விகிதத்தில் எவ்வித மாற்றமும் இன்றி, பதவி மற்றும் துறை மாற்றம் செய்வதற்கு, சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 16.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"பதவி மற்றும் துறை மாற்றம் செய்வதற்கு, சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.ஈ13/ 20929/ 2019

தீர்மான எண்.673/2020 **நாள்:23-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-14, AGS Colonyல் உள்ள பூப்பந்து மைதானத்தை Resident Welfare Associationஆல் சட்டவிரோதமாகவும் வணிக ஆதாயத்தோடு பயன்படுத்தி வருவதையும் கண்காணிக்க தவறியது, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட காரணமாக இருந்தது தொடர்பாக, திரு.கே.தண்டாயுதபாணி, உதவி பொறியாளர், கோட்டம்-183 (பொ) மண்டலம்-14 (தற்போது கோ-189) அவர்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4 ஆம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1983ஆம் ஆண்டு துணை விதி 9(1)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி விளக்கம் கோரப்பட்டது. விளக்கம் பெறப்பட்டது - இறுதி ஆணையாக வழங்கப்பட்டது - தண்டனையை எதிர்த்து தனியர் அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-14, AGS Colonyல் உள்ள பூப்பந்து மைதானத்தை Resident Welfare Associationஆல் சட்டவிரோதமாகவும் வணிக ஆதாயத்தோடு பயன்படுத்தி வருவதையும் கண்காணிக்க தவறியது, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட காரணமாக இருந்தது தொடர்பாக, திரு.கே.தண்டாயுதபாணி, உதவி பொறியாளர், கோட்டம்-183 (பொ) மண்டலம்-14 (தற்போது கோ-189) அவர்கள் மீது, வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் 11.07.2018 நாளிட்ட ஆணையின் படி பெருநகர சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ஆம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1983 ஆம் ஆண்டு துணைவிதி 9(1) ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி விளக்கம் கோரப்பட்டது. தனியர் குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்டு தனது விளக்கத்தினை கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பித்துள்ளார்.

குற்றச்சாட்டு எண்.1

திரு.கே.தண்டாயுதபாணி, உதவி பொறியாளர், கோட்டம்-183 (பொ) மண்டலம்-14 எனும் நீங்கள், AGS Colonyல் உள்ள பூப்பந்து மைதானத்தை Resident Welfare Association ஆல் சட்டவிரோதமாகவும் வணிக ஆதாயத்தோடு பயன்படுத்தி வருவதையும் கண்காணிக்காமல் இருந்துள்ளதால் பொதுமக்கள் மத்தியில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட காரணமாக இருந்துள்ளீர்கள்.

குற்றச்சாட்டு எண்.2

23வது வாராந்திர அறிக்கையில் AGS Colony விளையாட்டுத்திடல் குறித்து தவறான அறிக்கையும், விளையாட்டு பொருட்கள் குறித்தும் தவறான அறிக்கையும் சமர்ப்பித்துள்ளீர்கள்.

குற்றச்சாட்டு எண்.3

நீங்கள், உங்களுக்கு பணிக்கப்பட்ட பணியினை சரிவர செய்யாமல் கடமையிலிருந்து தவறியுள்ளீர்கள்.

குற்றச்சாட்டு எண்.4

நீங்கள், பணியில் அக்கறையின்றி செயல்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் சட்டவிரோதமாக பயன்படுத்தி வருபவர்களை கண்காணித்து நடவடிக்கை ஏதும் எடுக்காமல் பணியில் மெத்தனமாக இருந்துள்ளீர்கள்.

குற்றச்சாட்டு எண்.5

மேற்கண்ட செயலின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களின் நடத்தை விதி 20ஐ மீறியுள்ளீர்கள்.

குற்றச்சாட்டு எண்.1 ற்க்கான தனியரின் விளக்கம்:

கே.தண்டாயுதபாணி ஆகிய நான் 10.01.2004 அன்று மண்டலம்-14, கோட்டம்-185 உதவி பொறியாளராக சேர்ந்தேன். கோட்டம்-185 உட்பட்ட அனைத்து பணிகளிலும் முழு கவனத்துடன் பணிபுரிகிறேன். மேலும் 16.05.2017 அன்றில் இருந்து கோட்டம்-183 (பொறுப்பு) பணியில் உள்ளேன். கோட்டம்-183 உட்பட்ட AGS Colony பூப்பந்து மைதானத்தை கள ஆய்வு செய்ததில் "Resident Welfare Association" நிர்வாகிகள் இந்த மைதானத்தை அவர்களுடைய ஆளுமைக்கு வைத்துள்ளது கண்டறியப்பட்டது. அனைத்து தரப்பு மக்கள் பயன்படுத்தா வகையில், இருந்த காரணத்தினால் ஆக்கிரமிப்பு முற்றிலும் அகற்றப்பட்டது. மேலும், இதை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் NULM பணியாளர்களை கொண்டு அன்றாட விளையாட்டுத்திடல் திறக்கவும், துப்புரவு பணிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தொடர்ச்சியான நடவடிக்கையாக உதவி பொறியாளராக (பொறுப்பு) பணிப்புரியும் நான் அனைத்து தரப்பு மக்கள் பயன்படுத்தும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான AGS Colony பூப்பந்து மைதானத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை (Resident Welfare Association இடையூராக இருந்த போதிலும்) அகற்றினேன்.

இத்தகைய செயலினால் மேலும், கோபமுற்ற "Resident Welfare Association" நிர்வாகிகள் என் மீது பொய்யான புகார் அளித்துள்ளனர். சட்டவிரோதமான வணிக ஆதாயத்தோடு பயன்படுத்திய "Resident Welfare Association" இடத்திலிருந்து மீட்டு பெருநகர சென்னை மாநகராட்சி வசம் கொண்டு வந்துள்ளேன். இதனால் பொதுமக்களிடம் நல்வரவேற்பு உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பொதுமக்கள் மத்தியில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் என்னால் ஏற்படவில்லை என தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்த குற்றச்சாட்டிலிருந்து என்னை விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குற்றச்சாட்டு எண்.2 க்கான தனியரின் விளக்கம்:

23வது வாராந்திர அறிக்கையில் AGS Colony விளையாட்டுத்திடல் குறித்து தவறான அறிக்கையும், விளையாட்டு பொருட்கள் குறித்தும் தவறான அறிக்கையும் இந்த ஆக்கிரமிப்புகளால் சரிவர தர இயலவில்லை. இனி இப்படி ஒரு தவறு நான் செய்யமாட்டேன் என உறுதி கூறுகிறேன். ஆகவே, இந்த குற்றச்சாட்டிலிருந்து என்னை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குற்றச்சாட்டு எண்.3 க்கான தனியரின் விளக்கம்:

ஆக்கிரமிப்புகளை அகற்றியும் மேற்கூறிய காரணங்களால் நான் பணிக்கப்பட்ட பணியினை கடமை தவறாமல் சரிவர செய்கிறேன் என தெரிவித்து கொள்கிறேன். ஆகவே, இந்த குற்றச்சாட்டிலிருந்து என்னை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குற்றச்சாட்டு எண்.4 க்கான தனியரின் விளக்கம்:

எனவே, மேற்கூறிய காரணங்களால் நான் ஆக்கிரமிப்புகளை அகற்றி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் அனைத்து தரப்பு மக்கள் பயன்படுத்தும் வண்ணம் கண்காணித்து நடவடிக்கை எடுத்துள்ளேன் என இதன் மூலம் தெரிவித்து கொள்கிறேன். ஆகவே இந்த குற்றச்சாட்டிலிருந்து என்னை விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குற்றச்சாட்டு எண்.5 க்கான தனியரின் விளக்கம்:

மேற்கூறிய விளக்கத்தின் படி பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை விதி 20ஐ மீறவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட விளக்கத்தினை ஏற்று வட்டார துணை ஆணையர்(தெ) அவர்கள் என்னை மன்னிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், இனி வரும் காலங்களில் இது போன்ற நிகழ்வு ஏற்படாத வண்ணம் பணியாற்றுவேன் என தெரிவித்து 3 மற்றும் 4 ஆம் நிலை பணியாளர்கள்

(ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1983 ஆம் ஆண்டு துணை விதி 9(1)ன் கீழ் குற்றச்சாட்டிலிருந்து என்னை விடுவிக்குமாறு தாழ்மையுடன் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

திரு.கே.தண்டாயுதபாணி, உதவி பொறியாளர், கோட்டம்-189, மண்டலம்-14 என்பவர் மீது சுமத்தப்பட்டுள்ள, துணை விதி9(1)ன் கீழ் குற்றச்சாட்டிற்கு தனியர் அளித்துள்ள விளக்கம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. தனியர் அளித்துள்ள விளக்கம் ஏற்புடையதாக இல்லை என்பதால், வட்டார துணை ஆணையர் (தெ) அவர்களின் 08.11.201 நாளிட்ட இறுதி ஆணையில் தனியருக்கு தண்டனையாக **"தனியரின் ஊதிய உயர்வினை ஓர் ஆண்டுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து"** ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி, இறுதியாணை பெற்றுக்கொண்ட தனியர், தனது 28.12.2018 நாளிட்ட மேல் முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களுக்கு கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பித்துள்ளார்.

"குற்றஞ்ச்சாட்டு எண்.1க்கான தனியரின் மேல்முறையீட்டு மனுவின் விளக்கம்

" கொட்டிவாக்கம், ஏ.ஜி.எஸ் காலனி குடியிப்போர் நல சங்கம் கடந்த 1996ம் ஆண்டு முல் இப்பகுதியில் இயங்கி வருகிறது. மேலும், கடந்த 2011ம் ஆண்டு கொட்டிவாக்கம் ஊராட்சியானது பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. இதற்கு முன்பு வரை பஞ்சாயத்தில் போதிய நிதி ஆதாரம் இல்லாத நிலையில் மேற்படி பூப்பந்து மைதானம் குடியிருப்போர் நல சங்கத்தின் பராமரிப்பில் இருந்துள்ளது. மேலும், பாராளுமன்ற உறுப்பினர் அவர்களிடம் மேம்பாட்டு நிதி பெறப்பட்டு சிறிய அளவிலான மேம்பாட்டு கூடம் கட்டப்பட்டு மேற்படி நல சங்கத்தின் பராமரிப்பில் இருந்து வந்துள்ளது. பின், மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பிறகு மாநகராட்சியின் பராமரிப்பில் தான் உள்ளது. எனினும், அவ்வப்போது நல சங்கத்தினருக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளினால் ஒருவருக்கொருவர் புகார் செய்வதுண்டு. ஆனால் இது நாள் வரை எந்த ஒரு நிலையிலும் எந்த ஒரு வணிக பயன்பாட்டிற்கும் பெருநகர சென்னை மாநகராட்சி அனுமதித்தது இல்லை. அவ்வாறான விதி மீறல் செயல்கள் நடைபெறவும் இல்லை, நல சங்கத்தின் பிரதிநிதிகளின் கருத்து வேறுபாடுகளின் அடிப்படையிலேயே இப்புகார் கூறப்பட்டதே தவிர நான் யாதொரு நிலையிலும் வணிக பயன்பாட்டிற்கு அனுமதிக்கவில்லை, பயன்படுத்தப்படவில்லை. எனவே, இந்த குற்றச்சாட்டிலிருந்து என்னை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குற்றஞ்ச்சாட்டு எண்.2க்கான தனியரின் மேல்முறையீட்டு மனுவின் விளக்கம்

வாராந்திர அறிக்கையில் விளையாட்டு பொருட்கள் அல்லது ஏதேனும் தவறுகள் இருப்பின் பிழை பொருத்தல் அடிப்படையில் மன்னிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த குற்றச்சாட்டிலிருந்து என்னை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குற்றஞ்ச்சாட் எண்.3க்கான தனியரின் மேல்முறையீட்டு மனுவின் விளக்கம்

பூப்பந்து மைதானத்தில் எந்த ஒரு ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை. குறிப்பாக குழந்தைகள் விளையாடும் நேரங்களில் சிலசமயம் துணி கூடாராங்கள் போடப்படும் அவை அப்போதே விளையாட்டு முடிந்தவுடன் அப்புறப்படுத்தப்படும். மேலும், பூப்பந்து மைதானத்தின் பராமரிப்பு பணி மற்றும் மேம்படுத்தும் பணியினை மாநகராட்சி உதவி பொறியாளராக சரிவர எவ்வித தொய்வும் இல்லாமல் செய்து வந்துள்ளேன். ஆகவே இந்த குற்றச்சாட்டிலிருந்து என்னை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குற்றஞ்ச்சாட்டு எண்.4க்கான தனியரின் மேல்முறையீட்டு மனுவின் விளக்கம்

நான் கடந்த 2014ம் ஆண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி பொறியாளராக பணியில் சேர்ந்து மக்களுக்கு தேவையான பணிகளை உடனுக்குடன் மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு செய்து வருகிறேன். மேலும் நான் இதுநாள் வரை எந்தவித சட்ட விரோத நிகழ்வுகளிலோ, மாநகராட்சி விதி மீறல்களிலோ ஈடுப்பட்டதில்லை. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் அனைத்து தரப்பு மக்கள் பயன்படுத்தும் வண்ணம் கண்காணித்து நடவடிக்கை எடுத்து வந்துள்ளேன். ஆகவே இந்த குற்றச்சாட்டிலிருந்து என்னை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொ.து.ந.க.எண்.ஈ13/ 20929/ 2019

குற்றஞ்ச்சாட்டு எண். 5க்கான தனியரின் மேல்முறையீட்டு மனுவின் விளக்கம்

நான் பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த 2014 ஆம் ஆண்டு உதவி பொறியாளராக பணியமர்த்தபட்டதிலிருந்து என்னுடைய பணிகளை நல்ல முறையில் செய்து வருகிறேன் என தெரிவித்து பெருநகர சென்னை மாநகராட்சியின் எவ்வித வித மீறல்களிலும் ஈடுபடவில்லை என உறுதி கூறுகிறேன். மேலும், நான் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களின் நடத்தை விதி 20ஐ மீறவில்லை என தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் தங்களுக்கு மேற்கண்டவாறு சமர்ப்பித்துள்ள மேல்முறையீட்டு கூடுதல் விளக்கங்களை கனிவுடன் பரிசீலித்து எனக்கு வழங்கப்பட்டுள்ள **திரண்ட பயனின்றி ஓர் ஆண்டு ஊதிய உயர்வு நிறுத்தம் தண்டனையை** தள்ளுபடி செய்து, என்னை இக்குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

எனவே, திரு.கே.தண்டாயுதபாணி, உதவி பொறியாளர், கோட்டம்-189, மண்டலம்-14 அவர்கள், வகுப்பு 3ஐ சார்ந்த பணியாளர் என்பதால் தனியர் சமர்ப்பித்துள்ள மேல்முறையீட்டு மனு மீது உரிய முடிவு எடுக்கும் பொருட்டு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த ஆணையரது 31.03.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

" Agreed. Dropped என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.ஈ13/ 35184/ 2016

தீர்மான எண்.674/2020 **நாள்:23-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-1, பகுதி-1, கோட்டம்-1ல் உள்ள வீடுகளுக்கு சென்று குப்பைகளை சேகரித்தல் மற்றும் சாலைகளை பெருக்குதல் போன்ற துப்புவு பணிகளுக்காக நியமிக்கப்பட்ட ஒப்பந்த பணியாளர்கள் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இழப்பு ஏற்படுத்திய குற்றத்திற்காக, திரு.ட்டி.மல்லிகார்ஜுனன், துப்புரவு மேற்பார்வையாளர், மண்டலம்-1 (தற்போது மண்டலம்-3, பகுதி-8) என்பவர் மீது 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி விளக்கம் பெறப்பட்டது - இறுதி ஆணையாக தண்டனை வழங்கப்பட்டது - தண்டனையை எதிர்த்து தனியர் அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-1, கோட்டம்-1ல் உள்ள வீடுகளுக்கு சென்று குப்பைகளை சேகரித்தல் மற்றும் சாலைகளை பெருக்குதல் போன்ற துப்புரவு பணிகளுக்காக நியமிக்கப்பட்ட ஒப்பந்த பணியாளர்கள் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இழப்பு ஏற்படுத்திய காரணமாக கீழ்கண்ட அலுவலர்கள் மீது விதி 17(a) / 10 (a) / 10(b) மற்றும் 9(2)ன் கீழ் ஆணையர் அவர்களின் 10.10.2016 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையின் மூலமாக குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு, விளக்கம் பெறப்பட்டது.

வ.எண்	குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் பெயர்/பதவி	விதி
1.	திரு. பெஞ்சமின் என்கிற பாபு, மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டலம்-1 (31.03.2017 அன்று ஓய்வு)	17(a)
2.	திரு. வே.சின்னத்துரை, செயற்பொறியாளர், மண்டலம்-1 (தற்போது மண்டலம்-10)	10(a)
3.	திரு. ரங்கசாமி, உதவி செயற்பொறியாளர், மண்டலம்-1.	10(b)
4.	திரு. எம்.பி.கோவிந்தசாமி, துப்புரவு ஆய்வாளர், மண்டலம்-1 (தற்போது மண்டலம்-2)	9(2)
5.	திரு. மல்லிகா அர்ஜீன், துப்புரவு மேற்பார்வையாளர், மண்லம்-1.	9(2)

குற்றச்சாட்டு எண்.1

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-1ல் உள்ள வீடுகளுக்கு சென்று குப்பைகளை சேகரித்தல் மற்றும் சாலைகளை பெருக்குதல் போன்ற துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 68 பணியாளர்கள் பணி செய்ய ஆணை வழங்கப்பட்டு 35 நபர்கள் மட்டுமே துப்புரவு பணி மற்றும் சாலைகளை பெருக்கும் பணிக்கு வருகை புரிந்து வருவதை சரிவர கண்காணிக்க தவறியதால்ஒப்பந்ததாரருக்கு சாதகமாக செயல்பட்டது.

குற்றச்சாட்டு எண்.2

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-1ல் உள்ள வீடுகளுக்கு சென்று குப்பைகளை சேகரித்தல் மற்றும் சாலைகளை பெருக்குதல் போன்ற துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 68 நபர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு 62 நபர்கள் பணிக்கு வருகை புரிந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது, ஆனால் 35 பணியாளர்கள் மட்டும் பணிபுரிந்து வரும் நிலையில் 27 ஒப்பந்த பணியாளர்களுக்கு பணிக்கு வராமலே பணிக்கு வந்ததாக வருகையை பதிவு செய்ததின் மூலமாக மாநகராட்சிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.7992/- வருவாய் இழப்பு ஏற்பட காரணமாக இருந்துள்ளது-

குற்றச்சாட்டு எண்.3

ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பணப்பட்டி ஏற்பளிக்கும் போது பணியாளர்களின் வருகை பதிவேட்டினை ஆய்வு செய்யாமல், ஒப்பந்ததாரர் அளித்துள்ள வருகை பதிவேட்டினை 190 நாட்களுக்கு ஏற்பளித்ததன் மூலமாக மாநகராட்சிக்கு ரூ.15,18,480/- இழப்பு ஏற்பட காரணமாக இருந்துள்ளது-

குற்றச்சாட்டு எண்.4

தனியர் இப்பணியினை கவனத்துடன் செய்யாததால் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர் நடத்தை விதிகள் 1983, விதி.20ஐ மீறியுள்ளார்.

பொ.து.ந.க.எண்.ஈ13/ 35184/ 2016

ஒழுங்கு நடவடிக்கை விதிமுறைகளின்படி வரிசை எண்.1ல் உள்ள திரு.பெஞ்சமின் என்கிற பாபு, மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர்-1 அவர்கள் மீது 17(a)ல் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் மேல் நடவடிக்கை தொடரும் பெருட்டு, அரசு முதன்மை செயலர், பொதுத்துறை, தலைமை செயலகத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது, வரிசை எண்.2ல் உள்ள திரு.வே.சின்னத்துரை, செயற்பொறியாளர், மண்டலம்-1 (தற்போது மண்டலம்-10) அவர்கள் மீது 10(a)ல் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமால் விசாரணை அலுவலர் நியமனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லாத நிலையில் வரிசை எண். 3 முதல் 5 வரையில் உள்ள அலுவலர் / பணியாளர்கள் மீது தொடரப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையில் நேரடி விசாரணை மேற்கொள்ள திரு.ஆர்.ஜெயராமன், கண்காணிப்பு பொறியாளர் (பொ), வடக்கு வட்டார அலுவலகம், அவர்களை ஆணையர் அவர்களின் 24.03.2017 நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலமாக விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, விசாரணை அறிக்கையில் மேற்கண்ட வரிசை எண்.3 முதல் 5 வரையில் உள்ள அலுவலர்/பணியாளர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகிறது (All Charges are Proved) என தனது விசாரணை அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

விசாரணை அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில் மேற்கண்ட ஒழுங்கு நடவடிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அலுவலர்கள் / பணியாளர்களுக்கு கீழ்கண்டவாறு தண்டனைகள் வழங்கப்பட்டது,

வ. எண்	குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் பெயர் / பதவி	இறுதி ஆணை விவரம்
1.	திரு. பெஞ்சமின் என்கிற பாபு, மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டலம்-1 (31.03.2017 அன்று ஓய்வு)	தனியரின் தாய் துறையான பொதுத்துறை, தலைமை செயலகத்திற்கு மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது.
2.	திரு. வே.சின்னத்துரை, செயற்பொறியாளர், மண்டலம்-1 (தற்போது மண்டலம்-10)	கண்டனம் தண்டனை வழங்கப்பட்டது.
3.	திரு. ரங்கசாமி, உதவி செயற்பொறியாளர், மண்டலம்-1.	ஆறு மாதங்களுக்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வினை நிறுத்தம் செய்து ஆணை வழங்கப்பட்டது.
4.	திரு. எம்.பி.கோவிந்தசாமி, துப்புரவு ஆய்வாளர், மண்டலம்-1 (தற்போது மண்டலம்-2)	மூன்று வருடங்களுக்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் செய்து ஆணை வழங்கப்பட்டது.
5.	திரு. மல்லிகா அர்ஜீன், துப்புரவு மேற்பார்வையாளர், மண்லம்-1.	மூன்று வருடங்களுக்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

வரிசை எண்.4ல் உள்ள திரு.எம்.பி.கோவிந்தசாமி, துப்புரவு ஆய்வாளர், மண்டலும்-1 அவர்கள் மேற்படி இறுதியாணை எதிர்த்து தனது மேல் முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களுக்கு 06.05.2019 அன்று சமர்ப்பித்தார்.

திரு.எம்.பி.கோவிந்தசாமி, துப்புரவு ஆய்வாளர், மண்டலும்-1 அவர்கள் அளித்த மேல்முறையீட்டு மனுவின் விளக்கத்தை பரிசீலினை செய்து, சிறப்பு அதிகாரி அவர்கள் தனது தீர்மான எண்.583/2019, நாள்.25.09.2019ல் கீழ்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

"Since there are no new grounds, the earlier punishment stands confirmed."

இதே குற்றச்சாட்டில் தொடர்புடைய திரு.ட்டி.மல்லிகார்ஜுனன், துப்புரவு மேற்பார்வையாளர், மண்டலம்-1 (தற்போது பகுதி-8, மண்டலம்-3) அவர்கள் தனியருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையை ஆட்சேபித்து, தனது மேல் முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களுக்கு 06.06..2019 அன்று கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பித்தார்.

"குற்றச்சாட்டு எண்.1 முதல் 4 வரை தனியரின் மேல்முறையீட்டு மனுவின் விளக்கம்

துப்புரவு மேற்பார்வையாளர் பகுதி-8, எழுதிக்கொள்வது என்னவென்றால் ,

*நான் இதற்கு முன்பு பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம்-1, பகுதி-1ல் பணிபுரிந்து வந்துள்ளேன். அந்த வேலையில் கடந்த 23.08.2016 அன்று மதியம் 12.45 மணியளவில் சென்னை மாநகராட்சி விழிப்பு துறை ஆய்வாளர் அவர்கள் மேற்கண்ட நாளில் களஆய்வின் போது வார்டு-1ல் துப்புரவு ஆய்வாளரை விசாரித்து சென்று விட்டு மேற்கண்ட வார்டு-1ல் சில குறைபாடுகள்

இருப்பதாக ஆய்வில் குறிப்பிட்டு அதில் 4 விதமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தன்னிலை விளக்கம் கேட்டு துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அனைவருக்கும் திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் குற்ற குறிப்பாணை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் எனக்கு கொடுக்கப்பட்ட குறிப்பாணைக்கு தகுந்த விளக்கம் அளித்துள்ளேன்.

நான் என்னுடைய தன்னிலை விளக்கத்தில் 23.08.2016 அன்று விழிப்பு பணி ஆய்வாளர் அவர்கள் வந்தபோது துப்புரவு ஆய்வாளர் வார்டு-1ல் களஆய்வின் போது மேற்கண்ட குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளதாக குறிப்பாணையில் தெரிவித்துள்ளார். எனக்கு கொடுக்கப்பட்டதில் மேற்கண்ட வார்டு-1ல் கவனிக்க தவறியதாக 4 குற்றச்சாட்டுக்கும் குற்றம் நிரூபணமானதாக கருதப்பட்டு 3 ஆண்டுகள் வருடாந்திர ஊதியம் நிறுத்தி வைக்குமாறு ஆணை வந்திருக்கிறது.

நான் என்னுடைய தன்னிலை விளக்கத்தில் பகுதி-1ல் வார்டு-1,2,3 மற்றும் 4 அடங்கும். ஆய்வின் போது அன்று வார்டு-4ல் ஆய்வு மேற்கொண்டிருந்தேன். ஏனென்றால் பகுதிக்கு ஒரு வார்டு வீதம் குப்பை இல்லா வார்டாக 2016ல் அறிவிக்கப்பட்டது, குப்பை இல்லாத வார்டாக மாற்ற வேண்டியும், உயர் அதிகாரிகளின் உத்தரவால் அந்த வார்டை கண்காணித்து பொறுப்புடன் பணியாற்றினேன்.

ITC நிறுவனம் மூலம் சேர்ந்து பணியாற்றி அந்த வார்டை குப்பை இல்லா வார்டாக மாற்றியமைத்து விட்டேன். இப்போது தேர்தல் உத்தரவு அடிப்படையில் பணிமாறுதல் செய்யப்பட்டு மண்டலம்-11க்கு (வளசரவாக்கம்) மாற்றம் செய்யப்பட்டேன். தற்போது மண்டலம்-3, பகுதி-8ல் துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். வார்டு-1ல் 23.08.2016 அன்று விழிப்பு பணி அலுவலர் தனது களஆய்வின் போது 68 தற்காலிக பணியாளர்கள் வார்டு-1க்கு ஒதுக்கப்பட்டதில் 62 பணியாளர்கள் அன்றைக்கு பணிக்கு வந்திருந்தார்கள். ஆனால் ஆய்வில் 35 பணியாளர்கள் இருந்தார்கள் என்றும் மற்றும் 27 பணியாளர்கள் இல்லை என்றும் மற்றும் இல்லாத பணியாளர்கள் 27 பேர் என்றும் தன்னுடைய கள ஆய்வில் ஒரு நாளைக்கு 7992 இழப்பு ஏற்பட்டு 190 நாட்களுக்கு ரூ.15,18,480/- இழப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். வார்டு-1க்கு 109 தெருக்கள் உள்ளது மற்றும் இந்த வார்டுக்கு சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் ஒவ்வொரு மண்டலமும் ஒவ்வொரு வார்டுக்கும் கள ஆய்வு அதிகாரியாக நியமித்ததின் அடிப்படையில் மேற்கண்ட வார்டு-1க்கு உதவி சுகாதார அலுவலர், மண்டலம்-1 (உதவி சுகாதார அலுவலர்) நியமிக்கப்பட்டு அவரும் தினமும் கள ஆய்வு மேற்கொண்டு தன்னுடைய மண்டல அலுவலர்-1க்கு பணி பதிவேட்டில் அன்றாடம் வார்டில் நடக்கும் நிறை, குறைகளை தினமும் எழுத்து மூலமாக தெரிவிப்பார்கள், இருந்தாலும் கள ஆய்வு செய்து விழிப்பு பணி ஆய்வாளர் மற்றும் அலுவலர் பொதுத்துறை மூலமாக குறிப்பாணை வழங்கப்பட்டு தகுந்த தன்னிலை விளக்கம் அளித்தும் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது. இருந்தாலும் இந்த ஆய்வு மூலம் மேற்கண்ட வார்டு-1ல் நடந்துள்ளதா என்பதை விசாரிக்க உயர் திரு. வடக்கு வட்டார மேற்பார்வை பொறியாளர் அவர்கள் துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் திடக்கழிவு மேலாண்மை துறை ஆகிய மூவரையும் விசாரணை அலுவலர் விசாரணை மேற்கொண்டார். விசாரணை அறிக்கையில் பொதுத்துறைக்கு சமர்ப்பித்து உதவி ஆணையர் (பொது நிர்வாம் மற்றும் பணிகள்) அவர்களால் குறிப்பாணைக்கு அனுப்பப்பட்டது.

மேற்கண்ட விசாரணை அலுவலரால் விசாரணை மேற்கொண்ட போது ரூ.15,18,450/- எவ்வித இழப்பும் இல்லை என்று விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இருந்தாலும் விழிப்பு பணி ஆய்வாளர் மற்றும் விழிப்பு அலுவலர் 23.08.2016 அன்று மேற்கொள்ளப்பட்டது மறுநாள் 24.08.2016 அன்று பணியாளர்கள் குறைவாக கையாண்டதாகவும் விசாரணை அலுவலர் குறிப்பிட்டுள்ளார். வார்டு-1ல் குறைவான பணியாளர், காரணம் என்னவென்றால் 13 பொது கழிப்பிடங்கள் பராமரிக்கப்பட்டு ஒவ்வொரு கழிப்பறைக்கும் ஒவ்வொரு நபர் நியமிக்கப்பட்டார். விழிப்பு பணி ஆய்வாளர் மூன்று கழிவறைக்கு ஒரு பணியாளர் நியமிக்கவும் வாய்மொழி உத்தரவாக கூறியுள்ளதாக துப்புரவு ஆய்வாளர் கூறியதின் அடிப்படையில் ஆட்களை ஒப்பந்ததாரர் குறைவாக ஆட்களை தந்ததின் அடிப்படையில் பணியமர்த்தப்பட்டார்கள் மற்றும் கிரண் எர்த் மூவர்ஸ் ஒப்பந்ததாரர்க்கு நாங்கள் சாதகமாக நடந்து கொண்டதாக விசாரணை அலுவலர் மேற்கண்ட குற்றச்சாட்டு கூறியுள்ளார்.

பொ.து.ந.க.எண்.ஈ13/ 35184/ 2016

குற்றச்சாட்டு என்னவென்றால் 16.03.2016, ஆறு மாதங்களுக்கு கிரண் ஏர்த் மூவர்ஸ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் 68 நபர்கள் வழங்கப்பட்டது அதில் 68 பணியளர்களுக்கு குறைவாக வழங்கினால் தண்டனை தொகை ரூபாய்.175/- பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்றும் அதை பிடித்தம் செய்யப்படாததால் தண்டனை ஊர்ஜீதம் செய்யப்படுகிறது. நாங்கள் ஒவ்வொரு மாதமும் சம்பள பட்டியல் தயார் செய்து அனுப்பும் போது துப்புரவு ஆய்வாளர் கையொப்பம் இட்டு அதன் பிறகு துப்புரவு மேற்பார்வையாளரால் சரிபார்க்கப்பட்டு வருகைப் பதிவேடு மற்றும் வேலை ஒதுக்கீடு பதிவேடு ஆகியவை உதவி செயற்பொறியாளர் (தி.க.மே. மண்டலம்-1) அவர்களிடம் ஒப்படைக்கப்படும், அவர் சரிபார்க்கப்பட்ட பிறகு U.A.C மண்டலம்-1 உதவி கணக்கு அலுவலர் மூலமாக மேற்கண்ட காசோலை வழங்கப்படும்.

விசாரணை அலுவலர் தன்னுடைய அறிக்கையில் தண்டனை பிடித்தம் செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். ஒப்பந்ததாரருக்கு ஆட்கள் குறைவாக வழங்கப்பட்டால் குறிப்பிட்ட தண்டனை தொகை ரூபாய்.175/- பிடித்தம் செய்து துப்புரவு ஆய்வாளரோ, துப்புரவு மேற்பார்வையாளரோ பிடித்தம் செய்து தர வேண்டும் என்று ஒப்பந்தம் வழங்கும் எந்த இடத்திலும் கோப்பில் காண்பிக்கப்படவில்லை மற்றும் ஒப்பந்ததாரருக்கு 17 நிபந்தனைகள் வழங்கப்பட்டுள்ளது, அதில் எந்த இடத்திலும் எங்களை தண்டனை தொகை பிடித்தம் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை ஆகையால் நாங்கள் நான்கு குற்றச்சாட்டுக்கு பதில் அளித்ததில் பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையரால் கோப்பில் நிபந்தனையில் வழங்கப்பட்ட அந்த படிவத்தின் நகல் இத்துடன் இணைத்துள்ளேன், துப்புரவு ஆய்வாளர் ஓயிட்னர் வைத்து அடித்துள்ளதாக விசாரணையில் கூறப்பட்டது. அது பற்றி பிறகு தான் எனக்கு தெரிய வந்தது. வார்டு-1ல் விழிப்பு பணி அலுவலர் விசாரணை செய்த அன்று வார்டு-4ல் 2016 அரசு ஆணையின்படி பகுதி-1ல் குப்பை இல்லா வார்டு ஆக மாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் உயர் அதிகாரியின் கட்டளையால் அதிலேயே முழு வீச்சில் கவனம் செலுத்தப்பட்டு மேற்கண்ட மண்டலம்-1ல் உள்ள வார்டு-4 குப்பை இல்லாத வார்டாக மாற்றியதன் அடிப்படையில் மேற்கண்ட துப்புரவு ஆய்வாளர் ஓயிட்னர் ஏன் வைத்துள்ளீர்கள் என்று கேட்டதற்கு, காலை வேலையில் கையெழுத்து இடம் மாற்றி இடம் கையெழுத்து போட்டு விட்டனர் என்று கூறினார், இருந்தாலும் 4 குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு ஏற்கனவே பதில் தந்துவிட்டேன், இப்போது நடந்த சம்பவத்தை என் எழுத்து மூலம் தெரிவித்துள்ளேன். நான் இந்த ஆண்டு 30.11.2019 அன்று ஓய்வு பெறுவதால் அந்த தன்னிலை விளக்கத்தினை ஏற்றுக்கொண்டு இந்த தண்டனையிலிருந்து விலக்கு அளிக்குமாறு ஐயா அவர்களின் பணிவான கவனத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். இத்துடன் குற்றச்சாட்டு நான்கிற்கும் பொதுத்துறையில் அளிக்கப்பட்ட விசாரணை விவரங்கள் இத்துடன் இணைத்துள்ளேன்."

திரு.ட்டி.மல்லிகார்ஜுனன், துப்புரவு மேற்பார்வையாளர், மண்டலம்-1 (தற்போது மண்டலம்-3, பகுதி-8) அவர்கள், வகுப்பு 3ஐ சார்ந்த பணியாளர் என்பதால் தனியர் சமர்ப்பித்துள்ள மேல்முறையீட்டு மனு மீது உரிய முடிவு எடுக்கும் பொருட்டு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த ஆணையரது 16.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"Confirming the earlier punishment awarded, என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.இ5/29909/2019

தீர்மான எண்.675/2020 **நாள்:23-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை வருவாய் துறை சம்பந்தமான ஆய்வு கூட்டம் 05.07.2018 அன்று நடைபெற்றது - திரு.மு.அர்ஜுனன், வரிமதிப்பீட்டாளர், மண்டலம்-5 தவறான விவரங்கள் அளித்தது - சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன்கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது - தனியரது விளக்கம் பெறப்பட்டது - விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டது - விசாரணை அறிக்கை பெறப்பட்டது - தனியரின் கூடுதல் விளக்கம் பெறப்பட்டது - இறுதி ஆணை வழங்கப்பட்டது - தண்டனையை எதிர்த்து தனியர் அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம்-5ல் வரிமதிப்பீட்டாளராக பணிபுரிந்து வரும் திரு.மு.அர்ஜுனன் அவர்கள் வருவாய் துறை சம்பந்தமான ஆய்வு கூட்டம் 05.07.2018 அன்று மாலை 5 மணி அளவில் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களது முன்னிலையில் நடைபெற்றபோது, ரூ.50,000/-க்கு மேல் வரி செலுத்தாத இனங்கள் குறித்து கோட்டம்-57, மண்டலம்-5ல் பணிபுரியும் திரு.மு.அர்ஜுனன், வரிமதிப்பீட்டாளர் அவர்களிடம் கோரப்பட்டதில், தனியர் ரூ.50,000/-க்கு மேல் வரிசெலுத்த வேண்டிய இனங்கள் மொத்தம் 222 எனவும் அவற்றில் 113 இனங்களில் வரிவசூல் செய்யப்பட்டுவிட்டதாகவும், மீதம் 109 இனங்கள் மட்டுமே வரிவசூல் செய்ய வேண்டியுள்ளதாகவும் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்தார்.

தனியர் வாய்மொழியாக ஆய்வு கூட்டத்தில் கூறிய விவரங்களும், அன்னார் ஆய்வுக் கூட்டத்திற்கு சமர்ப்பித்த பட்டியலில் இருந்த விவரங்களும் மற்றும் கணினியில் உள்ள விவரங்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக உள்ளது என கண்டறியப்பட்டு அதன் அடிப்படையில் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்கள் தனியர் மீது பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு மூன்று மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983 துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு 10.07.2018 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை தனியருக்கு சார்வு செய்யப்பட்டு, குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு தனியரின் 26.07.2018 நாளிட்ட விளக்கம் பெறப்பட்டது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 14.08.2018 நாளிட்ட செயல்முறை ஆணையில் திரு.எம்.பால் தங்கதுரை, செயற் பொறியாளர், மண்டலம் 5 அவர்களை விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

விசாரணை அலுவலர் தனியர் மீது சுமத்தப்பட்டகுற்றச்சாட்டுகளை விசாரணை செய்து கீழ்க்கண்டவாறு 22.01.2019 நாளிட்ட அறிக்கை அளித்துள்ளார்.

வ.எண்.	குற்றச்சாட்டுகள்	விசாரணை அலுவலரின் அறிக்கை
01	குற்றச்சாட்டு எண்.1	நிரூபணமாகவில்லை
02	குற்றச்சாட்டு எண். 2	நிரூபணமாகிறது
03	குற்றச்சாட்டு எண். 3	நிரூபணமாகிறது
04	குற்றச்சாட்டு எண். 4	நிரூபணமாகிறது
05	குற்றச்சாட்டு எண். 5	நிரூபணமாகவில்லை
06	குற்றச்சாட்டு எண். 6	நிரூபணமாகவில்லை
07	குற்றச்சாட்டு எண். 7	நிரூபணமாகவில்லை
08	குற்றச்சாட்டு எண். 8	நிரூபணமாகவில்லை

மேற்கண்ட விசாரணை அலுவலரின் அறிக்கை தனியருக்கு சார்வு செய்யப்பட்டு விசாரணை அலுவலர் அறிக்கையின் மீது தனியரின் கூடுதல் விளக்கம் பெறப்பட்டது.

மேற்படி விசாரணை அலுவலர் அறிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட 8 குற்றச்சாட்டுகளில் 4 முக்கியமான குற்றச்சாட்டுகளில் 3 குற்றச்சாட்டுகள் நிரூபணமாகியுள்ளதன் அடிப்படையில் தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணை வேண்டி வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்கள் கீழ்க்கண்டவாறு ஆணையிட்டுள்ளார்கள்.

பொ.து.ந.க.எண்.இ5/29909/2019

"The written explanation of delinquent. Inqiry report of the inquiry officer & written & oral representations were considered and it is declared that the charges 3 charges out of the 8 charges (out of which 4 are main charges) are proved. Punishment of stoppage of increment for 2 years with cumulative effect imposed".

மேற்படி வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் ஆணையின்படி ஒழுங்கு நடவடிக்கையில் தனியருக்கு தண்டனையாக தனியரின் ஊதிய உயர்வினை இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்யப்பட்டு வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 10.07.2019 நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

தனியர் தனக்கு வழங்கப்பட்டுள்ள தண்டணையான திரண்ட பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தம் இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தம் தண்டனையை ரத்து செய்திடுமாறு சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களுக்கு 10.09.2019 நாளிட்ட மனு அளித்துள்ளார். அதன் விவரங்கள் கீழ்வருமாறு அளிக்கப்படுகிறது.

குற்றச்சாட்டு எண்.1 : தாங்கள் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் ரூ.50000/-க்கு மேல் சொத்து வரி நிலுவையில் மொத்தம் 222 இனங்கள் உள்ளதாகவும், அவற்றில் 113 ரசீதுகள் வசூலிக்கப்பட்டதாகவும் மீதம் 109 ரசீதுகள் வசூலிக்கப்பட வேண்டியுள்ளதாகவும் வாய்மொழியாக தெரிவித்துள்ளீர்கள். தாங்கள் அளித்த விவரங்கள் முரண்பாடாக தெரியவந்துள்ளது.

தனியரது விளக்கம் : நடப்பு 2018 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான ரூ.50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்கள் கடந்த 2018 ஏப்ரல் மாதம் 2ம் நாள் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்திடும் போது மண்டலம் 5ல் உள்ள 49 முதல் 63 வரையிலான வார்டுகளில் ரூ.50000/-க்கு மேல் நிலுவை பட்டியல் தயார் செய்திடும் போது கீழ்க்கண்ட பட்டியலில் வார்டு 57ல் மொத்தம் 310 எண்ணிக்கை ரூ.50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவை இனங்கள் கண்டறியப்பட்டது.

Row Labels	Count of Bill Number	Sum of Current Tax	Sum of Current Tax Due	Sum of Arrear Tax Due	Sum of Balance Amount
N049	21	730318	730318	2283830.41	3014148.41
N050	20	1285034	1285034	2442326.78	3727360.78
N051	20	601641	601641	1645873	2247514
N052	38	519320	519320	2723277	3242597
N053	33	588674	588674	2591807	3180481
N054	113	1957508	1957508	11259775.66	13217283.66
N055	149	3636056	3636056	14511299.02	18147355.02
N056	56	1855444	1855393	4028883.71	5884276.71
N057	310	14081134	14057123.68	29667295.44	43724419.12
N058	168	9652432	9650346	9303441.9	18953787.9
N059	202	21309965	21309953.71	25846918.72	47156872.43
N060	355	30042561	30013667.6	23301314.61	53314982.21
N061	286	29233009	28723004	29420872.23	58143876.23
N062	49	991171	991171	4993659.89	5984830.89
N063	207	12071791	12048624	18918898.63	30967522.63
Grand Total	**2027**	**128556058**	**127967834**	**182939474**	**310907308**

மேற்கண்ட பட்டியலின்படி வார்டு 57ல் ரூ.50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவை இனங்களின் மொத்த எண்ணிக்கை 310 எனவும் மொத்த சொத்துவரி நிலுவை ரூ. 4,37,24,419/- உள்ளது எனவும் நிர்ணயம் செய்யப்பட்டு அதனையே இலக்காக கொண்டு வசூலிப்பு பணி மேற்கொள்ளப்பட்ட நிலையில் மேற்கண்ட மொத்த நிலுவை எண்ணிக்கை 310ல் வசூலிக்க இயலாத இனங்களாக 88 இனங்கள் கண்டறியப்பட்டு (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) அவற்றினை விடுத்து எஞ்சிய 222 எண்ணிக்கையிலான ரூ.50000/-க்கு மேல் நிலுவையில் உள்ள இனங்கள் பட்டியலிடப்பட்டு கடந்த 01.04.2018 முதல் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்ற 05.07.2018 வரையில் அவற்றில் 112 இனங்கள் வசூலிக்கப்பட்டது எனவும் எஞ்சிய 110 ரசீதுகள் வசூலிக்கப்பட வேண்டியுள்ளளதாகவும், தெரிவிக்கப்பட்டதற்கான சொத்திற்கான பட்டி எண் வசூலிக்கப்பட்ட நாள் மற்றும் தொகை

பொ.து.ந.க.எண்.இ5/29909/2019

ஆகிய விவரம் இத்துடன் இணைக்கப்பட்ட பட்டியலில் தங்களின் பார்வைக்கு சமரப்பித்துக்கொள்கிறேன் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் யாவும் உண்மையே இன்றி அவற்றில் எவ்வித முரண்பாடும் உண்மைக்கு மாறான தகவல் இல்லை என்பதனை சமர்ப்பித்து இருந்தேன்.

DETAILS OF ABOVE 50000 CASES IN I/2018-2019 IN DN.57 FROM 01.04.2018 TO 05.07.2018

Sl. No	Dn No	Total Cases	Uncollectable Cases	Collectable Cases	Collected Form 01.04.2018 To 05.07.2018	Balance To Be Collected
1	57	310	88	222	112	110

DN. NO	PROPERTY TAX COLLECTION		INCREASE OF TAX COLLECTION
	01.04.2017 TO 05.07.2017	01.04.2018 TO 05.07.2018	
57	24878483	32738038	7859555

ZONE PROPERTY TAX COLLECTION		INCREASE OF TAX COLLECTION
01.04.2017 TO 05.07.2017	01.04.2018 TO 05.07.2018	
194230052	209887235	15657183

INCREASED PROPERTY TAX COLLECTION		% OF INCREASED COLLECTION IN DN.57
ZONE	DN.57	
15657183	7859555	50.19%

UNCOLLECTABLE PROPERTIES IN ABOVE 50000 CASES IN DN.57

Sl. No	Bill Number	Owner Name	Property Address	Balance Amt	Reason For Uncollectable
1	05-057-00172-000	P S N M Ramalingam Chetty	27(13), Anderson Street	67371	Door Lock
2	05-057-09207-000	T Mahendra Kumar Jain	107(50), Anna (Pillai) Street	199470	Door Lock
3	05-057-00410-000	Mahaveer Kumar	133/5 GF(126/5 GF),Anna (Pillai) Street	62940	Corpn. Sealed
4	05-057-00301-000	C & K P Devasthanam	93(43), Anna (Pillai) Street	221385	Koil
5	05-057-00261-000	A V P Devasthanam	95(44), Anna (Pillai) Street	221827	Land
6	05-057-00617-000	Babi Devi	15(8/M/12), Arumugam Street	66587	Door Lock
7	05-057-08704-000	N Tharakaram	32(26), Arumugam Street	117600	Sealed
8	05-057-00733-000	Trustee Uthukathamman Koil	85(42), Athiyappan Street, Voc Nagar, Sowcarpet	50507	Koil Pty

9	05-057-00825-000	R Chagan Lal Ranka & Roop Chandji Jain	17(9/9), Audiyappa (Naicken) Street	93972	Door Lock
10	05-057-00939-000	Shyamala Ammal	19(10), Audiyappa (Naicken) Street, Kothaval Chavadi	79198	Koil Pty
11	05-057-00865-000	B Venkataramaiah	41(21), Audiyappa (Naicken) Street	125502	Land
12	05-057-00866-000	Mang Trustee A P B S Sannadhi	59(30), Audiyappa (Naicken) Street	127055	Koil Pty
13	05-057-00802-000	Prakashkumar & 7 Others	70(118), Audiyappa (Naicken) Street	208285	Corpn. Sealed
14	05-057-00993-000	Rajesh Kumar	4/22(6/22), Badri Veerasamy Lane, Voc Nagar	53418	Door Lock
15	05-057-01066-000	S Rangaswamy Nadar	6(58), Badrian Street	173478	Land
16	05-057-01165-000	Shree Jain Ratna Swadhyay Trust	9(24&25), Basin Water Works Street	121281	Jain Temple
17	05-057-01243-000	Chakara Chetty	43(22), Bundar Street	228773	Land
18	05-057-01520-000	The Director Of School Primary Education	17/1(11/1), Davidson Street	260136	Govt
19	05-057-01505-000	Subramaniam Brothers	20(32A), Davidson Street	67818	Land
20	05-057-01513-000	India Leather Corn	23(14), Davidson Street	1474523	Court Case
21	05-057-01615-000	Trustee Padmanaba Chetty	12(23), Elephant Gate Street, Voc Nagar	53885	Door Lock
22	05-057-01638-000	Kapleeswar Temple	30(14), Elephant Gate Street, Voc Nagar	64409	Land
23	05-057-01607-000	Thirunavukarasu	4(31/1), Elephant Gate Street, Voc Nagar	85854	Nsp
24	05-057-01648-000	Vaikunda Perumal Devasthanam	8(26), Elephant Gate Street, Voc Nagar	97878	Koil Pty
25	05-057-01972-000	Abdul Kareem Ibrahim	110(52), Godown Street	162145	Door Lock
26	05-057-02129-000	Dalooran Jayanarayanan Trust	165(80), Govindappa (Naicken) Street	57909	Updation
27	05-057-02211-000	Dalooram Jayanarayanan Trust	167(81), Govindappa (Naicken) Street	70915	Updation
28	05-057-02194-000	Parasmull	191(91/62), Govindappa (Naicken) Street	90808	Door Lock
29	05-057-02160-000	Parasmull	191(91/80), Govindappa (Naicken) Street	83236	Door Lock
30	05-057-02260-000	Parasmull	191(91/87), Govindappa (Naicken) Street	61880	Door Lock
31	05-057-02108-000	Lalitha Bafna	197(93/12), Govindappa (Naicken) Street	56166	Updation
32	05-057-02095-000	Uppathu Ralwar Chetty Charties	217(103), Govindappa (Naicken) Street Kothaval Chavadi,	69112	Trustees Dispute

33	05-057-02285-000	Sangeetha & Another	219(104), Govindappa (Naicken) Street	1112355	Court Case
34	05-057-02234-000	M Jeevaraj	245(114/3), Govindappa (Naicken) Street	166576	Court Case
35	05-057-02560-000	Kalavala Kannan Chetty	247(115), Govindappa (Naicken) Street Kothaval Chavadi	63000	Updation
36	05-057-02652-000	P P Sarma	9(9), Hussain Street Edapalayam	138036	Dilapilated Condtn
37	05-057-02807-000	T C Narayana Naidu	42(9)Kalathi Street, George Town,	53155.91	Dilapilated Condtn
38	05-057-02925-000	Trustee P A Devasthanam	40(50), Kanthappa (Chetty) Street	191565	Door Lock
39	05-057-02945-000	Priya Kannan & 2 Others	9(5), Kanthappa (Chetty) Street	214061	Door Lock
40	05-057-03161-000	Sathra Sala Sharath Babu	7(4), Kasi (Chetty) Lane	88181	Mta Case
41	05-057-03087-000	M Nammalwar Chetty	38(20), Kasi (Chetty) Street, Kothaval Chavadi	187056	Updation
42	05-057-03241-000	L Sugan Chand	14(13), Krishna (Iyar) Street	247920	Door Lock
43	05-057-03400-000	S Khaja Mohideen	84(39), Malaya Perumal Street	93230	Corpn. Sealed
44	05-057-03473-000	N Senchulakshmi Ammal	2(18/2), Manarsamy Koil Street	96120	Door Lock
45	05-057-03457-000	Udayavar Temple	8(16), Manarsamy Koil Street	75405	Door Lock
46	05-057-03517-000	Shrikishan Kadel And Others	354(340), Mint Street. Kothaval Chavadi	368544	Tat
47	05-057-04418-000	Kakumani Authi Kesavulu Chetty	8(105), Narayana (Mudali) Street	267319	Updation
48	05-057-04892-000	Surana Corporation Ltd	161(79), Nethaji Subash Chandrabose Road)	56000	Door Lock
49	05-057-04713-000	V Haresh Kumar	218/28(129/28), Nethaji Subash Chandrabose Road	51296	Door Lock
50	05-057-05237-000	V Perumal Naidu	3(2), Perumal (Mudali) Street	58300	Door Lock
51	05-057-05288-000	Aditya Vishal Agarwals	34(74), Perumal (Mudali) Street, Kothaval Chavadi	151765	Door Lock
52	05-057-05933-000	Manju Devi	11(6/2), Raman (Reddy) Street, Kothaval Chavadi	78895	Door Lock
53	05-057-06111-000	Bashyakaruswami	10(10), Somasundaram Street	99448	Koil Pty
54	05-057-06296-000	C Kantilal & 4 Others	45(22), Strotten Muthaiya Street, Kothaval Chavadi	588833	Court Case
55	05-057-06638-000	K K Phani Raj	5(3/1), Thatha Muthiappan Street,	138778	Door Lock

56	05-057-06815-000	The Chairman T N S C Board	A BLOCK(A BLOCK), Tnscb Quarters A To H Block,	392319	Govt
57	05-057-06819-000	The Chairman T N S C Board	D BLOCK(D BLOCK), Tnscb Quarters A To H Block	386753	Govt
58	05-057-06817-000	The Chairman T N S C Board	E BLOCK(E BLOCK), Tnscb Quarters A To H Block	390073	Govt
59	05-057-06818-000	The Chairman T N S C Board	F BLOCK(F BLOCK), Tnscb Quarters A To H Block	420480	Govt
60	05-057-06814-000	The Chairman T N S C Board	G BLOCK(G BLOCK), Tnscb Quarters A To H Block	389290	Govt
61	05-057-06813-000	The Chairman T N S C Board	H BLOCK(H BLOCK), Tnscb Quarters A To H Block	359451	Govt
62	05-057-06934-000	Thiru K Kandasamy & 6 Others	104(310), V.O.C Salai, Park Town	326867	Lease Land
63	05-057-06925-000	B Vijayakumarjain	124(300), V.O.C Salai, Park Town	50647	Lease Land
64	05-057-06861-000	A S Dakshayani	126(299), V.O.C Salai, Park Town	128088	Lease Land
65	05-057-06972-000	Pichiammal	128(298), V.O.C Salai, Park Town	367837	Lease Land
66	05-057-06872-000	A.Bchintahamaniam mal	130(297), V.O.C Salai, Park Town	95481	Lease Land
67	05-057-06873-000	Annamalai Chettiar	136(294), V.O.C Salai, Park Town	113343	Lease Land
68	05-057-06877-000	A S Thillainayagam	140(291&292), V.O.C Salai, Park Town	306406	Lease Land
69	05-057-06949-000	A.Murugesa Mudaliar	142(290), V.O.C Salai, Park Town	162951	Lease Land
70	05-057-06898-000	Rajkumar Kapoor & Sons	162(280), V.O.C Salai, Park Town	69032	Lease Land
71	05-057-06897-000	Moosa Sait	166(278), V.O.C Salai, Park Town,	155946	Lease Land
72	05-057-06839-000	P Viswanathan	168(277), V.O.C Salai, Park Town	105737	Lease Land
73	05-057-06968-000	Yoyesh L Shah	168/1(277/1), V.O.C Salai, Park Town	55152	Lease Land
74	05-057-06870-000	Asrvmlati Kantilal & Another	168/2(277/2), V.O.C Salai, Park Town	81597	Lease Land
75	05-057-06881-000	P N Shanmugham	170(276), V.O.C Salai, Park Town	220245	Lease Land
76	05-057-06825-000	A N Vijayalakshmi	172(275), V.O.C Salai, Park Town	50585	Lease Land
77	05-057-06896-000	Pushpammal	176(273), V.O.C Salai, Park Town	105431	Lease Land
78	05-057-06914-000	N M Chouraria	194(264), V.O.C Salai, Park Town	79353	Lease Land
79	05-057-06970-000	Selvaganeshwar Raja	200(261), V.O.C Salai, Park Town	54510	Lease Land
80	05-057-06948-000	M Venkatesa Chetty	214(255), V.O.C Salai, Park Town	225295	Lease Land
81	05-057-06977-000	K V Rao	218(253), V.O.C Salai, Park Town	55573	Lease Land

82	05-057-06850-000	K K Chidambaran	258(233), V.O.C Salai, Park Town	268434	Lease Land
83	05-057-06929-000	G Manickhavachagan	50(334/2), V.O.C Salai, Park Town	62969	Lease Land
84	05-057-06828-000	P Sidda Reddy	78(323), V.O.C Salai, Park Town	100577	Lease Land
85	05-057-06953-000	S Shanthi	80(322), V.O.C Salai, Park Town	70616	Lease Land
86	05-057-06906-000	Ramanujam Chetty	82(321), V.O.C Salai, Park Town	186443	Lease Land
87	05-057-06835-000	B Chandra	90(317), V.O.C Salai, Park Town	126889	Lease Land
88	05-057-06826-000	Ansul Agarwal	92(316), V.O.C Salai, Park Town	56917	Lease Land

குற்றச்சாட்டு எண்.2 : ஆய்வுக்கூட்டத்திற்கு தாங்கள் சமர்ப்பித்த பட்டியலின்படி, மொத்தம் 240 இனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் 14 இனங்கள் வசூல் செய்ததாகவும், 80 இனங்கள் வசூல் செய்யப்பட வேண்டியுள்ளதாகவும், மீதமுள்ள 146 இனங்கள் பிற காரணங்களால் வசூல் செய்யப்பட முடியாத இனங்களாக பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியாரது விளக்கம் : வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களால் கடந்த 05.07.2018 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலானது கடந்த 22.06.2018 அன்றைய நிலையில் ரூ.50000/-க்கு மேல் வசூலிக்கப்பட்ட இனங்கள் விடுத்து வசூலிக்க இயலாத இனங்கள், வசூலிக்கப்பட வேண்டிய இனங்கள் மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்டு வசூலிக்கப்பட வேண்டிய இனங்கள் மற்றும் நிலுவைத் தொகையினை சரிசெய்த பின் வசூலிப்ப்பட வேண்டிய இனங்கள் ஆகியவற்றினை அறிந்து நிலுவையினை வசூல் செய்திட சுய பரிசோதனை செய்திடும் பொருட்டு கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டது என தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டு எண்.3 : கோட்டம்-57ல் ரூ.50000/-க்கு மேல் நிலுவையிலுள்ள ரசீதுகளில் 240 இனங்கள் பட்டியிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 14 ரசீதுகள் வசூலித்ததாக தெரிவித்துள்ளீர். ஆனால் கணினியில் சரிபார்த்தபோது 8 ரசீதுகள் மட்டுமே முழுவதுமாக வசூலிக்கப்பட்டது. 5 ரசீதுகளில் ஒரு பகுதி மட்டுமே வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 1 ரசீது வசூலிக்கப்படவே இல்லை என தெரியவந்தது. எனவே, தாங்கள் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தவறான தகவல்களை அளித்துள்ளீர்கள்.

தனியாரது விளக்கம் : மண்டலம் 5 வார்டு 57ல் நடப்பு 2018 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான ரூ.50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்களாக கடந்த 2018 ஏப்ரல் மாதம் 2ம் நாள் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்திடும்போது மொத்தம் 310 எண்ணிக்கை ரூ.50000/-க்கு மேல் உள்ளது என கண்டறியப்பட்டது. அந்த வகையில் கோட்டம் 57ல் 01.04.2018 முதல் 5.7.2018 வரையில் மொத்தம் 112 இனங்கள் வசூலிக்கப்பட்டு அதற்கான பட்டியின் நகலும் தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 05.07.2018 அன்று ஆய்வுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலவை பட்டியலானது 22.06.2018 அன்றைய நிலுவையில் ரூ.50000/-க்கு மேல் வசூலிக்கப்பட்ட இனங்கள் விடுத்து எஞ்சிய நிலுவை மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிட விவரங்கள் மற்றும் புதியதாக வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிட இனங்கள் குறித்து அறிந்து அவற்றின் நிலுவையினை வசூல் செய்திட சுய பரிசோதனை செய்திடும் வகையில் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டு எண்.4 : மேலும், கணினியில் ERPல் பதிவிறக்கம் செய்யப்பட்டதில் ரூ.50,000/-க்கு மேல் வசூல் செய்யப்படாத இனங்கள் 239 என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே, தாங்கள் வாய்மொழியாக ஆய்வு கூட்டத்தில் கூறிய விவரங்களும், தாங்கள் ஆய்வு கூட்டத்திற்கு சமர்ப்பித்த பட்டியலின் விவரங்களும், கணினியில் (ERP)ல் உள்ள விவரங்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக உள்ளது தெரியவருகிறது.

பொ.து.ந.க.எண்.இ5/29909/2019

தனியாரது விளக்கம்: மண்டலம் 5, வார்டு 57ல் நடப்பு 2018ம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான ரூ.50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்களாக கடந்த 2018 ஏப்ரல் மாதம் 2ம் நாள் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்திடும்போது மொத்தம் 310 எண்ணிக்கை ரூ.50000/-க்கு மேல் உள்ளது என கண்டறியப்பட்டது. அந்த வகையில் கோட்டம் 57ல் 01.04.2018 முதல் 05.07.2018 வரையில் மொத்தம் 112 இனங்கள் வசூலிக்கப்பட்டு அதற்கான பட்டியின் நகலும் தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 05.07.2018 அன்று ஆய்வுக்கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை பட்டியலானது 22.06.2018 அன்றைய நிலையில் ரூ.50000/-க்கு மேல் வசூலிக்கப்பட்ட இனங்கள் விடுத்து எஞ்சிய நிலுவை மற்றும் மறுமதிப்பீடு செய்யப்பட்ட கட்டிட விவரங்கள் மற்றும் புதியதாக வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிட இனங்கள் குறித்து அறிந்து அவற்றின் நிலுவையினை வசூல் செய்திட சுய பரிசோதனை செய்திடும் வகையில் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டியல் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் கணினியில் ERPல் பதிவிறக்கம் செய்யப்படும்போது வசூலிக்கப்பட்ட இனங்கள் வராது என்பதனையும் தங்கள் கனிவான பார்வைக்கு சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

குற்றச்சாட்டு எண்.5 : தங்களின் பொறுப்பற்ற இச்செயல் தங்களின் பணியின் மீது அக்கறையின்மையையும், அலட்சியத்தையும் காட்டுகிறது.

தனியாரது விளக்கம்: மண்டலம் 5, வார்டு 57ல் நடப்பு 2018 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான ரூ.50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்களாக கடந்த 2018 ஏப்ரல் மாதம் 2ம் நாள் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்திடும்போது மொத்தம் 310 எண்ணிக்கை ரூ.50000/-க்கு மேல் உள்ளது என கண்டறியப்பட்டது.

மேலும், மொத்த ரூ.50000/-க்கு மேல் நிலுவை எண்ணிக்கையான 310ல் வசூலிக்கப்பட இயலாத இனங்களின் எண்ணிக்கையான 310ல் வசூலிக்கப்பட இயலாத எண்ணிக்கை 88ஐ விடுத்து எஞ்சிய 222ல் வசூல் செய்திட விதிகளின்படி முதலாகதாக கேட்பு கடிதம், இரண்டாவதாக வாரண்ட் நோட்டீஸ், மூன்றாவதாக வாடகைதாரர்களுக்கான நோட்டீஸ் அடுத்து தொழில் உரிமம் தாக்கீடு என எந்த வகையில் சொத்துவரி நிலுவையினை வசூல் செய்திட உரிய தாக்கீது வழங்கியே 01.04.2018 முதல் 05.07.2018 வரையில் 112 இனங்கள் வசூலிக்கப்பட்டுள்ளது என்பதனையும் ஏற்றிருக்கும் பணியின் தன்மையினை கருத்தில கொண்டு முழு அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனுமே இப்பணியினை மேற்கொண்டு வருகின்றேன் என்பதனையும் எவ்வித அலட்சியபோக்கு இன்றியும் நாளது வரையில் பணியாற்றி வருகின்றேன் என தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டு எண்.6: தங்களின் இச்செயல் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர் நடத்தை விதிகள் 20ஐ மீறிய செயலாகும்.

தனியாரது விளக்கம்: வரிமதிப்பீட்டாளர் என்ற முறையில் வார்டு 57ல் மொத்த ரூ.50000/-க்கு மேல் நிலுவை எண்ணிக்கையான 310ல் வசூலிக்கப்பட இயலாத இனங்களின் எண்ணிக்கை 88ஐ விடுத்து எஞ்சிய 222 வசூல் செய்திட விதிகளின்படி முதலாகதாக கேட்பு கடிதம், இரண்டாவதாக வாரண்ட் நோட்டீஸ், மூன்றாவதாக வாடகைதாரர்களுக்கான நோட்டீஸ் அடுத்து தொழில் உரிம தாக்கீது என எந்த வகையில் சொத்து வரி நிலுவையினை வசூல் செய்திட உரிய தாக்கீடு வழங்கியே 01.04.2018 முதல் 05.07.2018 வரையில் 112 இனங்கள் வசூலிக்கப்பட்டுள்ளது என்பதனையும் ஏற்றிருக்கும் பணியின் தன்மையினை கருத்தில் கொண்டு முழு அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனுமே இப்பணியினை மேற்கொண்டு வருகின்றேன் என்பதனையும் எவ்விதத்திலும் பணியாளர் நடத்தை விதி 20ஐ மீறாமல் நாளது வரையில் பணிபுரிந்து வருகின்றேன் என தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டு எண்.7: மேலும், தங்களின் இச்செயலினால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் வசூலில் தேக்கம் ஏற்பட காரணமாய் இருந்துள்ளீர்கள்.

பொ.து.ந.க.எண்.இ5/29909/2019

தனியரது விளக்கம் : வரிமதிப்பீட்டாளர் என்ற முறையில் வார்டு 57ல் மொத்த ரூ.50000/-க்கு மேல் நிலுவை எண்ணிக்கையான 310ல் வசூலிக்கப்பட இயலாத இனங்களின் எண்ணிக்கை 88ஐ விடுத்து எஞ்சிய 222ல் வசூல் செய்திட விதிகளின்படி முதலாவதாக கேட்பு கடிதம், இரண்டாவதாக வாரண்ட் நோட்டீஸ், மூன்றாவதாக வாடகைதாரர்களுக்கான நோட்டீஸ் அடுத்து தொழில் உரிம தாக்கீது என எந்த வகையில் சொத்துவரி நிலுவையினை வசூல் செய்திட உரிய தாக்கீடு வழங்கியே 01.04.2018 முதல் 05.07.2018 வரையில் 112 இனங்கள் வசூலிக்கப்பட்டுள்ளது என்பதனையும், எஞ்சிய நிலுவை இனங்களை வசூல் செய்திட விதிகளின்படி உரிய உடனடி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றேன் எனவும் ஏற்றிருக்கும் பணியின் தன்மையினை கருத்தில் கொண்டு முழு அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனுமே இப்பணியினை மேற்கொண்டு வருகின்றேன் என தெரிவித்துள்ளார்.

மேலும், சென்ற 2/2017-2018க்கும் நடப்பு 1/2018-2019க்கும் இடையே இதே கால அளவில் (01.04.2017 முதல் 05.07.2017 வரையில்) ரூ. 248.78 இலட்சம் வசூல் செய்யப்பட்ட நிலையில் 01.04.2018 முதல் 05.07.2018 வரையில் ரூ.327.38 இலட்சம் வசூல் செய்யப்பட்ட நிலையில் கூடுதலாக ரூ. 78.60 இலட்சம் கூடுதலாக வசூல் என்பது மண்டலம் 5ன் கூடுதல் சொத்து வரி வசூலான ரூ. 156.57ல் ஏறக்குறைய சரிபாதிக்கு மேல் வசூல் செய்யப்பட்ட நிகழ்விலேயே எனது பணியில் வெளிப்பாட்டினை காட்டுவதாக தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் தேக்கம் ஏற்பட காரணமாய் இருந்துள்ளேன் என்ற கூற்றினை முற்றிலுமாக மறுக்கின்றேன்.

குற்றச்சாட்டு எண்.8 : மேலும், 1/2018-19 அரையாண்டில், 01.04.2018 முதல் 05.07.2018 வரை மூன்று மாதங்களுக்கு மேல் ஆன நிலையில் பலமுறை ஆய்வு கூட்டத்தில் 50% மேல் வசூல் செய்ய அறிவுறுத்தியும் தாங்கள் இதுவரை அவ்விலக்கை அடையாமல் ஆய்வு கூட்டத்தில் தவறான தகவல்களை அளித்துள்ளீர்கள்.

தனியரது விளக்கம் : வரி மதிப்பீட்டாளர் என்ற முறையில் வார்டு 57ல் மொத்த ரூ.50000/-க்கு மேல் நிலுவை எண்ணிக்கையான 310ல் வசூலிக்க இயலாத இனங்களின் எண்ணிக்கை 88ஐ விடுத்து எஞ்சிய 222 வசூல் செய்திட விதிகளின்படி முதலாவதாக கேட்பு கடிதம், இரண்டாவதாக வாரண்ட் நோட்டீஸ், மூன்றாவதாக வாடகைதாரர்களுக்கான நோட்டீஸ் அடுத்து தொழில் உரிம தாக்கீது என எந்த வகையில் சொத்துவரி நிலுவையினை வசூல் செய்திட உரிய தாக்கீது வழங்கியே 01.04.2018 முதல் 05.07.2018 வரையில் 112 இனங்கள் வசூலிக்கப்பட்டுள்ளது என்பதனையும் எஞ்சிய நிலுவை இனங்களை வசூல் செய்திட விதிகளின்படி உரிய உடனடி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றேன் எனவும் ஏற்றிருக்கும் பணியின் தன்மையினை கருத்தில் கொண்டு முழு அக்கறையுடனுமே இப்பணியினை மேற்கொண்டு வருகின்றேன் என தெரிவித்துள்ளார்.

மேலும், சென்ற 2/2017-2018க்கும் நடப்பு 1/2018-2019க்கும் இடையே இதே கால அளவில் (01.04.2017 முதல் 05.07.2018 வரையில்) ரூ. 248.78 இலட்சம் வசூல் செய்யப்பட்ட நிலையில் 01.04.2018 முதல் 05.07.2018 வரையில் ரூ. 327.38 இலட்சம் வசூல் செய்யப்பட்ட நிலையில் கூடுதலாக 78.60 இலட்சம் கூடுதலாக வசூல் செய்யப்பட்ட நிகழ்விலேயே எனது பணியின் வெளிப்பாட்டினை காட்டுவதாக தெரிவித்துள்ளார்.

மேலும் மண்டலம் 5ல் வார்டு 57ல் நடப்பு ஆண்டின் முதல் அரையாண்டிற்கான ரூ.50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்களாக கடந்த 2018 ஏப்ரல் மாதம் 2ம் நாள் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்திடும் போது மொத்தம் 310 எண்ணிக்கை ரூ. 50000/-க்கு மேல் உள்ளது என கண்டறியப்பட்டது. அந்த வகையில் கோட்டம் 57ல் 01.04.2018 முதல் 05.07.2018 வரையில் மொத்தம் 113 இனங்கள் வசூலிக்கப்பட்டு அதற்கான பட்டியின் நகலும் தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 05.07.2018 அன்று ஆய்வுக்கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை பட்டியலானது 22.06.2018 அன்றைய நிலையில் ரூ.50000/-க்கு மேல் வசூலிக்கப்பட்ட இனங்கள் விடுத்து எஞ்சிய நிலுவை மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிட விவரங்கள் மற்றும் புதியதாக வரி விதிப்பு செய்யப்பட்ட கட்டிட இனங்கள் குறித்து அறிந்து அவற்றின் நிலுவையினை வசூல் செய்திட சுய பரிசோதனை செய்திடும் வகையில் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டியல் என தெரிவித்துள்ளார்.

பொ.து.ந.க.எண்.இ5/29909/2019

மேலும் சென்ற 2/2017-2018க்கும் நடப்பு 1/2018-2019க்கும் இடையே இதே கால அளவில் (01.04.2017 முதல் 05.07.2017) வரையில் 248.78 இலட்சம் வசூல் செய்யப்பட்ட நிலையில் 01.04.2018 முதல் 05.07.2018 ரையில் 327.38 இலட்சம் வசூல் செய்யப்பட்ட நிலையில் கூடுதலாக ரூ.78.60 இலட்சம் கூடுதலாக வசூல் செய்துள்ளேன் என்பதனையும் எஞ்சிய நிலுவைத் தொகையினை வசூல் செய்திடவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றேன் என தெரிவித்துள்ளார்.

இணைப்பு-2 குற்றச்சாட்டு-1 : தாங்கள் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் ரூ.50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவையில் 113 ரசீதுகள் வசூலிக்கப்பட்டதாக தாங்கள் தெரிவித்துள்ளீர்கள். ஆனால் அதற்கான விவரங்கள் தாங்கள் சமர்ப்பிக்கும்போது 14 ரசீதுகள் மட்டுமே வசூல் செய்ததாக தெரிவித்துள்ளீர்கள். தாங்கள் அளித்த விவரங்கள் முரண்பாடாக உள்ளது. இது தங்களுக்கு பணியின் மீதுள்ள அலட்சிய போக்கினை காட்டுகிறது.

இணைப்பு -2 குற்றச்சாட்டு 1ற்கான விளக்கம் : நடப்பு 2018 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான ரூ.50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்கள் கடந்த 2018 ஏப்ரல் மாதம் 2ம் நாள் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்திடும்போது மண்டலம் 5ல் உள்ள 49 முதல் 63 வரையிலான வார்டுகளில் ரூ.50000/-க்கு மேல் நிலுவை பட்டியல் தயார் செய்திடும் போது கீழ்க்கண்ட பட்டியலில் கண்டவாறு வார்டு 57ல் மொத்தம் 310 எண்ணிக்கை ரூ.50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவை இனங்கள் கண்டறியப்பட்டது.

Row Labels	Count of Bill Number	Sum of Current Tax	Sum of Current Tax Due	Sum of Arrear Tax Due	Sum of Balance Amount
N049	21	730318	730318	2283830.41	3014148.41
N050	20	1285034	1285034	2442326.78	3727360.78
N051	20	601641	601641	1645873	2247514
N052	38	519320	519320	2723277	3242597
N053	33	588674	588674	2591807	3180481
N054	113	1957508	1957508	11259775.66	13217283.66
N055	149	3636056	3636056	14511299.02	18147355.02
N056	56	1855444	1855393	4028883.71	5884276.71
N057	310	14081134	14057123.68	29667295.44	43724419.12
N058	168	9652432	9650346	9303441.9	18953787.9
N059	202	21309965	21309953.71	25846918.72	47156872.43
N060	355	30042561	30013667.6	23301314.61	53314982.21
N061	286	29233009	28723004	29420872.23	58143876.23
N062	49	991171	991171	4993659.89	5984830.89
N063	207	12071791	12048624	18918898.63	30967522.63
Grand Total	**2027**	**128556058**	**127967834**	**182939474**	**310907308**

மேற்கண்ட பட்டியலின்படி வார்டு 57க்கான ரூ.50000/க்கு மேல் சொத்துவரி நிலுவை இனங்களின் மொத்த எண்ணிக்கை 310 எனவும் மொத்த சொத்துவரி நிலுவை ரூ4,37,24,419 உள்ளது எனவும் நிர்ணயம் செய்யப்பட்டு அதனையே இலக்காக கொண்டு வசூலிப்பு பணி மேற்கொள்ளப்பட்டநிலையில் மேற்கண்ட மொத்த நிலுவை எண்ணிக்கை 310ல் வசூலிக்க இயலாத இனங்களாக 88 இனங்கள் கண்டறியப்பட்டு அவற்றினை விடுத்து எஞ்சிய 222 எண்ணிக்கையிலான ரூ.50000/-க்கு மேல் நிலுவையில் உள்ள இனங்கள் பட்டியலிடப்பட்டு கடந்த 01.04.2018 முதல் வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்ற 05.07.2018 வரையில் அவற்றில் 112 இனங்கள் வசூலிக்கப்பட்டது எனவும் எஞ்சிய 110 ரசீதுகள் வசூலிக்கப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கக்பட்டதற்கான சொத்திற்கான பட்டி எண், வசூலிக்கப்பட்ட நாள் மற்றும் தொகை ஆகிய விவரம் இத்துடன் இணைக்கப்பட்ட பட்டியலில் தங்களின் பார்வைக்கு சமர்ப்பித்துக்கொள்கிறேன். ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் யாவும் உண்மையே இன்றி அவற்றில் எவ்வித முரண்பாடும் இல்லை என தெரிவித்துள்ளார்.

பொ.து.ந.க.எண்.இ5/29909/2019

மேலும், மண்டலம்5, வார்டு 57ல் நடப்பு 2018ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான ரூ.50000/- க்கு மேல் சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்களாக கடந்த 2018 ஏப்ரல் மாதம் 21ம் நாள் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்திடும்போது மொத்தம் 310 எண்ணிக்கை ரூ50000/- மேல் உள்ளது என கண்டறியப்பட்டது. அந்த வகையில் கோட்டம் 57ல் 01.04.2018 முதல் 05.07.2018 வரையில் மொத்தம் 112 இனங்கள் வசூலிக்கப்பட்டு அதற்கான பட்டியின் நகலும் தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 05.07.2018 அன்று ஆய்வுக்கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை பட்டியலானது 22.06.2018 அன்றைய நிலையில் ரூ.50000/-க்கு மேல் வசூலிக்கப்பட்ட இனங்கள் விடுத்து எஞ்சிய நிலுவை மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிட விவரங்கள் மற்றும் புதியதாக வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிட இனங்கள் குறித்து அறிந்து அவற்றின் நிலுவையின் வசூல் செய்திட சுய பரிசோதனை செய்திடும் வகையில் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டியல் என தெரிவித்துள்ளார்.

மேலும், சென்ற 2/2017-2018க்கும் நடப்பு 1/2018-2019க்கும் இடையே இதே கால அளவில் (0104.2017 முதல் 05.07.2018 வரையில்) ரூ 248.78 இலட்சம் வசூல் செய்யப்பட்ட நிலையில் 01.04.2018 முதல் 05.07.2018 வரையில் ரூ. 327.38 இலட்சம் வசூல் செய்யப்பட்ட நிலையில் கூடுதலாக 78.60 இலட்சம் கூடுதலாக வசூல் செய்துள்ளேன் என்பதனையும் எஞ்சிய நிலுவைத் தொகையினை வசூல் செய்திடவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றேன் என தெரிவித்துள்ளார்.

ஏற்றிருக்கும் பணியின் தன்மையினை கருத்தில் கொண்டு முழு அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனுமே இப்பணியினை மேற்கொண்டு வருகின்றேன் என்பதனையும் சமர்ப்பித்துக் கொள்வதாகவும், இதில் நான் எவ்விதத்திலும் பணியின் மீது அலட்சிய போக்குடனும், பணியின் மீது அக்கறையின்மையுடனும் நடந்து கொண்டது இல்லை என தெரிவித்துள்ளார்.

<u>இணைப்பு 2 குற்றச்சாட்டு எண்.2</u> தாங்கள் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் ரூ50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவையில் 14 ரசீதுகள் வசூலிக்கப்பட்டதாக தாங்கள் தெரிவித்துள்ளீர்கள். ஆனால் கணினியில் சரிபார்த்தபோது 8 ரசீதுகள் மட்டுமே குழுவதுமாக வசூலிக்கப்பட்டது 5 ரசீதுகளில் ஒரு பகுதி மட்டுமே வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 1 ரசீது வசூலிக்கப்படவே இல்லை என தெரியிவந்தது. ஏனவே, தாங்கள் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தவறான தகவல்களை அளித்துள்ளீர்கள்.

<u>இணைப்பு-2 குற்றச்சாட்டு எண்.2ற்கான விளக்கம்:</u> வார்டு 57ல் நடப்பு 2018 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான ரூ.50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்களாக கடந்த 2018 ஏப்ரல் மாதம் 2ம் நாள் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்திடும் போது மொத்தம் 310 எண்ணிக்கை ரூ.50000/-க்கு மேல் உள்ளது என கண்டறியப்பட்டது. அந்த வகையில் கோட்டம் 57ல் 01.04.2018 முதல் 05.07.2018 வரையில் மொத்தம் 112 இனங்கள் வசூலிக்கப்பட்டு அதற்கான பட்டியின் நகலும் தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், 05.07.2018 அன்று ஆய்வுக்கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை பட்டியலானது 22.06.2018 அன்றைய நிலையில் ரூ.50000/-க்கு மேல் வசூலிக்கப்பட்ட இனங்கள் விடுத்து எஞ்சிய நிலுவை மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிட விவரங்கள் மற்றும் புதியதாக வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிட இனங்கள் குறித்து அறிந்து அவற்றின் நிலுவையினைவசூல் செய்திட சுய பரிசோதனை செய்திடும் வகையில் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டியல் என தெரிவித்துள்ளார்.

மேலும், சொத்துவரி வசூல் சம்மந்தப்பட்ட வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களால் 05.07.2019 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் 01.04.2018 முதல் 05.07.2018 வரையில் மொத்தம் 112 இனங்கள் வசூலிக்கப்பட்டு அதற்கான பட்டியின் நகலும் இருந்ததன் காரணமாக வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களுக்கு விவரங்கள் தெரிவிக்கப்பட்டது எனவும், வட்டார வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களால் வசூலிக்கப்பட்ட இனங்களை விடுத்து எஞ்சிய இனங்களின் மீதே ஆய்வு மேற்கொள்ளும் நிலையில், எஞ்சிய இனங்கள் மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிய விவரங்கள் மற்றும் மற்றும் புதியதாக வரி விதிப்பு செய்யப்பட்ட கட்டிட இனங்கள் குறித்து அறிந்து அவற்றின் நிலுவையினை வசூல் செய்திட சுய பரிசோதனை செய்திடும் வகையில் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டியல் என தெரிவித்துள்ளார்.

மேலும் கணினியில் ERPல் பதிவிறக்கம் செய்யப்படும்போது ரூ.50000/-க்கு மேல் வசூலிக்கப்பட்ட இனங்கள் விடுபட்டுவிடும் என தெரிவித்துள்ளார்.

மேலும், சொத்துவரியினை கூடுதலாக வசூல் செய்திடும் பொருட்டு கீழ்க்கண்ட வகையில் இதர முயற்சியினையும் மேற்கொண்டு வருகின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

1. குறுஞ்செய்தி மூலம் அனைத்து நிலுவை சொத்து உரிமையாளர்களுக்கும் நிலுவைத் தொகை குறித்த விரம் மற்றும் சொத்துவரி செலுத்துவது தொடர்பாக நினைவூட்டுவது.
2. பதிவு செய்யப்பட்ட குறுஞ்செய்தி தகவல் மூலம் அனைத்து நிலுவை சொத்து உரிமையாளர்களுக்கும் நிலுவைத் தொகை குறித்த விவரம் மற்றம் சொத்துவரி செலுத்துவது தொடர்பாக நினைவூட்டுவது.
3. முதலாவதாக ரூ.50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவை உள்ள சொத்து உரிமையாளர்களுக்கு நிலுவை குறித்து கேட்பு தாக்கீது வழங்குவது (நகல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)
4. இரண்டாவதாக ரூ.50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவை உள்ள சொத்து உரிமையாளர்களுக்கு நிலுவை குறித்து வாரண்ட் தாக்கீது வழங்குவது
5. சொத்து உரிமையாளர்கள் சொத்துவரியினை செலுத்தாத இனங்களில் அக்கட்டிடத்தில் குடியிருக்கும் வாடகைதாரர்களுக்கு வாடகைதாரர் தாக்கீது வழங்கி நிலுவை சொத்துவரியினை வசூல் செய்திட நடவடிக்கை மேற்கொள்வது (நகல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)
6. அடுக்குமாடி குடியிருப்புகளின் சொத்துவரி வசூல் செய்திட விடுமுறை தினங்களில் சிறப்பு சொத்துவரி வசூல் முகாம் நடத்துவது.
7. மேற்கண்ட எந்த முயற்சிகளிலும் நிலுவைத் தொகையினை செலுத்தாத கட்டிடங்களில் வணிக கட்டிடங்களை ஆய்வு செய்து அக்கட்டிடத்தில் நடைபெறும் வணிகங்களுக்கு தொழில் உரிம தாக்கீது வழங்கி ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று முடி மூடி சீல் வைப்பது.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் சொத்துவரி வசூல் சம்பந்தப்பட்ட வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களால் 05.07.2018 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் 01.04.2018 முதல் 05.07.2018 வரையில் மொத்தம் 112 இனங்கள் வசூலிக்கப்பட்டு அதற்கான பட்டியின் நகலும் இருந்ததன் காரணமாகவே வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களுக்கு விவரங்கள் தெரிவிக்கப்பட்டது எனவும், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களால் வசூலிக்கப்பட்ட இனங்களை விடுத்து எஞ்சிய இனங்களின் மீதே ஆய்வு மேற்கொள்ளும் நிலையில் எஞ்சிய இனங்கள் மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிட விவரங்கள் மற்றும் புதியதாக வரி விதிப்பு செய்யப்பட்ட கட்டிட இனங்கள் குறித்து அறிந்து அவற்றின் நிலுவையினை வசூல் செய்திட சுய பரிசோதனை செய்திடும் வகையில் கணிப்பொறியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டியல் தான் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களால் 05.07.2018 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், வடக்கு வட்டார ஆளுகைக்குட்பட்ட ஐந்து மண்டலங்களில் G.I.S. Survey எனப்படும் ஆய்வு முதன் முதலில் மண்டலம் 5ல் வார்டு 57லேயே மேற்கொள்ளப்பட்டது என்பதும் இந்த ஆய்வில் இந்த கோட்டத்தில் உள்ள அனைத்து கட்டிடங்களின் உபயோகத்தன்மையினை ஆய்வு மேற்கொண்டும் அந்த ஆய்வறிக்கையினை பெற்று அறிக்கையில் சுட்டிக்காட்டியவாறு உபயோகத்தன்மை உள்ளனவா அல்லது ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமா எனவும் மறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளும் வரையில் அந்த ஆய்வுக்குழுவினருடன் ஒருங்கிணைந்து பணியாற்றியும் உள்ளேன் எனவும், எனினும் சொத்துவரி வசூலில் எவ்வித சுணக்கம் இன்றியும் பணியாற்றி உள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட எனது விளக்கங்களை உரிய சொத்துவரி வசூல் பட்டி 01.04.2018 முதல் 05.07.2018 வரையிலான காலத்தில் வசூல் செய்திட்ட இனங்கள், சொத்து உரிமையாளர்கள் சொத்துவரியினை செலுத்தாத இனங்களில் கட்டிடத்தில் உள்ள வாடகைதாரர்களுக்கு தாக்கீது வழங்கி சொத்துவரி வசூல் செய்திட்ட இனங்கள் மற்றும் சொத்துவரியினை செலுத்தாத இனங்களில் கட்டிடத்தில் உள்ள தொழிலக உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட தொழில்

பொ.து.ந.க.எண்.இ5/29909/2019

உரிமம் சம்பந்தப்பட்ட தாக்கீது வழங்கி சொத்துவரி வசூல் செய்திட நடவடிக்கை மேற்கொண்டுள்ள நிலையில் சொத்துவரி வசூலில் எவ்வித கவனக்குறைவும், அலட்சிய போக்கின்றியும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்படுவது போன்றவற்றினை உரிய ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களுடன் சமர்ப்பித்தும் அதனை பரிசீலனை செய்யாமல் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களால் இரண்டாண்டு ஊதிய உயர்வு திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்தும், அதற்கு தண்டனையாக வழங்கப்பட்டுள்ள திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்யப்பட்டுள்ள இரண்டாண்டு ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையினை ரத்து செய்திடுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் 10.07.2019 நாளிட்ட வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் செயல்முறை ஆணையில் தனியர் கூடுதல் விளக்கமாக விசாரணை அலுவலர் மற்றும் செயற் பொறியாளர் அவர்களின் 14.09.2018 நாளிட்ட கடிதத்தில் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களால் வார்டு 57ல் 50000/-க்கு மேல் சொத்துவரி நிலுவை இனங்களில் வசூலிக்கப்பட்ட இனங்கள் முறையாக குறிப்பிடாதது குறித்து குற்றச்சாட்டுக் குறிப்பாணையில் இணைப்புகளில் கண்ட குற்றச்சாட்டுகளுக்கு எனது விளக்கங்களை உரிய ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களுடன் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளதாகவும், வசூல் செய்ய இயலாத இனங்களின் பட்டியலில் உள்ள நிலுவைத் தொகையினை வசூல் செய்திடும் வகையில் நீண்ட நாள் நிலுவைத் தொகையினை வசூல் செய்திட்டேன் என கீழ்க்கண்ட விவரங்களுடன் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Uncollectable Properties in above 50000 cases in DN.57

Sl. No	Bill Number	Owner Name	Property Address	Balance Amt	REASON FOR UNCOLLECTABLE
1	05-057-00733-000	TRUSTEE UTHUKATHAMMAN KOIL	85(42), Athiyappan Street, Voc Nagar, Sowcarpet	50507	KOIL PTY
2	05-057-05288-000	ADITYA VISHAL AGARWALS	34(74) Perumal (Mudali) Street, Kothaval Chavadi	151765	DOOR LOCK
3	05-057-05933-000	MANJU DEVI	11(6/2) Raman (Reddy) Street. Kothaval Chavadi	78895	DOOR LOCK
4	05-057-06111-000	BASHYAKARUSWAMI	10(10) Somasundaram Street	99448	KOIL PTY
5	05-057-06296-000	C KANTHILAL & 4 OTHERS	45(22) Strotten Muthaiya Street	588833	COURT CASE
6	05-057-03087-000	M NAMMALWAR CHETTY	38(20) Kasi (Chetty) Street, Kothaval Chavadi	187056	UPDATION

மேற்படி தனியர் Division 57ல் ரூ.50000/-க்கு மேல் உள்ள சொத்துவரி நிலுவைத் தொகையினை வசூல் செய்திட்ட விவரங்கள் சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களுக்கு அளித்த மேல்முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்படவில்லை.

ஆகவே, திரு.மு.அர்ஜுனன், வரிமதிப்பீட்டாளர், மண்டலம் 5 அவர்கள் ரூ.50000/-க்கு மேல் வரிசெலுத்தாத இனங்கள் குறித்து முரண்பாடான விவரங்களை வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களது முன்னிலையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்தது தொடர்பாக

தனியருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983 துணை விதி 9(2)ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இறுதி ஆணையாக தனியருக்கு வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்கள் அளித்த தண்டனையான வருடாந்திர ஊதிய உயர்வினை இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து வழங்கிய ஆணையினை ரத்து செய்ய கோரி சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களுக்கு அளித்த மேல்முறையீட்டு மனு மீது உரிய முடிவு எடுக்கும் பொருட்டு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த ஆணையரது 20.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"Seen. Earlier punishment is confirmed, என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.இ7/ 32295/ 2019

தீர்மான எண்.676 / 2020 **நாள்:23-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-9 சுகாதாரத்துறை - திரு.பி.சிவபாலன் சுகாதார ஆய்வாளர் கோட்டம்-124 27.08.2013 பணியில் இருந்த திரு.ஜனார்த்தனன் என்ற பணியாளர் பணியின் போது மழைநீர் வடிகால்வாயில் இறங்கி உயிர் இழந்தார் - ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு துணை விதி 9(2)-ன் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது - இது தொடர்பாக நீதிமன்ற வழக்கு பதிவு செய்தது காரணமாக வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையின் மீது மேல் நடவடிக்கை எடுக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டது - நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் தனியர் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு விசாரணை அலுவலர் நியமித்து ஆணை வழங்கப்பட்டது - தனியரை விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டு விசாரணை அறிக்கை பெறப்பட்டுள்ளது - தனியரின் கூடுதல் விளக்கம் பெறப்பட்டு - விசாரணை அறிக்கையை தனியருக்கு சார்பு செய்து கூடுதல் விளக்கம் பெறப்பட்டது - இறுதி ஆணை வழங்கப்பட்டது - இறுதி ஆணையின் மீது தனியர் மேல்முறையீடு செய்துள்ளார் - தண்டனையை எதிர்த்து தனியர் அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.

பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் கோட்டம்-124ல் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு.பி.சிவபாலன், மண்டலம்-9 அவர்கள் 27.08.2013 அன்று 16 தொழிலாளர்களுடன் பணியில் ஈடுபட்டு வந்தார். அதில் 6 பணியாளர்கள் மழைநீர் கால்வாயில் தூர்வாரும் பணியில் ஈடுபட்டிருந்தபோது திரு.ஜனார்த்தனன் என்ற மலேரியா தூர்வாரும் பணியாளருக்கு விஷவாயு தாக்கப்பட்ட செய்தி அறியப்பட்டது உடனடியாக தீயணைப்புதுறை மூலமாக மீட்கப்பட்டு இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மருத்துவரின் ஆய்வில் இறந்ததாக அறியப்பட்டது. இது தொடர்பாக விளக்கம் கேட்டு 27.08.2013ம் தேதி அன்று திரு.பி.சிவபாலன், சுகாதார ஆய்வாளர் அவர்களுக்கு 9(2)-ன்கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு விளக்கம் பெறப்பட்டது. இந்நிலையில் இறந்தவரின் பெற்றோர்களால் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு சைதாப்பேட்டை, 18-வது பெருநகர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுவந்தது. இதன் காரணமாக தனியர் மீது தொடரப்பட்ட 9(2)-ன்கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணையின் மீது மேல்நடவடிக்கை எடுக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சைதாப்பேட்டை 18-வது பெருநகர் நீதிமன்றத்தில் இவ்வழக்கில் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டு 01.01.2014 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது. துறைரீதியாக தனியர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு விசாரணை நடத்த விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளது.

மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் 26.10.2018 நாளிட்ட செயல்முறை ஆணையில் திரு.தமிழ், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்-9 அவர்களை விசாரணை அலுவலராக நியமித்து ஆணை வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து தனியர் மீது விசாரணை மேற்கொண்டு விசாரணை அறிக்கை பெற கோப்பு மற்றும் பணிப்பதிவேடு அனுப்பிவைக்கப்பட்டது.

உதவி வருவாய் அலுவலர், மண்டலம்-9 அவர்கள் தனியரை 30.11.2018 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு 02.12.2018 அன்று விசாரணை அறிக்கையை மூடிய உரையிட்டு சமர்ப்பித்துள்ளார். விசாரணை அலுவலர் அவர்களின் மூடிய உரையிட்ட விசாரணை அறிக்கையை மேல்நடவடிக்கைக்காக தங்களின் மேலான பார்வைக்கு கோப்பு மற்றும் பணிப்பதிவேடுகள் இத்துடன் இணைத்து மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதன்படி, மத்திய வட்டார துணை ஆணையர் அவர்கள் இவ்விசாரணை அறிக்கையை தனியருக்கு சார்பு செய்து கூடுதல் விளக்கம் பெற்று அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி தனியருக்கு விசாரணை அலுவலர் அவர்களின் அறிக்கையை சார்பு செய்யப்பட்டது. கீழ்கண்டுள்ள குற்றச்சாட்டுகளின் மீது விசாரணை அலுவலர் அவர்களின் அறிக்கையின் மீது தனியர் கீழ்கண்டுள்ளவாறு தன் விளக்கத்தினை அளித்துள்ளார்.

பொ.து.ந.க.எண்.இ7/ 32295/ 2019

குற்றச்சாட்டு -1

That Thiru.P.Sivabalan, Sanitary Inspector, Division-124, Health Department, Zone-IX has failed in supervising the Malaria Desilting Thozillalies who indulged in desilting the storm Water Drain at Venkatesa Agraharam Street in Division-124 on 27.08.2013 which resulted in the death of Thiru.S.N.Janarthanan Malaria Desilting Thozilali Dept. Zone-IX on 27.08.2013

குற்றச்சாட்டு -1க்கு தனியரின் விளக்கம்

கோட்டம்-124ல் மொத்தம் 23 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சம்பவம் நடந்த 27.08.2013 தேதி 16 பணியாளர்களும் மழைநீர் வடிகால் கால்வாயில் 4 பணியாளர்களும் அபேட் பணியில் 4 பணியாளர்களும், புகைப்பரப்பும் இயந்திர மூலம் முதிர்ந்த கொசுக்கள் ஒழிக்கும் பணியில் 2 பணியாளர்களும் மற்றும் 6 பணியாளர்கள் கால்வாயில் பணிபுரிந்தனர். இவர்கள் அனைவரும் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிபுரிந்தனர். சுகாதார ஆய்வாளராகிய எனக்கு இவர்கள் அனைவரையும் மேற்பார்வையிடுவது எனது கடமையாகும். நான் அன்றைய தினம் மேற்குறிப்பிட்டப்படி அனைவருக்கும் பணி ஒதுக்கீடு செய்துவிட்டு புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் முதிர்ந்த கொசுக்கள் ஒழிக்கும் பணியியை மேற்பார்வையிட்டு விட்டு சுமார் காலை 10 மணியளவில் கால்வாயில் நடைபெறும் பணிகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்தபோது மழைநீர் வடிகால் கால்வாயில் பணிபுரிந்த திரு.ஜனார்தனன் என்ற பணியாளர் மழைநீர் வடிகால்வாயில் விஷவாயு தாக்கியதாக செய்தி அறிந்து உடனடியாக அந்த இடத்திற்கு சென்று தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்து தீயணைப்பு மூலமாக மீட்கப்பட்டு இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் சேர்த்தேன். அவரை மருத்துவர் ஆய்வு செய்து இறந்ததாக அறிவித்தார். மேலும் ஜனார்தனன் உட்பட எந்த பணியாளரையும் மழைநீர் வடிகால் கால்வாயில் உள்ளே இறங்கி தூர்வாரும்படி நான் கூறவில்லை.

குற்றச்சாட்டு -1க்கு விசாரணை அலுவலர் அறிக்கை

திரு.சிவபாலன் சுகாதார ஆய்வாளர் தனது கோட்டத்திற்குரிய (கோட்டம்-124) பணியாளர்கள் பணிபுரியும்போது அவர்களை களப்பணியில் பார்வையிடுவது மற்றும் உரிய பாதுகாப்பும் வழங்கவேண்டும் அந்த நிலையில் இருந்து அன்னார் கவனிக்க தவறியுள்ளார். எனவே இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது

குற்றச்சாட்டு -2

That Thiru.P.Sivabalan, Sanitary Inspector, Division-124 Health Department Zone-IX has failed to take precautionary measures before desilting the Storm Water Drain.

குற்றச்சாட்டு -2ற்கு தனியரின் விளக்கம்

நான் எந்த பணியாளரையும் மழைநீர் வடிகால் கால்வாயில் உள்ளே இறங்கி தூர்வாரும்படி நான் கூறவில்லை. மேலே நின்று பாதுகாப்பாக இருந்துக்கொண்டு கொம்பு மூலம் நீரோட்டம் தடைப்பட்ட இடத்தை மட்டும் தெளிந்த நீரோட்டமாக ஏற்படுத்தும்படி கேட்டுக்கொண்டேன். அன்றைய தினம் மண்டலம்-9ல் இதே போன்று பல கோட்டங்களில் மழைநீர் வடிகால் வால்வாயில் சுகாதாரத்துறை மூலம் பணிகள் நடைபெற்று வந்தது. மழைநீர் வடிகால் கால்வாயில் உள்ளே இறங்க வேண்டாம் என்று கூறி கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்வாய் பணிகள் உள்ளே இறங்கி பணி செய்ய தேவை இல்லாதால் எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் தேவைப்படவில்லை.

குற்றச்சாட்டு -2ற்கு விசாரணை அலுவலரின் அறிக்கை

மேலும் பணியாளர்கள் எவரும் மழைநீர் வடிகால்வாய்க்குள் இறங்கிவிடாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதும், சுகதாதார ஆய்வாளர் திரு.சிவபாலன் அவர்களின் கடமையாகும். எனவே இக்குற்றச்சாட்டும் நிரூபணமாகிறது.

குற்றச்சாட்டு -3

That Thiru.P.Sivabalan, Sanitary Inspector, Division-124, Health Department, Zone-IX has violated the rule 20 of the Madras Corporation Servants conduct Rules 1968.

பொ.து.ந.க.எண்.இ7/ 32295/ 2019

குற்றச்சாட்டு -3ற்கு தனியரின் விளக்கம்

நான் சுகாதார ஆய்வாளராக எனது கடமையை மிக சிறப்பாக செய்து வருகிறேன். இதுவரை எவ்வித குற்றச்சாட்டு இல்லாமல் பணிபுரிந்து வருகிறேன். ஆகவே 1968ம் ஆண்டு சென்னை மாநகராட்சி பணியாளர் நடத்தை விதி-20ஐ மீறியதாக என்மீது சுமத்தும் குற்றச்சாட்டை மறுக்கிறேன்.

குற்றச்சாட்டு -3ற்கு விசாரணை அலுவலரின் அறிக்கை

திரு.சிவபாலன், சுகாதார ஆய்வாளர் தனது பணியினை செய்யத் தவறியுள்ளார் எனவே அன்னார் மீதான இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

குற்றச்சாட்டு 1 முதல் 3 வரைக்கு தனியரின் கூடுதல் விளக்கம்.

திரு.பி.சிவபாலன், சுகாதார ஆய்வாளர், மண்டலம் -9, கோட்டம்-124, அவர்களின் 04.02.2019 நாளிட்ட கூடுதல் விளக்கத்தில், தான் 27.08.2013 அன்று கோட்டம்-126ல் 16 பணியாளர்கள் பணியில் இருந்தனர். 6 பணியாளர்கள் கால்வாயில் பணிபுரிந்தனர். 2 பணியாளர்கள் முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் புகைபரப்பும் பணியில் இருந்தனர். 4 பணியாளர்கள் கொசுப்புழு ஒழிப்பு பணியில் வீடுகள் தோறும் மருந்து போடும் பணியில் இருந்தனர். 4 பணியாளர்கள் மழைநீர் கால்வாயில் பணிபுரிந்தனர். பணியில் இருந்த 16 பணியாளர்கள் வெவ்வேறு இடத்தில் பணி செய்துக்கொண்டு இருந்தனர். இவர்கள் அனைவரையும் ஆய்வு செய்வது எனது கடமையாகும். மேலும், அம்மா உணவகம் ஆய்வு செய்தல், குடிநீர் பரிசோதித்தல், நோய் தடுப்பு பணிகள், புகார்கள் ஆய்வு செய்தல் போன்ற பணிகளும் உள்ளது. நான் மழைநீர் வடிகால்வாயில் இறங்கி பணிபுரிய சொல்லவில்லை கால்வாயில் மேல் இருந்துக்கொண்டு மருந்து அடிக்கவும், நீரோட்டத்தை தெளிவுப்படுத்தவும் அறிவுரை வழங்கியுள்ளேன். அதையும் மீறி அவர் உள்ளே இறங்கி உயிர் இழந்துள்ளார். மேலும் இது தொடர்பான வழக்கில் சைதாப்பேட்டை 18-வது பெருநகர நீதிமன்றம் என்னை குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து குவிமுச255(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளது என்று எனது விளக்கத்தினை அளித்தேன். ஆனால் விசாரணை அலுவலரின் அறிக்கையில் எனக்கு வழங்கப்பட்ட 9(2) குற்றச்சாட்டு குறிப்பாணையில் குறிப்பிட்டு இருந்த மூன்று குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகிறது என்று குறிப்பிட்டுள்ளார். நான் அளித்துள்ள விளக்கத்தில் நீதிமன்றம் என்னை குற்றவாளி இல்லை என்று தீர்ப்பளித்துள்ளது என்பதை விசாரணை அலுவலர் ஏற்றுக்கொள்ளவில்லை நீதிமன்ற ஆணைக்கு எதிராக அறிக்கை அளித்துள்ளார். கடந்த நான்கு வருடமாக நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கை சென்னை மாநகராட்சி ஒத்துழைப்பு இல்லாமல் தனியாக நடத்தி வந்தேன் நான்கு வருடங்களும் எனக்கு மிகுந்த மன வேதனை தந்துள்ளது. மேலும், தற்போது விசாரணை அலுவலர் நீதிமன்ற ஆணையை ஏற்றுக்கொள்ளாமல் குற்றச்சாட்டு நிரூபணமாகிறது என்று குறிப்பிட்டுள்ளது மீண்டும் எனக்கு மிகுந்த மனவேதனை அளிக்கிறது.

நீதிமன்ற ஆணையில் என்னை குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து குவிமுச.255(1)ன் கீழ் விடுதலை செய்து 04.05.2018 அன்று தீர்ப்பளித்துள்ளது. எனவே நீதிமன்ற ஆணை மற்றும் மேற்கண்ட விளக்கத்தினை ஏற்றுக்கொண்டு 9(2)- குற்றச்சாட்டு குறிப்பாணையில் இருந்து என்னை விடுவிக்குமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்து தனது கூடுதல் விளக்கத்தினை அளித்துள்ளார். எனவே தனியர் அளித்த கூடுதல் விளக்கத்தினையும், தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையையும் முடிவுக்கு கொண்டுவர மேல்நடவடிக்கைக்காக மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களுக்கு கோப்பு மற்றும் பணிப்பதிவேடுடன் அனுப்பிவைக்கப்பட்டது.

மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் 20.06.2019 நாளிட்ட செயல்முறை ஆணையில் தனியருக்கு இறுதி ஆணை கீழ்கண்டுள்ளவாறு அளிக்கப்பட்டுள்ளது **"With hold increment for 3 month with cumulative effect"** என தெரிவித்து ஆணையிடப்பட்டுள்ளது.

19.08.2019 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவில், தனியர் தனக்கு அளிக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் வழங்கப்பட்ட தண்டணையை ஆட்சேபித்து மேல்முறையீடு செய்து நீதிமன்ற ஆணை மற்றும் தனது விளக்கத்தினை ஏற்றுக்கொண்டு 9(2)ன் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு தனக்கு வழங்கப்பட்ட தண்டனையில் இருந்து தன்னை விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆகவே, திரு.பி.சிவபாலன், சுகாதார ஆய்வாளர், அவர்கள் 19.08.2019 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவில், ஏற்கனவே கூடுதல் விளக்கத்தில் தெரிவித்த விளக்கங்களையே மீண்டும் அளித்துள்ளார். மேலும், தனியர் வகுப்பு 3யை சார்ந்த பணியாளர் என்பதால், தனியர் அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது உரிய முடிவெடுக்கும் பொருட்டு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த ஆணையரது 20.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

" Earlier punishment stands confirmed, என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.இ7/ 19658/ 2020 &
ம.சே.து.ந.க.எண்.எப்5/0743/2020

தீர்மான எண்.677/2020 **நாள்:24-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - திருமதி. R. சரஸ்வதி, மருந்தாளுநர், மருத்துவ சேவைகள் துறை (ஊதியம் பெறும் இடம் இராயபுரம் மருத்துவ மண்டலம் - 5) அவர்கள் 30.09.2020 அன்று பிற்பகல் தன் விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை (ஊதியம் பெறும் இடம் இராயபுரம் மருத்துவ மண்டலம்) மருந்தாளுநராக பணிபுரியும் திருமதி. R. சரஸ்வதி அவர்கள் தனது உடல்நிலை மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக தன் விருப்ப ஓய்வு வேண்டி 03/07/2020 நாளிட்ட மனு விண்ணப்பித்துள்ளார்.

திருமதி. R. சரஸ்வதி அவர்கள் 21.02.1991 அன்று மருந்தாளுநராக பணியில் சேர்ந்து பணி புரிந்து வருகிறார். இவர் மருந்தாளுநர் பதவியில்21.02.1991 அன்று பணிவரன்முறைப்படுத்தியும் 21.02.1993 அன்று தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தனியரது தாய்மொழி தமிழ் ஆகும்.

மண்டல மருத்துவ அலுவலர், இராயபுரம் மருத்துவ மண்டலம் அவர்களின் 20.07.2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது தணிக்கை தடை, மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. மண்டல மருத்துவ அலுவலர், கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம் அவர்களின் 23.07.2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது தணிக்கை தடை, மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. கண்காணிப்பாளர் -2 மருத்துவ சேவைகள் துறை அவர்களின் 20.07.2020 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார்.

விழிப்பு அலுவலர் அவர்களின் 30.07.2020 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. மருத்துவ சேவைகள் துறை தணிக்கை பிரிவின் 11.09.2020 நாளிட்ட குறிப்பில், தனியர் மருத்துவ சேவைகள் துறையில் 21.02.1991 முதல் இந்நாள் வரை பணியாற்றிய காலத்திற்கு தனியர் மீது தணிக்கைத் தடை பத்தி நிலுவை இல்லையெனவும், மேலும் 2019 - 2020 மற்றும் 2020 - 2021 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளி வந்தவுடன் தணிக்கைதடை நிலுவை குறித்து பின்னர் தெரியவரின் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என நிபந்தனையுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இயக்குநர், மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு அவர்களின் 26.08.2020 நாளிட்ட கடிதத்தில் மேற்படி தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு அலுவலக சங்கத்தின் 20.07.2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் இச்சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 54 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 29 ஆண்டுகள் 07 மாதங்கள் 08 நாள் ஆகும். தனியரின் பிறந்த நாள் - 06.07.1965. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.07.2024.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்: 07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்: 11.12.1995ன்படியும், தனியர் 29 ஆண்டுகள் 07 மாதங்கள் 08 நாள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதாலும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

பொ.து.ந.க.எண்.இ7/ 19658/ 2020 &
ம.சே.து.ந.க.எண்.எப்5/0743/2020

எனவே, மேலே தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் திருமதி. R. சரஸ்வதி, மருந்தாளுநர், மருத்துவ சேவைகள் துறை (ஊதியம் பெறும் இடம் இராயபுரம் மருத்துவ மணடலம் – 5) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, 2019 – 20 மற்றும் 2020 – 21 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளிவந்தவுடன் ஏதேனும் தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, 30.09.2020 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.இ12/ 18327/ 2019

தீர்மான எண்.678 / 2020 **நாள்:24-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.கே.சங்கர், ஓட்டுநர், லாரி நிலையம், மண்டலம்-13, காலமான நாள் 19.02.2002 - அன்னாரின் வாரிசுதாரர் செல்வி.எஸ்.திவ்யா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க - நீதிமன்ற பேராணை எண். W.P.No.1135/2015, நாள்.28.07.2017 மற்றும் W.A.No.1814/2018 & C.M.P No.14614/2018, நாள்.05.10.2018 - அரசாணை பெறப்பட்டது - கருணை அடிப்படையில் வேலை வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலகம்-13, லாரி நிலையத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து 19.02.2002 அன்று பணியிடை காலமான திரு.கே.சங்கர் என்பவரின் வாரிசுதாரரும், மகளுமான செல்வி. எஸ்.திவ்யா என்பவர் தான் மாத ஓய்வூதியம் பெற்று வருவதாகவும், தாத்தா, பாட்டியின் பராமரிப்பில், வளர்ந்து வருவதாகவும், தற்போது 18 வயது பூர்த்தி அடைந்து விட்டதால், கருணை அடிப்படையில் பணி வேண்டி பணியாளர் காலமான 12 ஆண்டுகள் கழித்து முதன் முதலில் 07.11.2014 நாளிட்ட மனு சமர்ப்பித்துள்ளார்.

செல்வி திவ்யா என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரந்த வழக்கில், நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.1135/2015, dated28.07.2017 நீதிமன்ற ஆணையில், *"""In View of the legal principles laid down in the decision cited supra, now, a direction cannot be issued in this Writ Petition. Accordingly, **this Writ Petition stands dismissed**. No Costs".* தள்ளுபடி செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் செல்வி.எஸ்.திவ்யா என்பவர் மேல்முறையீட்டு வழக்கினை W.A.No.1814/2018 & C.M.P No.14614/2018, dated.05.10.2018 பதிவு செய்து, கீழ்காணும் மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்கின் மீது நீதிமன்ற ஆணை பெற்றுள்ளார்.

"The respondents are directed to consider the representation dated 07.11.2014 made by the appellant for compassionate appointment, taking note of the circumstances, ie. whether there is existence of indigent circumstances or not, and also other requirements and pass appropriate orders on merits and in accordance with law, within a period of three months from the date of receipt of a copy of this judgment. It is made clear that the period from the date of the death of the appellant's father till the appellant attained the age of majority, shall be excluded, **while considering the application made by the appellant for compassionate appointment",** என தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வி.எஸ்.திவ்யா என்பவர் அளித்துள்ள 04.02.2019 நாளிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டு வழக்கின் மனு வழங்கப்பட்ட நீதிமன்ற ஆணையின் அடிப்படையில், 07.11.2014 அன்று அளித்த மனு மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு கருணை அடிப்படையில் பணி வழங்கக் கோரி மனுவில் தெரிவித்துள்ளார்.

எனவே, நீதிமன்ற உத்தரவினை அமல்படுத்திடவும், நீதிமன்ற அவமதிப்பினை தவிர்த்திடவும், இப்பொருள் தொடர்பாக அரசிடம் உரிய ஆணை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக அரசிடமிருந்து அரசாணை (4ப) எண்.02, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந-3) துறை, நாள்.25.02.2020 வெளியிடப்பட்டு அவ்வரசாணையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

""மேற்காணும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயற்குறிப்பு அரசால் விரிவாக பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனைக்குப்பின், பெருநகர சென்னை மாநகராட்சியில் ஓட்டுநராக பணிபுரிந்து பணியிடை காலமான திரு.கே.சங்கர் என்பவரின் வாரிசுதாரரும், மகளுமான செல்வி.எஸ்.திவ்யா என்பவருக்கு நீதிமன்ற தீர்ப்பினை (W.A.No.1814/2018 & C.M.P No.14614/2018, dated 05.10.2018) நடைமுறைப்படுத்தவும், தனியரின் தாய் தந்தையை இழந்து அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளதாலும், இதனை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, அரசு ஊழியர் பணியிடை மரணமடைந்து 12 ஆண்டுகள் கடந்து, கருணை அடிப்படையில் பணி கோரி 07.11.2014 அன்று அளிக்கப்பட்ட விண்ணப்பத்தினை ஏற்று, நிர்ணயிக்கப்பட்ட மூன்றாண்டு காலத்திற்குள் விண்ணப்பம் பெறப்படாமையால், அரசு கடிதம் (நிலை) எண்.202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள்.08.10.2007-இன்படி, நிர்ணயிக்கப்பட்ட மூன்றாண்டு காலத்திற்குள் கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பம் அளிக்க வேண்டும் என்ற

பொ.து.ந.க.எண்.இ12/ 18327/ 2019

நிபந்தனைக்கு தனியர் பொருட்டு விலக்களிக்கலாம் எனவும், தனியரின் கல்வித் தகுதிக்கேற்ப அவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற, இன்ன பிற தகுதிகளையும் நிறைவு செய்துள்ளாரா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, பணியிடை காலமான திரு.கே.சங்கர் என்பவரின் வாரிசுதாரரும், மகளுமான செல்வி.எஸ்.திவ்யா என்பவரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்வதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி அளிக்கலாம் எனவும் முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

எனவே சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பினை நிறைவேற்றும் விதமாகவும், அரசாணை (4ப) எண்.02, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.25.02.2020ன்படியும், மனுதாரர் செல்வி.எஸ்.திவ்யா, த/பெ. திரு.கே.சங்கர் அவர்களுக்கு அரசு விதிகளின்படி அனைத்து தகுதிகளையும் பெற்றிருப்பதன் அடிப்படையிலும், பணி வழங்குவதற்கான அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாலும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை தவிர்க்கும் பொருட்டு, மனுதாரருக்கு கருணை அடிப்படையில், ஊதிய விகிதம் Level-1 ரூ.15,700-50,000 என்ற ஊதிய விகிதத்தில் சாலைப்பணியாளர் பதவியில் நியமனம் செய்து பணி நியமன ஆணை வழங்க, சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களின் அனுமதி வேண்டி கோப்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

பணி நியமனம் செய்யப்படும் பதவியின் விவரம் பின்வருமாறு

வ. எண்	வாரிசுதாரரின் பெயர் மற்றும் இறந்த பணியாளருக்கு உறவுமுறை / முகவரி	காலமான பணியாளரின் பெயர்/பதவி/ மண்டலம்/ காலமான நாள்	பணி நியமனம் செய்யப்படும் பதவி / துறை
1	செல்வி.எஸ்.திவ்யா த/பெ. திரு.கே. சங்கர் (லேட்) எண்.67/26, மசூதி தெரு சைதாப்பேட்டை சென்னை-600 015. பொ.து.ந.க.எண்.இ12/018327/2019	திரு.கே.சங்கர் ஓட்டுநர், லாரி நிலையம் மண்டலம்-13 19.02.2002	சாலைப்பணியாளர் (பேருந்து சாலைகள் துறை)

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து பணியிடை காலமான பணியாளரின் வாரிசுதாரருக்கு மேற்காணும் அட்டவணையில் எதிரே குறிப்பிட்டுள்ளபடி, சாலைப்பணியாளர் பதவியில் பணிநியமனம் வழங்கவும், இவருக்கு தகுதியான பதவிகள் பின்னர் மூன்றாம் நிலையில் ஏற்படும் காலிப் பணியிடத்தில் உரிய தகுதியின் அடிப்படையிலும், விதிகளின்படியும் பதவி உயர்வு வழங்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், பணியேற்ற நாளிலிருந்து தகுதிகாண் பருவம் காலமான ஓராண்டு பணிகாலத்தை பணியேற்ற இரண்டாண்டு காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், Level-1 ரூ.15,700-50,000 என்ற ஊதிய விகிதத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதற்கு, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 20.03.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதற்கு, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.நீ.வ.து.ந.க.எண்.பி2 /0720/2020

தீர்மான எண்.679 / 2020 **நாள்:24-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIF) 2020 - 21 நிதியின் கீழ் மண்டலம் - 10 ல் உள்ள வார்டு-129,130,131,137 மற்றும் 138ல் அமைந்துள்ள ஆர்காட் சாலை மற்றும் அண்ணா பிரதான சாலைகளில் புதியதாக மழைநீர் வடிகால் கட்டும் பணிகள் - ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது - குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டதிற்காக (TURIF 2020-21) மண்டலம் - 10ல் உள்ள வார்டு-129,130,131,137 மற்றும் 138ல் அமைந்துள்ள ஆர்காட் சாலை மற்றும் அண்ணா பிரதானசாலைகளில் புதியதாக மழைநீர் வடிகால் கட்டும் பணிகள் ரூ.553 இலட்சங்கள் மதிப்பீட்டிற்கு 02.07.2020 அன்று நடைபெற்ற ஒப்புதல் அளிக்கும் குழுமம் (PSC) கூட்ட அறிக்கையில் ஒப்புதல் வழங்கப்பட்டு, சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் தீர்மானம் எண்:493/2020 நாள். 20.07.2020 ன் படி அனுமதி பெறப்பட்டது.

இதன்படி, இப்பணிகளுக்கு மின்னணு ஒப்பங்கள் கோரி 19.08.2020 அன்று ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழ் தி இந்து , தமிழ் நாளிதழ் நமது அம்மா ஆகிய நாளிதழ்களிலும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது. மின்னணு முறையில் (e-tender) மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. சில நிர்வாக காரணங்களினால் ஒப்பங்கள் 04.09.2020 கோருவதற்கு உரிய அலுவலரிடம் அனுமதி பெறப்பட்டது.

ஒப்ப நாளான 04.09.2020 அன்று இப்பணிக்கான ஒப்பத்தின் ஆவணங்கள், கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. இப்பணிக்கான விலைப்புள்ளி ஆவணங்கள் திறக்கப்பபட்டதில், ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

அட்டவணை-1

வ. எண்.	கோப்பு எண்	ஒப்பத்தில் பங்குபெற்ற ஒப்பந்ததாரர் களின் பெயர் திரு/ திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை (2019-20) (ரூபாய்) (GST வரி 12 % உட்பட)	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (ரூபாய்) (அனைத்து வரிகள் உள்பட)	2019-20 அலுவலக விலை விகிதம் விழுக்காடு (GST வரி 12 % உட்பட)
01	பி2/0720/2020/1	T.குமார்	1,15,37,201.66	1,21,00,217.10	(+)4.88%
		செல்வலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்		1,25,17,863.8	(+)8.50%
02	பி2/0720/2020/2	K.தனசேகரன்	1,29,08,984.20	1,35,47,978.96	(+)4.95%
		செல்வலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்		1,40,83,701.81	(+)9.10%
03	பி2/0720/2020/3	சீனிவாச எண்டர்பிரைசஸ்	1,86,41,576.92	1,95,64,334.98	(+)4.95%
		அண்ணா மலை எண்டர்பிரைசஸ்		2,01,98,148.59	(+)8.35%
04	பி2/0720/2020/4	பியர்ல் இன்ஜீனீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கோ ஆப்ரேடிவ் சொசைட்டி	1,00,59,762.80	1,05,57,721.07	(+)4.95%
		எம்.பி.கே.எண்டர்பிரைசஸ்		1,09,14,842.65	(+)8.50%
		பி.டி.கிருஷ்ணசாமி		1,10,15,440.28	(+)9.50%

குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு

ம.நீ.வ.து.ந.க.எண்.பி2 /0720/2020

அட்டவணை-2

வ. எண்.	கோப்பு எண்	குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரர் களின் பெயர் திரு/ திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை (2019-20) (ரூபாய்) (GST வரி 12 % உட்பட)	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (ரூபாய்) (அனைத்து வரிகள் உள்பட)	2019-20 அலுவலக விலை விகிதம் விழுக்காடு (GST வரி 12 % உட்பட)
01	பி2/0720/2020/1	T.குமார்	1,15,37,201.66	1,21,00,217.10	(+)4.88%
02	பி2/0720/2020/2	K.தனசேகரன்	1,29,08,984.20	1,35,47,978.96	(+)4.95%
03	பி2/0720/2020/3	சீனிவாச எண்டர்பிரைசஸ்	1,86,41,576.92	1,95,64,334.98	(+)4.95%
04	பி2/0720/2020/4	பியர்ல் இன்ஜீனீயர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கோ ஆப்ரேடிவ் சொசைட்டி	1,00,59,762.80	1,05,57,721.07	(+)4.95%

குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பத்தொகையானது 2019-20ம் ஆண்டின் (12% GST சேர்த்து) விலைபட்டியல்படி, அலுவலக மதிப்பீடு தொகையை விட (+)4.88% முதல் (+)4.95% வரை அதிகமாக இருப்பதால், விலைக்குறைப்பு செய்ய ஒப்பந்ததாரருக்கு கடிதம் அளிக்கப்பட்டது.

குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரர்களிடம் நடைபெற்ற விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப்பின், நான்கு ஒப்பந்ததாரர்களும் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். பேச்சுவார்த்கைக்குபின் அளித்த விலைக்குறைப்பு ஒப்பப்புள்ளி தொகையானது 2019-2020 ஆம் ஆண்டு அலுவலக விலையுடன் ஒப்பிட்டு கீழ்கண்டவாறு பட்டியலிடப்படுகிறது.

அட்டவணை-3

வ. எண் .	கோப்பு எண்	குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரர் களின் பெயர் திரு/ திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை (2019-20) (ரூபாய்) (GST வரி 12 % உட்பட)	பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத் தொகை (ரூபாய்) (அனைத்து வரிகள் உள்பட)	பேச்சு வார்த்தை க்கு பின் 2019-20 அலுவலக விலை விகிதம் விழுக்கா டு (GST வரி 12 % உட்பட)	பேச்சு வார்த்தை க்கு பின் 2020-21 அலுவலக விலை விகிதம் விழுக்கா டு (GST வரி 12 % உட்பட)
01	பி2/0720/2020/1	T.குமார்	1,15,37,201.66	12090987.33	(+)4.80%	(-)0.01%
02	பி2/0720/2020/2	K.தனசேகரன்	1,29,08,984.20	13535069.98	(+)4.85%	(+)0.35%
03	பி2/0720/2020/3	சீனிவாச எண்டர்பிரைசஸ்	1,86,41,576.92	19555014.19	(+)4.90%	(+)0.40%
04	பி2/0720/2020/4	பியர்ல் இன்ஜீனீயர்ஸ் கன்ஸ்ட்ரக் ஷன்ஸ் கோ ஆப்ரேடிவ் சொசைட்டி	1,00,59,762.80	10552691.18	(+)4.90%	(+)0.39%

ம.நீ.வ.து.ந.க.எண்.பி2 /0720/2020

2019-2020 ஆண்டின் அலுவலக விலை பட்டியலுடன் ஒப்பிடுகையில் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தொகை (+)4.80% சதவீதம் முதல் (+)4.90% வரை அதிகமாக உள்ளன. மேலும், 2020-2021 ஆண்டின் அலுவலக விலை பட்டியலுடன் ஒப்பிடுகையில் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தொகை (-)0.01% சதவீதம் முதல் (+)0.40% வரை அதிகமாக உள்ளன.

எனவே, இந்த ஒப்பந்தப்புள்ளி சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்து ஆராயும் குழுமத்தின் பரிந்துரை வேண்டி 14.09.2020 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும்.

2) இப்பணியானது தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIF) 2020 - 21 நிதியின் கீழ் மண்டலம் – 10 ல் உள்ள வார்டு-129,130,131,137 மற்றும் 138ல் அமைந்துள்ள ஆர்காட் சாலை மற்றும் அண்ணா பிரதான சாலைகளில் புதியதாக மழைநீர் வடிகால் கட்டும் பணிகளுக்கு, அதற்கான மூலப்பொருள்கள் விலை, தொழிலாளர்கள் ஊதிய உயர்வு மற்றும் போக்குவரத்து வாகன செலவு பெருகி உள்ளதால் அலுவலக விலையை விட ஒப்பந்தப்புள்ளி விலை அதிகமாக உள்ளது.

3) ஒப்பந்தப்புள்ளி தொகையானது 2019-2020ம் ஆண்டின் அலுவலக விலைபடி (12% GST சேர்த்து) (+)4.80% முதல் (+)4.90% வரை அதிகமாக உள்ளது. மேலும் 2020-2021 ஆண்டின் அலுவலக விலை பட்டியலுடன் ஒப்பிடுகையில் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தொகை (-)0.01% முதல் (+)0.40% வரை உள்ளதனால் இவ்வொப்பத்தை ஏற்கலாம் எனக் கருதப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு, இப்பணிகளை வழங்க ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமம் 14.09.2020 அன்று பரிந்துரைத்துள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளை செயல்படுத்த ஒப்பங்கள் கூர்ந்தாய்வுக் குழுமத்தினால் (Tender Scrutinizing Committee) பரிந்துரைக்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு அட்டவணை-3ன்படி 2019-20 அலுவலக விலை விகிதம் படி ஒப்ப சதவீதம் (+)4.80% முதல் (+)4.90% வரை அதிகத்தில் பணிகளை வழங்க சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"ஒப்பம் வழங்க சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பூ.து.ந.க.எண். பி2/ 133/ 2020

தீர்மான எண்.680/2020 **நாள்:24-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - பூங்கா துறை - 2019-20 ஆம் ஆண்டின் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மண்டலம்-9, வார்டு-112, கோடம்பாக்கம், டிரஸ்ட்புரம், முதல் மெயின் ரோட்டில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர்கள் கேலரி, சுற்றுச்சுவர் வேலி, விழாமேடை மற்றும் புதிய நடைபாதை அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.95.60 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது - தற்போது மத்திய அரசின் மூலம் கோவிட்-19 பணிகளுக்கு முன்னுரிமை அளித்து நாடாளுமன்ற நிதி குறைக்கப்பட்டதால் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நாடாளுமன்ற நிதி ரூ.1.00 கோடியிலிருந்து ரூ.50.00 லட்சமாக ஒதுக்கப்பட்டுள்ளது - ரூ.50.00 லட்சம் மதிப்பீட்டிற்கு மட்டும் இப்பணியினை மேற்கொள்வதற்கு திருவாளர்கள்.என்.விவேக் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும், விடுபட்ட பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை ரூ.55.00 லட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பம் கோருவதற்கும் அனுமதி.

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் பரிந்துரையின்படி, 2019-20 ஆம் ஆண்டின் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மண்டலம்-9, வார்டு-112, கோடம்பாக்கம், டிரஸ்ட்புரம் முதல் மெயின் ரோட்டில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர்கள் கேலரி, சுற்றுச்சுவர் வேலி, விழாமேடை மற்றும் புதிய நடைபாதை அமைக்கும் பணிக்கு ரூ.95,60,000/- மதிப்பீட்டிற்கு ஆணையர் அவர்களின் 25/02/2020 நாளிட்ட ஆணைப்படி ஒப்புதல் பெறப்பட்டது. இதன்படி, இப்பணிக்காக ஒப்பம் கோரப்பட்டு, 24.03.2020 அன்று ஒப்பம் திறக்கப்பட்டது.

இந்நிலையில், 25.03.2020 அன்று முதல் ஊரடங்கு தடை உத்தரவு அமுலுக்கு வந்ததாலும், கண்காணிப்பு பொறியாளர்/கட்டடம் அவர்களின் 24.06.2020 நாளிட்ட கடிதத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவுள்ள பணிகளில் முடியவுள்ள மற்றும் நடைபெறும் பணிகள் தவிர்த்து மற்ற வெவ்வேறு நிலைகளில் உள்ள பணிகள் அனைத்தின் மீதும் நாடாளுமன்ற உறுப்பினரிடமிருந்து பணிகளில் தேர்வு பட்டியல் பெறப்பட்டு மறு தகவல் தெரிவிக்கும் வரை மேற்கண்ட பணியின் தொடர்பான எவ்வித மேல் நடவடிக்கையும் தொடரப்பட வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்பட்டது. ஒப்பத்தின் மீதான பரிசீலனையும் நிறுத்தப்பட்டது.

கண்காணிப்பு பொறியாளர்(கட்டடம்) அவர்களின் 16.07.2020 நாளிட்ட கடிதத்தில் மத்திய அரசின் சுற்றறிக்கையின்படி, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் தேர்வு பட்டியல் பெறப்பட்டதால், இவ்வொப்பத்திற்கான பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது.

1	பணியின் பெயர்	:	மண்டலம்-9, வார்டு-112, கோடம்பாக்கம், டிரஸ்ட்புரம், முதல் மெயின் ரோட்டில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர்கள் கேலரி, சுற்றுச்சுவர் வேலி, விழாமேடை மற்றும் புதிய நடைபாதை அமைக்கும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	:	ஆணையர் அவர்களின் ஆணை, நாள்.25.02.2020.
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	:	பூங்கா துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	:	2019-20 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)

பூ.து.ந.க.எண். பி2/ 133/ 2020

5	**மதிப்பீட்டின் தொகை :**	:	ரூ. 95,60,000.00
	(அ) பணியின் மதிப்பு மற்றும் ஜி.எஸ்.டி 12%	:	ரூ. 94,75,619.72
	(ஆ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	:	ரூ. 84,380.30
	மொத்தம்	:	**ரூ. 95,60,000.00**
6	எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	:	1. நியூ இந்து நாளிதழ், நாள்: 29.02.2020 2. மக்கள் குரல், நாள்: 29.02.2020 3. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், நாள்: 05.03.2020
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	:	23.03.2020
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லை எனில் உரிய அலுவலகரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்	:	ஆம்
9	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	:	நான்கு - இணையத்தளத்தின் (e-tender) மூலம் ஒப்பப்படிவங்கள் பெறப்பட்டுள்ளது.

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்,

வ. எண்	திரு / திருவாளர்கள்/ திருமதி	பணியின் அலுவலக மதிப்பு ரூ. (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	2019-20 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)
1	சி.எஸ் கன்ஸ்ட்ரக்ஷன்	ரூ.94,75,619.72	1,01,38,913.10	(+) 7.00 % அதிகம்
2	எஸ்.எம்.கே. கான்ட்ரக்டர்ஸ்	ரூ.94,75,619.72	1,05,17,937.89	(+) 11.00 % அதிகம்
3	என்.விவேக் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ரூ.94,75,619.72	1,00,44,156.90	(+) 6.00 % அதிகம்
4	செல்வலஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ரூ.94,75,619.72	குறித்த நேரத்தில் ஒப்ப ஆவணங்கள் அளிக்காததால் அவர்களது ஒப்பம் நிராகரிக்கப்பட்டது	

10	குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்	:	14.08.2020 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.
11	பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம்	:	ரூ. 99,00,127.48 (+) 4.48 % அதிகம் 2019-20 ஆம் ஆண்டின் விலை விவரப்படி அதிகம் (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)
12	குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு	:	வகுப்பு: 1
13	பணிக்கான நிதி ஆதாரம்	:	மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி
14	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	:	24.09.2020

பூ.து.ந.க.எண். பி2/ 133/ 2020

மேற்கண்டவற்றின்படி, ஒப்பம் கோரப்பட்டது. ஒப்ப இறுதி நாளான 24.03.2020 அன்று 4 ஒப்பங்கள் e-tender மூலமாக பெறப்பட்டன. இதில், திருவாளர்கள். செல்வலஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் குறித்த நேரத்தில் ஒப்ப ஆவணங்கள் அளிக்காததால் அவர்களது ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள மூன்று ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்கள் திறக்கப்பட்டது. இதில், குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.என்.விவேக் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பத் தொகை 2019-20 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத் தொகை (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.*94,75,619.72*-ஐ விட (+)6.00% அதிகமாகும். இதன்படி, குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.*1,00,44,156.90* ஆகும். இதன் தொடர்ச்சியாக, 14.08.2020 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதமானது 2019-20 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத்தொகையை விட (+)4.48% அதிகம் ஆகும். இதன்படி, ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத்தொகை ரூ.99,00,127.48 ஆகும். இவ்வொப்ப தொகையை 2020-21 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் ஒப்ப விழுக்காடு (+) 0.29% அதிகமாகும்.

பணியின் மதிப்பு (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 94,75,619.72
ஒப்பந்தாரரின் ஒப்பத்தொகை (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 99,00,127.48
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2019-20 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி	(+) 4.48 % அதிகம்
2020-21 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	(+) 0.29 % அதிகம்

அதன்படி, 01.09.2020 அன்று நடந்த ஒப்ப கூர்ந்தாய்வுக்குழுவில் (Tender Scrutiny Committee) மேற்கண்ட பணிக்காக, (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.99,00,127.48/-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை திருவாளர்கள்.என்.விவேக் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேலும், மத்திய அரசின் மூலம் கோவிட்-19 பணிகளுக்கு முன்னுரிமை அளித்து நாடாளுமன்ற நிதி குறைக்கப்பட்டதால் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நாடாளுமன்ற நிதி ரூ1.00 கோடியிலிருந்து ரூ.50.00 லட்சமாக குறைத்து ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால். ரூ.50.00 லட்சத்திற்கு மட்டும் பணிமேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே, ரூ.50.00 லட்சத்திற்குள் பணி மேற்கொள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.என்.விவேக் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு ஒப்பம் வழங்க சிறப்பு அதிகாரி/ மன்றம் அனுமதி பெறப்பட வேண்டும். இதன்படி, ரூ.50.00 லட்சத்திற்குள் ஒப்பந்த உடன்படிக்கையும் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், பொதுமக்கள் கோரிக்கைக்கிணங்க, நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களால், விடுபட்ட பணிகளையும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்டால்தான் இப்பணி முழுமை பெறும். எனவே, விடுபட்ட பணியினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அதன்படி, விடுபட்ட பணிகளுக்கான மதிப்பீடு ரூ.55.00 லட்சம் மதிப்பீட்டிற்கான பணியினை மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பம் கோரி பணி மேற்கொள்ள சிறப்பு அதிகாரி / மன்றம் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே,

1. மேற்கண்ட பணிக்காக குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.என்.விவேக் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு ரூ.50.00 லட்சத்திற்குள் மட்டும் பணி மேற்கொள்வதற்கான (ஜி.எஸ்.டி.12% சேர்த்து) ((+) 4.48% அதிகம்) ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை வழங்கி, ரூ.50.00 லட்சத்திற்குள் உடன்படிக்கை மேற்கொள்ளவும்,

பூ.து.ந.க.எண். பி2/ 133/ 2020

2. விடுபட்ட பணிகளுக்கான 2020-21 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி (ஜி.எஸ்.டி.12% சேர்த்து) தயார் செய்யப்பட்ட ரூ.55.00 லட்சத்தினை மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், மற்றும் ஒப்பம் கோரி பணி மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி எண்.80(2)ன்படி சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.இ6/ 32074/ 2019

தீர்மான எண்.681/2020 **நாள்:24-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 2019-2020ஆம் பட்டியலாண்டில் வரிவசூலிப்பாளர் பதவிக்கான காலிப்பணியிடங்களை நிரப்புவது - தற்காலிக தெரிவுப்பட்டியல் சுற்றுக்கு விடப்பட்டது - இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி 2019-2020ஆம் பட்டியல் ஆண்டிற்கான வரிவசூலிப்பாளர் பதவிக்கான காலிப்பணியிடங்களை ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி ரூ.19500-62000 என்ற ஊதிய விகிதம் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் நிரப்புவதற்கான பட்டியல் 01.07.2019 என்ற மைய நாளிட்டு (Crucial Date) தயாரிக்கப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப்பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள் 2009ல் வரிவசூலிப்பாளர் பதவிக்கான நியமன முறை மற்றும் கல்வித்தகுதி கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வரிவசூலிப்பாளர் பதவிக்கான நியமன முறை

பதவியின் பெயர்	நியமன முறை	நிர்ணயிக்கப்படும் தகுதி	நிர்ணய நாள்	குறிப்பு
வரி வசூலிப்பாளர்	1. அனைத்து கீழ்வகை பதவிகளிலிருந்து பதவி உயர்வு, தகுதி காண் பருவம் முடித்திருக்க வேண்டும். 2. கீழ்நிலைப்பதவிகளில் 5- ஆண்டுகள் பணிபுரிந்து இருக்க வேண்டும். 3. பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களை 1:2 என்ற விகிதாச்சாரத்தில் அதாவது பதவி உயர்வு மூலம் 1 நபர் மற்றும் நேரடி நியமனம் மூலம் 2 நபர்களைக் கொண்டும் நிரப்பப்பட வேண்டும். ஊட்டப்பதவியில் தகுதியான நபர்கள் இல்லாத பட்சத்தில் பதவி உயர்வுக்கான ஒதுக்கீட்டினை நேரடி நியமனம் மூலம் நிரப்பலாம்	குறைந்தபட்ச கல்வித்தகுதி	7வது ஊதியக்குழு பரிந்துரை ரூ.19500 - 62000 **நிர்ணய நாள்** ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1ஆம் நாள்.	வரிவசூலிப்பாளர் காலிப்பணியிடங்களை 1:2 என்ற விகிதாச்சாரம் மூலம் நிரப்பப்பட வேண்டும். நேரடி நியமனத்திற்கு கல்வித்தகுதியாக பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

வரிவசூலிப்பாளர் பதவிக்கான காலிப்பணியிடங்களின் விவரங்கள் பின்வருமாறு

01.	பதவியின் பெயர்	**வரிவசூலிப்பாளர்**	
02.	மைய நாள்.	**01.07.2019**	

பொ.து.ந.க.எண்.இ6/ 32074/ 2019

03.	7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி புதிய ஊதிய விகிதம்	**ரூ.19500 - 62000**		
04.	2018-2019 தெரிவுப்பட்டியல்	2018-2019ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.		
05.	காலிப்பணியிட விவரம்	1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் மொத்தம் (அ) தற்காலிக பணியிடம் (ஆ) நிரந்தர பணியிடம் (இ)தற்போது பணிபுரிபவர்களின் எண்ணிக்கை		276 000 276 194
		2. (அ) மைய நாளில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம்		000
		(ஆ) மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடம். (01.07.2019 முதல் 30.06.2020 வரை பட்டியலாண்டில் ஓய்வு பெறுவதால் ஏற்பட்டுள்ள /ஏற்படவுள்ள காலிப்பணியிடம்)	4	
		(இ) (i) பதவி உயர்வு வழங்குவதால் பட்டியலாண்டில் ஏற்படவுள்ள காலிப்பணியிடம், (வரிவசூலிப்பாளர் பதவியிலிருந்து உரிமம் ஆய்வாளராக பதவி உயர்வு) (தோராயமாக)	4	
		(ii) பணியிடை காலமானதால் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம். (காலமான நாள்.19.08.2019 & 26.10.2019)	2	
		காலிப்பணியிடம் (4+4+2=10)	**10**	
		3. (அ) **பதவி உயர்வு (2019 - 2020) - (4)** (ஆ) **நேரடி நியமனம் (2019 - 2020) - (6)** (மன்றத்தீர்மானஎண்.13/2015 நாள்.29.01.2015ன்படி 1:2 என்ற விகிதாச்சாரத்தில் பதவி உயர்வு 1-நபர், நேரடி நியமனம்-2 நபர் என்ற கணக்கீட்டில் 2019-2020 பட்டியலாண்டில் பதவி உயர்வு-4 நபர்கள்) நேரடி நியமனம் (2017-2018) - 75 நபர்கள் நேரடி நியமனம் (2018 – 2019) - 7 நபர்கள் நேரடி நியமனம் (2019- 2020) - 6 நபர்கள்		4
		4. அரசாணை எண்.103 பணியாளர் (ம)நிர்வாகச் சீர்திருத்தத்(எஸ்)துறை, நாள்.09.10.2014ன்படி எதிர்பாராத நிகழ்வினால் ஏற்படவுள்ள காலிப்பணியிடம் (4X40%= (1.6) 2		2
		5. மொத்த காலிப்பணியிடம் (4+2=6)		**6**

13.11.2019 நாளிட்ட இவ்வலுவலக சுற்றறிக்கை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் 01.07.2010க்கு முன்னதாக குறைந்தபட்ச பொதுக்கல்விதகுதியுடன் அனைத்து கீழ் வகை பதவிகளில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணிவிவரப்பட்டியல் அளிக்குமாறு அனைத்து வட்டார துணை ஆணையர் அலுவலகங்கள், துறைகள் மற்றும் மண்டலங்களை கோரியதில் 30 பணியாளர்களின் விவரங்களை கொண்ட பணிமூப்புப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சார்நிலைப்பணி விதிகளின்படி இவர்களது பணிமூப்பு ஊட்டப்பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் கணக்கிடப்பட்டுள்ளது.

2019-2020ஆம் பட்டியலாண்டில் வரிவசூலிப்பாளர் பதவிக்கான (Estimated Vacancies) காலிப்பணியிடங்களின் மதிப்பீடு 6 ஆகும். ஆகவே, பணிமூப்புப் பட்டியலில் வரிசை எண்.1 முதல் 6 வரை உள்ள பணியாளர்களின் விவரங்கள் பதவி உயர்வுக்கு பரிசீலிக்கப்பட்டதில் கீழ்கண்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டது.

பொ.து.ந.க.எண்.இ6/ 32074/ 2019

- பணிமூப்புப்பட்டியலில் வரிசை எண்.1ல் இடம் பெற்றுள்ள திரு.G. சுதர்சன், அலுவலக உதவியாளர், மருத்துவ சேவைகள் துறை அவர்கள் மைய நாளுக்கு பின்னர் 10ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளதால், பதவி உயர்வுக்கு பரிசீலிக்க இயலாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
- பணிமூப்புப்பட்டியலில் வரிசை எண்.2ல் இடம் பெற்றுள்ள திரு.K. ராஜேந்திரன், அடிப்படை சுகாதார பணியாளர், மண்டலம்-11 அவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை 9(1)ன் கீழ் மூன்று மாதம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 20.01.2017 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.22, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்(எஸ்)துறை, நாள்.24.02.2014ன்படி, தனியருக்கு கடந்த 5 ஆண்டுகளில் அளிக்கப்பட்ட தண்டனைகளின் விவரத்தினை ஆய்வு செய்கையில் இத்தண்டனை இடம் பெறுவதால், தற்காலிக தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயர் சேர்க்கப்படவில்லை.
- பணிமூப்புப்பட்டியலில் வரிசை எண்.4ல் இடம் பெற்றுள்ள திரு.K. மோகன்பாபு, பதிவுரு எழுத்தர் அவர்கள் கீழ்நிலைப்பதவியான பஞ்சாயத்து செயலாளர் பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டதால், அரசாணை(ப)எண்.197, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந3)துறை, நாள்.15.04.2013ன்படி, பதிவுரு எழுத்தர் பதவி உயர்வு வழங்கப்பட்டது. சென்னை மாநகராட்சி பணி துணை விதியின்படி தனியர் பதிவுரு எழுத்தர் பதவியில் 5 ஆண்டுகள் பணிக்காலத்தை முடிக்காததால் பதவி உயர்வு வழங்க இயலாது.
- பணிமூப்புப்பட்டியலில் வரிசை எண்.7ல் இடம் பெற்றுள்ள திரு.E. சீனிவாசன், அடிப்படை சுகாதார பணியாளர், மண்டலம்-13 அவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை 9(1)ன் கீழ் ஒர் ஆண்டு ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 12.08.2019 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனியருக்கு தண்டனை மைய நாளில் (01.07.2019) நடப்பில் உள்ளதால், தற்காலிக தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயர் சேர்க்கப்படவில்லை.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் 01.07.2019யை மைய நாளாக கொண்ட 2019-2020 ஆம் பட்டியல் ஆண்டின் வரிவசூலிப்பாளர் பதவிக்குரிய தற்காலிக தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரித்து சுற்றுக்கு விடப்பட்டது.

2019-2020ஆம் ஆண்டிற்கான வரிவசூலிப்பாளர் பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல்

வ. எண்.	பெயர் பதவி மற்றும் துறை/மண்டலம் திருவாளர்கள்	பிறந்த தேதி	முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள்
01.	N. சுரேஷ்குமார் கள உதவியாளர் மண்டலம்-7	01/06/1970	28/02/2006
02.	E. ரேணுபிரபா அடிப்படை சுகாதார பணியாளர் பொது சுகாதாரத்துறை மண்டலம்-13	30/04/1982	27/03/2008
03.	J. பிரபாகரன் அடிப்படை சுகாதார பணியாளர் மண்டலம்-12.	05/11/1989	31/03/2008
04.	J. சக்திவேல் களஉதவியாளர் மண்டலம்-7	01/06/1976	03/07/2008
05.	N. ராஜி கள உதவியாளர் சுகாதாரத்துறை மண்டலம்-15.	03/05/1979	06/09/2008
06.	E. சரவணன் அடிப்படை சுகாதார பணியாளர் மண்டலம்-10	15/06/1984	08/09/2008

பொ.து.ந.க.எண்.இ6/ 32074/ 2019

பொதுத்துறையின் 25.02.2020 நாளிட்ட சுற்றறிக்கை மூலம் மேற்படி தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து வட்டார துணை ஆணையர்கள்/துறைத்தலைவர்கள்/ மண்டல அலுவலர்கள் தங்களின் கீழ் பணிபுரியும் அனைத்து சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கும் தவறாமல் சுற்றுக்கு விட்டு, இத்தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து பெறப்படும் ஆட்சேபணைக் கருத்துகளை உரிய ஆவணங்களுடன் 12.03.2020க்குள் பொதுத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

2019-2020ஆம் பட்டியலாண்டின் வரிவசூலிப்பாளர் பதவி உயர்வுக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து பெறப்பட்ட ஆட்சேபணை குறித்த விவரங்கள்

வ.எண். (1)	பெயர் மற்றும் பதவி (2)	ஆட்சேபணை விவரம் (3)	துறையின் கருத்து (4)
01,	மா.டில்லி கணேஷ் பதிவுரு எழுத்தர் மத்திய கணக்கு குழுமம்.	இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கு விண்ணப்பித்திருந்தேன், அவற்றில் தனது பெயர் இடம் பெறவில்லை. வரிவசூலிப்பாளர் பதவி உயர்வுக்கு தனது பெயரை பரிசீலிக்குமாறு கோரியுள்ளார்.	தனியர் இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கு விண்ணப்பித்ததில், பணிமூப்பின் அடிப்படையில் இளையவராக இருந்ததால், இளநிலை உதவியாளர் தற்காலிக தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயர் இடம் பெறவில்லை. மேலும், வரிவசூலிப்பாளர் பதவி உயர்வுக்கான 13.11.2019 நாளிட்ட சுற்றறிக்கையில் தகுதி வாய்ந்த நபர்கள் வரிவசூலிப்பாளர் அல்லது இளநிலை உதவியாளர் இவற்றில் ஏதேனும் ஒரு பதவிக்கு மட்டும் விருப்பம் தெரிவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர் இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கு விருப்பம் தெரிவித்ததால், தனியரின் பெயரினை வரிவசூலிப்பாளர் பதவி உயர்வுக்கு பரிசீலிக்க இயலாது என தெரிவிக்கப்படுகிறது.
02.	ச.புருஷோத்தமன் பதிவுரு எழுத்தர் பேருந்து சாலைகள் துறை	2019-2020ஆம் ஆண்டிற்கான வரிவசூலிப்பாளர் பதவி உயர்வுக்கான தற்காலிக தெரிவுப்பட்டியலில் தனது பெயரினைசேர்க்குமாறு கோரியுள்ளார்.	தனியர் இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கு விண்ணப்பித்ததில், பணிமூப்பின் அடிப்படையில் இளையவராக இருந்ததால், இளநிலை உதவியாளர் தற்காலிக தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயர் இடம் பெறவில்லை. மேலும், வரிவசூலிப்பாளர் பதவி உயர்வுக்கான 13.11.2019 நாளிட்ட சுற்றறிக்கையில் தகுதி வாய்ந்த நபர்கள் வரிவசூலிப்பாளர் அல்லது இளநிலை உதவியாளர் இவற்றில் ஏதேனும் ஒரு பதவிக்கு மட்டும் விருப்பம் தெரிவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர் இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கு விருப்பம் தெரிவித்ததால், தனியரின் பெயரினை வரிவசூலிப்பாளர் பதவி உயர்வுக்கு பரிசீலிக்க இயலாது என தெரிவிக்கப்படுகிறது.

2019-2020ஆம் பட்டியல் ஆண்டிற்கான வரி வசூலிப்பாளர் பதவியிலிருந்து உரிமம் ஆய்வாளராக பதவி உயர்வு பெறுவதால் எற்படும் காலிப்பணியிடம் 6 ஆக கணிக்கப்பட்டிருந்தது. வரி வசூலிப்பாளர் பதவி உயர்வுக்கான மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை-1ம் நாள் ஆகும்.

பொ.து.ந.க.எண்.இ6/ 32074/ 2019

வரி வசூலிப்பாளர் பதவியில், வயது முதிர்வு ஓய்வினால் ஏற்படும் காலிப்பணியிடம்-4 எனவும், பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படும் காலிப்பணியிடம்-3 எனவும், மேலும், அப்பதவியில் பணிபுரிந்து வந்தவர்கள் காலமானதால் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம்-2 எனவும், ஆக மொத்தம் வரி வசூலிப்பாளர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம்-9 என கணிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரங்கள் கீழ்வருமாறு.

வரிவசூலிப்பாளர் பதவிக்கான காலிப்பணியிடங்களின் விவரங்கள் பின்வருமாறு

01.	பதவியின் பெயர்	**வரிவசூலிப்பாளர்**		
02.	மைய நாள்.	***01.07.2019***		
03.	7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி புதிய ஊதிய விகிதம்	**ரூ.19500 - *62000***		
04.	2018-2019 தெரிவுப்பட்டியல்	2018-2019ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.		
05.	காலிப்பணியிட விவரம்	1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் மொத்தம் (அ) தற்காலிக பணியிடம் (ஆ) நிரந்தர பணியிடம் (இ)தற்போதுபணிபுரிபவர்களின் எண்ணிக்கை		276 000 276 194
		2. (அ) மைய நாளில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம்		000
		(ஆ) மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடம். (01.07.2019 முதல் 30.06.2020 வரை பட்டியலாண்டில் ஓய்வு பெறுவதால் ஏற்பட்டுள்ள/ஏற்படவுள்ள காலிப்பணியிடம்)	4	
		(இ) i)பதவி உயர்வு வழங்குவதால் பட்டியலாண்டில் ஏற்படவுள்ள காலிப்பணியிடம், (வரிவசூலிப்பாளர் பதவியிலிருந்து உரிமம் ஆய்வாளராக பதவி உயர்வு) ***(Number of likely promotion)***	3	
		(ii) பணியிடை காலமானதால் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம். (காலமான நாள்.19.08.2019 & 26.10.2019)	2	
		காலிப்பணியிடம் (4+3+2=9)	***09***	
		3. (அ) **பதவி உயர்வு *(2019 - 2020) - (3)*** (ஆ) **நேரடி நியமனம்** (2019 - ***2020) - (6)*** (மன்றத்தீர்மான எண்.13/2015 நாள்.29.01.2015ன்படி 1:2 என்ற விகிதாச்சாரத்தில் பதவி உயர்வு 1-நபர், நேரடி நியமனம்-2 நபர் என்ற கணக்கீட்டில் 2019-2020 பட்டியலாண்டில் பதவி உயர்வு-3 நபர்கள்) நேரடி நியமனம் (2017-2018) - 75 நபர்கள் நேரடி நியமனம் (2018 – 2019) - 7 நபர்கள் நேரடி நியமனம் (2019- 2020) - 6 நபர்கள்		3

		4. அரசாணை எண்.103 பணியாளர் (ம)நிர்வாகச் சீர்திருத்தத்(எஸ்)துறை, நாள்.09.10.2014ன்படி எதிர்பாரத நிகழ்வினால் ஏற்படவுள்ள காலிப்பணியிடம் (3X40%= (1.2) 1		1
		5. மொத்த காலிப்பணியிடம் (3+1=4)		**4**

ஆகவே, மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் 2019-2020ஆம் பட்டியலாண்டில் வரிவசூலிப்பாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு அமைகிறது.

2019-2020ஆம் ஆண்டிற்கான வரிவசூலிப்பாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல்

வ.எண்.	பெயர் பதவி மற்றும் துறை/மண்டலம் திருவாளர்கள்	முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள்
01.	N. சுரேஷ்குமார் கள உதவியாளர் மண்டலம்-7	28/02/2006
02.	E. ரேணுபிரபா அடிப்படை சுகாதார பணியாளர் பொது சுகாதாரத்துறை மண்டலம்-13	27/03/2008
03.	J. பிரபாகரன் அடிப்படை சுகாதார பணியாளர் மண்டலம்-12.	31/03/2008
04.	J. சக்திவேல் களஉதவியாளர் மண்டலம்-7	03/07/2008

தற்போது வரிவசூலிப்பாளர் பதவியில் 3 காலிப்பணியிடம் மட்டுமே உள்ளதால், மேற்கண்ட இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள 4 நபர்களில், வரிசை எண்.1 முதல் 3 வரை உள்ள நபர்களுக்கு மட்டுமே வரிவசூலிப்பாளர் பதவி உயர்வு வழங்க இயலும் என்றும், இறுதி தெரிவுப்பட்டியலில் வரிசை 4ல் இடம் பெற்றுள்ள நபருக்கு வரிவசூலிப்பாளர் காலிப்பணியிடம் ஏற்படும் போது, அப்பதவி நிரப்பப்படும் எனவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

அ. பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களுக்கான திருத்தப்பட்ட சார்நிலை துணை விதிகள் 2009ன்படி 01.07.2019யை மைய நாளாகக் கொண்ட 2019-2020ம் ஆண்டிற்கான வரிவசூலிப்பாளர் பதவிக்கு ஒருங்கிணைக்கப்பட்ட கீழ்நிலை பதவியின் மூப்பு நிலை வரிசையின் அடிப்படையில் தகுதி பெற்றுள்ள 4 நபர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

ஆ. இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள நபர்களுக்கு பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள/ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களில் ரூ.19500-62000 என்ற காலமுறை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் வரிவசூலிப்பாளராக பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"வரிவசூலிப்பாளர் பதவி உயர்வு, அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.ஈ2/ 31165/ 2019

தீர்மான எண்.682/2020 **நாள்:24-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.செ.செல்வகுமார், தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் - அவர்களுக்கு தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறை, பூச்சி தடுப்பு துறையில், காலியாகவுள்ள தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பணியிடத்தை ஆணையர் அவர்களின் 03.02.2016 நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலமாக திரு.செ.செல்வகுமார், அவர்களுக்கு தலைமை பூச்சி தடுப்பு அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

மேலும், தனியருக்கு ஆணையர் அவர்களின் 24.03.2017 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, பணிவரன்முறை செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

தனியரின் மீது துறை சார்ந்த குற்றச்சாட்டுகளோ/விசாரணையோ நிலுவையில் இல்லை என துறையிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ3/49369/2012, நாள்.24.11.2012ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு.1பி-(ன்) கீழ் வரும் பதவிகளுக்கு தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க உரிய அதிகார பங்களிப்பு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் வசம் உள்ளது.

ஆகவே, திரு.செ.செல்வகுமார், தலைமை பூச்சி தடுப்பு அலுவலர், பூச்சி தடுப்புத் துறை, பொது சுகாதாரம் அவர்களுக்கு கீழ்கண்டவாறு தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிப்பதற்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

வ. எண்.	பெயர் (ம) பதவி	தலைமை பூச்சி தடுப்பு அலுவலராக பணியில் சேர்ந்த நாள்.	தலைமை பூச்சி தடுப்பு பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட வேண்டிய நாள்.
1.	திரு.செ.செல்வகுமார், தலைமை பூச்சி தடுப்பு அலுவலர்	08.02.2016 முற்பகல்	08.02.2018 முற்பகல்

"தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிப்பதற்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.ஈ2/ 34067/ 2019

தீர்மான எண்.683 / 2020 **நாள்:24-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - டாக்டர்.ப்பி.ராஜேஷ்வரி, ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்-5 அவர்களுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க அனுமதி.

வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்களின் 12.12.2019 நாளிட்ட கடிதத்தில், சுகாதாரத்துறை, மண்டலம்-5-ல் பணிபுரிந்த ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர், டாக்டர்.ப்பி.ராஜேஷ்வரி, அவர்களுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கக் கோரி கோப்பு பெறப்பட்டது.தனியர் ஆணையர் அவர்களின் 29.02.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, 29.02.2020 அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார்.

டாக்டர்.ப்பி.ராஜேஸ்வரி, ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர், மண்டலம்-5 அவர்கள் துறைத் தேர்வினை காலவரையறைக்குள் முடிக்காமல், 27.12.2010ல் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளதால் தனியருக்கு தேர்வு எழுதிய நாள் வரை (தேர்வு எழுதிய நாள்.27.12.2010) வழங்கப்பட்டுள்ள ஊதிய உயர்வுகளுக்கான (கருத்தியியலான காலம்) பணப்பயன்களை முழுமையாக கணக்கீடு செய்து உரிய கணக்கு அலுவலர் அவர்களின் கருத்துருவுடன், சிறப்பு தேர்வில் தேர்ச்சி பெறாத தருணத்தில், வழங்கப்பட்டுள்ள ஊதிய உயர்வுகளுக்கான மிகைத் தொகை கணக்கீட்டுத்தாளின்படி, 01.10.2009 முதல் 27.12.2010 வரை ரூ.16,061/-ஐ சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தவும், ஊதியம் மாற்றி நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்றும், மேலும், மேற்காண் தொகை ரூ.16,061/- ஐ சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு அதற்கான செலுத்துச்சீட்டினை பணிப்பதிவேடு (பகுதி-2) பக்க எண்.9ல் ஒட்டப்பட்டுள்ளது என்றும், தனியருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை மாற்றி நிர்ணயம் செய்யப்பட்டு பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் விவரங்கள் மண்டல அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டது.

மேலும், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் குறிப்பில், தனியருக்கு 05.01.2011 அன்று தான் தகுதிகாண் பருவ உரிமை அளிக்க வேண்டும் என்பதாலும், ஆனால் பிடித்தங்கள் 01.10.2009 முதல் 27.12.2010 வரை மட்டுமே கணக்கிடப்பட்டு கருவூலத்தில் தனியரால் செலுத்தப்பட்டுள்ளதால், 28.12.2010 முதல் 05.01.2011 வரையிலான காலத்திற்கு மிகைத் தொகையைக் கருவூலத்தில் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியருக்கு 05.01.2011 அன்று தகுதிகாண் பருவ உரிமையும், 15.11.2007 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன்முறையும் செய்திட ஆணை வேண்டி கோப்பு பெறப்பட்டது.

டாக்டர்.ப்பி.ராஜேஸ்வரி, ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர், மண்டலம்-5, அவர்கள் மருத்துவ விடுப்பு துய்த்த காலம் தகுதிகாண் பருவ காலத்திற்குள் வருவதால், தனியர் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற நாளுக்கு பிறகு இவ்விடுப்பு நாட்களை கழிக்கப்பட தேவையில்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. *(G.O.Ms.No.446, Public (Services-B) Department, 01.05.1934*ன்படி, *"Government consider that a person who passed an Examination or test should be deemed to have passed it on the last day on which the Examination or test is held, irrespective of the date on which the results are announced. If, therefore the passing of such examination or test confers on a Government servant the title to any right, benefit or concession, such title should be deemed to have accrued on the day following the last day of the Examination or test which he passed".*

"An examination or test can, in certain cases, be passed in instalments, in such cases the title to the right benefit or concession will be deemed to have accrued on the day following the last day of the examination in the subject or subjects in which he has last passed".)

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு 2 -(ன்) கீழ் வருவதால் பணிவரன்முறை (ம) தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் வசம் உள்ளது.

பொ.து.ந.க.எண்.ஈ2/ 34067/ 2019

ஆதலால், தனியருக்கு கீழ்கண்டவாறு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்க சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

வ. எண்.	பெயர்/பதவி	பணியில் சேர்ந்த நாள்.	பணிவரன் முறைப்படுத்த வேண்டிய நாள்.	தனியர் துறைத் தேர்வு எழுதிய நாள்.	தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப் பட வேண்டிய நாள்.
1.	டாக்டர்.ப்பி.ராஜேஸ்வரி மருத்துவ அலுவலர் ஓய்வு பெற்ற நாள்.29.02.2020	15.11.2007 மு.ப.	15.11.2007 மு.ப.	**27.12.2010**	**27.12.2010 மு.ப.**

"பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்க சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.ஈ1/ 26252/ 2018

தீர்மான எண்.684/2020 **நாள்:24-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.எல்.கணேஷ், உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்), மண்டலம் -5 அவர்களுக்கு பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்க அனுமதி.

மண்டல அலுவலர் -5 அவர்களின் 19.032020 நாளிட்ட கடிதத்தில், முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.02.2019 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு.எல்.கணேஷ் அவர்கள் 20.02.2019 முதல் உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்)ஆக பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்துள்ளார் எனவும், தனியர் இந்நாள் வரை சம்பளமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை எனவும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியரின் உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) பதவியில் பணிவரன்முறைப்படுத்த ஆணை வேண்டி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) பதவியானது வகுப்பு -2ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், இப்பதவி வகிப்பவர்களை பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி பெறப்படவேண்டும். தனியரின் பணிவிவரங்கள் கீழ்வருமாறு,

பெயர் மற்றும் பதவி	உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) பதவியில் பணியில் சேர்ந்த நாள்	உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்பட வேண்டிய நாள்
திரு.எல்.கணேஷ், உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்), மண்டலம் -5	20.02.2019 முற்பகல்	20.02.2019 முற்பகல்

மேலும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என துறைத்தலைவர் / மண்டல அலுவலர் அவர்களால் சான்றளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் -5ல் பணிபுரியும் திரு.எல்.கணேஷ் அவர்கள் உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்)ஆக பதவி உயர்வு பெற்று 20.02.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளமையால், அப்பதவியில் 20.02.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.இ9/36030/ 2019

தீர்மான எண்.685/2020 **நாள்:25-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை வடக்கு வட்டார அலுவலகம் - திரு.Y.பாபு, சாலைப்பணியாளர், பணி எண்.827189 (மாற்றுப்பணியில் துப்புரவு ஆய்வாளர்) கோட்டம்-39, மண்டலம்-4 என்பவர் உண்மைக்கு புறம்பான தகவல்கள் அளித்து கருணை அடிப்படையில் வாரிசுதாரருக்கான பணிநியமனம் பெற்றது - தனியரை 11.10.2018 அன்று தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டது - சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4-ம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1983, துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு - விளக்கம் பெறப்பட்டது - விசாரணை அலுவலர் அவர்களின் அறிக்கையின்படி - தனியரிடம் கூடுதல் விளக்கம் பெறப்பட்டது - இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டது - தண்டனையை எதிர்த்து தனியர்அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 11.10.2018 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, மண்டலம்-4, பகுதி-10, கோட்டம்-39ல் சாலைப்பணியாளர் (மாற்றுப்பணியில் துப்புரவு ஆய்வாளராக) பணிபுரியும் திரு.Y.பாபு என்பவர் தனது தந்தை திரு.யூசுப் (எ) ஏசேபு, துப்புரவு பணியாளர் (பணி எண்.634496) பழைய கோட்டம்-7, பழைய பகுதி-2, பழைய மண்டலம்-1ல் (புதிய மண்டலம்-4) பணிபுரிந்தபோது பணியிடையே 14.03.2009 அன்று காலமானதால், போலி ஆவணங்கள் சமர்ப்பித்தது பெருநகர சென்னை மாநகராட்சியில் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றது கண்டறியப்பட்டதால், நிர்வாக நலன் கருதி பெருநகர சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப்பணியாளர்கள் 1983ம் வருடம் துணை விதி (3) சட்ட விதிகள் 9(9)(1)ன்படி, இத்தனியரை உடனடியாக தற்காலிக பணிநீக்கம் செய்து ஆணையிடப்பட்டார். தனியருக்கு இவ்வாணை 23.10.2018 அன்று சார்வு செய்யப்பட்டது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 03.12.2018 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையின்படி, திரு.Y.பாபு, சாலைப்பணியாளர் (மாற்றுப்பணியில் துப்புரவு ஆய்வாளர்) கோட்டம்-39, மண்டலம்-4 என்பவர் மீது, சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4-ம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1983, துணை விதி 9(2)ன் கீழ் கீழ்காணும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, தனியருக்கு சார்வு செய்து, திரு.எம்.கோபி, உதவி செயற்பொறியாளர், பகுதி-9 அவர்கள் விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டு தனியரிடம் விசாரணை செய்து கீழ்கண்டவாறு கூடுதல் விளக்கம் மற்றும் விசாரணை அறிக்கை பெறப்பட்டுள்ளது.

வ. எண்.	குற்றச்சாட்டு	தனியரின் விளக்கம்	விசாரணை அலுவலரின் அறிக்கை
1	தங்களது தந்தை திரு.யூசப் (எ) ஏசேபு என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சியில் நிரந்தர துப்புரவு பணியாளராக பணியில் இருக்கும் போது (14.03.2009) பணியிடையே காலமானதால் தனக்கு (திரு.Y.பாபு, சாலைப்பணியாளர், கோட்டம்-39, பகுதி-10, மண்டலம்-4 பெருநகர சென்னை மாநகராட்சியில் கருணைஅடிப்படையில் பணி நியமனம் பெற்று முறைகேடாக நடந்து கொண்டது.)	என் தந்தை திரு.யூசப் (எ) ஏசேபு என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சியில் நிரந்தர துப்புரவு பணியாளராக பணியில் இருக்கும் போது 14.03.2009 அன்று பணியிடை காலமானதால் எனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றது குறித்து விளக்கம் அளிப்பது யாதெனில், என் தந்தை இறப்பதற்கு முன்னரே நான் 12.05.2003 அன்று திருமணம் புரிந்து என் மனைவி குழந்தைகளுடன் தனிக்குடித்தனமாக வேலைவாய்ப்பு இன்றி தவித்து வசித்து வந்ததால்	திரு.யூசுப் இறப்பதற்கு முன்னரே பணியாளருக்கு திருமணம் நடந்து தனிக்குடித்தனம் செய்து வந்திருப்பினும், மாநகராட்சியில் பணியில் சேரும் பொருட்டு பணியாளர் தவறான தகவல்களை அளித்துள்ளார். ஆதலால் பணியாளரின் பதில் ஏற்படையதல்ல. ஆதலால் குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

		என் தந்தையின் இறப்பிற்கு பிறகு என் தாயாரால் என் குடும்பத்திற்க எவ்வித பொருள் உதவியும் இல்லாததால், இவ்வாறு நடந்து கொண்டேன்.	
2	தாங்கள், மண்டலம்-4, பகுதி-10, கோட்டம்-41ல் நிரந்தர துப்புரவு பணியாளரான தங்களது தாயார் திருமதி.சௌபாக்கியம் பணிபுரிந்து வருவதனை மறைத்து போலியான ஆவணங்கள் மற்றும் உறுதிமொழி பத்திரம் மூலம் பொய்யான தகவல் அளித்து சுயநல நோக்கத்துடன் தன்னிச்சையாக செயல்பட்டது தெளிவாகிறது.	என் தாயார் திருமதி.சௌபாக்கியம் என்பவர் கோட்டம்-41ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்ததை மறைக்க காரணம் எவ்வித வேலையுமின்றி தந்தை இறப்பதற்கு முன்னரே தனியாக வசித்து குழந்தைகளை காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் மனமுடைந்து போய் இத்தவறு நேர்ந்து விட்டது.	பணியாளரின் தாயார் திருமதி.சௌபாக்கியம் துப்புரவு பணியாளராக பணி புரிந்துள்ளதை மறைத்து அதற்கான காரணத்தை தெரிவித்துள்ளார். மறைத்ததை ஒப்புக் கொண்டுள்ளதால் குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.
3	தங்களுக்கு அளிக்கப்பட்ட தூய்மை பணிகளை பொறுப்புணர்வுடன் மேற்கொள்ளாமல் குற்றவியல் நடவடிக்கையில் ஈடுபட்டு பொய்யான தகவல்கள் அளித்து பெருநகர சென்னை மாநகராட்சியின் அலுவலக பணிகளுக்க குந்தகம் ஏற்பட காரணமானது.	எனக்கு அளிக்கப்பட்ட மாற்றுப்பணியில் துப்புரவு ஆய்வாளர் பணியில் பொறுப்புணர்வுடன் பணிபுரிந்து வந்த நிலையில் மேற்கண்ட குடும்ப சூழ்நிலையால் இத்தவறு நேர்ந்து விட்டது.	அன்னாரின் பதில் ஏற்படையதல்ல. குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

விசாரணை அலுவலர் அவர்களின் விசாரணை அறிக்கையின்படி, தனியர் மீது சுமத்தப்பட்ட 3 குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகிறது என 15.05.2019 நாளிட்ட விசாரணை அறிக்கை பெறப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 17.07.2019 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், தனியர் அளித்த விளக்கம், விசாரணை அலுவலர் அவர்களின் அறிக்கை, தனியரின் கூடுதல் விளக்கம் மற்றும் தன்னிலை விளக்கம் ஆகியவற்றை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில், விசாரணை அலுவலர் குற்றச்சாட்டுகள் நிரூபணமாவதாக தெளிவாக குறிப்பிட்டுள்ளார். குற்றச்சாட்டப்பட்ட தனியர் விசாரணை கமிஷனது சட்டத்தினை மீறியதை ஒப்புக்கொண்டுள்ளார். தனியரது கோப்பு, விசாரணை அலுவலரது அறிக்கை, அதன் தொடர்பான ஆவணங்கள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவரின் விளக்க அறிக்கை ஆகியவற்றை முழுமையாக ஆராய்ந்ததில், தனியர் வேண்டுமென்றே இந்த செயலைச் செய்துள்ளார் என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அவர் நியமனம் (அ) நியமிக்கப்பட்ட செயல் தொடக்க நிலையிலேயே இல்லா நிலையது (void) ஆகும். எனவே, குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிரூபணமாகியுள்ளதால், இத்தனியருக்கு தண்டனையாக பணியிலிருந்து பணியறவு செய்து (*Delinquent appeared for enquiry. The enquiry officer has clearly stated that the charges are proved. The delinquent also accepts to the commission of the misdemeanor. On a thorough scrutiny of the file, enquiry officer report and connected records therein along with the statement of the delinquent, it is*

clearly proved that the delinquent had willfully committed the act which proves that the basis on which he was appointed / appointment itself becomes void ab initio. Hence the charges are proved and punishment of dismissal from service is imposed) என செயல்முறை ஆணை வழங்கப்பட்டு தனியருக்கு *23.07.2019* அன்று சார்வு செய்யப்பட்டுள்ளது.

திரு.*Y*.பாபு, சாலைப்பணியாளர் அவர்கள் சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு *13.08.2019* அன்று அளித்த மேல்முறையீட்டு மனு பெறப்பட்டுள்ளது.

தனியரின் *13.08.2019* நாளிட்ட மேல¦முறையீட்டு மனுவின் விளக்கம் :

என் தந்தை திரு.யூசப் (எ) ஏசேபு என்பவர் துப்புரவு பணியாளராக பழைய கோட்டம்-*7*, பழைய பகுதி-*1*, பழைய மண்டலம்-*1* (தற்போது கோட்டம்-*42*, பகுதி-*10*, மண்டலம்-*4*ல் பணிபுரிந்து கடந்த *14.03.2009* அன்று பணியின் போது காலமானதால், அன்னாரின் பணியினை வாரிசுதாரரும் மகனுமான எனக்கு, பெருநகர சென்னை மாநகராட்சியில் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறுவதற்காக என் தந்தை இறப்பதற்கு முன்பே திருமணம் செய்து கொண்டு, கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வந்த நிலையில், என் தந்தை *14.03.2009* அன்று காலமானதால் என் குடும்பம் தனியாக வசித்து வந்ததால் அதற்கான அரசாணை உள்ளதை அறியாமல் எவ்வித வேலையும் இல்லாமல் திண்டாடி வந்த நிலையில் அரசாணை இருந்தும் அதனை மறைத்து கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றேன்.

மேற்கண்ட உண்மையை மறைத்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணி நியமனம் பெற்றது தொடர்பாக என் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, தண்டனையாக பெருநகர சென்னை மாநகராட்சி, பணியிலிருந்து பணியறவு செய்து வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களால் ஆணை வழங்கப்பட்டது.

மேற்கண்ட ஆணையில் ஆட்சேபணை ஏதும் இருப்பின் பெற்றுக் கொண்ட *60* தினங்களுக்குள் """"சிறப்பு அதிகாரி"" மன்றம் அவர்களுக்கு மேல்முறையீடு செய்யலாம் என தெரிவிக்கப்பட்ட நிலையில், என் குடும்பம் உண்மையிலேயே வறிய நிலையில் உள்ளதாலும், மேலும், நான் தனிக்குடித்தனம் செய்து வருவதால் என் தாயாரால் எவ்வித பொருள் உதவியும் இல்லாத நிலையில், நான் உண்மையை மறைத்ததை மன்னித்து என்னுடைய மேல் முறையீட்டு மனுவினை, கருணையுடன் என் குழந்தைகளின் வாழ்நாளை எதிர்நோக்கி பரிசீலனை செய்து, அரசாணையில் பணியாளர் இறப்பதற்கு முன்னரே குடும்பத்தைவிட்டு அகன்று தாயாரால் எவ்வித பொருள் உதவியும் இன்றி வாழ்க்கை நடத்துவது என்பதும், வயது முதிர்வு அடைந்து விட்ட நிலையில் எங்கும் பணி கிடைக்கப் பெற வாய்ப்பு இல்லாததால், என் மேல் முறையீட்டு மனுவினை கருணை நோக்கோடு பரிசீலித்து உரிய ஆணை வழங்குமாறு இருகரம் கூப்பி கேட்டுக் கொள்கிறேன் என மேல்முறையீட்டு மனு பெறப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் *15.10.2019* நாளிட்ட கடிதத்தின்படியும் மற்றும் துணை ஆட்சியர் (நிர்வாகம்) அவர்களின் *11.12.2019* நாளிட்ட குறிப்பின்படியும், திரு.*Y*.பாபு, சாலைப்பணியாளர் (மாற்றுப்பணியில் துப்புரவு ஆய்வாளர்) கோட்டம்-*39*, மண்டலம்-*4* என்பவருக்கு அளிக்கப்பட்ட இறுதி ஆணையின் மீது, ஆணை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், தனியர் அளித்த மேல்முறையீட்டு மனுவின் மீது உரிய முடிவெடுக்கும் பொருட்டு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த ஆணையரது 20.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

" Earlier punishment stands confirmed என, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.ஈ13/ 21853/ 2016

தீர்மான எண்.686 / 2020 **நாள்:25-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.எஸ்.எம். ஏழுமலை, உதவி பொறியாளர், பணித்துறை - வெளிநாட்டில் பணிசெய்வதற்காக வழங்கப்பட்ட விடுப்பை நீட்டிப்பு வேண்டியது - நிராகரிக்கப்பட்டது -குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பபட்டது - விசாரணை நடத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது - திரு.எஸ்.எம்.ஏழுமலை, உதவி பொறியாளர் அவர்கள் தண்டனையை எதிர்த்து அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.எஸ்.எம். ஏழுமலை, உதவி பொறியாளர், பணித்துறை அவர்கள் *05.07.2013* முதல் *04.07.2016* வரை அயல்நாட்டிற்கு தனிப்பட்ட முறையில் பணிபுரிய அனுமதியுடன் கூடிய சம்பளமில்லா விடுப்பில் செல்ல அனுமதிக்கப்பட்டு, விடுப்பு நாட்களுக்கு பின்னரும், அலுவலக பணியில் சேராமல் மருத்துவ விடுப்பு கோரியது தொடர்பாக தனியர் மீது பெருநகர சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) *1983* ஆம் ஆண்டு துணை விதி *9(2)*ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டது.

ஒழுங்கு நடவடிக்கை விதிமுறைகளின் படி விசாரணை அலுவலராக திரு.கே.சின்னசாமி, கண்காணிப்பு பொறியாளர், (கட்டடம்) அவர்கள் நியமிக்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, விசாரணை அறிக்கையில் திரு.எஸ்.எம். ஏழுமலை, உதவி பொறியாளர், பணித்துறை அவர்கள் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகிறது என விசாரணை அறிக்கை அளித்ததை தொடர்ந்து, திரு.எஸ்.எம்.ஏழுமலை, உதவி பொறியாளர், பணித்துறை அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு தனியர் அளித்துள்ள விளக்கங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, விசாரணை அலுவலரின் அறிக்கையில் அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகிறது என அளித்துள்ள அறிக்கையினை ஏற்று, திரு.எஸ்.எம்.எழுமலை, உதவி பொறியாளர், பணித்துறை அவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், தனியரை **நிரந்தரப் பணி நீக்கம் *(Removal from Service)* செய்து இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டது.**

திரு.எஸ்.எம்.எழுமலை, உதவி பொறியாளர், பணித்துறை அவர்கள் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து தனது *26.09.2018* நாளிட்ட மேல்முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1. I had joined the services of the Greater Chennai Corporation as an Assistant Engineer on 13.10.2010. I had sought for No objection from the Deputy Commissioner (Works) Chennai Corporation to work in B3, Engineering Private Limited, Singapore and therefore requested him to relieve from the service from 05.07.2013 to 04.07.2016 for a period of 3 years for a Leave without salary. Accordingly the Corporation of Chennai in its Resolution bearing No.148/2013 had accorded sanction to me to work in the aforesaid Company at Singapore for a period of 3 years i.e. 05.07.2013 to 04.07.2016 and passed an order dated:25.04.2013 in W.D.No.A4/1116/2013.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருக்க மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவ பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு Face Mask-ஐ கொள்முதல் செய்து வழங்கப்பட வேண்டியுள்ளது. இதனால் மேற்படி பணியாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கப்படுகிறது. மேலும் வார்டு வாரியாக பொதுமக்களுக்கு இருமல், சளி மற்றும் சுவாசக்கோளாறுகளுடன் உள்ளவர்களுக்கு மருத்துவ பணியாளர்கள் மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டு அருகில் உள்ள மாநகராட்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். மேற்படி அறிகுறிகள் உள்ளவர்களுடைய வீடு மற்றும் தெருக்களில் கிருமி நாசனி தெளிக்கப்பட்டு தொடர் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தேசிய பேரிடர் என அறிவிக்கப்பட்டு அவசர நிலை பிரகடனபடுத்தப்பட்டதின் அடிப்படையில், கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மருத்துவ பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு Face Mask வழங்கப்பட வேண்டியது மிகமிக அவசியமாகிறது.

தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a-ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலர்களுக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம்அளிக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu Tranparency in Tenders Act, 1998 Sec: 16 " Provision of Act not to apply in certain cases: The provision of section 9 and 10 shall not apply to procurement."

a) During natural calamities and emergencies declared by the Government.

மேற்படி நிகழ்வின் அடிப்படையில், M/s. C.S. Textiles அவர்களிடமிருந்து (ஒன்றின் விலை 15.96 வீதம் 5,00,000- Nos) ரூ.79,80,000/-ற்கு (வரிகள் உட்பட) (ரூபாய் எழுபத்து ஒன்பது லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) அவசர மற்றும் அவசியம் கருதியும் பொது மக்களின் மருத்துவ நலன் கருதியும் ஒப்பந்தம் மற்றும் பாதுகாப்பு வைப்புத் தொகை கோருவதிலிருந்து விலக்கு அளித்து கொள்முதல் செய்ய ஆணையர் அவர்களின் 02.04.2020 நாளிட்ட மற்றும் சிறப்பு அதிகாரி அவர்களின் 02.04.2020 நாளிட்ட ஆணைப்படி நேரடியாக பணியாணை வழங்கப்பட்டு, இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 08.05.2020 நாளிட்ட ஆணைப்படி பட்டி தீர்வு செய்யப்பட்டது.

எனவே,

1. கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தேசிய பேரிடர் என அறிவிக்கப்பட்டு அவசர நிலை பிரகடனபடுத்தப்பட்டதின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையின் மூலம் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது மிகமிக அவசியம் என்பதால் மருத்துவப்பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு வேண்டிய Face mask-ஐ ஒன்றின் விலை 15.96 வீதம் 5,00,000- Nos ரூ.79,80,000/-ற்கு (வரிகள் உட்பட) (ரூபாய் எழுபத்து ஒன்பது லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) அவசர மற்றும் அவசியம் கருதி M/s. C.S. Textiles அவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய நேரடியாக பணியாணை வழங்கப்பட்டு, மேற்படி Face mask-ஐ பெறப்பட்டு பட்டி தீர்வு செய்யப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,

பொது.சு.து.ந.க.எண்.பி1/1896/2020

2. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16 – aல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள் முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
3. இதற்கான தொகைரூ.79,80,000/-ஐ செலவழிக்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
4. மேற்படி நிகழ்வின் அடிப்படையில், பொது மக்களின் மருத்துவ நலன் கருதியும் அவசரம் மற்றும் அவசியம் கருதியும் ஒப்பந்தம் மற்றும் பாதுகாப்பு வைப்புத் தொகை கோருவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதற்கு பின்னேற்பும் ,
5. இச்செலவினம் பிரிவு குறியீடு 30-32-05, கணக்கு எண். 230-20-04-02 - லிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்பும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம்அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 16.07.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொது.சு.து.ந.க.எண்.பி1/ 1909/2020

தீர்மான எண். 692/2020 **நாள்:26-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கொரோனா நோய் தடுப்பு - அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது - தேசிய பேரிடர் என அறிவிக்கப்பட்டது - பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறையின் மூலம் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவையான Face Mask-ஐ அவசர மற்றும் அவசியம் கருதி கொள்முதல் செய்ய ஆணையர் மற்றும் சிறப்பு அலுவலர் அவர்களின் ஆணை பெறப்பட்டது - பட்டி தீர்வு செய்யப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருக்க மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவ பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு Face Mask-ஐ கொள்முதல் செய்து வழங்கப்பட வேண்டியுள்ளது. இதனால் மேற்படி பணியாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கப்படுகிறது. மேலும் வார்டு வாரியாக பொதுமக்களுக்கு இருமல், சளி மற்றும் சுவாசக்கோளாறுகளுடன் உள்ளவர்களுக்கு மருத்துவ பணியாளர்கள் மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டு அருகில் உள்ள மாநகராட்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். மேற்படி அறிகுறிகள் உள்ளவர்களுடைய வீடு மற்றும் தெருக்களில் கிருமி நாசனி தெளிக்கப்பட்டு தொடர் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தேசிய பேரிடர் என அறிவிக்கப்பட்டு அவசர நிலை பிரகடனபடுத்தப்பட்டதின் அடிப்படையில், கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மருத்துவ பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு Face Mask வழங்கப்பட வேண்டியது மிகமிக அவசியமாகிறது.

தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a-ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலர்களுக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம்அளிக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu Tranparency in Tenders Act, 1998 Sec: 16 " Provision of Act not to apply in certain cases: The provision of section 9 and 10 shall not apply to procurement."

a) During natural calamities and emergencies declared by the Government.

Finance (Salaries) Department, Secretariat, Chennai-9, Letter No.74-/JS(MA)/Finance(Salaries)/2020, dt.01.04.2020ன்படி பேரிடர் அவசர காலங்களில் பாதுபாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய, ஒப்பம் கோருவது விலக்களிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வின் அடிப்படையில், M/s. C.S. Textiles அவர்களிடமிருந்து (ஒன்றின் விலை 15.96 வீதம் 4,00,000- Nos) ரூ.63,84,000 ற்கு (வரிகள் உட்பட) (ரூபாய் அறுபத்து மூன்று லட்சத்து எண்பத்தி நான்காயிரம் மட்டும்) அவசர மற்றும் அவசியம் கருதியும் பொது மக்களின் மருத்துவ நலன் கருதியும் ஒப்பந்தம் மற்றும் பாதுகாப்பு வைப்புத் தொகை கோருவதிலிருந்து விலக்கு அளித்து கொள்முதல் செய்ய ஆணையர் அவர்களின் 02.04.2020 நாளிட்ட மற்றும் சிறப்பு அதிகாரி அவர்களின் 02.04.2020 நாளிட்ட ஆணைப்படி நேரடியாக பணியாணை வழங்கப்பட்டு, இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 08.05.2020 நாளிட்ட ஆணைப்படி பட்டி தீர்வு செய்யப்பட்டது.

எனவே,

1. கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தேசிய பேரிடர் என அறிவிக்கப்பட்டு அவசர நிலை பிரகடனபடுத்தப்பட்டதின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையின் மூலம் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது மிகமிக அவசியம் என்பதால் மருத்துவப்பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு வேண்டிய Face mask-ஐ (ஒன்றின் விலை 15.96 வீதம் 4,00,000- Nos ரூ.63,84,000 ற்கு (வரிகள் உட்பட) (ரூபாய் அறுபத்து மூன்று லட்சத்து எண்பத்தி நான்காயிரம் மட்டும்) அவசர மற்றும் அவசியம் கருதி M/s. C.S. Textiles அவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய நேரடியாக பணியாணை வழங்கப்பட்டு, மேற்படி Face mask-ஐ பெறப்பட்டு பட்டி தீர்வு செய்யப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,

2. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16 – aல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள் முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
3. இதற்கான தொகை ரூ.63,84,000/-ஐ செலவழிக்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
4. மேற்படி நிகழ்வின் அடிப்படையில், பொது மக்களின் மருத்துவ நலன் கருதியும் அவசரம் மற்றும் அவசியம் கருதியும் ஒப்பந்தம் மற்றும் பாதுகாப்பு வைப்புத் தொகை கோருவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதற்கு பின்னேற்பும் ,
5. இச்செலவினம் பிரிவு குறியீடு 30-32-05, கணக்கு எண். 230-20-04-02 - லிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்பும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 16.07.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

****

தி.க.மே.து.ந.க.எண்.எ7/2129/2020

தீர்மான எண். 693/2020 **நாள்:26-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மதிப்பீடு- 2020-2021- திடக்கழிவு மேலாண்மை துறை- சோழிங்கநல்லூர், மண்டலம் -15, கோட்டம்-197, இயற்கை உயிரி எரிவாயு மற்றும் (Bio-CNG and M.C.C) நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் நிலைய வளாகத்தின் கிழக்கு மற்றும் தெற்கு பக்கம் சுற்றுச்சுவர் கட்டும் பணி - 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலகவிலைப்பட்டியலின் அடிப்படையில் மதிப்பீடு தொகை ரூ.64,84,000/- க்கு அனுமதி.

1. பணியின் பெயர்: :

வரிசை எண்	மண்டலம் எண்	பணி பெயர் / விவரம்	நீளம்	பரப்பளவு	மதிப்பீட்டு தொகை ரூபாய்
1	15	சோழிங்கநல்லூர், மண்டலம் -15, கோட்டம்-197, இயற்கை உயிரி எரிவாயு மற்றும் (Bio-CNG and M.C.C) நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் நிலைய வளாகத்தின் கிழக்கு மற்றும் தெற்கு பக்கம் சுற்றுச்சுவர் கட்டும் பணி	290 மீ	-	64,84,000/-

2.	பரிந்துரை செய்தவரின் விவரம்	:	மேற்பார்வை பொறியாளர் (திகமே)
3.	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	:	திடக்கழிவு மேலாண்மை துறை
4.	சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	:	பெறப்பட்டுள்ளது
5.	தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி, செயல்முறை ஆணை எண் மற்றும் தேதி	:	மேற்பார்வை பொறியாளர் (திகமே) S.E(SWM) T.S.No/ 11/2020Date :24.08.2020
6.	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணையின் விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது	:	2019-2020
7.	மதிப்பீட்டின் தொகை	:	64,84,000.00
(அ)	பணி செலவினம் மட்டும்	:	54,48,398.04
(ஆ)	மேலான மேற்பார்வை செலவு	:	-
(இ)	சிறு மேற்பார்வை செலவு	:	1,36,209.95
(ஈ)	மற்றைய எதிர்பாரா செலவு	:	1,36,616.29
(உ)	தரகட்டுபாட்டு செலவினம்	:	54,483.98
(ஊ)	TNMWGW FUND 1%	:	54,483.98
(எ)	சரக்கு மற்றும் சேவை வரி 12 %	:	6,53,807.76
	மொத்தம்	:	**64,84,000.00**
8.	மழைநீர் வடிகால் கட்டுவது, நடைபாதை பகுதியா அல்லது சாலைப்பகுதியா அதன் அளவு குறிப்பிடவும்	:	பொருந்தாது
9.	ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு	:	
	(அ) ஒரு மீட்டருக்கு செலவு	:	ரூ. 18,787/ மீட்டர்
10.	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா?	:	ஆம்
11.	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி, நாள்	:	-
12.	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	:	புதிய பணி
13	நிதியின் மூலத்தன்மை	:	
	அ) வரவு செலவு ஒதுக்கீடு	:	412-40-05-08 Others – Office Buildings – SWM Department Buildings

தி.க.மே.து.ந.க.எண்.எ7/2129/2020

	ஆ) மதிப்பீடுகளுக்கு இது வரை ஒதுக்கப்பட்ட நிதி	:	
	இ) மீதம் உள்ள நிதி (அ-ஆ)	:	
	ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	:	ரூ. **64,84,000.00**

மேற்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. **64,84,000.00** (ரூபாய் அறுபத்து நான்கு இலட்சத்து எண்பத்து நான்காயிரம் மட்டும்)க்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"மதிப்பீட்டிற்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

மஅ.1//ந.க.எண்.சி1/ 2535/ 2020

தீர்மான எண். 694/2020 **நாள்:26-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1 -கோட்டம் 1 முதல் 14 வரை/யுள்ள கொரோனா தொற்று நோய் ஏற்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட (QUARANTINE) வீடுகளை கண்காணிக்க சமூக பரவலை தடுக்கும் பணிகளை கண்காணிப்பு செய்ய 200 தன்னார்வாள பணியாளர்களை தற்காலிகமாக 17.06.2020 முதல் மூன்று மாதங்களுக்கு பணி நியமனம் செய்யப்பட்டு தற்போது 14.09.2020 முடிவடைவதால் தொடர்ந்து ஒரு மாதத்திற்கு நீட்டிப்பு செய்யவும் மற்றும் ஊதியம் வழங்கவும் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1ல் உள்ள 1 முதல் 14 வரைக்குட்பட்ட 14 வார்டுகளில் நபர் ஒருவருக்கு தலா 5 முதல் 10 உட்புற சாலைகளை கணக்கெடுக்கும் வகையில் மண்டலத்தில் உள்ள 1504 உட்புற சாலைகளை தினசரி ஒவ்வொரு சாலைக்கும் சென்று தனிமைப்படுத்துதல் (QUARANTINE) செய்யப்பட்ட வீடுகளை கண்டறிந்து கண்காணிக்கவும் அவர்கள் வெளியில் வந்து சமூக பரவல் செய்யாமல் தடுக்கவும் மற்றும் கொரோனாநோய் பரவாமல் தடுக்கும் பணிகளை கண்காணிப்பு செய்ய 200 பணியாளர்களை தற்காலிகமாக 17.06.2020 முதல் 90 நாட்களுக்கு நியமனம் செய்ய ஆணையர் மற்றும் சிறப்பு அதிகாரி அவர்களின் 10.07.2020 நாளிட்ட ஆணையில் நியமனம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி 200 தன்னார்வள பணியாளர்கள் (Focus Volunteers) கோட்டம் 1 முதல் 14 வரை பெயர் வாரியாக தேர்வு செய்யப்பட்டு 17.06.2020 முதல் பணி செய்வதற்கு மண்டலம் -1 வருவாய் துறையின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டு வருவாய் துறை சார்ந்த வரி வசூலிப்பாளர்கள், உரிமம் ஆய்வாளர்களால் (Ward Level Officers) மூலம் Roll Call எடுக்கப்பட்டு வரி மதிப்பீட்டாளர்களால் (Unit Level Officers) மூலம் கண்காணிக்கப்பட்டு ஆணையர் அவர்களின் உத்திரவின்படி பணி தொய்வில்லாமல் நடைபெற்று வருகிறது.

17.06.2020 முதல் 90 நாட்களுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள நிலையில் 14.09.2020 அன்றுடன் முடிவடைவதால் கொரோனா தொற்று நோய் குறையாமல் உள்ளதால் கொரோனா பணிகளை கண்காணிப்பு செய்ய 200 தன்னார்வாள பணியாளர்கள் தேவைப்படுவதால் 15.09.2020 முதல் ஒரு மாத காலத்திற்க்கு தற்காலிகமாக பணி நீட்டிப்பு செய்ய,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, கோட்டம் 1 முதல் 14 வரையிலான பகுதிகளுக்கு கொரோனா நோய் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக நோய் தொற்று பாதிக்கப்பட்ட நபர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களின் நலன் பாதுகாக்கும் பொருட்டு, அவர்களும் சிரமம் இன்றி அவர்கள் மூலமாக மற்றவர்களுக்கு நோய் தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டு அவர்களின் அத்தியாவசிய மருந்து தேவைகள் மற்றும் பிற அத்தியாவசிய தேவைகளை வாங்கி அவர்களுக்கு வழங்கும் பணிகளை மாநகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாதால் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள அரசாணை எண்-312 நாள்-20.06.2020ன்படி 200 எண்ணிக்கையிலான பணியாளர்களை அவசர அவசியம் கருதி 14.09.2020 முதல் தற்காலிக பணியாளர்களாக ஒரு மாதத்திற்கு நீடிப்பு செய்ய ஆணையும்.
2. மேற்கண்ட (Focus Volunteers) பணியாளர்களுக்கு Revenue And Disaster Management Department Disaster Management Wing D.M.II Section G.O.(M.S) No.312 Dated 20.06.2020ன்படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் ஒரு மாதத்திற்கு ஊதியம் ரூ.15,000/- வீதம் 200 எண்ணிக்கையிலான (Focus Volunteers) பணியாளர்களுக்கு ஒரு மாதத்திற்கு ஊதியம் வழங்க ஆகும் செலவுத் தொகை ரூ.30,00,000/- (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) (200x15000x1 மாதம்) நிர்வாக அனுமதியும்,

3. மேற்கண்ட செலவினத்தை கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிகளுக்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்து *Volunteers Salary Function 20-21-07* மற்றும் *Account Code 230-701-203* என்ற கணக்கு குறியீட்டில் சம்பளம் பெற்று பணிகளை மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"*1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ7ந.க.எண்.எஸ்2/ 3533/2020

தீர்மான எண். 695/2020 **நாள்:26-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி- 19 - விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2020 உடன் முடிவடைவது - அதே 475 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 01.10.2020 முதல் 31.03.2021 வரை பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.3,38,01,950/-க்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர் , பகுதி – 19, வார்டு – 84 முதல் வார்டு – 88 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.79 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 5 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 917 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி – 19ன்கீழ் உள்ள 84 முதல் 88 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,90,760 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி – 19 ல் 84 முதல் 88 வரையிலான 5 வார்டுகளில் தோராயமாக 94.190 மெ.டன் குப்பைகள் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 19ல் (வார்டு – 84 முதல் 88 – வரை) தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

1)	பகுதி – 19, ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை	- 100
2)	பகுதி – 19, ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை	- 475
	மொத்தம்	- 575

வார்டு – 85, 86 – ல், நிரந்தர துப்புரவு பணியாளர்கள் கடந்த நிதியாண்டில் 18 நபர்கள் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றும், 2 நபர் காலஞ்சென்றும் மற்றும் 4 நபர்கள் பதவி உயர்வில் சென்ற நிலையிலும் NULM பணியாளர்கள் கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

27.03.2020 தேதியிட்ட சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.263/2020– ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் 475 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 01.04.2020 முதல் 30.09.2020 வரை ஆறு மாத காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 30.09.2020–ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி – 19ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 575 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 100 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 475 எண்ணிக்கை கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம் -7 பகுதி -19க்கு தேவை என கணக்கிட்டு 01.10.2020 முதல் 31.03.2021 வரையில் ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

ம.அ7ந.க.எண்.எஸ்2/ 3533/2020

வ. எண்	பகுதி எண்	NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	19	475	ரூ.391x475x182(நாட்கள்) = ரூ.3,38,01,950/-
		மொத்தம்	ரூ.3,38,01,950/-

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர் கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான 08.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 475 பணியாளர்களுக்கு 182 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.3,38,01,950/- என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும், தலைமையிடத்து திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7ல் குப்பைகளை அகற்ற தனியார் நிறுவனம் மூலம் பணிகளை மேற்கொள்ள ஒப்பம் கோரப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ள நிலையில் தனியார் நிறுவனத்துக்கு பணிஆணை வழங்கியவுடன் இக்கோப்பிற்கான பணி ஆணை எவ்வித நிபந்தனையுமின்றி காலாவதி ஆகிவிடும். திடக்கழிவு மேலாண்மை துறை மூலமாக பணி ஆணை வழங்கப்படும் தனியார் நிறுவனத்தால் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி -19ல் 01.10.2020 முதல் 31.03.2021 வரை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணியை தொடர்வதற்கு அதே 475 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும், தலைமையிடத்து திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7ல் குப்பைகளை அகற்ற தனியார் நிறுவனம் மூலம் தனியார் நிறுவனத்தால் பணிகளை மேற்கொள்ள ஒப்பம் கோரப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ள நிலையில் தனியார் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியவுடன் இக்கோப்பிற்கான பணி ஆணை எவ்வித நிபந்தனையுமின்றி காலாவதி ஆகிவிடும் திடக்கழிவு மேலாண்மை துறை மூலமாக பணி ஆணை வழங்கப்படும், தனியார் நிறுவனத்தால் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்படும்,
2) மேற்கண்ட 475 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம், 182 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.3,38,01,950/- (ரூபாய் மூன்று கோடியே முப்பதெட்டு இலட்சத்து ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
3) இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 230 – 15 – 01 – 00 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.7ந.க.எண்.எஸ்1/ 3535/2020

தீர்மான எண். 696/2020 **நாள்:26-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி–20 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர் புறவாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2020 உடன் முடிவடைவது - அதே 569 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 01.10.2020 முதல் 31.03.2021 வரை பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.4,04,91,178/-க்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர் , பகுதி – 20, வார்டு – 89 முதல் வார்டு 93 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.03 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 26 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 260 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,,59,438 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 335 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 20ல் (வார்டு – 89 முதல் 93 – வரை) தற்போது நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

பகுதி – 20 ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை-569.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

27.03.2020 நாளிட்ட சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.264 /2020– ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) 569 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 01.10.2020 முதல் 31.03.2021 வரை ஆறு மாத காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 30.09.2020–ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி – 20ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு செயல் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 569 துப்புரவு பணியாளர்கள் துப்புரவு பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-20க்கு தேவை என கணக்கிட்டு 01.10.2020 முதல்31.03.2021 வரையில் ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

வ.எண்	பகுதி எண்	துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	20	569	ரூ.391 x 569 x 182 (நாட்கள்) = ரூ 4,04,91,178 /-
		மொத்தம்	ரூ. 4,04,91,178 /-

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர் கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம் 7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான 09.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட

ம.அ.7ந.க.எண்.எஸ்1/ 3535/2020

விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 569 பணியாளர்களுக்கு 182 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.4,04,91,178/- (ரூபாய் நான்கு கோடியே நான்கு இலட்சத்து தொண்ணூற்றி ஓராயிரத்து நூற்று எழுபத்தி எட்டு மட்டும்) என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும், தனியார் நிறுவனம் மூலம் பணிகளை மேற்கொள்ள ஒப்பம் கோரப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ள நிலையில் தனியார் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியவுடன் இக்கோப்பிற்கான பணி ஆணை எந்த வித நிபந்தனையுமின்றி காலாவதி ஆகிவிடும். திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் பணி ஆணை வழங்கப்படும், தனியார் நிறுவனத்தால் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்படும், என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது,

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி -20ல் 01.10.2020 முதல் 31.03.2021 வரை அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7ல் குப்பைகளை அகற்ற பணி ஆணை வழங்கும் நாள் வரை துப்புரவு பணிகளை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணியை தொடர்வதற்கு அதே 569 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும், தனியார் நிறுவனம் மூலம் பணிகளை மேற்கொள்ள ஒப்பம் கோரப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ள நிலையில் தனியார் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியவுடன் இக்கோப்பிற்கான பணி ஆணை எந்த வித நிபந்தனையுமின்றி காலாவதி ஆகிவிடும், திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் பணி ஆணை வழங்கப்படும், தனியார் நிறுவனத்தால் தொடர்ந்து பணிகள் மேற்க்கொள்ளப்படும், என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது,
2. மேற்கண்ட 569 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம், 182 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ . ரூ.4,04,91,178/- (ரூபாய் நான்கு கோடியே நான்கு இலட்சத்து தொண்ணூற்றி ஓராயிரத்து நூற்று எழுபத்தி எட்டு மட்டும்)) நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 230 – 15 – 01 – 00 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.7ந.க.எண். 3536/2020

தீர்மான எண். 697/2020 **நாள்:26-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி - 18 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2020 உடன் முடிவடைவது - துப்புரவு பணியாளர்களை வைத்து 01.10.2020 முதல் 31.03.2021 வரை பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவு ரூ 2,93,89,906/-க்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குப்பட்ட மண்டலம் - 7 அம்பத்தூர், பகுதி – 18, வார்டு – 79 முதல் 83 வரை உள்ள 5 வார்டுகளின் மொத்த பரப்பளவு 16.08 சதுர கி.மீ ஆகும்.. இப்பகுதிகளில் 14 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1638 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2015ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1.56255 இருப்பினும் நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7, அம்பத்தூர், பகுதிகளில் தோரயமாக 335 மெ. டன் குப்பைகள் வார்டு 79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளிலும் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது- இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது. எனவே, தற்போது பகுதி-18ல் (வார்டு – 79 முதல் 83 வரை) தற்போது உள்ள நிரந்தர பணியாளகளின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப, துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

1) பகுதி 18 ல் பணிபுரியும் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை - 588
2) பகுதி 18 ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை - 175
3) பகுதி -18 ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை - 413

வார்டு – 82 , 83ல் நிரந்தர துப்புரவு பணியாளகள் 72 நபர்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றும் மற்றும் பதவி உயர்வு பெற்ற நிலையில் NULM பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் இப்பகுதி வளர்ந்து வரும் பகுதியாகும், மேலும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

31.03.2020 தேதியிட்ட சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 272/2020 – ன் படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 413 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 01.04.2020 முதல் 30.09.2020 வரை ஆறு மாத காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. சிறப்பு அதிகாரி, மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட ஆறு மாத காலம் 30.09.2020 ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7 பகுதி-18ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து இப் பணியினை மேற்கொள்ள சிறப்பு அதிகாரி மன்றத்தின் அனுமதி அவசியமாகிறது. அம்பத்தூர் மண்டலம்-7ல் பகுதி - 18 ல் துப்புரவு பணி பாதிப்பு ஏற்படாத வகையில் இத்திட்டபணியினை தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துகளின் அடிப்படையில் 588 துப்புரவு பணியாளர்கள் என்றாலும், தற்பொழுதுள்ள 175 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 413 எண்ணிக்கை கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம்-7 பகுதி – 18க்கு தேவை என கணக்கிட்டு 01.10.2020 முதல் 31.03.2021 வரையில் ஆகும் தோராய செலவினம் கீழ்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

ம.அ.7ந.க.எண். 3536/2020

வ.எண்	பகுதி எண்	NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	18	413	ரூ.391x413x182 (நாட்கள்) = ரூ 2,93,89,906/-
		மொத்தம்	ரூ 2,93,89,906/-

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்படசெயல்படுத்த ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை 06.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 413 பணியாளர்களுக்கு 182 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ2,93,89,906/- (இரண்டு கோடியே தொண்ணூற்றி மூன்று இலட்சத்து எண்பத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஆறு மட்டும்) என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும், தனியார் நிறுவனம் மூலம் பணிகளை மேற்கொள்ள ஒப்பம் கோரப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ள நிலையில் தனியார் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியவுடன் இக்கோப்பிற்கான பணி ஆணை எவ்வித நிபந்தனையுமின்றி காலாவதி ஆகிவிடும் திடக்கழிவு மேலாண்மை துறை மூலமாக பணி ஆணை வழங்கப்படும். தனியார் நிறுவனத்தால் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7, அம்பத்தூர்,பகுதி-18ல் 01.10.2020 முதல் 31.03.2021 வரை அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7. ல் குப்பைகளை அகற்ற பணி ஆணை வழங்கும் நாள் வரை துப்புரவு பணிகளை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணியை தொடர்வதற்கு அதே 413 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும், தனியார் நிறுவனம் மூலம் பணிகளை மேற்கொள்ள ஒப்பம் கோரப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ள நிலையில் தனியார் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியவுடன் இக்கோப்பிற்கான பணி ஆணை எவ்வித நிபந்தனையுமின்றி காலாவதி ஆகிவிடும் திடக்கழிவு மேலாண்மை துறை மூலமாக பணி ஆணை வழங்கப்படும் பட்சத்தில் தனியார் நிறுவனத்தால் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்படும்.
2. மேற்கண்ட 413 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 182 நாட்களுக்கு 01.10.2020 முதல் 31.03.2021 வரை மொத்த தொகை ரூ. 2,93,89,906/- (இரண்டு கோடியே தொண்ணூற்றி மூன்று இலட்சத்து எண்பத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஆறு மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண்230-15-01-00 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

Resolution No.698 /2020 **SUBJECT NOT PLACED**

Resolution No.699 /2020

SUBJECT NOT PLACED

ம.அ.9.ந.க.எண்.எச்.2/ 1431/2020

தீர்மான எண். 700/2020 **நாள்:29-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9 - பொது சுகாதாரத்துறை - கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் பணியாளர்களை பணியமர்த்த அனுமதி.

பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறையின் 24.09.2018 நாளிட்ட சுற்றறிக்கையில் கொசு ஒழிப்பு பணியை மேற்கொள்ளும் ஒப்பந்த தொழிலாளர்களை அந்தந்த மண்டலத்திலேயே தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் (NULM) குழுக்கள் அமைத்து அதன் மூலம் 365 நாட்களுக்கு தற்காலிக தொழிலாளர்களை கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த அந்தந்த மண்டல அலுவலர்கள் ஆணையரிடம் நிர்வாக அனமதி பெற்று பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 604/2019, நாள் 01.10.2019ல், மண்டலம்-9, பகுதி-24,25,26 (ம) 27, கோட்டம்-109 முதல் 126 வரை உள்ள 18 கோட்டங்களில் சுமார் 10 இலட்சம் மக்கள் தொகையும், 226557 வீடுகளும், 63 அரசு கட்டிடங்களும், 231 பள்ளிகளும், 92 குடிசை பகுதிகளும் உள்ளடங்கியுள்ளதாகும். இப்பகுதிகளில் மலேரியா, டெங்கு மற்றும் இதர தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பு நடவடிக்கைகளாக, கொசு ஒழிப்பு பணிகள், மழைநீர்வடிகால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணி, வீடுகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் கொசுப்புழு கொல்லி மருந்து போடுதல், கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகள், எலிக்கொல்லி மருந்து வைக்கும் பணிகள் மற்றும் பொது சுகாதாரத்துறை சார்ந்த பணிகளான தெருக்களில் சுற்றித்திரியும் மாடுகள் மற்றும் நாய்கள் பிடிக்கும் பணிகள் மேற்கொள்ள ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு ரூ. 379/- வீதம் 114 தொழிலாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) குழு உறுப்பினர்கள் மூலம் 01.10.2019 முதல் 30.09.2020 வரை ஓராண்டிற்கு தற்காலிகமாக பணியமர்த்த அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி வழங்கப்பட்ட ஆணை 30.09.2020 அன்றுடன் முடிவடைவதால், இப்பணிக்கு 109 முதல் 126 வரையிலான கோட்டங்களில் உள்ள 500 வீடுகள் 1 செக்டார் என கணக்கிட்டு 1 செக்டாருக்கு 1 மலேரியா பணியாளர் என 164 செக்டார்களுக்கு 164 பணியாளர்கள் வீடுகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் கொசு கொல்லி மருந்து இடும் பணிகளுக்காகவும், கொசு கொல்லி புகை பரப்பும் பணிகள் மேற்கொள்ள கோட்டம் வாரியாக தலா 1 பணியாளர் என 18 கோட்டங்களுக்கு 18 பணியாளர்களும், கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகளுக்காக தலா 2 பணியாளர்கள் வீதம் 36 பணியாளர்களும் இதர பணிகளுக்காக தேவைப்படும் மொத்த பணியாளர்களின் தேவை குறித்த அட்டவணை கீழ்கண்டவாறு:

S.No	DIV.	SECTOR	FOG	SPRAY	SWD	CANAL	OTHER	G.TOTAL
1	109	8	1	2	2	2	Cattle Catcher-4 UPHC-5 AHO Office-1 H.O. Tapal-1 B.G.-2 V.M. Fogging-2 Retired - 6	
2	110	8	1	2	2	5		
3	111	8	1	2	2	0		
4	112	8	1	2	2	2		
5	113	8	1	2	2	1		
6	114	7	1	2	2	2		
7	115	8	1	2	2	0		
8	116	9	1	2	2	2		
9	117	9	1	2	2	8		
10	118	8	1	2	2	0		
11	119	8	1	2	2	0		
12	120	9	1	2	2	2		
13	121	9	1	2	2	0		
14	122	10	1	2	2	2		
15	123	14	1	2	3	2		
16	124	13	1	2	2	5		
17	125	13	1	2	2	1		
18	126	7	1	2	2	2		
Total		164	18	36	37	34	21	312

ம.அ.9.ந.க.எண்.எச்.2/ 1431 / 2020

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு மண்டலம்-9ற்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரத்துறையில் பணிபுரிய 312 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்களில் 174 நிரந்தர பணியாளர்கள் களப்பணி மேற்கொண்டும், 24 பணியாளர்கள் பொது சுகாதாரத்துறையை சார்ந்த பணிகளை மேற்கொண்டும் வருகிறார்கள், எனவே, மண்டலம்-9 பொது சுகாதாரத்துறையில் பணிபுரிய தேவைப்படும் 312 பணியாளர்களில் 198 பணியாளர்கள் போக மீதம் 114 பணியாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பொதுமக்களின் நலன் கருதி 01.10.2020 முதல் 30.09.2021 வரை மேலும் ஒருவருட காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்த சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

அ) பெருநகர சென்னை மாநகராட்சி பொதுத்துறையின் 08.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின்படி குறைந்த பட்ட ஊதியம் (2020-2021) நபர் ஒன்றுக்கு தினசரி ஊதியம் ரூ.391/-வீதம், 365 நாட்களுக்கு (365x 114x391) ரூ.1,62,69,510/- மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,

ஆ) 114 பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணியமர்த்தி பணி மேற்கொள்ள ஒப்பந்த புள்ளி நடைமுறையில் இருந்து விலக்கு அளிக்கவும்,

இ) இப்பணிக்கு தேவையான நிதி ரூ.1,62,69,510/- (114 workers x pre day Rs.391 x 365 days) 210100602/350-100-301 என்ற கணக்கு தலைப்பில் நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.12.ந.க.எண்.சி1/ 2670/ 2020

தீர்மான எண். 701/2020 **நாள்:29-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -12 - திடக்கழிவு மேலாண்மை துறை - பகுதி - 35,36,37 - கோட்டம் 156 முதல் 167 வரை - துப்புரவு பணி - தற்போது தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (National Urban Lively Mission - NULM) கீழ் பல்வேறு கோட்டங்களில் பணிபுரியும் 615 பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2020 முடிவடைவதாலும் 01.10.2020 முதல் 3 மாத காலத்திற்கு (92 நாட்களுக்கு) கால நீட்டிப்பு செய்து பணியமர்த்த அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, ஆலந்தூர் பகுதியானது 41.50 சதுர கிலோமீட்டர் பரப்பளவுடன் 156 முதல் 167 வரையிலான 12 வார்டுகளை உள்ளடக்கி 1691 சாலைகள் / தெருக்கள் (263.48 கி.மீ நீளம்) கொண்ட பகுதியாகும் . இது தவிர ஜி.எஸ்.டி சாலை மற்றும் சென்னை விமான நிலையம் வரை உள்ள முக்கியமான பிரதான சாலை உள்ளடங்கியதாகும். இம்மண்டலத்தின் மக்கள் தொகை சுமார் 2.57 லட்சும் ஆகும். இம்மண்டல பகுதியில் தினமும் சுமார் 1.50 லட்சத்திற்கு மேல் மக்கள் வந்து செல்கிறார்கள். இம்மண்டலத்தில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 175 மெட்ரிக் டன் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இம்மண்டலத்தின் துப்புரவு பணிகளை முழுமையாக மேற்கொள்ள 1170 பணியாளர்கள் தேவை என்று கீழே கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது. தற்போது மண்டலம் -12, பகுதி -35,36, மற்றும் 37 க்கு உட்பட்ட வார்டுகளான 156 முதல் 167 வரை மற்றும் ஜி.எஸ்.டி சாலையில் தேவையான பணியாளர்கள், தற்போது பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் குறைவான பணியாளர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆலந்தூர் மண்டலத்தில் சென்னை விமான நிலையம் மற்றும் ஜி.எஸ்.டி சாலையில் தற்போது மெட்ரோ ரயில் சேவை துவங்கி உள்ளதாலும், மேலும் மவுண்ட் பூந்தமல்லி சாலையில் சென்னை வர்த்தக மையம், D.L.F நிறுவனம் அமைந்துள்ளதாலும், மேலும், மண்டலம்-12ல் உரக்கிடங்கு - 11 உள்ளதால் MCC (10 X 11 = 110 நபர்கள்) மற்றும் குப்பையை தரம் பிரித்து சேர்த்து வைக்கும் இடம் RRC - 1 உள்ளதால் (01 X 9 = 9 நபர்கள்) என கணக்கிட்டு 60+59 =119 பணியாளர்கள் பணியமர்த்த ஆணையர் / சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள் ,தற்போது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள மண்டலமாக உள்ளதாலும் ஆலந்தூர் மண்டல வளர்ச்சியை கணக்கில் கொண்டு கீழ்கண்டவாறு திடக்கழிவு மேலாண்மை துறையின் வழிகாட்டுதலின் படி பணியாளர்களின் எண்ணிக்கை ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது துப்புரவு பணியில் 16 காலிப்பணியிடம் உள்ளது .

வ. எண்	வார்டு	தேவையான பணியாளர்கள்	தற்போது பணிபுரிவர்கள்				
			நிரந்தரம்	தினக்கூலி	NULM	மொத்தம்	காலிப்பணியிடம் விவரம்
1	156	140	37	28	55	120	
2	157	110	20	18	44	82	1
3	158	92	26	21	36	83	1
4	159	40	14		32	46	1
5	160	85	38		36	74	1
6	161	90	42		33	75	1
7	162	90	43		36	79	3
8	163	73	37		35	72	
9	164	78	50		34	84	1
10	165	94	55		35	90	3
11	166	94	38		43	81	1
12	167	135	55		50	105	3
13	ஜி.எஸ்.டி சாலை	49	17		27	44	
14	MCC (ம) RRC	-	-	-	119	119	
	மொத்தம்	1170	472	67	615	1154	16

ம.அ.12.ந.க.எண்.சி1/ 2670/ 2020

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 07.07.2020 நாளிட்ட செயல் முறை ஆணை C2/7393/2018 ன் படி உறுதி செய்யப்பட்ட ஒரு துப்புரவு தொழிலாளியின் தினக்கூலி ரூ.391/- என்ற அடிப்படையில் மண்டலம்-12 ல் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (National Urban Livelyhood Mission - NULM) குழு உறுப்பினர்களை ஈடுபடுத்தி துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு கோட்டங்களில் பணிபுரியும் ***615*** பணியாளர்களின் பணிக்காலம் ***30.09.2020*** அன்றுடன் முடிவடைவதாலும் ***01.10.2020*** முதல் 3 மாத காலத்திற்கு (***92 நாட்களுக்கு)*** கால நீட்டிப்பு அனுமதி வேண்டப்படுகிறது .துப்புரவு பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு உத்தேச மதிப்பீடு கணக்கிடப்படுகிறது.

வ. எண்	கால அவகாசம்	நபர்களின் எண்ணிக்கை	நபர் ஒருவருக்கு தினசரி ஊதியம்	மொத்த நாட்கள்	மதிப்பீட்டு தொகை
1	01.10.2020 முதல் 31.12.2020 வரை (கோ-156 முதல்167 வரை)	**615**	**391**	**92**	**2,21,22,780**
மொத்தம்		**(ரூபாய் இரண்டு கோடியே இருபத்து ஒரு லட்சத்து இருபத்திரண்டாயிரத்து எழுநூற்று எண்பது மட்டும்)**			***2,21,22,780***

எனவே,

(அ) மேற்கண்ட துப்புரவு பணியினை ஏற்கனவே ஆணையர்/சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் 20.06.2020 நாளிட்ட ஒப்புதல் மூலம் பணிக்காலம் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது பணி மேற்கொண்டு வரும் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் மூலம் (National Urban Livelyhood Mission - NULM) பணியிலுள்ள ***615*** பணியாளர்களின் பணிக்காலம் ***30.09.2020*** உடன் முடிவடைவதாலும் ***01.10.2020*** முதல் 3 மாத காலத்திற்கு (***92 நாட்களுக்கு)*** சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட ரூ.391/- என்ற தினக்கூலி அடிப்படையில் ***615*** பணியாளர்களை பணி செய்ய கால நீட்டிப்பு அனுமதி வேண்டியும்,

(ஆ) மேற்படி பணிக்குண்டான 3 மாத காலத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை **ரூ. 2,21,22,780/- ஐ (ரூபாய் இரண்டு கோடியே இருபத்து ஒரு லட்சத்து இருபத்திரண்டாயிரத்து எழுநூற்று எண்பது மட்டும்)** தீர்வு செய்ய இப்பணிக்கான கணக்கு தலைப்பு எண் 40:41:03 கணக்கு உட்பிரிவு எண் 230-150-100ல் நிதி ஒதுக்கீடு செய்யவும் இதற்கான செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 28.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.14.ந.க.எண்.அ7/1633/2013

தீர்மான எண். 702/2020 **நாள்:29-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-14 - வார்டு 168, 169, 183 முதல் 191 வரை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத் திட்டத்தின் (NULM) கீழ் நடை பெற்று வந்த துப்புரவு பணி 30/09/2020 உடன் முடிவடைகிறது - 01.10.2020 முதல் 31.12.2020 வரை 92 நாட்களுக்கு காலநீட்டிப்பு செய்வதற்கு நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட புதியதாக உருவாக்கப்பட்ட மண்டலம்-14 (பெருங்குடி) கொட்டிவாக்கம், பாலவாக்கம், மடிப்பாக்கம், ஜல்லடம்பேட்டை ஆகிய கிராம பஞ்சாயத்துகளும், பள்ளிக்கரணை, பெருங்குடி ஆகிய பேரூராட்சி மற்றும் உள்ளகரம் புழுதிவாக்கம் நகராட்சி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி இணைக்கப்பட்ட மண்டலமாகும். புதியதாக உருவாக்கப்பட்ட இம்மண்டலம் 11 வார்டுகளை கொண்டுள்ளது. 86,539 வீடுகளுடன் கூடிய 3,45,435 எண்ணிக்கைகள் மக்கள் தொகை கொண்ட பெரிய மண்டலமாகும். இம்மண்டலத்தில் உள்ள 2,489 சாலைகள் 394.28 கிலோமீட்டர் நீளம் கொண்டதாகும்.

மண்டலம் 14-ல் உருவாகும் குப்பைகள் 20 எண்ணிக்கை கொண்ட கம்பாக்டர் வண்டிகள், 300 எண்ணிக்கை கொண்ட மூன்று சக்கர மிதிவண்டி மற்றும் 10 எண்ணிக்கையில் உள்ள பலதரப்பட்ட வண்டிகள் மூலமும் 172.71 மெட்ரிக் டன் அளவிற்கு குப்பைகள் நாள்தோறும் அகற்றப்பட்டு வருகிறது.

தோராயமாக வீதிகளை சுத்தம் செய்யவும், மூன்று சக்கர வண்டி ஓட்டவும் கம்பாக்டர் மற்றும் லாரிகளில் குப்பைகளை ஏற்றிக்கொண்டு அப்புறப்படுத்தவும், இரவுப்பணி செய்யவும், மொத்தம் 1,353 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

தற்பொழுது மண்டலத்தில் மொத்தமுள்ள நிரந்தரம் மற்றும் சுமார் 15 வருடங்களாக பஞ்சாயத்து காலத்திலிருந்து இன்று வரை தற்காலிகமாக பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் சேர்த்து மொத்தம் 538 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். ஆகையால் மொத்தம் தேவையான பணியாளர்கள் 1,353-ல் பணிபுரியும் பணியாளர்கள் 538 போக மீதம் உள்ள 815 பணியாளர்கள் தேவைப்பட்டது.

ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் 24.07.2020 நாளிட்ட ஒப்புதலின்படி இப்பணியானது 01/07/2020 முதல் 30/09/2020 வரை துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது 30/09/2020 உடன் முடிவடைவதால் 01/10/2020 முதல் 31/12/2020 வரை NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து துப்புரவு பணி மேற்கொள்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

சென்னை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் 07.07.2020 நாளிட்ட செயல்முறை ஆணை C2/7393/2018-ன் படி உறுதி செய்யப்பட்ட ஒரு துப்புரவு தொழிலாளியின் தினக்கூலி ரூ.391/- என்ற அடிப்படையிலும், மண்டலம் 14-க்கு தேவைப்படும் 815 தினக்கூலி துப்புரவு பணியாளர்களுக்கு (01/10/2020 முதல் 31/12/2020 வரை) 92 நாட்களுக்கு (ரூ.391/- X 815 X 92= ரூ.2,93,17,180/-) (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து பதினேழாயிரத்து நூற்று எண்பது மட்டும்) தேவைப்படுகிறது.

எனவே, மண்டலம்-14ல் பகுதி-41,42 மற்றும் 43ல் உள்ள கோட்டங்களான 168,169 மற்றும் 183 முதல் 191 வரை உள்ள பகுதிகளில் இதுநாள் வரை பணியில் ஈடுபடுத்தப்பட்ட தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்ட உறுப்பினர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது.

தற்போது பணிபுரிந்து வரும் தேசிய நகர் புற வாழ்வாதார திட்டத்தின் (NULM) பணியாளர்கள் விவரங்கள்

வ.எண்	பகுதி	வார்டு எண்	தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்ட பணியாளர்கள்	மொத்தப் பணியாளர்கள்	நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.391.00 வீதம் 92 நாட்களுக்கு செலவாகும் தொகை
1	41	183	99	302	ரூ.1,08,63,544.00
2		184	31		
3		185	111		
4		186	61		

5	42	187	34	327	ரூ.1,17,62,844.00
6		188	127		
7		168	47		
8		169	119		
9	43	189	67	186	ரூ.66,90,792.00
10		190	60		
11		191	59		
	மொத்தம்		815	815	ரூ.2,93,17,180.00

எனவே, இம்மண்டலத்தின் துப்புரவு பணியின் முக்கியத்துவம் கருதி,

1. விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் துப்புரவு பணி தனியார் மயமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், மண்டலம் 14, பகுதி 41, 42 (ம) 43-ல¦ துப்புரவு பணிக்காக தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் (NULM)மூலம் பணியமர்த்தப்பட்ட 815 துப்புரவு பணியாளர்களை 01/10/2020 முதல் 31/12/2020 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு (92 நாட்களுக்கு) காலநீட்டிப்பு செய்து பணியமர்த்த நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்டவாறு பணியமர்த்தப்படுவதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.2,93,17,180.00 (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து பதினேழாயிரத்து நூற்று எண்பது மட்டும்) ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,
3. மேற்கண்ட பணிக்கு செலவாகும் தொகைக்கு பிரிவு குறியீடு எண். 40-41-03 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-15-01-00 கீழ¦ தனியார்மயம் துப்புரவு என¦ற தலைப்பில் 2020-21ம் நிதியாண்டில் போதிய நிதி ஒதுக்கீடு செய்து, பட்டி தீர்வு செய்ய ஆணை வேண்டியும்,
4. மண்டலம்-14ல் பகுதி-41,42 மற்றும் 43-ல் பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ள 01/10/2020 முதல் 31/12/2020 வரை 92 நாட்களுக்கு, ஏற்கனவே பணிப்புரிந்த தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்ட உறுப்பினர்களை கொண்டு (NULM) 45 குழு ஊக்குவிப்பாளர்களுக்கு மண்டல அலுவலர்-14 அவர்கள் மூலமாக பணிஆணை வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 28.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ப.து.ந.க.எண்.டி.1/0035/2020

தீர்மான எண். 703/2020 **நாள்:29-09-2020**

தானப்பத்திரம்

மண்டலம்-10, கோட்டம்-129ல் உரிமையாளர் திரு.C.A.துரை மாணிக்கம் அவர்கள் பழைய கதவு எண். 37, புதிய கதவு எண்.15, ஆற்காட் ரோடு, சாலிக்கிராமம், சென்னை – 600093, T.S.No.18, பிளாக் எண். 44, சாலிக்கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ல் PPA/WDCN10/03721/2020, நாள்.10.07.2020ன்படி விண்ணப்பித்துள்ளார். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக ஆற்காட் ரோடு அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி ஆற்காட் சாலை 30.50 மீ சாலை விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய நீளம் 14.26 மீ அகலம் 3.60 மீ ஆக மொத்தம் தேவையான 51.34 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு.C.A. துரை மாணிக்கம் அவர்கள் பழைய கதவு எண். 37, புதிய கதவு எண்.15, ஆற்காட் ரோடு, சாலிக்கிராமம், சென்னை - 600093. T.S.No.18, பிளாக் எண். 44, சாலிக்கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் 51.34ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.97,000/- (ரூபாய் தொண்ணூற்றி ஏழாயிரம் மட்டும்) மனை உரிமையாளர், திரு.C.A. துரை மாணிக்கம் அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி –நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 18.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரம், 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி -நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.5. ந.க.எண்./6286 /2020

தீர்மான எண். 704/2020 **நாள்:29-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5, வார்டு-56 பி.ஆர் கார்டன் மிகவும் பழுதடைந்துள்ள பழைய பொது கழிப்பறை கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

மண்டலம்- 5, பகுதி-13, வார்டு-56க்கு உட்பட்ட பி.ஆர்.கார்டன் பகுதியில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தரை தளம் கொண்ட பழைய பொது கழிப்பறை கட்டிடம் உள்ளது. எனவே, இந்த கட்டிடத்தை இடித்துவிட்டு அவ்விடத்தில் வசிக்கும் மக்கள் பயன்படும் வகையில் புதியதாக பொது கழிப்பறை கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள பழைய பொது கழிப்பறை கட்டிடம் கட்டப்பட்டு சுமார் 40 வருடங்கள் ஆகின்றன. இந்த கட்டிடமானது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், இக்கட்டிடத்தை இடித்துவிட்டு அவ்விடத்தில் புதிய பொது கழிப்பறை கட்டிடம் கட்டுதல் அவசியமாகிறது. இது சம்மந்தமாக துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் திரு. P.K.சேகர்பாபு,MLA அவர்களின் 2020-21 ஆம் ஆண்டு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதியதாக பொது கழிப்பறை கட்டிடம் கட்டுவதற்க்கு ரூ.38,50,000/- (ரூபாய் முப்பத்தெட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அளித்து இசைவு தெரிவித்துள்ளார்.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(a) கட்டிடத்தின் பரப்பளவு

(i) தரை தளம் = 11.70மீ x 10.20மீ = 119.34 சதுர மீட்டர்

கட்டிடத்தின் மொத்த பரப்பளவு = 119.34 சதுர மீட்டர்

(b) தற்போதைய புத்தக மதிப்பு = ரூ. 945.00/-

எனவே, மண்டலம்-5, வார்டு-56க்கு உட்பட்ட பி.ஆர்.கார்டனில் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய பொது கழிப்பறை கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"பொது கழிப்பறை கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.5. ந.க.எண் *6835 / 2020*

தீர்மான எண். 705/2020 **நாள்:29-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-*5*, வார்டு-*54* உட்வார்ப்பு பகுதியில் மிகவும் பழுதடைந்துள்ள பழைய பொது கழிப்பறை கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

மண்டலம் -*5*, பகுதி -*13*, வார்டு -*54*க்கு உட்பட்ட உட்வார்ப்பு பகுதியில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தரைத்தளம் கொண்ட பழைய பொது கழிப்பறை கட்டிடம் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ளது. மேலும் உட்வார்ப்பு குடிசைவாழ் பகுதியில் சுமார் *600* குடும்பங்கள் வசித்து வருகின்றன. அப்பகுதியில் போதுமான கழிப்பறை வசதி இல்லாத காரணத்தால், பழைய பழுதடைந்த கழிப்பறையை இடித்துவிட்டு அங்கு வசிக்கும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அவ்விடத்தில் இருபது கழிப்பறைகள் (ஆண்கள் -*10* & பெண்கள் -*10*) மற்றும் நான்கு குளியலறை கொண்ட நவீன பொது கழிப்பறை கட்டிடம் கட்டுதல் அவசியமாகிறது. இது சம்மந்தமாக துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் திரு. *P.K.*சேகர்பாபு,*MLA* அவர்களின் *2020-21* ஆம் ஆண்டு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதியதாக நவீன பொது கழிப்பறை கட்டிடம் கட்டுவதற்கு ரூ.*30,00,000/-* (ரூபாய் முப்பத்து இலட்சம் மட்டும்) அளித்து இசைவு தெரிவித்துள்ளார்.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(*a*) கட்டிடத்தின் பரப்பளவு

(*i*) தரை தளம் = *14.00*மீ x 3.00மீ = *42.00* சதுர மீட்டர்

கட்டிடத்தின் மொத்த பரப்பளவு = *42.00* சதுர மீட்டர்

(*b*) தற்போதைய புத்தக மதிப்பு = ரூ. *2200.00/-*

எனவே, மண்டலம்-*5*, வார்டு-*54*க்கு உட்பட்ட உட்வார்ப்பு பகுதியில் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய பொது கழிப்பறை கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"பொது கழிப்பறை கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.5.ந.க.எண்./6756/2020

தீர்மான எண். 706/2020 **நாள்:29-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-5, வார்டு-61, LG சாலை , மூர்த்தி தெரு சந்திப்பில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

மண்டலம்-5, பகுதி-14, வார்டு-61க்கு உட்பட்ட LGசாலை - மூர்த்தி தெரு சந்திப்பில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் உள்ள பழுதடைந்த பொது கழிப்பிட கட்டிடம் மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. இதனால் இப்பகுதி பொதுமக்கள் மிகவும் அச்சத்துடன் பயன்படுத்தி வருகின்றனர். இக்கட்டிடத்தின் சுவற்றில் செடி வளர்ந்து பல இடங்களில் விரிசல் ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் 2010ஆம் ஆண்டு கட்டப்பட்டது. எனவே, இக்கட்டிடமானது மிகவும் பழுதடைந்துள்ளதாகவும் மற்றும் பொது மக்கள் பயன்பாட்டுக்கு மிகவும் சிரமமாகவும் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய கட்டிடம் வேண்டுதல் அவசியமாகிறது. புதிதாக கட்டுவதற்கு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரை தளம்=9.70மீ x 7.90மீ = 76.63ச.மீ.

புத்தக மதிப்பு = ரூ. 0.00

எனவே, மண்டலம்-5, வார்டு-61க்கு உட்பட்ட LGசாலை - மூர்த்தி தெரு சந்திப்பில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"பொது கழிப்பறை கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.6. ந.க. எண்.4327/2020

தீர்மான எண்.707/2020 **நாள்: 29-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, வார்டு-76 - C.S நகர், சச்சிதானந்தம் தெருவில் பழுதடைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

வ. எண்	வார்டு எண்-76	மண்டலம்-6
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	C.S நகர், சச்சிதானந்தம் தெருவில் பழுதடைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம்.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	1984
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு?	325.07 சதுரமீட்டர் (தரைதளம்)
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு?	1122.25 சதுரமீட்டர்
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.5,12,162.30/-
6	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	பயன்பாட்டில் உள்ளது
7	அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிட துறையின் மூலம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் சுத்திகரிப்பு மையம் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பழுதடைந்துள்ளது.
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்?	இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி

எனவே, மேற்கண்ட மண்டலம்-6, வார்டு-76, C.S நகர், சச்சிதானந்தம் தெருவில் பழுதடைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.இ7/ 19659/ 2020 &
ம.சே.து.ந.க.எண்.எப்5/0742/2020

தீர்மான எண்.708 / 2020 **நாள்:29-09-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - திருமதி. ந. அமராவதி, தாய்சேய் நல அலுவலர், வளசரவாக்கம் மருத்துவ மண்டலம் - 11 (ஊதியம் பெறும் இடம் அண்ணாநகர் மருத்துவ மணடலம் - 8) அவர்கள் 30.09.2020 அன்று பிற்பகல் தன் விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, வளசரவாக்கம் மருத்துவ மண்டலத்தில் (ஊதியம் பெறும் இடம் அண்ணாநகர் மருத்துவ மண்டலம்) தாய்சேய் நல அலுவலராக பணிபுரியும் திருமதி. ந. அமராவதி அவர்கள் தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணத்தாலும் பணிக்கு வர இயலாத நிலையில் 30.09.2020அன்று தன் விருப்ப ஓய்வு வேண்டி விண்ணப்பித்துள்ளார்

திருமதி. ந. அமராவதி அவர்கள் 02.01.1989 அன்று தாய்சேய் நல அலுவலராக பணியில் சேர்ந்து புரிந்து வருகிறார். இவர் தாய்சேய் நல அலுவலர் பதவியில் 02.01.1989 அன்று பணிவரன்முறைப்படுத்தியும் 02.01.1991 அன்று தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தனியரது தாய்மொழி தமிழ் ஆகும்.

மண்டல மருத்துவ அலுவலர், அண்ணாநகர் மருத்துவ மணடலம் அவர்களின் 1607.2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது தணிக்கை தடை, மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. மண்டல மருத்துவ அலுவலர், கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம் அவர்களின் கடிதத்தில், தனியர் மீது தணிக்கை தடை, மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

மண்டல மருத்துவ அலுவலர், வளசரவாக்கம் மருத்துவ மண்டலம் அவர்களின் 27.08.2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது தணிக்கை தடை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. மண்டல மருத்துவ அலுவலர், திருவொற்றியூர் மருத்துவ மண்டலம் அவர்களின் 07.09.2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது தணிக்கை தடை, மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. கண்காணிப்பாளர் -2 மருத்துவ சேவைகள் துறை அவர்களின் 15.09.2020 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது ஓழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார்.

விழிப்பு அலுவலர் அவர்களின் 30.07.2020 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. மருத்துவ சேவைகள் துறை தணிக்கை பிரிவின் 11.09.2020 நாளிட்ட குறிப்பில், தனியர் மருத்துவ சேவைகள் துறையில் 02.01.1989 முதல் இந்நாள் வரை பணியாற்றிய காலத்திற்கு தனியர் மீது தணிக்கைத் தடை பத்தி நிலுவை இல்லையெனவும், மேலும் 2019 - 2020 மற்றும் 2020 - 2021 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளி வந்தவுடன் தணிக்கைதடை நிலுவை குறித்து பின்னர் தெரியவரின் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என நிபந்தனையுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இயக்குநர், மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு அவர்களின் 04.09.2020 நாளிட்ட கடிதத்தில் மேற்படி தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு அலுவலக சங்கத்தின் 20.07.2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் இச்சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 54 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 31 ஆண்டுகள் 08 மாதங்கள் 27 நாள் ஆகும். தனியரின் பிறந்த நாள் - 05.07.1965. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.07.2024 ஆகும்.

பொ.து.ந.க.எண்.இ7/ 19659/ 2020 &
ம.சே.து.ந.க.எண்.எப்5/0742/2020

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்: 07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்: 11.12.1995ன்படியும், தனியர் 31 ஆண்டுகள் 08 மாதங்கள் 27 நாள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதாலும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

எனவே, மேலே தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் திருமதி. ந. அமராவதி, தாய்சேய் நல அலுவலர், வளசரவாக்கம் மருத்துவ மண்டலம் - 11 (ஊதியம் பெறும் இடம் அண்ணாநகர் மருத்துவ மணடலம் – 8) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, 2019 – 20 மற்றும் 2020 – 21 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளிவந்தவுடன் ஏதேனும் தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, 30.09.2020 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

“தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.

****

தி.க.மே.து.ந.க.எண்.எ7/2586/2020

தீர்மான எண். 709/2020 **நாள்:29-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மதிப்பீடு- 2020-2021- திடக்கழிவு மேலாண்மை துறை- மண்டலம்-3, கோட்டம்-29, வழுதலை பிரதான சாலை, அம்மா உணவகம் வரை சாலை ஓரத்தில் சுற்றுசுவர் கட்டும் பணி- 2020-2021 ஆம் ஆண்டின் அலுவலகவிலைப்பட்டியலின் அடிப்படையில் மதிப்பீடு தொகை ரூ.74,40,000/- க்கு அனுமதி.

1. பணியின் பெயர்: :

வரிசை எண்	மண்டலம் எண்	பணி பெயர் / விவரம்	நீளம்	பரப்பளவு	மதிப்பீட்டு தொகை ரூபாய்
1	3	மண்டலம்-3, கோட்டம்-29, வழுதலை பிரதான சாலை, அம்மா உணவகம் வரை சாலை ஓரத்தில் சுற்றுசுவர் கட்டும் பணி	250 மீ	-	74,40,000/-

2.	பரிந்துரை செய்தவரின் விவரம்	:	மேற்பார்வை பொறியாளர் (திகமே)
3.	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	:	திடக்கழிவு மேலாண்மை துறை
4.	சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	:	பெறப்பட்டுள்ளது
5.	தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி, செயல்முறை ஆணை எண் மற்றும் தேதி	:	மேற்பார்வை பொறியாளர் (திகமே) S.E(SWM)T.S.No/23/2020 Date:16.09.2020
6.	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணையின் விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது	:	2020-2021
7.	மதிப்பீட்டின் தொகை	:	74,40,000.00
(அ)	பணி செலவினம் மட்டும்	:	57,67,715.58
(ஆ)	மேலான மேற்பார்வை செலவு	:	5,76,771.56
(இ)	சிறு மேற்பார்வை செலவு	:	1,44,192.89
(ஈ)	மற்றைய எதிர்பாரா செலவு	:	1,43,839.78
(உ)	தரகட்டுபாட்டு செலவினம்	:	57,677.16
(ஊ)	TNMWGW FUND 1%	:	57,677.16
(எ)	சரக்கு மற்றும் சேவை வரி 12 %	:	6,92,125.87
	மொத்தம்	:	**74,40,000.00**
8.	மழைநீர் வடிகால் கட்டுவது, நடைபாதை பகுதியா அல்லது சாலைப்பகுதியா அதன் அளவு குறிப்பிடவும்	:	பொருந்தாது
9.	ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு	:	
	(அ) ஒரு மீட்டருக்கு செலவு	:	ரூ. 23,070.86/மீ
10.	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா?	:	ஆம்
11.	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி, நாள்	:	- -

12.	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	:	புதிய பணி
13	நிதியின் மூலத்தன்மை	:	
	அ) வரவு செலவு ஒதுக்கீடு	:	412-40-05-08 Others – Office Buildings – SWM Department Buildings
	ஆ) மதிப்பீடுகளுக்கு இது வரை ஒதுக்கப்பட்ட நிதி	:	---------
	இ) மீதம் உள்ள நிதி (அ-ஆ)	:	----------
	ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	:	ரூ. **74,40,000.00**

மேற்குறிப்பிட்ட பணிக்கு *2020-2021*ம் ஆண்டின் விலைவிகிதப்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.**74,40,000.00**க்கு (ரூபாய் எழுபத்து நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"மதிப்பீட்டிற்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பூ.து.ந.க.எண்.பி2/954 /2020

தீர்மான எண்.710/2020 **நாள்:29-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - பூங்கா துறை - மண்டலம்-8, கோட்டம்-104, நேரு நகர் குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் உள்ள திறந்தவெளி நிலத்தில் சிறுவர் விளையாட்டுத்திடல், விளையாட்டு உபகரணங்கள், திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் பணிகள் - ரூ.67,00,000/- மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.

1	பணியின் பெயர்	:	மண்டலம்-8, கோட்டம்-104, நேரு நகர் குடிசைமாற்று வாரிய குடியிருப்பில் உள்ள திறந்தவெளி நிலத்தில் சிறுவர் விளையாட்டுத் திடல், விளையாட்டு உபகரணங்கள், திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் பணி
2	பரிந்துரை செய்தவரின் விவரம்	:	தலைமை பொறியாளர் / பூங்கா
3	எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம்	:	மண்டலம்-8
4	தொழில் நுட்ப ஒப்புதல் பெற்ற விவரம்	:	மேற்பார்வை பொறியாளர் / பூங்கா அவர்களின் தொழில் நுட்ப அனுமதி, எண். 01/2020, நாள்: 07.09.2020
5	மதிப்பீட்டு எண்	:	-
6	விலைப்பட்டியல் ஆண்டு	:	2020-21
7	**மதிப்பீட்டின் தொகை :**	:	**ரூ.67,00,000/-**
	(அ) கட்டுமான பணி செலவு மற்றும் ஜி.எஸ்.டி. 12 %	:	ரூ.57,39,913.57
	(ஆ) மேலான மேற்பார்வை செலவு 10%	:	ரூ.5,73,991.39
	(இ) சிறு மேற்பார்வை செலவு 2.5 %	:	ரூ.1,43,497.85
	(ஈ) தரக்கட்டுப்பாடு – 1%	:	ரூ. 57,399.14
	(உ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	:	ரூ. 57,399.14
	(ஊ) மற்றைய எதிர்பாரா செலவு 2.5%	:	ரூ.1,27,798.91
	மொத்தம்	:	**ரூ.67,00,000/-**
8	ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு	:	பொருந்தாது
9	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	:	ஆம்
10	நிதியின் மூல தன்மை	:	மூலதன நிதி 2020-21
11	இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி	:	**ரூ.67,00,000/-**

பூ.து.ந.க.எண்.பி2/954 /2020

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.67,00,000 / - (ரூபாய் அறுபத்து ஏழு இலட்சம் மட்டும்)-க்கான மதிப்பீட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி-1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி78(பி)ன்படி சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 14.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது".

****

பூ.து.ந.க.எண்.பி2/956/ 2020

தீர்மான எண்.711/2020 **நாள்:29-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - பூங்கா துறை - மண்டலம்-5, பகுதி-13, கோட்டம்-57, தண்ணீர் தொட்டி தெருவில் உள்ள விளையாட்டுத்திடலை மறு சீரமைப்பு மேம்பாட்டு பணிக்கான ரூ.67,80,000/- மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.

1	பணியின் பெயர்	:	மண்டலம்-5, பகுதி-13, கோட்டம்-57, தண்ணீர் தொட்டி தெருவில் உள்ள விளையாட்டுத்திடலை மறு சீரமைப்பு மேம்பாட்டு பணி
2	பரிந்துரை செய்தவரின் விவரம்	:	தலைமை பொறியாளர் / பூங்கா
3	எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம்	:	மண்டலம்-5
4	தொழில் நுட்ப ஒப்புதல் பெற்ற விவரம்	:	மேற்பார்வை பொறியாளர் / பூங்கா அவர்களின் தொழில் நுட்ப அனுமதி, எண். 02/2020, நாள்: 07.09.2020
5	மதிப்பீட்டு எண்	:	-
6	விலைப்பட்டியல் ஆண்டு	:	2020-21
7	**மதிப்பீட்டின் தொகை :**	:	**ரூ.67,80,000/-**
	(அ) கட்டுமான பணி செலவு மற்றும் ஜி.எஸ்.டி. 12 %	:	ரூ. 57,97,037.39
	(ஆ) மேலான மேற்பார்வை செலவு 10%	:	ரூ. 5,79,703.74
	(இ) சிறு மேற்பார்வை செலவு 2.5 %	:	ரூ. 1,44,925.93
	(இ) தரக்கட்டுப்பாடு – 1%	:	ரூ. 57,970.37
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	:	ரூ. 57,970.37
	(உ) மற்றைய எதிர்பாரா செலவு 2.5%	:	ரூ. 1,42,592.19
	மொத்தம்	:	**ரூ.67,80,000/-**
8	ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு	:	பொருந்தாது
9	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	:	ஆம்
10	நிதியின் மூல தன்மை	:	மூலதன நிதி 2020-21
11	இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி	:	**ரூ.67,80,000/-**

பூ.து.ந.க.எண்.பி2/956/ 2020

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.67,80,000/- (ரூபாய். அறுபத்து ஏழு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)-க்கான மதிப்பீட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி-1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி78(பி)ன்படி சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 14.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.5.வ.து.ந.க.எண்.சி1/ 4353/ 2020

தீர்மான எண். 712 / 2020 **நாள்:30-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-5 - வருவாய் துறை - வார்டு-49 முதல் 63 வரை - கொரானா நோய் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கை - கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் கொரானா நோய் தொற்று பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பணிகளை மேற் கொள்ளுவதற்கு 300 எண்ணிக்கையிலான தன்னார்வ பணியாளர்களை (Focus Volunteers) அவசர அவசியம் கருதி 16.09.2020 முதல் மேலும் 30 நாட்களுக்கு பணியமர்த்த அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம் 49 முதல் 63 வரையிலான பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளை கண்காணிப்பு செய்ய ஒரு கோட்டத்திற்கு ஒரு நபருக்கு தலா 49 முதல் 63 வரையிலுள்ள உட்புற சாலைகள் என்ற வகையில் மண்டலத்தில் உள்ள 1452 உட்புற சாலைகளில் உள்ள தனிமைபடுத்தப்பட்ட (Quarantine) பகுதிகளுக்கு வாகனம் மற்றும் கைபேசி (Smart Phone) உடன் சென்று கண்காணிக்கவும் உடனுக்குடன் தகவல்களை உரிய அலுவலர்களுக்கு தெரிவிக்கவும் மற்றும் உள்ளூர் காவலர்கள் மற்றும் சமூக ஆவர்வாளர்களுடன் சேர்ந்து களப்பணி ஆற்றவும், அலுவலக அதிகாரியின் உத்தரவின்படி கொரோனா தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், கண்காணிப்பு செய்யவும், 300 நபர்களை 15.06.2020 முதல் 15.09.2020 வரை 90 நாட்கள் மூன்று மாதங்களுக்கு தற்காலிக தன்னார்வ பணியாளர்களை (Focus Volunteers) பணிக்க சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.538/2020 நாள்.10.08.2020 பெறப்பட்டது.

இந்நிலையில், கூடுதல் தலைமை செயலாளர், அவர்களின் 20/06/2020 நாளிட்ட G.O.MS.NO.312ன்படி, (15.06.2020 முதல் 15.09.2020 வரை 90 நாட்கள் முடிவடையும் நிலையில்) மேலும் 16.09.2020 முதல் 30 நாட்களுக்கு தற்காலிக தன்னார்வ பணியாளர்களை (Focus Volunteers) பணிக்க நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மேற்கண்ட தன்னார்வாளர் பணியாளர்களுக்கு (Focus Volunteers) Revenue Disaster Management Department, Disaster Management Wing D.M.II Section G.O.(M.S.) No.312 Date 20.06.2020ன்படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம், ஒரு மாதத்திற்கு ஊதியம் ரூ.15,000/- X 300 நபர்களுக்கு ஒரு மாத ஊதியம் ரூ.45,00,000/-(ரூபாய் நாற்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) வழங்க நிர்வாக அனுமதியும்,
2. மேற்குறிப்பிட்ட ரூ.45,00,000/- (ரூபாய் நாற்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) Volunteers Salary Function Code 20-21-07 மற்றும் Account Head 230-70-12-03 நிதியில் நிதி ஒதுக்கீடு செய்திடவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.15.ந.க.எண்.அ2/ 880/ 2018

தீர்மான எண். 713/2020 **நாள்:30-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம் 15 - துப்புரவு பணியாளர்கள் - பகுதி - 44 மற்றும் 45 - கோட்டங்கள் -192 முதல் 200 வரை - துப்புரவு பணி மேற்கொள்வது - ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிர்வாக அனுமதிக்கான காலம் 30.09.2020 உடன் முடிவுறுதல் - 01.10.2020 முதல் 31.12.2020 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு 92 நாட்களுக்கு தொடர் பணி செய்ய கால நீடிப்பு வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15, சோழிங்கநல்லுhர் பகுதியானது 42.23 சதுர கி.மீ பரப்பளவுடன் 192 முதல் 200 வரையிலான 9 வார்டுகளை உள்ளடக்கி 386 கி.மீ. நீளமுள்ள 2091 சாலைகள் / தெருக்கள் கொண்ட பகுதியாகும். இம்மண்டலத்தில் மக்கள் தொகை சுமார் 3.03 இலட்சம் ஆகும். இம்மண்டலத்தில் தினசரி சேகரிக்கும் குப்பையின் அளவு 180 MT என்று கணக்கிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் தினமும் தூய்மை பணிகள் மேற்கொண்டு சுத்தம் சுகாதாரம் பேணவேண்டியது அவசியமாகிறது.

சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் தீர்மான எண்.434/2020, நாள். 02.07.2020ன்படி, தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலமாக ஏற்கனவே பணிபுரிந்த குழு உறுப்பினர்களைக் கொண்டு 01.07.2020 முதல் 30.09.2020 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து ஆணை பெறப்பட்டு, துப்புரவு பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அனுமதி பெறப்பட்ட காலம் 30.09.2020 முடிவடைய உள்ள நிலையில் மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.10.2020 முதல் 31.12.2020 வரை 92 நாட்களுக்கு (NULM) இயக்கத்தின் மூலம் தொடர்ந்து துப்புரவு பணி மேற்கொள்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

பொதுத்துறையின் 08.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின் படி, மண்டலம்-15 க்கு தேவைப்படும் 880 தினக்கூலி துப்புரவு பணியாளர்களுக்கு (01.10.2020 முதல் 31.12.2020 வரை) 92 நாட்களுக்கு **(ரூ.391/- X 880 X 92 = ரூ.3,16,55,360/-** (ரூபாய் மூன்று கோடியே பதினாறு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து முந்நூற்று அறுபது மட்டும்) தேவைப்படுகிறது.

எனவே, மண்டலம்-15ல் பகுதி-44 மற்றும் 45க்குட்பட்ட கோட்டங்களான 192 முதல் 200 வரை உள்ள பகுதிகளில் இதுநாள் வரை பணியில் ஈடுப்படுத்தப்பட்ட தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் உறுப்பினர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது.

தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM)பணியாளர்களின் விவரங்கள்

வ. எண்	வார்டு எண்.	தேவையான பணியாளர்கள்	தற்போது பணிபுரிபவர்கள்			பணியாளர்களின் எண்ணிக்கை
			நிரந்தரம்	தினக்கூலி	மொத்தம்	
1	192	114	8	37	45	69
2	193	88	11	11	22	66
3	194	105	13	12	25	80
4	195	141	18	8	26	115
5	196	139	16	31	47	92
6	197	117	26	18	44	73
7	198	152	25	8	33	119
8	199	61	8	11	19	42
9	200	95	13	12	25	70
		1012	138	148	286	726
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் மறு குடியமர்த்தப்பட்ட பகுதிகள்		பெரும்பாக்கம்	-	-	-	46
		எழில் நகர் (ஒக்கியம் துரைப்பாக்கம்)	-	-	-	49
		பெரும்பாக்கம் விரிவு	-	-	-	59
		மொத்தம்	-	-	-	880

எனவே, இம்மண்டலத்தின் துப்புரவு பணியின் முக்கியத்துவம் கருதி,

1. விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் துப்புரவு பணி தனியார் மயமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால் மண்டலம்-15, பகுதி-44 மற்றும் 45ல் துப்புரவு பணிக்காக தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணியமர்த்தப்பட்ட 880 துப்புரவு பணியாளர்களை 01.10.2020 முதல் 31.12.2020 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு (92 நாட்களுக்கு) காலநீட்டிப்பு செய்து பணியமர்த்த நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்டவாறு பணியமர்த்தப்படுவதற்கு ஆகும் செலவினத் தொகை (880 நபர்கள் x 92 நாட்கள் x ரூ.391/- ஒரு நாளைக்கு தினக்கூலி ஊதியம்) **ரூ.3,16,55,360/-** (ரூபாய் மூன்று கோடியே பதினாறு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து முந்நூற்று அறுபது மட்டும்) ஒதுக்கீடு செய்ய அனுமதியும்
3. மேற்கண்ட பணிக்கு செலவாகும் தொகை பிரிவு குறியீடு எண்.40-41-03 மற்றும் கணக்கு குறியீடு எண். 230-15-01-00 கீழ் தனியார் மயம் துப்புரவு என்ற தலைப்பில் 2020-2021ஆம் நிதியாண்டில் போதிய நிதி ஒதுக்கீடு செய்து பட்டி தீர்வு செய்ய ஆணை வேண்டியும்,
4. மண்டலம்-15, பகுதி-44 மற்றும் 45ல் பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ள 01.10.2020 முதல் 31.12.2020 வரை மூன்று மாத காலத்திற்கு (92 நாட்களுக்கு) ஏற்கனவே பணிபுரிந்த தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் உறுப்பினர்களை கொண்டு (NULM) 50 குழு ஊக்குவிப்பாளர்களுக்கு மண்டல அலுவலர்-15 அவர்கள் மூலமாக பணி ஆணை வழங்கவும், தனியார் மூலம்துப்புரவு பணி ஆரம்பிக்கும் நாள் வரை மட்டுமே NULM இயக்கத்தின் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 28.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.8.ந.க.எண்.சி3 / 3730 /2020

தீர்மான எண். 714/2020 **நாள்: 30-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-8 - கோட்டம்-94 முதல் 108 வரை துப்புரவு பணிக்காக தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணிபுரியும் 551 தற்காலிக பணியாளர்களுக்கு 01.10.2020 முதல் 31.03.2021 வரை பணி தொடர்ச்சி அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-8 ஆனது 27.02 சதுர கி.மீ பரப்புள்ள 15 வார்டுகளை (வார்டு 94 முதல் 108 வரை) உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 54 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2378 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8,00,456 ஆகும். மேலும், முக்கிய பிரமுகர்கள் அடங்கிய பகுதியாக உள்ளது. இம்மண்டலத்தில் நாளுக்கு நாள் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8க்குட்பட்ட பகுதி-21, 22 மற்றும் 23ல் உள்ள 15 வார்டுகளில் (வார்டு 94 முதல் 108 வரை) தினமும் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு 430 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணியினை திறம்பட செய்ய வேண்டி ஒரே நாளில் அனைத்து வார்டுகளிலும் நிரந்தர பணியாளர்களுடன் தினக்கூலி பணியாளர் மூலம் துப்புரவு பணியினை மேற்கொள்ள தற்காலிக தூய்மை பணியாளர்கள் 551 நபர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (National Urban Livelihoods Mission) மூலமாக பணிபுரிய பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் 13.04.2020 நாளிட்ட அனுமதி பெறப்பட்டது. அம்மன்ற அனுமதியில் 01.04.2020 முதல் 30.09.2020 வரையிலான நாட்களுக்கு பணி தொடர்ச்சி வழங்கப்பட்டதன் அடிப்படையில் தற்போது மண்டலம்-8க்குட்பட்ட பகுதி-21, 22 மற்றும் 23க்கு (வார்டுகள் 94 முதல் 108 வரை) 551 தற்காலிக பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தற்போது தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலமாக நடைபெற்று வரும் துப்புரவு பணிக்கான மன்ற அனுமதி 30.09.2020 அன்றுடன் நிறைவடைவதால், துப்புரவு பணியின் அவசியம் கருதி இன்றைய நிலைகளுக்கு ஏற்பவும், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8ல் பணிபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்களில் 31.08.2020 வரையிலான காலத்தில் வயது முதிர்வு அடிப்படையில் பணி ஓய்வு, பணியிடையில் காலமான பணியாளர்கள், பதவி உயர்வு போன்ற காரணத்தினால் ஏற்பட்ட காலிப்பணியிடத்தை கணக்கில் கொண்டும் தேவைகளை கண்டறிய நடைபெற்ற கூட்டத்தின்படி, பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தினால் கீழ்கண்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்	வார்டு எண்	ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை	தற்பொழுது பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் எண்ணிக்கை	பணி ஓய்வு, பதவி உயர்வு மற்றும் இறப்பு காரணமாக ஏற்பட்ட காலிப்பணியிடம்	NULM மூலம் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை
1	94	184	92	92	35
2	95	190	128	62	28
3	96	115	90	25	31
4	97	88	59	29	28
5	98	85	53	32	17
6	99	150	89	61	29
7	100	199	99	100	46
8	101	169	102	67	32
9	102	169	36	133	122
10	103	192	119	73	40
11	104	173	147	26	28
12	105	182	96	86	26
13	106	106	88	18	28
14	107	135	75	60	33
15	108	141	81	60	28
	மொத்தம்	**2278**	**1354**	**924**	**551**

ம.அ.8.ந.க.எண்.சி3 / 3730 /2020

1. மறு ஆய்வின்படி மண்டலம்-8க்குட்பட்ட பகுதி-21, 22 மற்றும் 23க்கு ஒப்பளிக்கப்பட்ட மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை - 2278
2. மண்டலம்-8 பகுதி-21, 22 மற்றும் 23ல் பணிபுரியும் நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை - 1354

   பணியாளர்கள் குறைவு (காலிப்பணியிடம் மற்றும் பணி ஓய்வு) - 924
3. தற்போது தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை - 551

தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலமாக பணியாட்களை நியமிக்கும்போது அவர்களுக்கான நலப்பொருட்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலமே வழங்க வேண்டி உள்ளது.

அதன்படி ஒரு நபருக்கு 6 மாத காலத்திற்கு தேவைப்படும் நலப்பொருட்களின் விவரம் பின்வருமாறு :-

அ) ஒளிரும் ஆடை - 3 எண்ணிக்கை (60 நாட்களுக்கு ஒன்று)
ஆ) கையுறை - 18 எண்ணிக்கை (10 நாட்களுக்கு ஒன்று)
இ) முக கவசம் - 180 எண்ணிக்கை (ஒரு நாளைக்கு ஒன்று)

மேற்கண்ட நலப்பொருட்களின் அடிப்படையில் (551) தூய்மை பணியாளர்களுக்கு 6 மாத காலத்திற்கு ஆகும் செலவு விவரம் :-

தேவைப்படும் பொருட்களின் விவரம்	எண்ணிக்கை	நபர்கள் 551	தொகை ரூ.	மொத்த தொகை ரூ.
ஒளிரும் ஆடை	3	551	110	ரூ.1,81,830/-
கையுறை	18	551	15	ரூ.1,48,770/-
முக கவசம்	180	551	3	ரூ.2,97,540/-
				ரூ.6,28,140/-

6 மாதங்களுக்கு நலப் பொருட்களுக்கு ஆகும் செலவு தொகை ரூ.6,28,140/- ஆகும்.

எனவே,

1. மண்டலம்-8க்குட்பட்ட பகுதி-21, 22 மற்றும் 23ல் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் நியமிக்கப்பட்டு பணிபுரியும் 551 தூய்மை பணியாளர்களை 01.10.2020 முதல் 31.03.2021 வரை தொடர்ச்சியாக பணியமர்த்த அனுமதி வேண்டியும்,
2. மேற்பார்வை பொறியாளர் / தி.க.மே துறை அவர்களின் சுற்றறிக்கை பொ.து.ந.க.எண். ஜி4/14242/2020, நாள்.08.09.2020ன்படி மேற்கண்ட 551 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.391/- என்ற அடிப்படையில் 182 நாட்களுக்கு தேவையான தோராய செலவீனம் 551 x 391 x 182 = ரூ.3,92,10,262/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. துப்புரவு பணிக்காக பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு 6 மாத காலத்திற்கு வழங்கப்பட வேண்டிய நலப்பொருட்கள்.

   ஒளிரும் ஆடை - 3 எண்ணிக்கை (60 நாட்களுக்கு ஒன்று)
   கையுறை - 18 எண்ணிக்கை (10 நாட்களுக்கு ஒன்று)
   முக கவசம் - 180 எண்ணிக்கை (ஒரு நாளைக்கு ஒன்று)

   இவற்றை பெருநகர சென்னை மாநகராட்சியே கொள்முதல் செய்து வழங்க ஒப்புதல் அளிக்கவும்,
4. மேற்படி நலப்பொருட்களுக்கு ஆகும் செலவு தொகை தோராயமாக ரூ.6,28,140/- (ரூபாய் ஆறு இலட்சத்து இருபத்தி எட்டாயிரத்து நூற்று நாற்பது மட்டும்)க்கு நிர்வாக அனுமதி வழங்கவும்,

5. இப்பணிக்கான தொகைக்கு கணக்கு குறியீட்டு எண். 40 - 41 - 03, கணக்கு தலைப்பு எண். 230-150-100 மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 28.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.4/சு.து.ந.க.எண்.சு3/ 4814/ 2020

தீர்மான எண். 715/2020 **நாள்:30-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-4 சுகாதாரத்துறைபூச்சி தடுப்புதுறை - கொசு ஒழிப்புபணிகளை மேற்கொள்ள தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்(NULM) குழுக்கள் மூலம் 142 நபர்கள் ஓர் ஆண்டு காலம் 27.09.2019 முதல் மலேரியா பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தனர். இப்பணிக்காலம் 26.09.2020 அன்று முடிவடையவுள்ளது. மேலும் 27.09.2020 முதல் 26.09.2021 வரை மலேரியாப் பணிகளை மேற்கொள்ள நீட்டிப்பு அனுமதி.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மானம் எண்.793/2018, நாள்.20.09.2018 மற்றும் பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறையின் 24.09.2018 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, சுகாதாரத்துறையில் கோட்டம்-34 முதல் 48 வரை உள்ள கோட்டங்களில் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள நீர்தேக்க தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளச்சி ஏற்படாத வண்ணம் கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் உதிர்ந்த கொசுக்களை மருந்து தெளிக்கப்பட்டு அழிப்பதன் மூலம் கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, யானைக்கால் மற்றும் மூளை காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்த கொசு மருந்து தெளிக்கவும் முதிர்ந்த கொசுக்களை அழிப்பதற்கு புகைப்பரப்பும் பணிகளை மேற்கொள்ளவும், மேலும், நீர்வழித் தடங்களில் உள்ள ஆகாயத்தாமரை மற்றும் தேவையற்ற கழிவுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்வதற்கு 125 (NULM) தற்காலிக மலேரியாப் பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.603/2019, நாள்:01.10.2019ல் மண்டலம்-4, சுகாதாரத் துறையில் நிரந்தரப் பணியாளர்களில் 2 வருட காலங்களாகப் பணி ஓய்வு மற்றும் இறப்பு போன்ற காரணங்களால் ஏற்பட்ட காலிப் பணியிடங்களை மாநகர நல அலுவலர் அவர்களின் 08.03.2019 மற்றும் 20.03.2019 நாளிட்ட செயல்முறை ஆணைகளின்படி 21 பணியாளர்களை கருணை அடிப்படையில் மண்டலம்-4ற்கு பணியமர்த்தப்பட்டவர்களில் 4 பணியாளர்கள் மட்டும் மண்டலம்-4ற்கும் மற்ற 17 நபர்கள் மாற்றுப்பணி அடிப்படையில் மண்டலம்-1 மற்றும் 2ல் பணிசெய்கின்றனர். இதர மண்டலங்களில் பணிபுரியும் 17 நபர்களின் காலிப்பணியிடங்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கக் குழுக்கள் (NULM) மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களைக் கொண்டு பணிகளை மேற்கொள்வது அவசியமானதால் அவ்விடத்திற்கு மன்ற தீர்மானம் எண்.793/2018, நாள்.20.09.2018ன்படி தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் மூலமாக ஏற்கனவே உள்ள 125 நபர்களுடன் மற்றும் இதர மண்டலங்களில் பணிபுரிபவர்களின் காலிப் பணியிடங்களுக்கு 17 நபர்களையும் சேர்த்து மொத்தம் 142 (NULM) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க குழுக்கள் மூலம் 27.9.2019 முதல் 26.9.2020 வரை பணிகளை மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர்/ மண்டல அலுவலர்-4 அவர்களின் 02.09.2020 நாளிட்ட குறிப்பில் மண்டலம்-4, சுகாதாரத்துறையில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கக் குழுக்கள் மூலமாக (NULM) 142 நபர்களின் பணிக்காலம் 26.09.2020 வரை முடிவடைவதால், மேலும் ஓராண்டிற்கு அதாவது 27.09.2020 முதல் 26.09.2021 வரை பணிநீட்டிப்பு ஆணை வேண்டி ஆணையர் அவர்களுக்கும் மற்றும் சிறப்பு அலுவலர் (மன்றம்) அவர்களுக்கும் குறிப்பு வைக்க ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) குழுக்கள் மூலம் மண்டலம்-4ல் மலேரியாப் பணிகளை மேற்கொள்ளும் 142 நபர்களின் பணிக்காலம் 26.09.2020 வரை முடிவடைகிறது. ஆதலால் அப் பணியாளர்களை மேலும் ஓராண்டிற்கு (27.09.2020 முதல் 26.09.2021 வரை) மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் 07.07.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி 2020-2021ஆம் ஆண்டிற்கான உயர்த்தி நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.379/- லிருந்து ரூ.391/ற்கு கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

ம.அ.4/சு.து.ந.க.எண்.சு3/ 4814/ 2020

அட்டவணை

வ. எண்	பணியின் விவரம்	தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கதின் (NULM)மூலம் பணிகளை மேற்கொள்ளும் நபர்களின் எண்ணிக்கை	மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம் (2019 - 2020ம் ஆண்டுக்கானது)	தோராய செலவினம் ரூ.
1.	கொசுப்புழு தடுப்புப் பணி, மருந்து தெளிப்புப் பணி புகைப்பரப்பும் பணி மற்றும் நீர் வழித்தடப்பணி	142	ரூ.391/-	ரூ.391/- X 142 (பணியாளர்கள்) X365 நாட்கள்= ரூ.2,02,65,530/-

எனவே, மண்டலம்-4, சுகாதாரத்துறையில் (NULM) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் குழுக்கள் மூலம் மேற்கண்ட 142 நபர்கள் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இப்பணியின் காலம் 26.09.2020 அன்றுடன் முடிவடைகிறது. இதனை தொடர்ந்து மேலும் ஓராண்டிற்கு (27.09.2020 முதல் 26.09.2021 வரை) பணி நீட்டிப்பு செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே,

(அ) மண்டலம்-4, சுகாதாரத் துறையில் (NULM) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் குழுக்கள் மூலமாக பணி மேற்கொண்டுவரும் 142 நபர்களின் பணிக்காலம் 26.09.2020 அன்றுடன் முடிவடைவதால், அப்பணியினை மேற்கொள்ள மேலும் ஓராண்டிற்கு (27.09.2020 முதல் 26.09.2021 வரை) பணி நீட்டிப்பு வழங்க நிர்வாக அனுமதியும்,

(ஆ) மாவட்ட ஆட்சியரின் விலைப்பட்டியலின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 142 நபர்கள் X 365 நாட்கள் X ரூ.391 = ரூ.2,02,65,530 /-(ரூபாய் இரண்டு கோடியே இரண்டு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து ஐநூற்று முப்பது மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,

(இ) கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வரத் தவறும் பட்சத்தில் அன்னாரை மண்டல அலுவலர்-4, அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்யவும்,

(ஈ) தற்போது கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களைத் தவிர, புதிய நபர்களை பணியில் ஈடுபடுத்த இணை ஆணையர்/சுகாதாரம் அவர்களின் ஒப்புதல் பெற்று பணிகளை மேற்கொள்ளவும்,

(உ) கொசு ஒழிப்புப் பணிகளை மேற்கொள்ளும் (NULM) பணியாளர்களுக்கு பணி செய்த நாட்களுக்கு மண்டல நல அலுவலர்-4 அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ391/- . வீதம் தினக்கூலி கணக்கிட்டு ஊதியம் வழங்கவும்,

(ஊ) மேற்கண்ட (NULM) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் குழுக்கள் மூலமாக பணிகளை மேற்கொண்டுவரும் 142 நபர்களை கோட்ட வாரியாக 9 குழுக்கள் அமைத்து அக் குழுக்கள் மூலமாக ஊதியம் வழங்க அனுமதியும்,

ம.அ.4/சு.து.ந.க.எண்.சு3/ 4814/ 2020

(எ) இப்பணிக்கான செலவீனத் தொகையை கணக்கு குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,

மேற்கண்ட அ முதல் எ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 28.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"அ முதல் எ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.3.பொ.து.ந.க.எண்.எச்1/ 715/ 2020

தீர்மான எண். 716/2020 **நாள்: 30-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சிமண்டலம்-3 (மாதவரம்) கோட்டம்-22 முதல் 33 வரை பகுதிகளில் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் உள்ள குழு உறுப்பினர்களை கொண்டு 27.09.2020 முதல் 26.09.2021 வரை பணி செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3 கோட்டங்கள் 22 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் ஒவ்வொரு வீட்டிலுள்ள நீர்த் தேக்க தொட்டிகள் கிணறுகள், மேல் நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம் கொசுப்புழு தடுப்பு பணி மேற்கொண்டு கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன் குன்யா, யானைக்கால் மற்றும் மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்தவும், நீர் வழித்தடங்கள், மழைநீர்க் கால்வாய், பக்க கால்வாய்களில் கொசு மருந்து தெளிக்கவும், புகை பரப்பும் பணி மேற்கொள்ளவும், நிரந்தர பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக மொத்தம் 129 குழு உறுப்பினர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் ஈடுபடுத்தி கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மண்டலம்-3ல் மொத்தம் 51,806 வீடுகள் உள்ளன. இவ்வீடுகளில் உள்ள மேல்நிலைத் தொட்டிகள், கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் கிணறுகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப் புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம் கொசுப்புழு தடுப்பு பணி மேற்கொள்ள 104 NULM குழு உறுப்பினர்களை கொண்டு கோட்டங்கள் 24,25,26 மற்றும் 33ல் 9 கி.மீ நீளமுள்ள நீர் வழித்தடத்தில் உள்ள குப்பைகள் மற்றும் செடிகளை அகற்றி மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள 7 குழு உறுப்பினர்கள் மழைநீர்க் கால்வாய் மற்றும் பக்க கால்வாய் என மொத்தம் 65.33 கி.மீ இவற்றில் மருந்து தெளிப்பு பணி மேற்கொள்ள 22 குழு உறுப்பினர்கள், புகை மருந்து தெளிப்பு பணி மேற்கொள்ள 24 குழு உறுப்பினர்கள் வாகன மூலம் புகைபரப்பும் பணி மேற்கொள்ள 2 குழு உறுப்பினர்கள் என மொத்தம் 157 நிரந்தர பணியாளர்கள் மற்றும் (NULM) குழு உறுப்பினர்கள் தேவைப்படுகின்றது. மண்டலம்-3ல் 28 நிரந்தர பணியாளர்கள் மட்டுமே உள்ளதால் மேற்கண்ட பணிகளை திறம்பட மேற்கொள்ள கோட்டங்கள் 22 முதல் 33 வரை 129 (NULM) குழு உறுப்பினர்களை நியமித்து பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேலும் இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி என்பதால் அவசரம் மற்றும் அவசியம் கருதி தேவைக்கேற்ப (NULM) குழு உறுப்பினர்களை நியமிக்கப்பட வேண்டி உள்ளது. சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 16.05.2020 நாளிட்ட செயல்முறை ஆணை எண். ROC.C2/7393/2018 நாள்.07.07.2020ன் படி 27.09.2020 முதல் மலேரியா பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.391/- என அடிப்படையில் மண்டலம்-3ன் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தில் (NULM) குழுக்கள் அமைத்து அதன் மூலம் 365 நாட்களுக்கு குழு உறுப்பினர்கள் மூலம் கொசு ஒழிப்புப்பணியில் ஈடுபடுத்த நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்துகளின் அடிப்படையில் 157 பணியாளர்கள் தேவை என்பதாலும் ஏற்கனவே பணி புரிந்து வரும் 28 நிரந்தர பணியாளர்களை தவிர்த்து தற்பொழுது கொசுப் புழு தடுப்புப் பணி, மருந்து தெளிப்புப் பணி, புகை மருந்து தெளிப்புப் பணி போன்ற பணிகள் மேற்கொள்ள 27.09.2020 முதல் 26.09.2021 வரை (NULM) குழு உறுப்பினர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தில் (NULM) கீழ் கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த அனுமதி வேண்டப்படுகின்றது.

வ.எண்	பணி விவரம்	கூடுதலாக தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை	மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம்(2020-2021 ஆண்டுக்கானது)	தோராய செலவினம்
1	கொசுப்புழு தடுப்பு பணி, மருந்து தெளிப்புப் பணி, புகைப்பரப்பும் பணி, நீர் வழித்தடப் பணி	129	ரூ. 391	ரூ.391 x 129 (பணியாளர்கள்) x 365 நாட்கள் =ரூ. 1,84,10,235

ம.அ.3.பொ.து.ந.க.எண்.எச்1/ 715/ 2020

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் NULM குழு உறுப்பினர்களை கொண்டு கொசுப் புழு தடுப்புப் பணி, மருந்து தெளிப்புப் பணி, புகை மருந்து தெளிப்புப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்யுள்ளதாலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-3ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 07/07/2020 நாளிட்ட சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலையான நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 129 (NULM) குழு உறுப்பினர்களுக்கு ஆகும் தோராய செலவு ரூ. 391 x 129 (பணியாளர்கள்) x 365 (நாட்கள்) என ஓர் ஆண்டிற்கு ரூ. 1,84,10,235/- என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட 129 எண்ணிக்கை (NULM) குழு உறுப்பினர்களை கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த,

1. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியாளர்களின் பணிக்காலம் 26.09.2020 அன்றுடன் முடிவடைகிறது. 27.09.2020 முதல் 26.09.2021 வரை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் குழு உறுப்பினர்களை கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தவும்,
2. கொசு ஒழிப்பு பணிக்கான குழு உறுப்பினர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ. 391/- ஐ வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,
3. கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வரும் குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை மண்டல அலுவலர்-3 அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கவும்,
4. கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடும் குழு உறுப்பினர்கள் பணி செய்த நாட்களுக்கு மண்டல நல அலுவலர்-3 அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு குழு உறுப்பினர்களுக்கு வழங்கவும்,
5. இப்பணிக்கான செலவீன தொகையை மண்டலம்-3 உள்ள பகுதி கணக்கு குழுமத்தின் மூலம் NULM குழுக்களுக்கு குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 28.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.6.ந.க.எண்.இ2/ 3016/ 2020

தீர்மான எண். 717/2020 **நாள்:30-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-6 - கொரோனா நோய் தடுப்பு பணி - முன்பணம் பெறப்பட்டது - ரூ.5,00,000க்கு மேல் பெறப்பட்ட முன்பணங்களுக்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6ல், தீவிர கொரோனா நோய் தடுப்பு பணிகள் தங்கு தடையின்றி நடைபெறும் பொருட்டு மற்றும் இப்பணிகளின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் அவசியம் கருதி ரூ.3,00,000க்கு மேல் கீழ்கண்ட இனங்களில் மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று முன்பணம் பெறப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது நிதி நிர்வாகப்பிரிவின் 07.07.2020 நாளிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி அதிகாரங்கள் பகிர்வுகளின்படி, மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களுக்கு ரூ.3,00,000/- வரை முன்பணம் பெறுவதற்கு மட்டும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவசரம் அவசியம் கருதி மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் அனுமதியுடன் பெறப்பட்ட முன்பணங்களுக்கு ஆணையர் அவர்களின் பின்னேற்பு அனுமதி பெறப்படவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. மண்டலம்-6ல் பெறப்பட்ட முன்பணங்களை பொறுத்தவரை கீழ்கண்ட முன்பணங்களில் ரூ.5,00,000/-க்கு மேல் மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு முன்பணங்கள் பெறப்பட்டுள்ளது அதன் விவரம் பின்வருமாறு :

வ. எண்	மண்டலம் /துறை	கோப்பு எண்.	முன்பணம் /திட்ட மதிப்பீட்டின் சுருக்க விவரம்	முன்பணம் /திட்ட மதிப்பீட்டின் தொகை	மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் அனுமதி நாள்
01	மண்டலம்-6 பொறியியல் துறை	ம.அ.6.ந.க.எண். இ2/3206/2020	பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6 பகுதி-17 வார்டு-74ல் திரு.வி.க.நகர் மற்றும் கொளத்தூர் சென்னை மாநகராட்சி மேடவாக்கம் குளக்கரை சாலையில் அமைந்துள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனையில் கூடுதலாக கொரேனா வைரஸ் பரிசோதனை அறிகுறி மையம் நிறுவுது மற்றும் அதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணிக்கு ஏற்கனவே 50 சதவிகிதம் ரூ, 5,32,500 பெறப்பட்டது செலவிடப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டுள்ளது. தொடர் பணி காரணமாக இப்பணிக்கு மேலும் ரு, 5,32,500 தொகைக்கு மத்திய வட்டார துணை ஆணையரின் அனுமதி பெற்று செலவு செயப்பப்பட்டுள்ளது	ரூ.5,32,500	01/06/2020

ம.அ.6.ந.க.எண்.இ2/ 3016/ 2020

02	Electrical Department	உ.கோ.மி. பொ. ந.க.எண்/0411/ 2020	மண்டலம்-6 பகுதி-17 கோட்டம்-77 கொரனோ வைரஸ் சிகிச்சை தனிமைப்படுத்தப்பட்ட நோயாளிகளுக்கான கொரோனா தற்காலிக குடிசை மாற்று வாரிய புதிய குடியிருப்பு கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. பிளாக் எ பி சி டி கட்டிடத்தில் தனிமைப்படுத்தப்பட்ட நோயாளிகளுக்காக புதியதாக எல்.இ.டி மற்றும் உதிரி பாகங்கள் பொருத்த நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்ட சிறப்பு நோட்டீஸ் அதிகாரி அவர்களால் அறிவுறுத்தப்பட்து – அதற்கான உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டது - முன்பணம் ரு, 9,43,696/-யை மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் ஒப்புதலுடன் பெறப்பட்டுள்ளது.	ரூ.9,43,696	29.06.2020
மொத்தம்				ரூ.14,76,196	

எனவே, மண்டலம்-6ல், தீவிர கொரோனா தொற்று நோய் தடுப்பு பணிகள் தங்கு தடையின்றி நடைபெற மற்றும் இப்பணிகளின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் அவசியம் கருதி மண்டலம்-6ல் ரூ.5,00,000/-க்கு (ஐந்து லட்சத்திற்கு மேல்) மேல் மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று செலவு செய்யப்பட்ட முன்பணங்களுக்கு நிதி நிர்வாகப்பிரிவின் சுற்றறிக்கையின்படி சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 16.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"செலவு செய்யப்பட்ட முன்பணங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

****

தி.க.மே.ந.கஎண்.அ7/ 1951/ 2020

தீர்மான எண். 718/2020 **நாள்:30-09-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - 2020-2021 - திடக்கழிவு மேலாண்மை துறை - பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடம் ஏற்படுத்த 200 எண்ணிக்கை பரப்புரையாளர்கள், 15 எண்ணிக்கை மண்டல மேற்பார்வையாளர்கள் நியமிக்கும் பணிக்கு - குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த M/s.Reward Society அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

அரசாணை (நிலை)எண் 37, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.IV).துறை, நாள்.13.04.2017ன்படி தமிழகத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் திறந்தவெளி மலம் கழித்தலை தடுக்கவும், திடக்கழிவுகளை மறுசுழற்சி செய்தல் ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் அந்தந்த மாநகராட்சி பகுதியை சார்ந்தவர்களை / மகளிர் சுய உதவி குழுக்களை பயன்படுத்தி கொள்ள மாநகராட்சி ஆணையர்களுக்கு அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

திட்ட இயக்குநர் , தூய்மை இந்தியா திட்டம் / நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 24.07.2020 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியில் ஈடுப்பட்டுவரும் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் பணிகாலத்தை 30.09.2020வுடன் நிறைவு செய்யுமாறும், 01.10.2020 முதல் 31.03.2021 வரை அதே எண்ணிக்கையிலான பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் பணியமர்த்த ஒப்பநடைமுறைகள் மேற்கொண்டு புதியதாக ஒப்பந்ததாரரை தேர்வு செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 530/2020, நாள்.06.08.2020ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் 200 எண்ணிக்கையிலான பரப்புரையாளர்கள் மற்றும் 15 எண்ணிக்கையிலாள மேற்பார்வையாளர்கள் 01.10.2020 முதல் 31.03.2021 வரை நியமிக்க கீழ்கண்ட விவரப்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

Category	No of persons	Base rate fixed by committee as per TWAD SOR 2020-21	ESI @3.25% by Employer(in Rs)	EPF @8.33% by Employer(in Rs)	Remuneration cost per day (in Rs)	Remuneration cost per Month (in Rs)	Add 2 % TDS (in Rs)	Add service charges 10 %(shall not exceed more than 10% of column 7)	Total cost per month for a person	Remuneration cost per Month for total strength (In Rs.)	Remuneration cost per six Month for total strength (In Rs)
1	2		4	5	6	7	8	9		10	11
Animator	200	426	13.85	35.49	475.33	14259.92	285.20	1425.99	15971.11	3194222	19165332
Supervisor	15	584	18.98	48.65	651.63	19548.82	390.98	1954.88	21894.67	328420	1970520
										Total	**2,11,35,852**

01. பணியின் விவரம்:-

வ. எண்	பணியின் விவரம்	மதிப்பீட்டு தொகை ரூபாய்
1	பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடம் ஏற்படுத்த 200 எண்ணிக்கை பரப்புரையாளர்கள், 15 எண்ணிக்கை மண்டல மேற்பார்வையாளர்கள் நியமித்தல்.	2,11,35,852/-

02.	மதிப்பீட்டு தொகை நிர்வாக அனுமதி. மற்றும் நாள்	:	1. திட்ட இயக்குநர் , தூய்மை இந்தியா திட்டம் / நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம், ந.க.எண்.26458/2018/P1-1, நாள்.24.07.2020. 2. சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 530/2020, நாள்.06.08.2020
03.	திட்ட குறியீட்டு எண்	:	பொருந்தாது
04.	ஓப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை	:	ரூ.211.35 இலட்சங்கள்
05.	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்		1. நமது அம்மா, நாள்.06.08.2020 2. Indian Express. Date. 06.08.2020 3. செய்திமலர்,, நாள்.06.08.2020
06.	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கானகடைசி நாள்		08.09.2020
07.	ஓப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கஅளிக்கப்பட்ட நாள்:		05.08.2020
08.	எத்தனை ஓப்பங்கள் பெறப்பட்டன?		மூன்று ஓப்பங்கள் பெறப்பட்டன

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு *e-tender* மூலமாக மூன்று ஒப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒப்பம் சமர்பிக்க இறுதி நாளான *07.09.2020* அன்று *M/s.Falcon Security services pvt ltd* நிறுவனம் முன்வைப்பு கட்டணம் மற்றும் பயன்பாட்டு கட்டணம் வரைவோலை செலுத்தாத காரணத்தினால் ஒப்பம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

M/s.Reward Society மற்றும் *M/s. Stalwart People Services India Limited* இரண்டு தொழில்நுட்ப ஆவணங்கள் *(Technical Bid) 08.09.2020* அன்று திறக்கப்பட்டு ஒப்பமுன்தகுதி நிபந்தனைகள் கூர்தாய்வு செய்யப்பட்டதில் *M/s. Stalwart People Services India Limited* நிறுவனத்தார் தூய்மை இந்தியா திட்டப்பணிக்காக முன்அனுபவம் பெற்றிருக்கவில்லை என்பதால் அவர்களின் தொழில்நுட்ப ஆவணம் நிராகரிக்கப்பட்டது.

ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ள *M/s.Reward Society* இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் *(Price Bid) 17.09.2020* அன்று திறக்கப்பட்டன. *M/s.Reward Society* அவர்களின் ஒப்பத்தொகை நிர்வாக அனுமதி பெற்ற மதிப்பீட்டு தொகையான ரூ. 2,11,35,852/- யை விட (-)0.89% குறைவு ஆகும் . இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை *(*அனைத்து வரிகள் உட்பட*)* ரூ. 2,09,46,510/- *(*இரண்டு கோடியே ஒன்பது இலட்சத்து நாற்பத்தாறு ஆயிரத்து ஐநூற்று பத்து மட்டும்*)* விவரம் கீழ்கண்டவாறு.

வ. எண்	விவரம்	ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம்	எண்ணிக்கை	ஒரு மாத ஊதியம்	ஆறு மாத ஊதியம்(அனைத்து வரிகள் உட்பட*)*
1.	பரப்புரையாளர்	15,828.00	200	31,65,600	1,89,93,600
2.	மண்டல மேற்பார்வையாளர்கள்	21,699.00	15	3,25,485	19,52,910
	மொத்தம்				2,09,46,510

28.09.2020 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு செய்துள்ள தொகை விவரங்கள்.

ஒப்பந்ததாரர் பெயர் . திரு/ திருவாளர்கள்	ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்பத்தொகை அலுவலக விலைவிவரப்படி *12% GST* சேர்த்து	அலுவலக விலைப்பட்டியலின் படி *12% GST* சேர்த்து ஒப்பந்தாரரின் ஒப்ப சதவீதம்
M/s.Reward Society	Rs. 2,09,27,730	(-)0.98% குறைவு

தி.க.மே.ந.கஎண்.அ7/ 1951/ 2020

இவ்வொப்பத் தொகையானது நிர்வாக அனுமதி பெற்ற மதிப்பீட்டு தொகை ரூ.2,11,35,852/-யை விட (அனைத்து வரிகள் சேர்த்து) (-) 0.98% குறைவாக உள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு *29.09.2020* அன்று உயர்மட்டகுழு *(HIGH LEVEL COMMITTEE)* கூர்ந்தாய்வு செய்து மேற்கண்ட பணிக்காக (சரக்கு மற்றும் சேவைவரி உட்பட) Rs. 2,09,27,730/- (ரூபாய் இரண்டு கோடியே ஒன்பது இலட்சத்து இருபத்தேழு ஆயிரத்து எழுநூற்று முப்பது மட்டும்) க்கு ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை *M/s. Reward Society* அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடம் ஏற்படுத்த *200* எண்ணிக்கை பரப்புரையாளர்கள், *15* எண்ணிக்கை மண்டல மேற்பார்வையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கும் பணிக்கு *M/s. Reward Society* அவர்களுக்கு (அனைத்து வரிகள் உட்பட) ஒப்பத்தொகை Rs. 2,09,27,730/- (ரூபாய் இரண்டு கோடியே ஒன்பது இலட்சத்து இருபத்தேழு ஆயிரத்து எழுநூற்று முப்பது மட்டும்) நிர்வாக அனுமதி பெற்ற தொகை விட (-) 0.98% குறைவாக பணிகள் அளிக்கவும் மற்றும் ஒப்பத்தை ஏற்று பணி ஆணை வழங்கவும் சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.09.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"ஒப்பம் வழங்க, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****